# தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
# க.பொ.த. (உ/த)

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 12

(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

சிங்கள மொழிகள் திணைக்களம்
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
தரம் - 12

ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு : 2018

தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சிங்கள மொழிகள் திணைக்களம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

*பதிப்பு:*

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

தேசிய கல்வி ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டுள்ள தேசிய கல்விக் குறிக்கோள்களை அடைவதையும் பொதுத் தேர்ச்சிகளையும் விருத்தி செய்தலையும் அடிப்படையாகக் கொண்டு, அப்போது இருந்த விடய உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட கலைத்திட்டத்தை நவீனமயப்படுத்தி, எட்டு ஆண்டு கால வட்டத்திற்காக, தேர்ச்சிகள் சார்ந்த கலைத்திட்டத்தின் முதலாவது கட்டம், 2007 இல் தேசிய கல்வி நிறுவகத்தினால் பாடசாலைகளின் ஆரம்ப, இடைநிலை பிரிவுகளில் அறிமுகஞ் செய்யப் பட்டது. ஆய்வு மூலம் கண்டறியப்பட்ட விடயங்களையும் கல்வி தொடர்பாக பல்வேறு தரப்பினர் முன்வைத்த யோசனைகளையும் அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட்ட கலைத்திட்ட நியாயிப்புச் செய்முறையின் பெறுபேறாக கலைத்திட்ட வட்டத்தின் இரண்டாம் கட்டத்தை கல்வி முறைமையில் அறிமுகஞ் செய்யும் பணி 2015 இல் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நியாயிப்புச் செயன்முறையின் போது சகல பாடங்களதும் தேர்ச்சிகளை அடித்தள மட்டத்திலிருந்து உயர் மட்டம் வரை ஒழுங்கு முறையாக கட்டியெழுப்புவதற்கு கீழிருந்து மேல்நோக்கிச் செல்லும் நிலைக்குத்துச் சேர்மானமும் வெவ்வேறு பாடங்களில் ஒரே பாட விடயம் மீண்டும் மீண்டும் முன்வைக்கப்படுவதை இயன்றவரை குறைத்தல், விடய உள்ளடக்கத்தை வரையறைப்படுத்தல், நடைமுறைப்படுத்துவதற்கேற்ற மாணவர் நேயமான கலைத்திட்டமொன்றினை தயாரிப்பதற்காக கிடையான சேர்மானமும் பயன் படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் பாடங்களைத் திட்டமிடுதல், கற்றல் கற்பித்தற் செயன்முறையில் வெற்றி கரமாக ஈடுபடுதல், வகுப்பறை கணிப்பீட்டினையும் மதிப்பீட்டினையும் பயனுள்ளவாறு பிரயோகித்தல் ஆகியவற்றிற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குதல் போன்ற நோக்குடன் புதிய ஆசிரியர் வழிகாட்டி அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. வகுப்பறையில் பெரிதும் விளைதிறன் மிக்க ஓர் ஆசிரியராகச் செயற்படுவதற்கு இந்த வழிகாட்டி துணையாக அமையும். மாணவரிடத்தே தேர்ச்சிகளை வளர்ப்பதற்காக தரவிருத்தி உள்ளீடுகளையும் செயற்பாடுகளையும் தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் விதந்துரைக்கப்பட்டுள்ள பாடநூல்களில் அடங்கியுள்ள பாடவிடயங்கள் தொடர்பான அதிக சுமையேற்றம் இந்த ஆசிரியர் வழிகாட்டிகளில் அடக்கப்படவில்லை. எனவே இந்த ஆசிரியர் வழிகாட்டி மூலம் உச்சப்பயன் பெறுவதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பாடநூல்களையும் இவற்றுடன் சமாந்தரமாகப் பயன்படுத்துவது அவசியமானதாகும்.

நியாயிக்கப்பட்ட பாடத்திட்டங்கள், புதிய ஆசிரிய வழிகாட்டிகள், புதிய பாடநூல்கள் ஆகியவற்றின் முதன்மையான நோக்கம் ஆசிரியர் மையக் கல்விக் கோலத்திலிருந்து விடுபட்டு மாணவர் மையக் கல்விக் கோலத்தையும் பெரிதும் செயற்பாடுகள் சார்ந்த கல்விக் கோலத்தையும் முன்னெடுப்பதன் மூலம் வேலை உலகிற்குத் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் கொண்ட மனித வளமாக மாணவர் சமுதாயத்தை விருத்தி செய்தலாகும்.

புதிய பாடத்திட்டத்தினையும் ஆசிரியர் வழிகாட்டியையும் தயாரிக்கும் பணியில் பங்காற்றிய தேசிய கல்வி நிறுவக கல்விசார் அலுவல்கள் சபையினதும், தாபன பேரவையினதும் சகல வளவாளர்களினதும் அர்ப்பணிப்பைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

**கலாநிதி. ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப் படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்த ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப் பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படு கின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற் காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி. வண. மாம்புல்கொட சுமனரதன தேரர்**
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## கலைத்திட்டக் குழு

| | | |
|---|---|---|
| **அனுமதி மற்றும் ஆலோசனை:** | | கல்வி அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம் |
| **இணைப்பாக்கம்:** | | |
| பீ.ரீ.எம். ரத்னாயக: | | சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம், தேசிய கல்வி நிறுவகம், மஹரகம. |
| **பாட நிபுணத்துவ ஒத்துழைப்பு** | | |
| பேராசிரியர். சுனந்த மஹேந்திர | : | தகைசார் பேராசிரியர், களனி பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். ஆரியரத்ன எதுகல | : | சிரேஷ்ட பேராசிரியர், களனி பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். கமல் வலேபொட | : | பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம். |
| பேராசிரியர். தியொடோர் பிரனாந்து | : | பேராசிரியர், இலங்கை திறந்தப் பல்கலைக்கழகம். |
| கலாநிதி. மஹீம் மென்டீஸ் | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்தப் பல்கலைக் கழகம். |
| கலாநிதி. டியூடர் வீரசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீபாலி, கொழும்புப் பல்கலைக்கழகம். |
| கலாநிதி. எஸ். ரகுராம் | : | சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம். |
| எம். ஏ. எஸ். ஹரின் சந்திர | : | சிரேஷ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| **எழுத்தாளர் குழு** (வெளிவாரி) | | |
| விஜயாநந்த ரூபசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| அருண லொகு லியன | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| தம்மிக பண்டார | : | சிரேஷ்ட விரிவுரையாளர், களனி பல்கலைக்கழகம் |
| ஜீ.ரீ. மதுபாஷினி | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்தப் பல்கலைக்கழகம். |
| திவங்கி அபேவர்தன விக்கிரமசிங்ஹ | : | சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை திறந்தப் பல்கலைக்கழகம். |
| மிஹிரி குமாரகே | : | ஆசிரியர் சேவை, புனித பேதுறு மகா வித்தியாலயம், ஹொரணை. |
| பிரசன்ன விமல சூரியா | : | ஆசிரியர் சேவை, தொடம்கொல்ல மகாவித்தியாலயம், பிபில. |
| இந்திவர ஜய ஜயசேகர | : | ஆசிரியர் சேவை, ஆனந்தா மகளீர் வித்தியாலயம், கோட்டை |
| **செயற்றிட்டக் குழு** | | |
| எம். ஆர். டப்ள்யு. மத்தும | : | பணிப்பாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |
| பீ.ரீ.எம். ரத்னாயக | : | சிரேஷ்ட விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |
| கலாநிதி. வாவின்னே பஞ்ஞாநந்த தேரர் | : | உதவி விரிவுரையாளர், சிங்கள மொழிகள் திணைக்களம் |
| **தமிழாக்கம்** | | |
| பீ.எஸ். மோஹன் | : | ஆசிரியர் சேவை, ஹவுப்பே தமிழ் வித்தியாலயம், கஹவத்தை. |
| ஆர். சந்திரமோகன் | : | ஆசிரியர் சேவை, வட்டவளை த.ம.வி. வட்டவளை. |

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | i |
| | பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | ii |
| | கலைத்திட்டக் குழு | iii |
| 1.0 | தொடர்பாடல் கற்கையின் ஆரம்பமும் பரவலும் | 01 - 15 |
| 2.0 | தொடர்பாடலின் அடிப்படை | 16 - 31 |
| 3.0 | அடிப்படைத் தொடர்பாடல் வகைகள், இயல்புகள் மற்றும் மாதிரிகள் | 32 - 57 |
| 4.0 | பாரம்பரிய ஊடகமும் வெகுசன ஊடகமும், நவீன ஊடகமும், சமூக ஊடகமும் | 58 - 86 |
| 5.0 | பண்பாட்டு ரீதியான விளக்கம், ஊடகத்தின் இயல்பு மற்றும் அதன் செல்வாக்கு | 87 - 103 |
| 6.0 | ஊடக விளங்கறிவும் ஊடக விமர்சனமும் | 104 - 145 |

# 1. தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் மற்றும் வீச்சு

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : 1.0 | தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம், வீச்சு, அதன் துறைசார் பின்புலம் மற்றும் அதனைக் கற்பதன் அவசியம் முதலானவை பற்றிய அறிவுடன் செயற் படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : 1.1 | துறைசார் பாடமாகத் தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம், வீச்சு, அதனைக் கற்பதன் அவசியம் முதலான வற்றை இனங்கண்டு முன்வைப்பார். |
| **பாடவேளைகள்** | : 05 | |

**கற்றற் பேறுகள்** :

- துறைசார் பாடமாகத் தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் பற்றித் தெளிவுபடுத்துவார்.
- தொடர்பாடல் கற்கையின் வீச்சு பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.
- தொடர்பாடல் கற்கையினை ஓர் பாடமாகக் கற்பதன் அவசியத்தை விளக்குவார்.

**அறிமுகம்:**

தொடர்பாடல் ஓர் அடிப்படை மனிதச் செயற்பாடாகும். நபர்களுக்கிடையே தொடர்பு களை உருவாக்கிக் கொள்வதற்கு மனிதர்களுக்குத் தொடர்பாடல் அத்தியாவசியமாகிறது. உணர்வுகள், எண்ணங்கள், கருத்துக்கள் மற்றும் அறிவு முதலானவற்றைப் பரிமாற்றிக் கொள்தல் என்பது, தொடர்பாடல் என்பதன் எளிய விளக்கமாகும். ஆரம்ப சமூகங்களில் இருந்த மனிதர்கள் பல்வேறு ஒலிகள், சமிக்ஞைகள், குறியீடுகள் முதலானவற்றைப் பயன்படுத்தி மேற்கொண்ட தகவல் பரிமாற்றம் தொடக்கம், சம காலத்தில் வெகுசன ஊடகம் மற்றும் எண்சார் (டிஜிட்டல்) தொடர்பாடல் தொழினுட்ப சாதனங்கள் முதலான வற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் தகவல் பரிமாற்றம் வரை தொடர்பாடல் துறை விஸ்தீரணமடைந்துள்ளது. நவீன யுகத்தில், உலகம் ஒரு குடும்பமாகச் சுருங்கும் வண்ணம் மானுட இடைத்தொடர்புகள் வலுப்பெற்றுள்ளன. அதற்குக் காரணம் தொடர்பாடலின் வளர்ச்சியேயாகும்.

தொடர்பாடல் செயற்பாட்டின் விருத்தியோடு வெகுசன ஊடகங்கள் உள்ளடங்கலான பல்வேறு உயர் தொழினுட்பச் சாதனங்கள் வழியே நிகழும் எல்லையற்ற தகவல் உருவாக்கம், பரிமாற்றம் மற்றும் பரவல் ஆகியன தனி நபர்களது எண்ணம், நடத்தை போலவே தனிநபரது சமூக இடைத் தொடர்புகளிலும் ஈற்றில் முழுச் சமூகத்திலும் பாரிய

DRAFT

தாக்கத்தைச் செலுத்துகின்றன. அத்தாக்கம் அனுகூலமானதாகவும், பிரதிகூலமானதாகவும் காணப்படுகின்றது. ஊடகங்கள் மூலமாக எல்லையற்று வெளிவரும் தகவல்கள் மற்றும் வெவ்வேறு மாதிரிகள் ஊடாக விரைவாக வெளிவரும் தகவல்கள் இல்லாமல் ஒரு மனிதனால் சமூகத்தில் வினைத்திறனான பிரஜையாகச் செயற்படமுடியாது.

அதேபோல், தகவல் பெற்றுக் கொள்வதிலிருந்து ஒரு மனிதனைத் தடுப்பதும் இயலாத காரியமாகும். தனிமனித விருத்தி போன்றே, சமூக விருத்திக்குத் தேவையான தகவலைப் பெற்றுக்கொள்வதும் அவசியமாகும். இதற்கு அவசியமாவது ஊடகங்கள் வழியே வெளியாகும் தகவல்களை வடிகட்டி, தேவையான தகவல்களை மட்டும் பெற்றுக்கொள்ளும் மதிநுட்பம் ஆகும். ஊடகங்கள் உருவாக்கும் மாயைகளிலிருந்து யதார்த்தத்தை வேறுபிரித்தறியத் தேவையான ஊடக விளங்கறிவு மற்றும் விமர்சனரீதியான பெறுநராகச் செயற்படத் தேவையான மதிநுட்பம் முதலானவற்றால் மனிதன் முழுமையடையப் பெறல் வேண்டும்.

யுனெஸ்கோ அமைப்பினால் 1982 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குரூன்வெல்ட் பிரகடனத்தில் ஊடகத்தின் எதிர்மறையான தாக்கங்களிலிருந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாத்தல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு, ஊடக விளங்கறிவு மற்றும் விமர்சன ரீதியாக ஊடகத்தை நுகரும் மதிநுட்பம் என்பவற்றோடு சிறுவர்களிடையே படைப்பாக்கச் சிந்தனையையும் வளர்க்க வேண்டும் எனும் கருத்தும் உற்று நோக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவிலிருந்து மாணவர்களுக்கு ஊடகக் கல்வி வழங்க வேண்டும் என்று யுனெஸ்கோ அமைப்பு பரிந்துரை செய்ததும் இதன் காரணமாகவேயாகும்.

DRAFT

தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் எனும் இப்பாடத்தைக் கற்கும் மாணவர்கள் ஊடக விளங்கறிவு, மதிநுட்பம் மற்றும் விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரும் அறிவாற்றலுடன் செயற்றிறன் மிக்க தொடர்பாடுநராக இருப்பதோடு, சிறந்த பிரஜையாகவும் இருப்பார்கள். அதற்கு ஏற்ற வகையில் பாடவிடயங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. பாடவிதானத்தில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இங்கு விபரமாகத் தரப்பட்டுள்ளன.

துறைசார் பாடமாகத் தொடர்பாடல் கற்கை ஆரம்பமான விதம், அதன் வளர்ச்சி, தொடர்பாடல் கற்கையினை இலங்கையின் கல்வித் திட்டத்தில் அறிமுகம் செய்தமை மற்றும் இப் பாடத்தைக் கற்பதன் முக்கியத்துவம் மற்றும் அவசியம் என்பவற்றை விபரிப்பது இவ் அலகின் மூலம் நிகழும். இதன் மூலம் இப்பாடத்தைக் கற்பதற்கான அடிப்படையை மாணவ, மாணவியருக்கு வழங்குதல் எதிர்பார்க்கப்படுகிறது.

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம், வீச்சு மற்றும் அதனைக் கற்பதன் அவசியம்**

- தொடர்பாடலுக்கும் மானுட இடைத்தொடர்புகளுக்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்புக் காணப்படுகிறது. உலகில் மனிதன் தோன்றிய காலம் தொட்டே மானுடத் தொடர்பாடலும் ஆரம்பமாகியது.
- ஆரம்ப சமூகத்தில் வாழ்ந்த மனிதன் தனது எளிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பல்வேறு சமிக்ஞைகள், ஒலிக் குறியீடுகளைப் பயன்படுத்தி ஆரம்பித்த தொடர்பாடல், இன்றைய அளவில் உயர் தொடர்பாடல் தொழினுட்பக் கருவிகள் ஊடாக நிகழும் சிக்கலான செயன்முறையாக மாற்றம் பெற்றுள்ளது.
- தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சி, வெகுசன ஊடகங்களின் வளர்ச்சி மற்றும் ஊடகங்கள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தின் இயல்பு ஆகியன தொடர்பாடல் கற்கை ஓர் துறைசார் கற்கையாகத் தோற்றம் பெறவும், ஆழமாகக் கற்கவும் பிரதான காரணங்களாகின.
- தொடர்பாடல் கற்கையின் பிரதான நோக்கமாவது, மனிதனது அனுபவங்களின் மையப் புள்ளியாகத் தொடர்பாடல் செயற்படும் விதத்தை ஆராய்வதாகும்.
- இங்கு மனித அனுபவம் என்பது, தகவல் உருவாக்கம், பரிமாற்றம், தகவல் உள்வாங்கலின்போது மக்கள் வெளிக்காட்டும் நடத்தைக் கோலங்கள் யாவை என்பவற்றை அறிந்துகொள்வதாகும்.
- தொடர்பாடல் என்பது மனித சமூகத்தின் ஆரம்பத்திலிருந்தே தோற்றம் பெற்றதொன்று என்றபோதிலும் அதனை ஓர் துறைசார் பாடமாகக் கற்க வேண்டும் எனும் நிலைப்பாடு உருவாகியது 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயாகும்.
- தொழினுட்பப் புரட்சி, முதலாம் மற்றும் இரண்டாம் உலக மகா யுத்தங்கள் காரண மாகத் தொடர்பாடல் தொழினுட்பத்தில் ஏற்பட்ட துரித மாற்றங்கள் வெகுசன ஊடகங்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரவலில் தாக்கம் செலுத்தின. இந் நிலைமை தொடர்பாடல் கற்கை பற்றிய ஆர்வத்தையும் அவசியத்தையும் அதிகரித்தது.
- உலக யுத்தத்தின் பின்னர் போர் தொடர்பான தகவல்களை முன்வைப்பதற்கும், பரிமாற்றிக்கொள்வதற்கும் பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் பிற்காலத்தில் மக்களுக்காக மகிழவூட்டல் மற்றும் தகவல் வழங்கவும் பயன்படுத்தப்பட்டன.
- யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையை மீளக்கட்டியெழுப்பும் வண்ணம் ஊடகங்கள் மூலமாகப் பொழுதுபோக்களிக்கும் தொலைக்காட்சி நாடகங்கள், திரைப்படங்கள், செய்திப்பத்திரிகைகள், பாடல்கள் ஆகியன பயம், பீதி, பாலுணர்வு முதலான கருப்பொருட்களை மையப்படுத்தி அதிகம் வெளிவந்தன.

DRAFT

- இக் காலப்பகுதியில், வணிக நோக்கத்தோடும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் எண்ணத்தோடும் ஊடக உரிமையாளர்களால் மற்றும் அரசியல் தலைவர்களால் வெகுசன ஊடகங்கள் வரையறையின்றிப் பாவனைக்குட்படுத்தப்பட்டன.
- இவ்வனைத்து வழிகளாலும் ஊடகங்களால் சமூகத்தில் கூர்மையான தாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டதால், நிபுணர்கள் தொடர்பாடல் துறை பற்றிய கற்கையில் ஈடுபட முனைந்தனர்.
- 1920 களில் பல்வேறு துறைகளில் தேர்ச்சிகளைப் பெற்றிருந்த நிபுணர்கள் அக்காலப் பகுதியில் வெகுசன ஊடகங்கள் மனிதன் மீதும் மனிதன் மற்றும் சமூகத்திற்கிடையிலான தொடர்பிலும் தாக்கம் செலுத்துகின்றன என்பதைத் தம் ஆராய்ச்சிகள் மூலம் நிரூபித்தனர்.
- தொடர்பாடல் பாடம் “தொடர்பாடல் கற்கை” எனும் தனித் துறையாக வளர்வதற்கு முன்னர், மானுட விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம் மற்றும் அரசியல் விஞ்ஞானம் ஆகிய மூன்று துறைகளில் உள்ளடக்கப்பெற்ற ஓர் பிரிவாகக் காணப்பட்டது.
- சமூக விஞ்ஞானத் துறையில் சார்ள்ஸ் ஹோர்ட்டன் கூலி, அரசியல் விஞ்ஞானத் துறையில் வோல்ட்டர் லிப்மன், மற்றும் கல்வி விஞ்ஞானத் துறையில் ஜோன் டுவி ஆகிய அறிஞர்கள் முன்வைத்த கருத்துக்கள், ஆய்வுக் கற்கைகள் ஆகியன தொடர்பாடல் கற்கைகள் ஓர் துறைசார் பாடமாகத் தற்காலத்தில் வளர்ச்சி பெற அடித்தளமாகின.


DRAFT



சார்ள்ஸ் ஹோர்ட்டன் கூலி
(1864 – 1929)
Charles Horton Cooley



வோல்ட்டர் லிப்மன்
(1889 – 1974)
Walter Lippmann



ஜோன் டுவி
(1859 – 1952)
John Dewey

- சார்ள்ஸ் ஹோர்ட்டன் “கூலி சமூக அமைப்பு” (1909) எனும் கோட்பாட்டாக்கத்தையும், வோல்ட்டர் லிப்மன் “மக்கள் கருத்து” (1922) எனும் கோட்பாட்டாக்கத்தையும், ஜோன் டுவி “மக்களும் அவர்களது முரண்பாடுகளும்” (1927) எனும் கோட்பாட்டாக்கத்தையும் வழங்கி முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாடல் கற்கைத் துறையை விருத்தி செய்தன.

- மனிதத் தொடர்புகளை உருவாக்கும், கொண்டு செல்லும் மற்றும் அதனை விருத்தி செய்யும் கருவி தொடர்பாடலாகுமென சார்ள்ஸ் கூலி கூறினார். அத்தோடு இவ் அறிஞர்கள் மூவருமே மனிதனது சமூக வாழ்வில் முக்கியமான மையப்புள்ளி தொடர்பாடலாகுமெனக் குறிப்பிட்டனர்.

- மாறுபடும் மற்றும் வளர்ச்சியடையும் ஊடகத் தொழினுட்பம் பண்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கம் மற்றும் தொடர்பாடல், ஜனநாயகம் மற்றும் மக்கள் ஆகிய காரணிகளுக்கிடையே ஏற்படும் சமூக முரண்பாடுகள் பற்றி இவ்வறிஞர்கள் மேலும் கருத்துத் தெரிவித்தனர். இக் கருத்துக்கள் தொடர்பாடலை ஓர் துறைசார் பாடமாகக் கற்பதற்கான அடித்தளமாகின.

- அதன் பின்னர், தொடர்பாடல் கற்கை ஓர் துறைசார் பாடமாக மாற்றம் பெறுவது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நிபுணர்களின் வழிகாட்டல்களுடன் அமெரிக்காவை மையப்படுத்தி நிகழ்ந்தது. இதன்போது, தொடர்பாடல் கற்கை மற்றைய கற்கைகளில் உள்ளடங்கப் பெறும் ஓர் பாடமாக இல்லாது தனித் துறையாக வளர்ச்சி பெற்றது.


- 1933 தொடக்கம் 1945 வரை ஜேர்மனியில் காணப்பட்ட ிட்லரது ஏகாதிபத்திய ஆட்சியில், அந்நாட்டுப் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட நிபுணர்கள் அதிகம் பேர் ஐக்கிய அமெரிக்காவில் இணைந்தனர். அவர்கள் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களை மையப்படுத்தித் தொடர்பாடல் துறை பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

- ஹரோல்ட் டீ லாஸ்வெல், கேர்ட் லெவின், போல் எப். லஸார்ஸ்பெ.்.ல்ட், கார்ள் ஐவர் ஹோவ்லண்ட், வில்பர் ‘ராம், ஜோர்ஜ் கெப்னர் ஆகிய அறிஞர்களாலும், குளொட் ‘னன் மற்றும் வொரன் வீவர் ஆகிய பொறியியலாளர்களினாலும் தொடர்பாடல் கற்கைக்கான துறைசார் அடித்தளமிடப்பட்டது.


ஹரோல்ட் டீ லாஸ்வெல்
(1902 – 1978)
D. Lasswell‘


கேர்ட் லெவின்
(1890 – 1947)
Kurt Lewin



போல் எப். லஸார்ஸ்பெ.்.ல்ட்
(1901 – 1976)
Paul F. Lazarsfeld


கார்ள் ஐவர் ஹோவ்லண்ட்
(1912 – 1961)Harold
Carl Iver Hovland


வில்பர் ‘ராம்
(1907 – 1987)
Schramm


ஜோர்ஜ் கெப்னர்
(1919 – 2005)
George Gerbner


குளொட் ‘னன்
(1916 - 2001)
Claude Shannon


வொரன் வீவர்
(1894 – 1978)Wilbur
Warren Weaver

- 1940 களில், பேராசிரியர் வில்பர் 'ராம் அவர்களால் தொடர்பாடல் கற்கையை ஓர் துறைசார் பாடமாக நிறுவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதேவேளை, வெகுசன ஊடகப் பாடசாலைகள், தொடர்பாடல் ஆராய்ச்சிக் கூடங்கள் நிறுவுதல் மற்றும் பல்கலைக்கழகங்களில் புதிய கற்கைப் பிரிவுகள் ஆரம்பித்தல் என்பன நிகழ்ந்தன.
- முதல்முறையாகத் தொடர்பாடல் கற்கையை ஓர் துறைசார் பாடமாகக் கற்பிக்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது சிக்காகோ இலினோயிஸ் பல்கலைக் கழகத்திலாகும்.
- 1960 களின் முற்பகுதியில், சமூக விஞ்ஞானம், அரசியல் விஞ்ஞானம், உளவியல் விஞ்ஞானம் மற்றும் ஆங்கில மொழி ஆகிய விடயதானங்களுக்குள் உள்ளடங்கப்பெற்ற தொடர்பாடல் கற்கையினை ஓர் சுயாதீனக் கற்கைநெறி யாகக் கற்கும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.
- வெகுசன ஊடகங்களால் வெளியிடப்படும் தகவல்கள் மற்றும் வெகுசன ஊடகச் செயற்பாடுகள் மக்கள் வாழ்க்கையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்துகின்றன என்பதை 60,70 காலப்பகுதிகளில் தொடர்பாடல் துறைசார் நிபுணர்கள் ஆய்வுகளின் மூலம் நிரூபித்தனர்.
- குறிப்பாக, தொலைக்காட்சி ஊடகம் சிறுவர்களிடையே ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றி பேராசிரியர் வில்பர் 'ராம் மற்றும் பல்கலைக்கழக ஆய்வாளர் களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் இக்காலப்பகுதியில் அதிகம் கலந்துரை யாடப்பட்டன.
- பேராசிரியர் வில்பர் 'ராம் தொலைக்காட்சி ஊடகம் பற்றி மேற்கொண்ட முதலாவது ஆய்வறிக்கையில், சிறுவர்களின் சமூகத் தொடர்புகள் நலிவடைந்த மைக்கும் தொலைக்காட்சிக்கும் இடையே தொடர்பு உண்டு எனக் கூறியுள்ளார். பெற்றோருடன் முரண்படும் சிறுவர்கள் தம் குழப்பநிலையைப் போக்கிக் கொள்ளவும், மனக்கவலையைத் தீர்க்கவும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்வையிடுகின்றனர் என்பதையும் அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டார்.
- பெல்சில்வேனியாப் பல்கலைக்கழக ஆய்வாளர்களால் வன்முறையுள்ள மற்றும் வன்முறையற்ற கார்ட்டூன் நிகழ்ச்சிகளைச் சிறுவர் குழுக்கள் இரண்டிற்குப் பார்வையிட வழங்கி மேற்கொண்ட ஆய்வு, பேராசிரியர் வில்பர் 'ராமினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வை உறுதிப்படுத்தியது.
- இங்கு, பெல்சில்வேனியாப் பல்கலைக்கழக ஆய்வாளர்கள், வன்முறையுடன் கூடிய கார்ட்டூன் நிகழ்ச்சிகளைச் சிறுவர்கள் பார்வையிடுவதால் அவர்களுள் மூன்று முக்கிய மாற்றங்கள் ஏற்படுகின்றன எனக் குறிப்பிட்டனர்.
    - துன்பகரமான விடயங்கள் தொடர்பான சிறுவர்களது வேதனை குறைவடைதல்.
    - சிறுவர்கள் அவர்கள் வாழும் சூழல் மற்றும் உலகைப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்திக்கொள்ளல்.
    - மற்றவர்களுடன் வேலைகளில் ஈடுபடும்போது ஆக்கிரமிப்புடனும், விரைவாக முரண்பாடுகளில் ஈடுபடவும் சிறுவர்களிடையே ஆர்வம் அதிகரித்தல்.

DRAFT

- ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் தாக்கங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் தொடர்பாடல் கற்கைத்துறை மேலும் வளர்ச்சியடைந்தது.
- 1960 மற்றும் 1970 களில் வெகுசன ஊடகங்களால் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்கள்,1980 மற்றும் 1990 களில் எண்சார் (டிஜிட்டல்) தொழினுட்ப ஊடகக் கருவிகளின் பயன்பாடு, மற்றும் சமகாலத்தில், புதிய ஊடகங்கள், சமூக ஊடகங்கள் ஆகியவற்றின் செயற்பாடு ஆகியன தொடர்பாடல் கற்கைத்துறையின் பரப்பை அதிகரித்தன.
- தொடர்பாடல்துறை நேரடியானது என்பதைப் போலவே, அது உடனடியானதும் கூட. தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சியோடு ஆதிகாலம் தொட்டுத் தொடர்பாடல் கற்கைத் துறை விருத்திபெற்றது. அதேபோலவே, தற்போதும், இனிவரும் காலங்களிலும் இப்பாடம் தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சி, புதிய தொடர்பாடல் கருவிகள் மற்றும் அவற்றைப் பயன்படுத்தும் போக்குகள் மற்றும் அவற்றினால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் மாற்றங்களுக்கு ஏற்ப மாறுபடும்.
- தொடர்பாடல் கற்கைத் துறையில் இவ்வியல்பு பற்றிய அவதானத்தைச் செலுத்த வேண்டும். அத்தோடு, அவற்றால் தொடர்பாடல் கற்கைத் துறை முன்னோக்கிச் செல்ல உலக மற்றும் சர்வதேச அளவில் பல்வேறு சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன என்பதையும் அறிவுறுத்தல் வேண்டும்.
- தொடர்பாடல் கற்கைத்துறை பற்றிக் கற்பதால்,
  - உலக மற்றும் சர்வதேச அளவில் தொடர்பாடல் செயன்முறை மற்றும் ஊடகச் செயன்முறை பற்றிய அறிவு.
  - விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரும் ஆற்றல்.
  - அவசியமான, பொருத்தமான தகவல்களைத் தெரிவு செய்யும் ஆற்றல்.
  - ஆய்வு மற்றும் விமர்சனரீதியான சிந்தனை.
  - ஊடக விளங்கறிவு.
  - சிறந்த, ஒழுக்கமான மற்றும் வினைத்திறனான மானுட இடைத் தொடர்புகள்.
  - சமூக முன்னேற்றத்தில் அதிக பங்களிப்பு.
  - படைப்பாக்க ரீதியான சிந்தனை மற்றும் ஊடகத் தகவல் உருவாக்கம்.
  - அபிவிருத்திசார் மற்றும் ஜனநாயக சிந்தனையால் நிறைவான பிரஜையாகத் திகழத் தேவையான அறிவு, திறன், ஆற்றல் மற்றும் பழக்க வழக்கங்கள்.
  - வெகுசன ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றிய அறிவு.

ஆகியன ஒரு மனிதனுள் உருவாகும் / விருத்தியடையும்.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தொடர்பாடல் கற்கையின் ஆரம்பம் மற்றும் துறைசார் கற்கையாக அதன் ஆரம்பம் பற்றி விபரிக்குக.

2. தொடர்பாடலை ஓர் துறைசார் கற்கையாகக் கற்பதன் அவசியத்தை விளக்குக.

3. தொடர்பாடல் ஓர் துறைசார் கற்கையாக வளர்ச்சி பெறுவதில் ஊடகச் செயற்பாடுகள் தாக்கம் செலுத்தும் விதம் பற்றிய கீழ்க்காணும் தரவுகளைத் திரட்டுக. அவற்றைப் பொருத்தமான முன்வைப்பு முறைகளைப் பயன்படுத்தி முன்வைக்க.
   - √ கைத்தொழில் மயமாதல் மற்றும் தொடர்பாடல் ஊடகங்களின் வளர்ச்சி
   - √ முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் மற்றும் ஊடகச் செயற்பாடுகள்
   - √ வெகுசன ஊடகத் தோற்றம் மற்றும் அதன் தாக்கம்
   - √ கணினி உள்ளடங்கலான எண்சார் தொடர்பாடல் தொழினுட்பக் கருவிகளின் விருத்தி

4. தொடர்பாடல் துறை, கற்கைத் துறையாக வளர்ச்சியடையத் துணைபுரிந்த மேற்கத் தேய மற்றும் கீழைத்தேய அறிஞர்கள் மற்றும் அவர்களது பணிகள் பற்றிய அறிக்கையைத் தயாரிக்க.

DRAFT

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : 1.2 | இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை அறிமுகம் செய்தல் மற்றும் அதற்குப் பின்புலமாக அமைந்த காரணிகள் பற்றிய விளக்கத்தைப்பெறுவார். |
| **பாடவேளைகள்** | : | 03 |
| **கற்றற் பேறுகள்** | : | இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை அறிமுகம் செய்தல் பற்றி விபரிப்பார். |

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் திட்டமிடுக.

- இலங்கையில் தொடர்பாடல் பாடத்தை முதன்முதல் அறிமுகம் செய்தது தெஹிவளை கனிட்ட பல்கலைக்கழகம் (Junior Campus) ஆகும். 1968-1969 காலப்பகுதியில் இதழியல் (Journalism) எனும் பெயரில் அங்கு ஓர் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது.
- “இதழியல்” எனும் அக்கற்கைநெறிக்கான பாடவிதானத்தைத் தயாரித்தது கலாநிதி எட்வின் ஆரியதாச அவர்களாகும்.
- அக்காலப்பகுதியில் கல்வி அமைச்சராகக் கடமையாற்றிய ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல அவர்கள் இதற்காக மும்முரமாகச் செயற்பட்டார். அப் பாடநெறி இரண்டு வருடங்களின் பின்னர் இரத்துச் செய்யப்பட்டது.
- 1971 புரட்சியின் பின்னர் பல்கலைக்கழகங்களில் தொழில்சார் கற்கைநெறிகளை அறிமுகம் செய்யும்போது, தொடர்பாடல் கற்கை பல்கலைக்கழகங்களில் அறிமுகம் செய்யப்பட்டது.
- அதன்படி, 1973 இல், களனிப் பல்கலைக்கழகத்தில் “வெகுசனத் தொடர்பாடல் கற்கைப் பிரிவு” எனும் பெயரில் புதிய கற்கைப்பிரிவொன்று முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது.
- இதன்போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் விமல் திசாநாயக்க, பேராசிரியர் சுனந்த மகேந்திர, பேராசிரியர் எம்.பீ. ஆரியபால, பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர, கலாநிதி எட்வின் ஆரியதாச மற்றும் டீ.சி.ரணதுங்க ஆகிய நிபுணர்களால் இதற்கான முன்னெடுப்பு மேற்கொள்ளப்பட்டது.
- பேராசிரியர் விமல் திசாநாயக்க, பேராசிரியர் சுனந்த மகேந்திர ஆகியோர் பாடத்தைக் கற்பிக்கும் முதல் விரிவுரையாளர்களாகினர். வெளிவாரி விரிவுரையாளர்களாக, கலாநிதி எட்வின் ஆரியதாச, கலாநிதி பியசோம மேதிஸ், டீ.பீ. நிஹால்சிங்க, கே. ஜயதிலக்க, மஹகம சேகர, டப்ளியு. டீ. அமரதேவ, டீ. சி.ர ணதுங்க மற்றும் பியசிரி குணரத்ன ஆகிய நிபுணர்கள் செயற்பட்டனர்.

DRAFT

- இதற்குச் சமமாக, 1972 இல், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் "இதழியல்" எனும் டிப்ளோமாக் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. ஒரு வருடத்தின் பின்னர் அக்கற்கைநெறி இடைநிறுத்தப்பட்டது.
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா. சிவத்தம்பி ஆகியோரால் தமிழ்மொழிப் பாடத்துறையினூடாக "இதழியல" அதன் அங்கமாக அறிமுகப்படுத்தப்பட்டது.
- அத்தோடு, 1960 காலப்பகுதியில் இலங்கையில் காணப்பட்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏரிக்கரை (லேக்ஹவுஸ்) நிறுவனங்களின் மூலமாகத் தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிநெறிகள் நடாத்தப்பட்டன.
- தற்காலத்தில் தொடர்பாடல் கற்கை தொடர்பான பாடநெறிகள் களனிப் பல்கலைக் கழகம், ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழக ஸ்ரீபாளி வளாகம், ரஜரட்ட பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் நடைபெறுகிறது.
- இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல பல்கலைக்கழகங்களில் வியாபித்திருக்கும் இக் கற்கைநெறிப் பட்டப்படிப்பு, டிப்ளோமா, பொதுப் பட்டம், சிறப்புப் பட்டம், பட்டப்பின் படிப்பு மற்றும் முதுமாணிக் கற்கை எனப் பல்வேறு மட்டங்களில் விருத்தி பெற்றுள்ளது.
- தேசிய கல்வி நிறுவகத்தால் 2006ஆம் ஆண்டில் முதன்முறையாக 10 ஆம் தரத்திலும், 2007 ஆம் ஆண்டில் 11 ஆம் தரத்திலும் தொகுதிப் (Basket) பாடங்களுள் ஒரு பாடமாக "தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை" பாடம் அறிமுகம் செய்யப்பட்ட தோடு, 2008ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரத்தில் கலைப் பிரிவில் ஓர் பாடமாக இப் பாடம் இணைக்கப்பட்டது.
- தற்போது, தொடர்பாடல் கற்கைகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துறைகள் இணையும் வண்ணம் தமிழ், ஆங்கில, சிங்கள மொழிகளில் பிரயோக ரீதியான மற்றும் கோட்பாட்டு ரீதியான பாடநெறிகள் பலவும் தனியார் நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்றன. இதன்மூலம் தொடர்பாடல் கற்கைத் துறையின் தொழில்வாய்ப்பு அதிகரித்தமையும் கண்கூடாகிறது.
- அனைத்துத் தொழில்துறைகளின் வெற்றிக்கும் தொடர்பாடல் அத்தியாவசியம் என்பதால் அது பற்றிய கற்கை தற்காலத்தில் அவசியமானதும் பிரயோசனமானதும் கூட.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. இலங்கையில் தொடர்பாடல் கற்கை அறிமுகம் செய்தமை பற்றி விபரிக்குக.

2. இலங்கையில் தொடர்பாடல் கற்கைத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் அதனைக் கற்பதன் அவசியத்தைக் கலந்துரையாடுக.

3. இலங்கையில் தொடர்பாடல் பாடம் கற்பிக்கப்படும் பல்கலைக்கழகங்கள், வெகுசன ஊடக நிறுவனங்கள் என்பவற்றை ஆய்வு செய்க. அதன் மூலம் பெறப்பட்ட தகவல் களைக் கொண்டு நீங்கள் எதிர்காலத்தில் இணையக்கூடிய தேசிய, வெளிநாட்டுக் கற்கை நெறி, விடய அறிவை வளர்த்துக் கொள்ள உதவும் வளங்கள், நபர்கள், நிறுவனங்கள் பற்றிக் கற்க.

4. இலங்கையில் தொடர்பாடல் கற்கை வளர்வதற்குத் துணைபுரிந்த தமிழ், சிங்கள நிபுணர்கள் பற்றிக் கற்க.

DRAFT

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.3 தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கையினை ஓர் துறைசார் பாடமாகக் கற்பதன் அவசியத்தை விளக்குவார். |
| **பாடவேளைகள்** | : | 10 |
| **கற்றற் பேறுகள்** | : | 1. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தை அறிமுகம் செய்வர்.<br>2. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தைப் பின்பற்றுவதன் அவசியத்தை விளக்குவார். |

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் திட்டமிடுக.

- முன்பள்ளியிலிருந்து பல்கலைக்கழக மட்டம் வரையும் ரீசைஅயசல ளுஉாழழட வழ ருளைநசளவைல)முதியோர் கல்வியிலும் ஊடகக் கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றிற்குத் துணைபுரிய வேண்டும் என்பது தொடர்பாக யுனெஸ்கோ அமைப்பினால் 1982 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குரூன்வெல்ட் பிரகடனத்தை மையப்படுத்தி - 2006 ஆம் ஆண்டில் 10 ஆம் தரத்திலும், 2007 ஆம் ஆண்டில் 11 ஆம் தரத்திலும் தொகுதிப் (டீயளமநவ) பாடங்களுள் ஒரு பாடமாக தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை பாடம் அறிமுகம் செய்யப்பட்டதோடு, 2008 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரத்தில் கலைப் பிரிவில் ஓர் பாடமாக இப் பாடம் இணைக்கப்பட்டது.
- ‘‘ஊடகக் கல்வி’’ என்பது பல்வேறு துறைகளையும் இணைத்தவாறான பரந்த ஒரு துறையாகும்.
- ஊடகக் கல்வி என்பது ஒரு நபரை ஊடக விளங்கறிவுடன்கூடிய ஒருவராக மாற்றும் செயன்முறையாகும். ஊடகக் கல்வி, அனைத்து ஊடகங்களைப் பற்றியும் அவதானத்தைச் செலுத்தும்.
- அனைத்து ஊடகங்கள் என்று குறிப்பிடப்படுவது சலனப் படங்களைக் கொண்ட திரைப்படம், தொலைக்காட்சி, ஒளிப்பதிவு நாடா ஆகியவையும், ஒலி ஊடகங்களுக்கு உரித்தான வானொலி, ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்கள் ஆகியவையும், அச்சு ஊடகங்களுடன் தொடர்புடைய பத்திரிகை, சஞ்சிகை, சுவர்ப் பத்திரிகை ஆகியவையும், புதிய எண்சார் தொழினுட்பத்தைப் பிரயோகிக்கும் அனைத்து ஊடகங்களுமாகும்.
- யுனெஸ்கோ அமைப்பு, பாடசாலைகளில் முதலாம் தரத்திலிருந்து ‘‘தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை’’பாடத்தை வழங்க வேண்டுமெனப் பின்வருமாறு வரையறுத்தது, ‘‘இதன் மூலம் சமூகத்திற்கு அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை விமர்சனரீதியாக நுகரத் தேவையான அறிவு, ஆற்றல், மனப்பாங்கு ஆகியவற்றை

DRAFT

விருத்திசெய்யக் கூடியதோடு, அது வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சியுமாகும். ஊடகக் கல்வி வழங்குவதற்காகத் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஊடகத் தயாரிப்புகள் பற்றிய விவரணம், படைப்பாக்க ரீதியான உள்ளடக்கங்களை இடல், வெகுசன ஊடகத்தைப் பயன்படுத்தும் விதம், வினைத்திறனாக ஊடகத்தை நுகர்தல், செயற்படு பெறுநராக ஊடக நிகழ்ச்சிகளில் இணைதல் ஆகிய விடயங்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.''

- யுனெஸ்கோ அமைப்பினால் பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஊடகக் கற்கையை இணைக்க வேண்டும் என இக் காலப்பகுதியில் (1980) குறிப்பிடப்பட்டது, இது, வெகுசன ஊடகங்களின் செயற்பாடுகள் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே ஏற்படுத்திய பாதகமான தாக்கம் அதிகரித்ததன் காரணத்தினாலாகும்.
- தற்காலத்தில் எண்ணிலடங்காத ஊடகத் தொழினுட்பக் கருவிகள் மூலம் நிகழும் விரைவான தகவல் பரிமாற்றம், எல்லையற்ற மற்றும் விசித்திரமான ஊடக மாதிரி, அளவிடமுடியாத ஊடகப் பாவனையினால் ஊடகத்திலிருந்து மனிதரை பிரிப்பதற்குப் பதிலாக, எச்சரித்து மட்டுப்படுத்தலுக்குத் தேவையான உரிய அறிவை அவரிடத்தே உருவாக்க வேண்டும் எனும் பொதுக் கருத்து உருவாகியதும் இப் பிரகடனத்தின் பின்னராகும்.
- ஊடகக் கல்வி எனும் பரந்த விடயத்தின் மூலம் விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரத் தேவையான நுட்பமும் அதன்மூலம் ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதற்கான வழிகாட்டலும் வழங்கப்படும்.
- ''தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை'' பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களும், இப் பாடத்தைக் கற்கும் மாணவர்களும் பாடசாலை மட்டத்தில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னணி பற்றி அறிந்திருத்தல் மிக முக்கியமாகும்.
- க.பொ.த உயர்தரத்திற்கான ''தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை'' பாடம் இரு பிரிவுகளைக் கொண்டது.

  1. தொடர்பாடல்
  2. ஊடகக் கற்கை

- இங்கு ''தொடர்பாடல்'' எனும் பிரிவில், தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணம், தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகள், பல்வேறு தொடர்பாடல் வகைகள், மாதிரிகள், தொடர்பாடல் பற்றிய கோட்பாட்டு ரீதியான காரணிகள், மற்றும் அவற்றைப் பிரயோகிக்கத் தேவையான திறன்கள் ஆகியவை அவதானிக்கப்படும்.
- ''ஊடகக் கற்கை'' எனும் பிரிவில், ஊடகம் பற்றிக் கற்றல், பின்பற்றல், ஊடகத்தின் இயல்பு, உள்ளடக்கம், வரலாற்றுப் பரிணாமம், மற்றும் செயற்பாடுகளை இணங்காண்ப தோடு, ஊடகம் தனிநபரில், சமூகத்தில், பண்பாட்டில் ஏற்படுத்தும் தாக்கமும் கற்கப்படும்.
- தொடர்பாடல் மானுட இடைத்தொடர்புகளை ஏற்படுத்த அவசியமான கருவியாகும். ஆகையால், தொடர்பாடல் திறன் அனைவரிடத்திலும் காணப்படவேண்டிய, விருத்தி

DRAFT

செய்யப்படவேண்டிய ஒன்று என அவதானிக்க வேண்டும்.

- ஊடகக் கற்கையின் மூலம் விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரத் தேவையான அறிவு, மதிநுட்பம் வழங்கப்படும். இதன் மூலம் ஊடக விளங்கறிவு வளரும்.
- ஆரம்ப சமூகங்களில் வாழ்ந்த மனிதன் பயன்படுத்திய ஒலி, சமிக்ஞை, குறியீடுகள் தொட்டு வெகுசன ஊடக வளர்ச்சி, சமகாலத்தில் எண்சார் தொழினுட்ப ஊடகக் கருவிகள் வரை வளர்ச்சிபெற்ற தொடர்பாடல் செயன்முறைகள் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.
- சிறந்த தொடர்பாடுநரைப் போலவே, சிறந்த பிரஜையாகவும் திகழ அவசியமான தொடர்பாடல் அறிவும், விமர்சனரீதியாக ஊடகத்தை நுகரும் திறனும் சிறுவர்களிடத்தே வளர்க்க வேண்டும்.
- அதனடிப்படையில் தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தைப் பின்பற்றுவதன் அவசியத்தை

  √ தொடர்பாடல் திறன் விருத்தி
  √ ஊடக விளங்கறிவு
  √ விமர்சனரீதியான ஊடகப் பாவனை
  √ அவசியத்திற்கேற்ற மொழிப் பாவனை
  √ ஊடகம் மற்றும் பண்பாடு பற்றிய அறிவு
  √ ஊடகத்தின் தனிமனித மற்றும் சமூகத் தாக்கம்
  √ தகவல் பெற்றுக்கொள்ளும் மதிநுட்பம்
  √ ஊடக ஒழுக்கநெறி மற்றும் கோட்பாடுகள் பற்றிய விளக்கம்
  √ சிறந்த பிரஜையாக அபிவிருத்தியில் பங்காற்றல்
  √ படைப்பாக்கரீதியான தொடர்பாடல் திறன்

  ஆகிய காரணிகளுக்கூடாகக் கற்றல் அவசியம்.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தில் அவதானிக்கப்படும் விடயப் பரப்புகளை விளக்குக.

2. தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கைப் பாடத்தைப் பின்பற்றுவதன் அவசியத்தை விமர்சனரீதியாக விபரிக்குக.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| குருன்வெல்ட் பிரகடனம் | - | Grunwald Declaration |
| ஊடகக் கற்கைகள் | - | Media Studies |
| ஊடகக் கல்வி | - | Media Education |
| தொடர்பாடல் | - | Communication |

**உசாத்துணை நூல்கள்**


1. Dissanayake, Wimal, Human Communication, Colombo, Lakehouse Investments PLC, 1977

2. De Fleur and Dennis, Understanding Mass Communication, Boston, USA, Houghton Mifflin Company, 1991.

3. James Waston and Anne Hill, A Dictionary of Communication and Media Studies, India,Universal Book Stall, 1991

4. Rogers, Everett M., A History of Communication Study, New York: The Free Press. 19


DRAFT

## 2. தொடர்பாடல் அடிப்படை

**தேர்ச்சி** : 2.0 தொடர்பாடல், அதன் இயல்பு, அடிப்படைக் கூறுகள் மற்றும் பணிகள் பற்றிய விமர்சனரீதியான அறிவுடன் அவற்றை அன்றாட வாழ்க்கையில் தொடர்பாடல் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.1 தொடர்பாடல் என்றால் என்ன என இனங்காண்பார்.

**பாடவேளைகள்** : 04

**கற்றற் பேறுகள்** : தொடர்பாடல் என்றால் என்ன என இனங்கண்டு அதன் அர்த்தத்தைத் தெளிவுபடுத்துவார்.

DRAFT

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் திட்டமிடுக.

**தொடர்பாடலை இனங்காணல்**

- தொடர்பாடல் என்பது தகவல் பரிமாற்றமாகும்.
- மானுடத் தொடர்பாடல், மனித சமூகத்தின் தோற்றம் போலவே மிகப் பழைமையானது.
- தொடர்பாடல் எமது அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புபட்டது.
- மனிதர் என்ற வகையில் நாம் மேற்கொள்ளும் சிந்தனை, தொடுகை, கேட்டல், பார்த்தல், கதைத்தல், அனுபவித்தல், வாசித்தல், எழுதுதல், மகிழவூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுதல் ஆகிய அனைத்தும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பாடலுடன் தொடர்புபட்டவை.
- மனிதன் மற்றும் சமூகத் தொடர்பின் அடிப்படைத் தொடர்பாடலாகும்.
- தொடர்பாடல் நலிவுற்றால் அதனோடு தொடர்புடைய அனைத்துக் கூறுகளும் பாதிப்படைந்துவிடும்.
- சிறந்த தொடர்பாடல் காணப்படுமிடத்து அது மனித - சமூக முரண்பாடுகளைக் களையும்.
- அதனால், தொடர்பாடல் பற்றி நோக்குதல், கற்றல் மற்றும் பயிற்சி செய்தல் ஆகியன அவசியமாகும்.
- தொடர்பாடல் என்பதன் அர்த்தமாவது, "அறிந்ததை அறியப்படுத்தல்" என்பதாகும்.
- ஆங்கிலத்தில் "Communication" எனும் சொல் "பொதுவானதாக்குதல்" என்று அர்த்தப்படுவதோடு, அது "Communis" எனும் அடிச்சொல்லிலிருந்து தோற்றம்பெற்றது.

- தமிழில் தொடர்பாடல் என்பதன் அர்த்தம் தொடர்புகளை ஏற்படுத்தும் செயற்பாடு என்பதாகும்.
- சிங்களத்தில் "சன்னிவேதனய" என்பதன் அர்த்தம் "நன்றாகத் தெரியப்படுத்தல்" என்பதாகும்.
- சாதாரண தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் தகவல் வழங்கவும், பெறவும் ஐம்புலன் களையே பயன்படுத்துகிறோம்.
- மனிதன் உருவாக்கிய மொழி மூலமாக மிகவும் சிக்கலான தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாற்ற இயலுமாயுள்ளது.
- மொழியின் தோற்றத்தோடு, கருத்துக்கள் மற்றும் கோட்பாடுகளின் தன்மையும் நீட்சியைப் பெற்றது.
- எழுத்து வளர்ச்சியோடு ஆவணப்படுத்தல், பாதுகாத்தல் முதலானவையும் இயலுமாய் அமைந்தது.
- தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சியின் விளைவாகத் தகவல் பரிமாற்றம் துரித மடைந்தது.
- வெகுசன ஊடகங்களின் வருகையுடன் எண்ணிறைந்த தகவல்களை அதி விசாலப் பெறுநர்களுக்கு ஒரே நேரத்தில் துரிதமாகக் கடத்தக்கூடியதாயமைந்தது.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. பொருள் விளங்கும் வண்ணம் தொடர்பாடல் எனும் பதத்தை விளக்குக.

DRAFT

**தேர்ச்சி மட்டம்** : **2.2** தொடர்பாடலின் இயல்பை விளங்கி அதனைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 24

**கற்றற் பேறுகள்** : தொடர்பாடலின் இயல்பை விபரிப்பார்.

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாக பாடத்தைத் திட்டமிடுக.

**தொடர்பாடலின் இயல்புகள்**

தொடர்பாடலின் இயல்பை விளங்கிக்கொள்வதற்கு அதன் தனித்துவமான பண்புகள் அல்லது பொதுவான பண்புகளைப் பரிசீலிக்க வேண்டும். தொடர்பாடலின் இயல்பை அறிந்து கொள்ளக்கூடிய சில பண்புகள் காணப்படுகின்றன. அவற்றைச் சற்று விளக்கமாகக் கலந்துரையாடுவது பயனுள்ளதாக அமையும்.

- **தொடர்பாடல் குறிக்கோளைக் கொண்டது.**
  யாதேனுமொரு நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் தொடர்பாடலில் ஈடுபடு கின்றோம். தகவலொன்றை வழங்குதல் அல்லது பெற்றுக்கொள்ளுதல், ஆர்வத்தைப் பூர்த்தி செய்தல், மற்றும் மகிழ்வூட்டம் பெறுதல் முதலான நோக்கங்கள் தொடர்பாடலின் பின்புலமாகக் காணப்படுவது வெளிப்படையாகிறது. தகவலை வழங்குவோரும், தகவலைப் பெற்றுக்கொள்வோரும் தொடர்பாடலின் நோக்கங்கள் பற்றிய போதிய தெளிவுடன் இருந்தால் அத் தொடர்பாடல் வெற்றியடையும். மாறாக, முரண்பாடுகள் காணப்படுமேயானால் சிக்கல் நிலை உருவாகும்.

- **தொடர்பாடல் குறியீட்டுப் பாவனையுடையது.**
  தொடர்பாடல் என்பது ஓர் குறியீட்டுச் செயன்முறையாகும். தகவல் உருவாகுவது குறியீடுகள் மூலமாகவேயாகும். இதன்படி, சொல், சமிக்ஞைகள், அடையாளங்கள், முத்திரைகள், குறிப்புகள், வரைபடங்கள், ஓவியங்கள், எழுத்துக்கள் மட்டுமல்லாது, ஒலியையும் குறியீடாகவே கணிப்பிடவேண்டும். வெவ்வேறு பொருட்கள், நபர்கள், இடங்களைப் போலவே, மிகவும் சிக்கலான உணர்வுகள், கருத்துக்கள் போன்ற தகவல்களைப் பரிமாறிக்கொள்ள இலகுவாயிருப்பது தொடர்பாடல் எனும் தகவல் பரிமாற்றச் செயன்முறையின் மூலமேயாகும். எனவே, நாம் குறியீடுகளைத் தெரிவு செய்யும்போது மிக அவதானத்துடன் தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில், குறியீடுகளில் தவறுகள் இருந்தால் அது வேறு கருத்துக்களைத் தோற்றுவிக்கும்.

DRAFT

- **தொடர்பாடல் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு இயைவானது.**

எப்பொழுதும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டே தொடர்பாடல் நிகழும். இதன் மூலம் குறிப்பிடப்படுவது தொடர்பாடல் நிகழும் இடம் அல்லது சூழலாகும். தொடர்பாடல் பணி மற்றும் சந்தர்ப்பம் ஆகியவற்றிற்கிடையில் நேரடித் தொடர்பு காணப்படுகிறது. சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் தொடர்பாடல் செயற்பாடு நிகழ வேண்டும். உதாரணமாக, ஓர் மரண வீட்டைச் சந்தர்ப்பமாக எடுத்துக் கொண்டால், அந் நிகழ்விற்குப் பொருத்தமான வகையிலே தொடர்பாடல் இடம்பெறுவதை இங்கு குறிப்பிடலாம்.

இங்கே சந்தர்ப்ப சூழ்நிலை என்பது பௌதீக சூழலை மாத்திரம் குறிப்பிடுவதில்லை. ஏனெனில், சில சந்தர்ப்பங்களில் நபர்கள், இடங்கள், பண்பாடு, தொழில்கள் என்பனவும் சந்தர்ப்ப சூழ்நிலைக்குள் அடங்குகின்றன.

- **தொடர்பாடல் ஓர் செயன்முறையாகும்.**

தொடர்பாடல் என்பது எப்போதும் மாறாமல் காணப்படும் ஒன்றல்ல. அது காலத்தோடு சேர்ந்து மாற்றத்திற்கு உட்படக்கூடியதொன்று. அதனாலேயே தொடர்பாடல் பற்றிய கற்கையானது ஏனைய கற்கைகளை விட வேறுபட்டது. எனவே, தொடர்பாடல் பற்றிய கற்கையின்போது பல்வேறு காரணிகளைப் பற்றியும் கருத்திற்கொள்வது அவசியமாகும்.

எல்லாத் தொடர்பாடல் சந்தர்ப்பத்திலும் ஓர் செயன்முறை இடம்பெறும். உதாரணமாக, எழுத்து மூலமான தொடர்பாடலை எடுத்துக் கொள்வோம். அதில் பல்வேறு படிமுறைகள் உள்ளன. அச்செயற்பாடு தொடர்பாகச் சிந்தித்தல், தயார்செய்தல், திருத்தங்களை மேற்கொள்ளுதல், மீண்டும் எழுதுதல் போன்ற ஒழுங்குமுறைகளைக் கடந்த பின்பே இறுதிப் பெறுபேற்றைப் பெறலாம். இவ்வாறு ஏனைய எல்லாத் தொடர்பாடல்களிலும் அதனுடன் தொடர்புடைய ஒரு செயன்முறையைக் கண்காணிக்க முடியும்.

- **தொடர்பாடல் பலவிதமானவை.**

தொடர்பாடலின் வகைகள் மற்றும் வடிவங்களை அறிந்து கொள்வதன் மூலம் தொடர்பாடலிலுள்ள பல்வகைமையை அடையாளம் கண்டுகொள்ள முடியும். ஒவ்வொரு தொடர்பாடல் வகைகளும் வடிவங்களும் வெவ்வேறு சூழ்நிலைகளில் மாற்றங்களுக்கும் மொழிபெயர்ப்புகளுக்கும் உட்படுவதைக் காணலாம். பேச்சுத் தொடர்பாடலைக் காட்டிலும் எழுத்துத் தொடர்பாடலின் பண்புகள் வேறுபட்டன. ஆளிடைத் தொடர்பாடலை விட குழுத்தொடர்பாடல் வேறுபட்டது. பேச்சுத் தொடர்பாடலானது மதம்சார் சூழ்நிலையில் ஒரு விதமாகவும், அரசியல் சூழ்நிலையில் வேறு விதமாகவும் அமையும்.

DRAFT

தொழினுட்பத்தின் வருகையுடன் தொடர்பாடலானது பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளமை தெளிவாகிறது. ஆளுள் தொடர்பாடல் முறையைத் தவிர்த்து ஏனைய சகல தொடர்பாடல்முறைகளும் தொழினுட்ப வளர்ச்சியால் காலத்துக்குக் காலம் மாற்றமடைவது தவிர்க்க முடியாதுள்ளது. நாம் கையாளும் வெவ்வேறு தொடர்பாடல் கருவிகள், அவற்றின் வேறுபாடுகள், அவை புதுப்பிக்கப்படும் விதங்கள் குறித்துத் தெளிவாக ஆராய்வதன் மூலம் நாம் இதனை விளங்கிக்கொள்ளலாம். பண்பாடு - தொடர்பாடலில் வேறுபாடுகள் ஏற்படுவதற்கான ஒரு முக்கிய காரணியாகும். வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு சமூகங்களிலும் காணப்படும் பண்பாடுகள் மற்றும் துணைப்பண்பாடுகள் என்பவற்றில் காணக்கிடைக்கும் தொடர்பாடல்சார் பல்வகைமைகளை ஆராய்வதன் மூலம் இதனை விளங்கிக்கொள்ளலாம்.

- **தொடர்பாடலானது ஒரு வழி மற்றும் இரு வழிகளைக் கொண்டது.**

தொடர்பாடல் என்பது கருத்துப்பரிமாற்றமென முன்பு கூறினோம். எனவே, அதில் தகவல்களைப் பெறுவது போலவே, தகவல்களை வழங்கும் செயற்பாடும் நடைபெறும். இப் பரிமாற்றத்தோடு தொடர்புடைய இரு பகுதியினரும் சிறப்பாக இயங்குவதன் மூலம் உயர் பிரதிபலனை எதிர்பார்க்கலாம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தொடர்பாடலானது இரு வழிப்போக்கில் நடைபெறுவதைக் காணலாம். ஆனால், ஒரு வழிப் போக்கிலான தொடர்பாடல் நடைபெறாது எனக் கூறிவிட முடியாது.

- **தொடர்பாடல் ஓர் சக்தி.**

அறிவு ஓர் சக்தி என்பது மூத்தோர் வாக்கு. அறிவு என்பது தகவலே. அறிவு உண்டாவதற்குத் தகவல் தொடர்பாடல் முதன்மையாக உள்ளது. அதன்படி, தொடர்பாடலானது அறிவின் மீது கட்டமைக்கப்படும் சக்தியின் அடிப்படையாகும். அதேபோல், சக்தி மற்றும் தலைமைத்துவத்திற்கிடையில் பிரிக்க முடியாத நெருங்கிய உறவு காணப்படுகிறது. ஒரு தலைவருக்குத் தனது குழுவினரது ஒத்துழைப்புக் கிடைக்காதவிடத்து அவரது தலைமைத்துவமும் வீணாக நேரிடும். எனவே, தலைமைத்துவத்தைப் பெற, தாங்க, ஏற்று நடக்க ஒத்துழைப்பு, விருப்பு வெறுப்புகளை வெல்ல வேண்டும். அதற்கு, தலைவர் சிறப்பாகத் தொடர்பாடலில் ஈடுபடுபவராக இருக்க வேண்டும். இதனாலேயே, தொடர்பாடல் சக்தி மிக்கது என்கின்றனர். சமயம், கல்வி, அரசியல், வணிகம் என எத்துறையிலும் இந்நிலையே வெளிப்படுகிறது.

எல்லா விதங்களிலும் தொடர்பாடல் வடிவங்கள் சக்தி உருவாகுவதற்கான பின்னணியைத் தோற்றுவிக்கக் காரணமாக உள்ளன. ஆளுள் தொடர்பாடலானது தர்க்க ரீதியான சிந்தனை வளர்ச்சிக்கும், ஆளிடை மற்றும் குழுத் தொடர்பாடல்கள் தனிப்பட்ட பொது உறவுகளின் விருத்திக்கும், வெகுசனத் தொடர்பாடல் புகழ், பிரசித்தம் மற்றும் புலக்காட்சி உருவாகவும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்களிப்புச் செய்கின்றன. இவை அதிகரிப்புச் செய்வதன், குறைவதன் அடிப்படையில் சக்தி கட்டியெழுப்பப்படுகிறது.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தொடர்பாடலின் இயல்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

2. நீர் விரும்பும் ஊடகத் தகவலொன்றைத் தெரிவு செய்து, அதில் தொடர்பாடலின் இயல்புகளோடு தொடர்புடைய அம்சங்கள் காணப்படும் விதத்தை ஆராய்க.

DRAFT

தேர்ச்சி மட்டம் : **2.3** தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளைப் பகுப்பாய்வர்.

பாடவேளைகள் - 18

கற்றற் பேறுகள் -

- தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளை இனங்கண்டு முன்வைப்பார்.
- தொடர்பாடல் செயற்பாட்டின் அடிப்படைக் கூறுகளைத் தனித்தனியே விளக்குவார்.
- தொடர்பாடல் செயற்பாட்டை விளங்கிக் கொள்வதற்கு அடிப்படைக்கூறுகள் பற்றிய அறிவு அவசியம் என்பதை அறிந்து அது தொடர்பான கருத்துக்களை வெளியிடுவார்.

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்**

கீழே வழங்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி பாடத்தை ஒழுங்குபடுத்துக.

**தொடர்பாடலின் கூறுகள்**

தொடர்பாடலை விளங்கிக் கொள்வதற்கும், அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்து வதற்கும் அதன் செயற்பாட்டின் உள்ளார்ந்த கூறுகள் எவையென்ற தெளிவான அறிவு அவசியமானதாகும். அதனைப் போலவே, அதன் கூறுகள் தொடர்பாடலின் உயர் தன்மைக்கு எந்தளவில் பங்களிப்புச் செலுத்துகின்றன என்பதையும் அறிந்திருக்க வேண்டும். அதைக் காட்டிலும் இக்கூறுகள் தொடர்பாகக் கற்றுக் கொள்பவற்றை அன்றாடத் தொடர்பாடல் செயற்பாடுகளில் செயற்படுத்துவது அவசியமாகும்.

DRAFT

தொடர்பாடல் செயன்முறையில் மிக முக்கியமான கூறு எது என்பதில் பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. எவ்வாறிருப்பினும், பிரதானமான 9 கூறுகளைப் பற்றி இங்கு கலந்துரையாடலாம்.

1. **தொடர்பாடுநர்**

இன்னோர் பிரிவினரோடு தகவல், கருத்துக்கள், கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் ஆகியவற்றைப் பரிமாற்றுபவர் தொடர்பாடுநர் ஆவார். ஒரு தனி நபர் மட்டுமல்ல குழு, அமைப்பு, நிறுவனம் கூட தொடர்பாடுநராக இருக்கலாம். தொடர்பாடல் செயன்முறையைக் கணிசமாகக் கட்டுப்படுத்துவதற்கான திறன் தகவலை அனுப்புபவரிடம் காணப்படும்.

**2. குறிமுறையாக்கம்**

இது எல்லாத் தொடர்பாடல் செயற்பாடுகளிலும் நிகழும். இதனை மானுடத் தொடர்பாடல் மூலம் புரிந்துகொள்வது எளிது. எமது உள்ளத்தில் எழும் கருத்து, உணர்வு என்பவற்றை இன்னொருவர் விளங்கிக் கொள்ளும் ஒரு தகவலாக மாற்ற வேண்டும். இதுவே, குறிமுறையாக்கம் என்று அழைக்கப்படுகிறது.

**3. தகவல்**

தொடர்பாடுநர் மற்றைய பிரிவினர்க்குப் பரிமாற்றும் விடயம் "தகவல்" ஆகும். அது கருத்தாகவோ, கோட்பாடாகவோ, எண்ணக்கருவாகவோ உருப்பெறலாம். தகவல் எப்போதும் குறியீடுகள் மூலம் உருவாகும். குறியீடுகள் பலவகைப்படும். அவற்றைக் கவனமாகத் தெரிவு செய்ய வேண்டும். ஏனெனில், குறியீடு தவறாக இருப்பின் தகவல் தவறாகி விடும்.

**4. ஊடகம்**

தொடர்பாடுநரின் இடத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் இடத்திற்குத் தகவல் சென்றடைவது ஊடகத்தின் மூலமாகும். சாதாரணமாக அன்றாடத் தொடர்பாடலில் ஐம்பொறிகளே ஊடகங்களாகின்றன. அவற்றில் கண்(பார்த்தல்) மற்றும் காது (கேட்டல்) போன்றவையே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன.

DRAFT

**5. பெறுநர்**

தொடர்பாடுநர் தனது தகவலைப் பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் ஒருவருக்கு அனுப்புவார். தகவலைப் பெறுபவர்கள் பலராக இருப்பின் அவர்களைப் பெறுநர் கூட்டம் என்போம். தொடர்பாடலில் தகவல் வழங்குநரைப் போலவே, தகவலைப் பெறுபவரும் முக்கிய இடத்தை வகிக்கிறார்.

**6. குறிமுறையவிழ்ப்பு**

இது, எல்லாத் தொடர்பாடலிலும் இடம்பெறும். இதனை மானுடத் தொடர்பாடல் நிகழும் விதத்தின் மூலம் புரிந்து கொள்வது எளிது. எமக்குக் கிடைக்கும் தகவல்கள்குறியீடுகளுடன் கூடியதாகவே உள்ளன.தகவலில் கூறப்பட்டுள்ளதை விளங்கிக் கொள்வதற்கு அக் குறியீடுகளை எமக்கேற்ற மொழிநடையில் மாற்றிக் கொள்ள வேண்டும். அதுவே குறிமுறையவிழ்ப்பு எனப்படுகிறது.

## 7. பின்னூட்டம்

தொடர்பாடுநர் தகவலை வழங்கிய பின் அதனைப் பெறுபவர் அது தொடர்பாக அவதானிக்கக்கூடியவாறான ஒரு எதிர்வினையைத் தொடர்பாடுநருக்கு வழங்கு வாராயின், அதுவே பின்னூட்டம் ஆகும். தொடர்பாடல் செயன்முறையின் வெற்றியை அறிந்துகொள்ளப் பின்னூட்டம் உதவும். கிடைக்கப்பெறும் பின்னூட்டத்திற்கு அமையத் தொடர்பாடலின் இயல்புகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.

பின்னூட்டம் நேர் மற்றும் எதிர்மறையாகவும் அமைவதுடன், பின்னூட்டம் கிடைக்கப்பெறும் காலத்தின்படி அது விரைவானதா அல்லது தாமதமானதா எனவும் அடையாளப்படுத்தப்படலாம்.

## 8. இரைச்சல் / இடையூறு

தகவல் வழங்குநரிடமிருந்து தகவல் பெறுநருக்குத் தகவல் பயணிக்கும்போது அதற்கு இடையூறாக அமைபவை "தடைகள்" எனப்படும். தடைகள் இரண்டு வகைப்படும்.

- ஊடகத் தடை:.ஊடகத்தோடு தொடர்பான தடை - ஊடகத்தில் ஏற்படும் இடையூறுகளால் இத் தடை ஏற்படும்.
- கருத்துத் தடை- தகவலின் கருத்தைப் பெறுநரால் சரியான முறையில் பிரித்தறிய முடியாத நிலை.

இவ் இரு விதத் தடைகளுக்குப் மேலதிகமான தடைகள் சில நூல்களில் குறிப்பிடப் பட்டுள்ளன. அவை சூழற் தடை, தொழினுட்பத் தடை, உடலியற் தடை, உளம்சார் தடை என்பனவாகும்.

DRAFT

## 9. அனுபவக் களம்

ஒரு நபருக்குள்ள முன்னனுபவங்கள் இதன் மூலம் குறிப்பிடப்படுகின்றன. தகவல் வழங்குநருக்கும் பெறுபவருக்குமான முன் அனுபவப் பின்னணி ஒரே மாதிரியானதாகவும் உயர்வானதாகவும் காணப்படின், தொடர்பாடல் இலகுவானதாக அமையும்.

## 10. சந்தர்ப்பம் / சூழல்

இதன்மூலம் குறிப்பிடப்படுவது தொடர்பாடல் நடைபெறும் சூழல் அமைப்பு ஆகும். சூழல் நேரடியாகவே தொடர்பாடல் செயன்முறையில் தாக்கம் செலுத்தும். சிறப்பாகத் தொடர்பாடலில் ஈடுபடும் தொடர்பாடுநர் எப்போதும் தனது தொடர்பாடலுக்கு ஏற்றவாறு சூழலை மாற்றிக் கொள்வார். சூழல் பொருந்தாததாக இருப்பின் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

11. **தாக்கம்**

எல்லாத் தொடர்பாடலிலும் ஏதேனுமொரு தாக்கம் எதிர்பார்க்கப்படும். அத்தாக்கம் வெவ்வேறு விதங்களில் அமையலாம். சில பொழுதுகளில், மனப்பாங்கு அல்லது நடத்தையில் மாற்றத்தை உருவாக்குவது தொடர்பாடலின் விளைவாக எதிர்பார்க்கப் படலாம். மாறாக, வேறு சந்தர்ப்பங்களில்ஆதாய நோக்கத்தைக் கொண்டு நிகழ்வதாக இருக்கலாம். எது எவ்வாறோ, தொடர்பாடல் செயன்முறையின் வெற்றித்தன்மை தீர்மானிக்கப்படுவது எதிர்பார்த்த தாக்கத்தைப் பெற்றார்களா இல்லையா என்பதிலேயே யாகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தொடர்பாடல் செயன்முறையின் பிரதான கூறுகளைப் பெயரிடுக.

2. அக்கூறுகளைத் தனித்தனியே விளக்குக.

3. தொடர்பாடல் செயன்முறையை விளங்கிக் கொள்வதற்கு அப் பிரதானகூறுகள் எவ்வாறு உதவுகின்றன என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

DRAFT

தேர்ச்சி மட்டம் : 2.4 தொடர்பாடல் என்றால் என்ன என வரைவிலக்கணப் படுத்துவார்.

பாடவேளைகள் : 10

கற்றற் பேறுகள் : தொடர்பாடல் என்றால் என்ன என்பதை வரைவிலக் கணங்களூடாக விளக்குவார்.

**பாடத்திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்**

கீழே வழங்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி பாடத்தை ஒழுங்குபடுத்துக.

**தொடர்பாடல் பற்றிய வரைவிலக்கணங்கள்**

தொடர்பாடல் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ள, அது தொடர்பான வரைவிலக் கணங்கள் பெரிதும் உதவும். பல்வேறு அறிஞர்களும் நிறுவன அமைப்புகளும் முன்வைத் துள்ள வரைவிலக்கணங்களில் சமநிலை காணப்பெறாத போதும், அவற்றினூடாகக் கூறப்படும் முக்கிய, அடிப்படைக் காரணிகளில் கவனம் செலுத்துவதன் மூலம் தொடர் பாடலைப் பற்றிய மேலதிக விளக்கங்களை அடையலாம்.

DRAFT

1. தொடர்பாடல் பற்றிய ஹரோல்ட் டீ லாஸ்வெல்லின் (Harold D. Lasswell) வரைவிலக்கணம் - 1948

   "யாதேனுமொரு நபர், யாதேனுமொரு விடயத்தை, யாதேனுமொரு ஊடகத்தினூடாக, யாதேனுமொருவருக்கு, யாதேனுமொரு விளைவை ஏற்படுத்துவதற்காகக் கூறுதல் தொடர்பாடலாகும்."

   Source: Harold D. Lasswell, 'The Structure and Function of Communicationin Society', Lyman Bryson, ed., The Communication of Ideas, Harper & Row, New York, 1948

2. ஷனன் மற்றும் வீவரின் (Shannon and Weaver) வரைவிலக்கணம் - 1949
   "ஓரிடத்தில் உருவாக்கப்பட்ட அல்லது தெரிவு செய்யப்பட்ட தகவல் அவ்வாறோ அல்லது அதற்குச் சமமானதாகவோ வேறொரு இடத்தில் மீண்டும் உருவாக்கப் படுவதே தொடர்பாடலாகும்."
   Source: Shannon & Weaver, W. The Mathematical Theory of Communication, Urbana, IL: University of Illinois Press, 1949

3. வில்பர் 'ராமின் (Wilbur Schramm) வரைவிலக்கணம் - 1954

"தகவல்கள் அடங்கிய குறியீடுகளை அடிப்படையாகக் கொண்டு இரு சாராருக்கு மிடையில் ஒரேமாதிரியான அல்லது ஒருமித்த மனநிலையை ஏற்படுத்துவதே தொடர்பாடலாகும்".

Source: Bittner, John R., Mass Communication: An Introduction, U.S.A., 1986

4. தொடர்பாடல் பற்றிய சார்ள்ஸ்.எச்.கூலியின் (Charles Horton Cooley) வரைவிலக்கணம் - 1909

"மனித உறவுகளைப் பேணுவதற்கும், விருத்தி செய்து கொள்வதற்கும் துணை புரியும் சகல குறியீடுகளையும், அவற்றை நாட்டுக்கு நாடு பரப்புவதற்கும், காலத்தின் பிணைப்புகளிலிருந்து அப்பால் கொண்டு அவற்றைப் பாதுகாப்பதற்கும் பயன்படும் கருவியே தொடர்பாடலாகும்".

Source: Dissanayake, Wimal, Human Communication, Colombo, Lake House Investments PLC, 1977

5. ஒக்ஸ்போட் அகராதியின் வரைவிலக்கணம்.

"கருத்து, ஆற்றல் என்பவற்றைப் பேச்சு அல்லது எழுத்து அல்லது குறியீட்டின் மூலம் முன்வைப்பது, வெளிப்படுத்துவது அல்லது பரிமாற்றுவதே தொடர்பாடலாகும்".

Source: The Oxford Dictionary, Eighth Edition, Oxford University, Delhi, 1990

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தொடர்பாடல் என்பதை வரைவிலக்கணங்கள் மூலம் விளக்குக.

2. தொடர்பாடல் பற்றி வேறு அறிஞர்களால் கூறப்பட்ட ஐந்து வரைவிலக்கணங்களைத் தேடி எழுதுக. அவற்றின் மூலம் தொடர்பாடலை விவரிக்குக.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : **2.5** | தொடர்பாடலின் அடிப்படைச் செயற்பாடுகளை தெளிவு படுத்துவார். |
| **பாடவேளை** | : | 24 |
| **கற்றற் பேறுகள்** | : | தொடர்பாடலின் பணிகளை / நோக்கங்களை உதாரணங்கள் காட்டி விவரிப்பார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழே வழங்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி பாடத்தை ஒழுங்குபடுத்துக.

**தொடர்பாடலின் பணிகள் / நோக்கங்கள்**

தொடர்பாடலின் மூலமாக நான்கு பிரதான பணிகள் / நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன எனத் தொடர்பாடல் ஒரு துறைசார் கற்கையாக வளர்ச்சியடைந்த காலப்பகுதியிலிருந்தே ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அவையாவன,

1. தகவல் வழங்குதல்
2. அறிவுரை வழங்குதல் / கல்வியூட்டுதல்
3. தூண்டற் செயற்பாடு
4. மகிழ்வூட்டல் / பொழுதுபோக்களித்தல்

இப் பணிகள் / நோக்கங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே விபரிக்க முடியும், எனினும், சில சந்தர்ப்பங்களில் அவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பையும் வெளிக்காட்டும். உதாரணமாக, அறிவுரை வழங்கும் பணியின் போது தகவல் வழங்குதல், பொழுதுபோக்களித்தல் ஆகிய பணிகளும் உடன் நிகழும். எனினும், இப் பணிகளைத் தனித்தனியே விபரிப்பதன் மூலம் ஆழமான விளக்கத்தைப் பெறலாம். இதன்போது, சாதாரண தொடர்பாடல் நிகழ்வே கருத்திற்கொள்ளப்படவேண்டும், வெகுசனத் தொடர்பாடல் பற்றிப் பின்பு கலந்துரையாடுதல் உசிதமானதாகும்.

DRAFT

## 1. தகவல் வழங்குதல்

சகல தொடர்பாடல் சந்தர்ப்பங்களிலும் குறைந்த மற்றும் கூடிய அளவில் தகவல் பரிமாற்றம் செய்யப்படுகிறது. தகவல் வழங்கும் பணி சிறப்பாக நிகழ்வது அத் தகவல் நம்பகத்தன்மையுடன் கூடியதாக இருக்கும்போதேயாகும். முகவரியைக் கூறுதல், பொருளொன்றின் விலையைக் கூறுதல், வேலையொன்றுக்கு விண்ணப்பிக்கும் போது எமது சுயவிபரக்கோவையை இணைத்தல், வீதி சமிக்ஞைகள் மூலம் வாகனங்களை நிறுத்துதல் மற்றும் செலுத்துதல் போன்றன தகவல் வழங்கும் சந்தர்ப்பங்களாகக் கொள்ளப்படலாம்.

தொலைபேசிப் பெயர்ப்பட்டியல், வகுப்பறை மாணவர் பெயர் விபரம், பூகோள வரைபடம், கேலிச் சித்திரங்கள் முதலானவற்றின் மூலமும் தகவல் வழங்கும் பணி நிகழ்கிறது. எனவே, தகவல் வழங்கும் பணி வெவ்வேறு வடிவங்களில் நிகழ்வது தெளிவாகிறது. சமகாலத்திலே, தகவல் வழங்கலானது ஆதாயம் ஈட்டலை நோக்காகக் கொண்டு செயற்படுவதும் அவதானிக்கக்கூடியதாயுள்ளது.

DRAFT

## 2. அறிவுரை வழங்குதல் / கல்வியூட்டுதல்

இங்கு தகவல் வழங்கும் பணி இடம்பெற்ற போதிலும் அதையும் கடந்து நடத்தை மாற்றத்தை எதிர்பார்க்கும் வேறு ஒரு பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இதனால், இங்கு சாதாரண தகவல்களைப் பரிமாறிக் கொள்வதிலும் பார்க்க நிறுவனரீதியான அல்லது வரையறுக்கப்பட்ட தகவல்களைப் பரிமாற்றும் பணி நிகழ்கிறது. கணினியைப் பயன்படுத்திக் கடிதம் எழுதும் முறை பற்றி நீங்கள் இன்னுமொருவருக்குக் கற்பிக்கும் சந்தர்ப்பத்தை உதாரணமாகக்கொள்வோம். இங்கு தகவல் வழங்குவது மாத்திரமன்றி, கணினியின் கூறுகள், அவற்றைப் பயன்படுத்தும் முறை பற்றியும் விபரிப்பீர்கள். இவ்விபரிப்பு முறையானதொரு முறையிலே நிகழும். இது அறிவுரை வழங்குதல் அல்லது கல்வியூட்டுதல் என அழைக்கப்படும். விரிவுரை, செயலமர்வு, கலந் துரையாடல்கள் மற்றும் பாடல்கள் மூலம் நிகழ்வது அறிவுரை வழங்குதல் அல்லது கல்வியூட்டுதல் எனும் பணியேயாகும்.

## 3. துண்டற் செயற்பாடு

ஒருசில தகவல்கள் ஒருவரது எண்ணம் மற்றும் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளன. அதாவது, மனப்பாங்கு அல்லது நடத்தைசார் மாற்றத்தை ஏற்படுத்தல் அந்நோக்கமாகும்.இதுதூண்டற் பணி எனப்படும். அன்றாட வாழ்வில் யாதேனுமொரு செயற்பாட்டின்போது மற்றவர்களின் பங்குபற்றலைப் பெறுவதற்காக நாம் அவர்களை ஊக்கப்படுத்தும் அல்லது தூண்டும் பணியில்

ஈடுபடுவோம். தூண்டல் பணியை நோக்காகக் கொண்ட தகவல்கள் எமது எண்ணத்திற்கிணங்க எம்மால் தயாரிக்கப்பட்ட தகவல்களாகக் காணப்படும். பேச்சு, எழுத்து, கட்புல முன்வைப்பு முதலான உபாயங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படும். அதேபோலவே, சந்தர்ப்பம், தேவைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு ஏனைய முக்கிய காரணிகளிலும் அவதானம் செலுத்தி முன்வைத்தால் அத் தகவல் வெற்றிகரமானதாக அமையும். இதற்கு உதாரணமாக வர்த்தக விளம்பரங்களைக் கூறலாம்.

**4. மகிழ்வூட்டல் / பொழுதுபோக்களித்தல்**

தொடர்பாடல் பணிகளில் பொழுதுபோக்களித்தல் மிக முக்கியதொரு பணியாகும். தொடர்பாடலுடன் பொழுதுபோக்கு இணையும்போது அது இனிமையான ஒரு அனுபவமாகிறது. மேற்கூறப்பட்ட அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மகிழவூட்டல் / பொழுதுபோக்களித்தலை உட்சேர்த்தால் அத் தொடர்பாடல் ஆக்கபூர்வமானதாகவும், ஆர்வம்மிக்கதாகவும் அமையும். தொடர்பாடலில் நகைச்சுவையைச் சேர்ப்பது ஓர் உத்தி, அது ஒரு சிறந்த தொடர்பாடுநருக்குரிய ஆற்றலும் கூட. இருவருக்கிடை யிலான தொடர்பாடலிலும், குழுக்களுடனான தொடர்பாடலிலும், எழுத்துமூலத் தொடர்பாடலிலும் இவ்வாற்றலைத் திறம்பட உபயோகிக்கலாம். வேலைப்பளு அதிகமுள்ள இக்காலப்பகுதியில் இப்பணி எமக்கு ஓய்வையும் நிம்மதியையும் வழங்குகிறது. எவ்வாறாயினும், தொடர்பாடலின்போது இதன் வரையறைகள் பற்றிய தெளிவுடன் ஈடுபடுதல் நன்று.

- √ வெகுசன ஊடகங்களின் வருகையுடன் தொடர்பாடலும் விரிவாக்கம் பெற்றது. அதி விசாலப் பெறுநர் குழுவிற்குத் தகவல் வழங்குதல் சாத்தியமானது. இது, வெகுசனத் தொடர்பாடல் என அழைக்கப்பட்டது. வெகுசனத் தொடர் பாடலின் பணிகள் / நோக்கங்கள் கீழே காணப்படுகின்றன. நான்காம் பாடத்தில் வெகுசன ஊடகங்கள் பற்றிய பகுதியில் இப் பணிகள் / நோக்கங்கள் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.
- √ கண்காணித்தல்
- √ விளக்கமளித்தல்
- √ இடைத் தொடர்புகளை ஏற்படுத்தல்
- √ சமூகமயமாக்கல்

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தொடர்பாடலின் பணிகள் பற்றி உதாரணங்களுடன் விபரிக்க.

**அருஞ்பதங்கள்**

| | | |
|---|---|---|
| அனுபவக் களம் | - | Field of Experience |
| கல்வி | - | Education |
| பொருட்கோடல் | - | Interpretation |
| குறிமுறையாக்கம் | - | Encoding |
| பெறுநர் | - | Receiver |
| இடையூறு | - | Noise |
| தகவல் வழங்குதல் | - | Providing Information |
| ஊடகம் / வழிமுறை | - | Channel |
| தூண்டல் | - | Persuasion |
| பின்னூட்டம் | - | Feedback |
| தாக்கம் / விளைவு | - | Effect |
| குறிமுறையவிழ்ப்பு | - | Decoding |
| பொழுதுபோக்கு | - | Entertainment |
| தொடர்பாடுநர் | - | Communicator |
| தொடர்பாடலின் வரைவிலக்கணம் | - | Definitionof Communication |
| தொடர்பாடலின் இயல்பு | - | Nature of Communication |
| தொடர்பாடலின் செயற்பாடுகள் | - | Functions of Communication |
| சூழலமைவு | - | Context |
| தகவல் | - | Message |
| சமூகமயமாதல் | - | Socialization |
| இடைத்தொடர்பு | - | Correlation |
| கண்காணிப்பு | - | Surveillance |

DRAFT

**உசாத்துணை நூல்கள்:**


1. Dissanayake, Wimal, Human Communication, Colombo, Lake House Investments PLC, 1977
2. Bittuer, John R. Mass Communication: An Introduction, U.S.A, 1986
3. Charles, Wright R., Mass Communication, New York, 1971
4. James Waston and Anne Hill, A Dictionary of Communication and Media Studies, India, Universal Book Stall, 1991
5. Narula, Uma, Mass Communication Theory and Practice, New Delhi, 1994

## 3. அடிப்படைத் தொடர்பாடல் வகைகள், வடிவங்கள் மற்றும் மாதிரிகள்

**தேர்ச்சி** : 3.0 தொடர்பாடல் வடிவங்கள் மற்றும் மாதிரிகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான அறிவுடன் அவற்றைச் சந்தர்ப் பத்திற்கேற்பப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 தொடர்பாடல் வகைகள் பற்றிய அறிவுடன் அவற்றைச் சந்தர்ப்பத்திற்கேற்பப் பயன்படுத்துவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற் பேறுகள்** :

- தொடர்பாடல் வகைகளைப் பெயரிடுவார்.
- தொடர்பாடல் வகைகளை வெவ்வேறாகப் பெயரிடுவார்.
- தொடர்பாடல் வகைகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான கருத்துக்களை பிரயோகம் செய்வதன் மூலமாகத் தொடர்பாடலை வெற்றிகரமானதாக்க முடியும் என உணர்ந்து செயற்படுவார்.
- ஆளுள் தொடர்பாடலின் இயல்பு மற்றும் செயற் பாட்டைப் பகுப்பாய்வு செய்வார்.
- ஆளிடைத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.
- ஒழுக்கமான முறையில் ஆளிடைத் தொடர்பாடலில் ஈடுபடுவார்.
- கடமை மற்றும் பொறுப்புடன் சமூகத் தொடர்பாடலில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை இனங்கண்டு அதன்படி செய்படுவார்.
- குழு அல்லது கூட்டுத் தொடர்பாடலின் வடிவங்கள் மற்றும் அதன் விசேட இயல்புகளை அறிந்து அவற்றை முன்வைப்பார்.
- சமூகத் தொடர்பாடல் என்றால் என்ன என இனங்கண்டு அதன்படி செயற்படுவார்.
- பொதுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விளக்குவார்.
- வெகுசனத் தொடர்பாடல் என்றால் என்ன என விபரிப்பார்.
- மெய்நிகர் தொடர்பாடலின் இயல்பு மற்றும் அதன் செயற்பாட்டை அறிந்து அவற்றை முன்வைப்பார்.
- தொடர்பாடல் வகைகளின் பிரயோக அவசியத்தை மற்றும் வினைத்திறனைப் பகுப்பாய்வு செய்வார்.

DRAFT

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க் காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

தொடர்பாடல் வகைகள்

1. ஆளுள் தொடர்பாடல் (Intrapersonal Communication)
2. ஆளிடைத் தொடர்பாடல் (Interpersonal Communication)
3. குழு அல்லது கூட்டுத் தொடர்பாடல் (Group Communication)
4. பொதுசனத் தொடர்பாடல் (Public Communication)
5. வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication)
6. மெய்நிகர் தொடர்பாடல் (Virtual Communication)

- தொடர்பாடல் வகைகள் என்பது ஆங்கிலத்தில் "Types of Communication" என அர்த்தப்படும்.
- தொடர்பாடல் வகையீட்டுக்கு அடிப்படையாக அமைவது, தொடர்பாடல் செயற்பாட்டில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கையும் அதன் இயல்புமாகும்.

## 1. ஆளுள் தொடர்பாடல் (Intrapersonal Communication)

- ஒருவர் தன்னோடு மேற்கொள்ளும் தொடர்பாடல் ஆளுள் தொடர்பாடலாகும். அனைவரும் தம் மனதோடு தொடர்புபட்டு தொடர்பாடலில் ஈடுபடுவர்.
- எமது ஐம்பொறிகளான மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் மூலம் பெறப்படும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை, முதலான தூண்டல்களுக்குத் துலங்கல்களை வழங்குதல் இங்கு முதன்மைப்படும்.
- மனிதர்களது மனச்சாட்சி, தனிப்பட்ட அனுபவம், தனிப்பட்ட அவசியம் மற்றும் எண்ணங்கள் ஆகியன தம்மால் தம்முள் விமர்சிக்கப்படல் இங்கு நிகழும்.
- பல்வேறு மூலங்கள் மூலம் எமக்குக் கிடைக்கப்பெறும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு எம்முள் கலந்துரையாடலொன்று கட்டியெழுப்பப்படும். இது நிகழ்வது ஆளுள் தொடர்பாடல் மூலமாகும். இத் தொடர்பாடல் மனிதர்கள் முடிவுகளை மேற்கொள்ளத் துணைபுரியும்.
- சுய எண்ணக்கரு (Self-Concept) உருவாக ஆளுள் தொடர்பாடல் துணை புரியும்.
- ஒருவரது மனதில் நடைபெறும் தொடர்பாடல் என்பதால் வேற்று நபர்களின் தலையீடு காணப்படாது.
- ஆளுள் தொடர்பாடலில் ஒருவரது மனவலிமை முக்கியப்படும்.
- புலக்காட்சி (Perception) ஆளுள் தொடர்பாடலில் முக்கியமானதொன்று.

DRAFT

- சில சந்தர்ப்பங்களில் ஆளுள் தொடர்பாடலை மனிதரது நடத்தை மற்றும் தோற்றத்திலும் கூடக் காணலாம்.
- ஆளுள் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு,

1. ஆளுமை விருத்திக்கு
2. சுய எண்ணக்கரு (Self-Concept) விருத்திக்கு
3. சிந்தனை வளர்ச்சிக்கு
4. நினைவில் வைத்துக்கொள்வதற்கு
5. தீர்மானங்கள் மேற்கொள்ள
6. விமர்சனத் திறன் வளர்ச்சிக்கு
7. படைப்பாக்கத் திறன் விருத்திக்கு

## 2. ஆளிடைத் தொடர்பாடல் (Interpersonal Communication)

- ஆளிடைத் தொடர்பாடல் என்பது இரண்டு அல்லது சில மனிதர்களிடையே தகவல் பரிமாற்றம் செய்வதாகும். (Defleur and Dennis, 2002)
- இருவர் அல்லது அதிகளவானோரிடையே நிகழும் தொடர்பாடல் ஆளிடைத் தொடர்பாடலாகும். (Berger, Charles.R., 2008)
- ஆளிடைத் தொடர்பாடல் சில மனிதர்களிடையே நிகழும் போது அங்கே காணப்படும் இரு நபர்கள் மேற்கொள்ளும் தொடர்பாடல் ஜோடி / இருவர் தொடர்பாடல் (Dyadic Communication) என அழைக்கப்படும்.
- பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அன்றாடம் தொடர்பாடலில் ஈடுபடும் மனிதர்கள் அதிக நேரம் ஆளிடைத் தொடர்பாடலையே மேற்கொள்கின்றனர். இத் தொடர்பாடல் கீழ்க்காணும் விதங்களில் நிகழும்,
- நேருக்கு நேர் நிகழும் ஆளிடைத் தொடர்பாடல் - Face-to-Face Communication.
- கருவிகள் துணையுடன் நிகழும் ஆளிடைத் தொடர்பாடல் - Machine Aided Communication.
- இத் தொடர்பாடலில் தொடர்பாடுநரைப் போலவே பெறுநரும் முக்கிய இடத்தை வகிப்பார்.
- ஆளிடைத் தொடர்பாடலை அடிப்படையாகக் கொண்டு சமூகத் தொடர்புகள் உருவாகின்றன.
- ஆளிடைத் தொடர்பாடலை நேருக்கு நேர் நிகழ்த்தும்போது வாய்மொழிசார் மற்றும் வாய்மொழிசாராத் தகவல்களைப் பரிமாறலாம். இதன்போது, இடையூறுகள் குறைவாகக் காணப்படும்.
- அந்நியோன்னிய விளக்கத்துடன், ஒழுக்கநெறி தவறாது தொடர்பாடலில் ஈடுபாட்டால் இரு தரப்பினரும் வினைத்திறனுடன் கூடிய பலன்களை அடையலாம்.

DRAFT

- ஆளிடைத் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு.

1. மிகவும் இலகுவாக இடைச்செயற்பாட்டுத் தொடர்பாடலில் (Interactive Communication) ஈடுபடும் ஆற்றல்.
2. ஏனைய தொடர்பாடல்களுடன் ஒப்பிடும்போது தூண்டல் செயற்பாடு அதிகம் காணப்படல்.
3. இடைத் தொடர்புகளை விருத்தி செய்ய இயலுதல்.
4. எளிதில் அந்நியோன்னியப் புரிந்துணர்வையும் நம்பிக்கையையும் உறுதி செய்யலாம்.
5. மிகவும் அதிகமான ஆழ்பரிவிற்கு (நுஅியவால) இடமளித்தல்.

## 3. குழு அல்லது கூட்டுத் தொடர்பாடல் (Group Communication)

- குறித்தவொரு குழுவினர் ஓர் நோக்கை இலக்காகக் கொண்டு ஒன்றாக இணைந்து மேற்கொள்ளும் தொடர்பாடல் குழு அல்லது கூட்டுத் தொடர்பாடல் ஆகும்.
- இங்கு குழு எனப்படுவது குறைந்தளவு எண்ணிக்கையானோராகும். அதாவது வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட சமூகமாகும். குழுவில் ஒருவரோடொருவர் இலகுவில் தொடர்பாடலில் ஈடுபடலாம்.
- அதனால் ஆளிடைத் தொடர்பாடல் போன்ற நெருக்கமும், வெகுசனத் தொடர்பாடல் போன்ற தூரமும் குழுத் தொடர்பாடலில் காணப்படாது.
- குழுவில் காணப்படும் நபர்கள் ஒருவரையொருவர் அறிந்தவர்களாகவும், அறியாதவர்களாகவும் காணப்படுவர்.
- சந்தர்ப்பத்தை சரியாகத் திட்டமிடுவதன் மூலம் குழுத் தொடர்பாடலை வெற்றிகர மானதாக்கலாம். இதன்போது தொடர்பாடுநர் பின்பற்றவேண்டிய விதிமுறைகள் சில காணப்படுகின்றன. அவையாவன,
  - முன்னாயத்தம்.
  - குறிக்கோளைக் கொண்டிருத்தல்.
  - வாய்மொழிசாராத் தொடர்பாடல் வழிமுறைகள் பயன்படுத்தல்.
  - பல்வேறு தொடர்பாடல் கருவிகள் பயன்படுத்தல்.
  - வெளிச்சவீட்டுக் கோட்பாடு.
  - கவர்ச்சியான பேச்சு.
  - பெறுநரை மையப்படுத்திய தொடர்பாடல்.
  - பெறுநரது பின்னூட்டல் பற்றி அவதானத்துடன் இருத்தல்.
  - நேர முகாமைத்துவம்.
  - ஒழுக்கநெறி.
  - கடமை மற்றும் பொறுப்பு என்பனவாகும்.
- குழுத் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு,

DRAFT

- √ சமூகப் பொதுப் பணிகளின் பயன்படல்.
- √ பல்வேறு கருத்துக்கள் மற்றும் யோசனைகளை அறிதல்
- √ தனிநபர் தொடர்பாடல் திறன் விருத்திக்கு உதவுதல்
- √ பங்குபற்றும் நபர்களின் எதிர்வினை மற்றும் பின்னூட்டல்களை அறியமுடிதல்
- √ அறிவு மற்றும் வளங்களைப் பகிரும் ஆற்றல்

## 4. பொதுசனத் தொடர்பாடல் (Public Communication)

- சனக் கூட்டத்தோடு மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் பொதுசனத் தொடர் பாடலாகும். பொதுக் கூட்டங்கள், விரிவுரை மற்றும் பொது நிகழ்ச்சிகள் ஆகியன இதிலடங்கும்.
- பொதுசனத் தொடர்பாடலில் தொடர்பாடுநர் மற்றும் பெறுநர் ஆகியோர் பார்வைக்கெட்டிய தூரத்தில் இருந்தாலும் குரல் கேட்கக் கூடியதாய் இருந்தாலும் நெருங்கிய தொடர்பாடல் நிகழாது.
- பொதுசனத் தொடர்பாடலில் அதிகளவு தொழினுட்பக் கருவிகள் பயன்படுத்தப் படும்.
- பொதுசனத் தொடர்பாடல் வெற்றியளிக்க வேண்டுமெனில், தொடர்பாடுநர் வழங்கும் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக் கூடிய தூரத்தில் பெறுநர் காணப்பட வேண்டும்.
- பொதுசனத் தொடர்பாடலின்போது பெறப்படும் பின்னூட்டல்களுக்கான சரியான பொருட்கோடல்கள் பெறுவது கடினம். அத்தோடு பின்னூட்டல்களும் தாமதமான தாகும்.
- பொதுசனத் தொடர்பாடல் நிகழ்வது வீடு, காரியாலயம் முதலான தனிப்பட்ட, குறித்தவொரு சிலர் கூடும் இடங்களிலல்ல. கேட்போர்கூடம், பொதுமக்கள் ஒன்றுகூடக்கூடிய மைதானங்கள் மற்றும் மாநாட்டு மண்டபம் முதலான இடங்களிலாகும்.
- ஒரு விடயத்தைக் குறித்தவொரு பிரிவினருக்குத் தெரியப்படுத்த, தூண்டலை ஏற்படுத்த, மகிழ்வூட்ட, மகிழ்ச்சி மற்றும் உற்சாகத்தை ஏற்படுத்த பொதுசனத் தொடர்பாடலைப் பயன்படுத்தலாம். உம்: தேர்தல் பரப்புரை, இசை நிகழ்ச்சிகள்
- கூடியிருக்கும் பிரிவினருக்குப் பொருத்தமான உள்ளடக்கங்களைத் தயாரித்தல் மிகவும் நன்று. உள்ளடக்கம் ஒரு பிரிவினருக்கு மட்டும் பொருத்தமானதாக இருப்பின் ஏனையோரது கவனம் திசை திருப்பப்படும்.
- சில சந்தர்ப்பங்களில் ஒன்று திரண்டு காணப்படும் மக்கள் தொகையாலும் பெறுநரது கவனம் திசை திருப்பப்படும்.
- பொதுசனத் தொடர்பாடலின்போது பெறுநர்கள் பல்வேறு சனக் குழுக்களைச் சேர்ந்தவர்களாயிருப்பர்.
- பொதுசனத் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு:

DRAFT


- √ குறித்தவொரு நோக்கத்திற்காக மக்கள் கூட்டத்தைத் தூண்டக்கூடிய தாயிருத்தல்.
- √ யாதேனுமொரு விடயம் பற்றிய தெளிவினை ஏற்படுத்த.
- √ பிரதிமைகளை உருவாக்கிக் கொள்ள.
- √ யாதேனுமொரு கருத்தைத் தோற்றுவிக்க.
- √ பல்வேறு பிரிவினரதும் அவதானத்தை வெற்றி பெற.

**5. வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication)**

- ஒருவரையொருவர் அறிந்திராத விசால சனக் கூட்டத்திற்கு, வெகுசன ஊடகங்களைப் பயன்படுத்தி, ஒரே தடவையில் தகவல்களை வழங்கும் செயற்பாடு வெகுசனத் தொடர்பாடலாகும். (Hiebert,Ungurait,Bohn, 1988)

- தொழில்சார் தொடர்பாடுநர்கள் இயந்திர ஊடகங்களின் துணையோடு, பரந்தளவிலும், உடனடியாகவும், தொடர்ச்சியாகவும் விசாலமான, பல்வேறுவிதமான பெறுநர்க் கூட்டத்திற்குத் தகவல் அனுப்பி யாதேனும் தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடு. (Defleur and Dennis, 2002)

- வெகுசனத் தொடர்பாடலுக்காகப் பயன்படும் வெகுசன ஊடகங்களை இவ்வாறு பிரிக்கலாம்.




- அதி விசால சனக் கூட்டத்தை ஒரே நேரம் இலக்காகக் கொண்டு தகவல்


வழங்கப்படும்.

- பொதுவாகத் தகவல் வழங்கப்படும், உள்ளடக்கம் அனைவருக்கும் திறந்ததாகக் காணப்படும்.
- பெறுநர்கள் பலவிதமானவர்கள் (Heterogeneous). அதனால் வெகுசனத் தொடர் பாடலின் பெறுநர்கள் சமூகத்தில் சிறப்பான குழுவினராகும்.
- சுாதாரணமாகச் சிக்கலான, முறையான, நிறுவன முறை காணப்படும்.
- வெகுசனத் தொடர்பாடல் சிக்கலான ஓர் செயன்முறையாகும். வெவ்வேறு வெகுசனத் தொடர்பாடல் மாதிரிகளின் ஊடாக இச்செயற்பாட்டை எளிதில் விளங்கிக் கொள்ளலாம்.
- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாடு பற்றி முன்வைக்கப்பட்டுள்ள மாதிரிகளில் ரே எல்டன் ஹய்பர்ட் (Ray Eldon Hiebert), டொனால்ட் ஆர் அன்குரெய்ட் (Donald R. Ungurait), தோமஸ் டப்ளியு. போன் (Thomas W. Bohn) ஆகிய நிபுணர்கள் முன்வைத்த HUB மாதிரி பற்றி இங்கு விபரிக்கப்படும்.
- தண்ணீர் தடாகம் ஒன்றின் மேலே சிறு கல்லொன்றை எறியும் போது, தண்ணீரில் மேலெழும் நீரலைகள் தடாகத்தின் எல்லைவரை சென்று மீள வருவது போல், வெகுசனத் தொடர்பாடல் செயற்பாடும் ஒரு இடத்தில் ஆரம்பமாகிச் சென்று பின்னர் பின்னூட்டமாகத் திரும்பி வரும் செயன்முறை இங்கு விபரிக்கப்படுகிறது.
- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் தொடர்புபடும் வெவ்வேறு கூறுகளைப் பற்றி இம் மாதிரியில் விபரிக்கப்படுகிறது.
    1. தொடர்பாடுநர்கள் (Communicators)
    2. குறிமுறைகள் (Codes)
    3. வாயிற்காப்பாளர் (Gatekeepers)
    4. வெகுசன ஊடகம் (Mass Media)
    5. ஒழுங்காக்கி (Regulators)
    6. வடிகட்டி (Filters)
    7. பெறுநர் (Audience)
    8. தாக்கம் (Effect)

- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் வெகுசன ஊடக நிறுவனங்களின் உரிமையாண்மை, அரசியல் பின்புலம், சமூகத் தொடர்புகள் மூலம் பல்வேறு வரையறைகள், கட்டுப்பாடுகள் வெகுசன ஊடகங்கள் மீது ஏற்படுத்தப்படும்.

- பின்னூட்டல், ஊடக விஸ்தீரணம் மற்றும் வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் ஏற்படக்கூடிய ஊடகத் திரிபு மற்றும் இரைச்சல் ஆகிய காரணிகள் பற்றி இம்மாதிரியில் விபரிக்கப்படுகிறது.

DRAFT




1. **தொடர்பாடுநர்** (Communicators)

- இங்கு தொடர்பாடுநர் என்று குறிப்பிடப்படுவது வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் ஈடுபடும் அங்கத்தவர்களையாகும். இங்கு சமூகத்தில் வெவ்வேறு மட்டங்களில் உள்ள நபர்களைப் போன்றே, நிறுவனங்களும் தொடர்பாடுநர் வகிபாகத்தை ஏற்கலாம்.

2. **குறிமுறைகள்** (Codes)

- குறியீடுகள் என்று இங்கு குறிப்பிடப்படுவது தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப் படும் குறியீட்டுத் தொகுதியாகும்.

3. **வாயிற்காப்பாளர்** (Gatekeepapers)

- வாயிற்காப்பாளர் என்பவர், எத் தகவலைத் தொடர்பாடல் செய்வது, அதை எவ்வாறு தொடர்பாடல் செய்வது எனத் தீர்மானம் எடுப்பவராகும். வாயிற்காப்புச் செயற்பாட்டால் ஊடகத் தகவல்கள் தணிக்கைக்குட்படுத்தப்படும்.

4. **வெகுசன ஊடகம்** (Mass Media)

- வெகுசன ஊடகங்கள் இல்லாது வெகுசனத் தொடர்பாடல் நிகழாது. வெகுசன ஊடகங்கள் என்பது தகவல்களை வழங்கும் மற்றும் பெற்றுக்கொள்ளும் கருவி அல்ல. மாறாக, வெகுசன ஊடகம் என்பது பொது மக்களின் எதிர்பார்ப்புகளை நிவர்த்தி செய்யும் சமூக அமைப்பாகும்.

5. **ஒழுங்காக்கிகள்** (Regulators)

- நேரடியாக ஊடக நிறுவனங்களுடன் தொடர்புபடாவிட்டாலும், ஊடக நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டு அவற்றைக் கட்டுப்படுத்தும் நபர்கள் மற்றும் நிறுவனங்கள் உள்ளன. அவர்கள் மேற்கொள்ளும் கட்டளைகளால் தகவல்களில் சில கட்டுப்பாடுகள் நிகழும். உதாரணமாக, அரச ஆணைக்குழு, நீதிமன்றம், தொழில்சார் அமைப்புக்கள், நுகர்வோர் மற்றும் தாக்கம் செலுத்தும் குழுக்கள் ஆகியன பல்வேறு வழிகளில் இவ் ஒழுங்குபடுத்தும் செயற்பாட்டில் தொடர்பு படும்.
- உலக நாடுகள் சிலவற்றின் வெகுசன ஊடக அலைவரிசைகளைப் போலவே ஊடக நிறுவனங்களிலும் தாக்கம் செலுத்தும் விளம்பர நிறுவனங்களையும் பல்தேசியக் கூட்டுத்தாபனங்களையும் ஒழுங்காக்கிகளாகக் கருதலாம்.

DRAFT

6. **வடிகட்டி** (Filters)

- வெகுசன ஊடகத் தகவல்களை விளங்கிக் கொள்ள, ஏற்றுக் கொள்ள, மறுக்க அல்லது நினைவில் வைத்துக்கொள்ள பெறுநர்கள் பயன்படுத்தும் அவர்களின் அனுபவக் களம் வடிகட்டிகள் எனப்படும்.

7. **பெறுநர்** (Audience)

- வெகுசனத் தொடர்பாடலுக்கான பெறுநர்கள் பலவிதமானவர்கள் (Heterogeneous), ஒப்பீட்டளவில் அதிக எண்ணிக்கையானோர், ஒருவரை யொருவர் அறிந்திராத, உடல் சார்ந்தும் உணர்ச்சிகள் சார்ந்தும் வெகுசனத் தொடர்பாடுநர் மற்றும் பெறுநர்க் கூட்டச் சமூகத்திடமிருந்தும் பிரிந்த கூட்டத்தவரது இணைப்பாகும்.

- வெகுசன ஊடகங்களுடன் இணையும் பெறுநர் கூட்டம் அதி விசாலமாகும். நீர்த் தடாகம் ஒன்றில் நீரலைகள் ஆரம்பிக்கும் போது சிறிதாக ஆரம்பித்தாலும் இறுதியில் பரந்தவொரு பிரதேசத்திற்கு விசிறிச் செல்லும். அதுபோல, வெகுசன ஊடகங்களுடன் இணையும் பெறுநர்கூட்டமும் பரந்துபட்டுக் காணப்படுவர். நவீன சமூகத்தில் அதிகளவு ஊடக நுகர்வு காணப்படுகிறது. அதனால் அதன் மூலம் பெறப்படும் தகவல்களும் எண்ணிலடங்காதவை.

8. **தாக்கம்** (Effect)

- இங்கு தாக்கம் என்பது இருவகைப்படும்,

  1. சமூகத்தின் மீதான தாக்கம்.

  2. தனிநபர் மீதான தாக்கம்.

- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் தாக்கம் முக்கியமானதோடு அது சிக்கலான ஒன்றுமாகும்.

9. **பின்னூட்டம்** (Feedback)

- உடனடியாகக் கிடைக்கும் பின்னூட்டல், தாமதமாகிக் கிடைக்கும் பின்னூட்டல், பெறுநர்க் கூட்டத்திடமிருந்து கிடைக்கும் பின்னூட்டல், அல்லது எண்ணிக்கை அடிப்படையில் அல்லது மூலதன அடிப்படையில் வெளிப்படுத்தல்.

DRAFT

10. **ஊடகத் திரிபு மற்றும் இரைச்சல்** (Media Distortion and Noise)

- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டில் ஊடகத் திரிபு மற்றும் தடைகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. வெகுசன ஊடகங்களின் பல்வகைமையைப் பொறுத்துத் தடைகள் பலவகைப்படும்.

11. **ஊடக விஸ்தீரணம்** (Media Amplification)

- ஊடக விஸ்தீரணம் என்பது யாதேனுமொரு காரணத்திற்காக ஊடகத்திற்கு அதிக அதிகாரத்தை வழங்கலாகும். அது ஒரு தனிநபர் பற்றிய அல்லது பொதுச் செயன்முறை பற்றிய அல்லது பார்வை பற்றிய அதிக தாக்கத்தைச் செலுத்தும்.

- வெகுசனத் தொடர்பாடல் செயற்பாட்டை எளிதில் விளங்கிக் கொள்ளப் பல்வேறு மாதிரிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அம்மாதிரிகளைக் கற்பதன் மூலம் வெகுசனத் தொடர்பாடல் பற்றிய மேலதிக விளக்கத்தைப் பெறலாம்.

- வெகுசனத் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு, இவற்றின் அர்த்தங் களைப் பரந்தளவில் காணவேண்டும்,
  1. அறிகை (Cognition) / அறிவைப் பெற்றுக்கொள்ளல்.
  2. திசைதிருப்பல் (Diversion) / மாற்றுத் திசைக்கு வழிப்படுத்தல்.
  3. சமூக உபயோகத் தன்மை (Social Utility).
  4. மீளப் பெறல் (Withdrawal) (Dominic, Joseph, R., 2010)

## 6. மெய்நிகர் தொடர்பாடல் (Virtual Communication)

- 20 ஆம் நூற்றாண்டின் பின் தொழினுட்ப வளர்ச்சி காரணமாக வெகுசன ஊடக மாதிரி மற்றும் உள்ளடக்க மாற்றங்கள் பலவும் நடந்தேறின.
- சமகாலப் பூகோளப் போக்கு மற்றும் தொழினுட்ப வளர்ச்சிச் செயற்பாட்டின் ஒரு சந்தர்ப்பமாக மெய்நிகர் தொடர்பாடலை இனங்காணலாம்.
- Virtual எனும் ஆங்கிலச் சொல்லின் தமிழ் அர்த்தம் மெய்நிகர் என்பதாகும்.
- Virtual communication is defined by the Umea University as,
- The information, communication, and action, mediated by new information technologies, where contents, intentions, or actors may be nonexistent, distorted, replaced, or created - intentionally or unintentionally."
- மெய்நிகர் தொடர்பாடல் என்பதற்கு உமேயாப் பல்கலைக்கழகம் (Umea University) வழங்கிய வரைவிலக்கணம்,
- "தகவல், தொடர்பாடல், மற்றும் செயல் ஆகியன புதிய தகவல் தொழினுட்பத் தால் மத்தியஸ்தம் செய்யப்படும். இங்கு, உள்ளடக்கம், எண்ணம், அல்லது பாத்திரங்கள் ஆகியன திட்டமிட்டு அல்லது திட்டமிடாது நிஜத்தில் இல்லாதவையாகவும், திரிபுபடுத்தப்பட்டவையாகவும், மாற்றப்பட்டவையாகவும், உருவாக்கப்பட்டவையாகவும் காணப்படும்".
- மெய்நிகர் தொடர்பாடலின் பிரதான உபகரணம் இணையத்தளமாகும். மின்னஞ்சல்
  (e-mail), வீடியோ மாநாடு (Video Conference), சமூக வலைத்தளம் (Social Networking), மற்றும் தொடரிணை அரட்டை (Online Chatting) ஆகியவற்றின் ஊடகம் இணையத்தளமாகும். கைத்தொலைபேசியூடாகப் பெறப்படும் தகவல் களும் மெய்நிகர் தொடர்பாடலாகும்.
- மெய்நிகர் தொடர்பாடலின் சிறப்பம்சங்கள் பல காணப்படுகின்றன, அவற்றுள் சில பின்வருமாறு,
  - ♦ திறமையாகத் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
  - ♦ குறைந்த செலவு.
  - ♦ பாதுகாப்பானது.
  - ♦ ஒலி-ஒளி அம்சங்களுடன் தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.

DRAFT

- ♦ ஒரே தடவையில் பலருடனும் தொடர்பாடலில் ஈடுபடக்கூடிய ஆற்றல்.
- ♦ பௌதீக அடிப்படையில் இடவசதி தேவைப்படாமை.

- மெய்நிகர் தொடர்பாடலின் பயன்கள் சில பின்வருமாறு,
  - ♦ கல்வி நடவடிக்கைகளுக்கு.
  - ♦ உறவுகளைக் கட்டியெழுப்ப.
  - ♦ வியாபாரக் காரியங்கள் வெற்றியளிக்க, திறமையாகச் செயற்பட.
  - ♦ பிரச்சார நடவடிக்கைகளுக்கு.
  - ♦ படைப்பாக்கரீதியான செயற்பாடுகள் மற்றும் சிந்தனையை வளர்க்க.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. தியானம், பிரார்த்தனை முதலான மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டு உங்கள் மனதின் நடத்தைக்கோலத்தைப் பகுப்பாய்வு செய்க.

2. ஒரு நாளில் நீங்கள் எதிர்கொண்ட ஆளிடைத் தொடர்பாடல்களுக்கான சந்தர்ப்பங் களை விபரிக்குக.

3. பாடசாலையில் கலை நிகழ்ச்சி, ஊடகத் தினப் பண்பாட்டு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும் போது நிகழும் குழுத் தொடர்பாடல்களை விளக்குக.

4. அரசியல், சமய, இலக்கிய, பொழுதுபோக்கு, கலை, பொதுச்சேவை நோக்கங்களைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு ஏற்பாடு செய்யப்படும் பொதுசனத் தொடர்பாடல் சந்தர்ப்பம் ஒன்றில் பங்குபற்றி, அதில் பெறுநரைக் கவர்வதற்காகப் பயன்படுத்திய உபாயங்களை ஆய்வு செய்க.

5. வெகுசனத் தொடர்பாடல் ஊடகங்களில் காணப்படவேண்டிய அம்சங்களுள் தெரிவு செய்யப்பட்ட அம்சங்களை யாதேனும் இலத்திரனியல் அல்லது அச்சு ஊடகங்களில் பயன்படுத்தியுள்ள விதத்தைப் பகுப்பாய்வு செய்க.

6. தனிப்பட்ட முறையில் நீங்கள் அனுபவித்த மெய்நிகர் தொடர்பாடல் சந்தர்ப்பமொன்றை விபரிக்குக.

DRAFT

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : | 3.2 தொடர்பாடல் வடிவங்கள் பற்றிய தெளிவுடன் அவற்றைப் பயன்படுத்துவார். |
| **பாடவேளைகள்** | : | 10 |
| **கற்றற் பேறுகள்** | : | • வெவ்வேறு தொடர்பாடல் வடிவங்களை இனங்காண்பார்.<br>• தொடர்பாடல் வடிவங்கள் பயன்படும் விதத்தை உதாரணம் காட்டி விபரிப்பார்.<br>• வெவ்வேறு தொடர்பாடல் வடிவங்கள் பற்றிய அறிவுடன் தம் முன்வைப்புகளை மேற்கொள்வார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

- தொடர்பாடல் வடிவங்கள் என்பது ஆங்கிலத்தில் “Forms of Communication” என அர்த்தப்படும். இங்கு முதலில் வடிவங்கள் எனும் சொல்லின் அர்த்தத்தை தெளிவு படுத்திக்கொள்ள வேண்டும்.
- தொடர்பாடலின் வடிவங்கள் பல காணப்படுகின்றன, அவற்றுள், வாய்மொழி, வாய்மொழியற்ற, பேச்சு, செவிப்புல, கட்புல, எழுத்து, அளிக்கை, முறைசார் மற்றும் முறைசாராத் தொடர்பாடல் என்பன சில தொடர்பாடல் வடிவங்களாகும்.
- இத் தொடர்பாடல் வடிவங்களை ஓர் திறனாக வளர்த்துக் கொள்ள முடியும், அதன்மூலம் சிறந்த தொடர்பாடலை விருத்தி செய்யலாம்.

DRAFT

1. **வாய்மொழித் தொடர்பாடல் (Verbal Communication)**

   - யாதாயினுமொரு மொழியில் காணப்படும் ஓசை (Sounds), சொற்களைப் (Words) பயன்படுத்தி நடைபெறும் தொடர்பாடல் வாய்மொழித் தொடர்பாடல் ஆகும்.
   - வாய்மொழித் தொடர்பாடலின் பணிகள்,
     - ➢ கல்வியூட்டல், அறிவுரை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல்.
     - ➢ நபர்களுக்கிடையே தகவல் பரிமாற்றம்.
     - ➢ மனிதத் தொடர்புகளை வளர்க்க.
     - ➢ மனதில் தோன்றும் உணர்வுகளை வெளிப்படுத்த.
     - ➢ மனித ஆளுமையை விருத்தி செய்ய மற்றும் பல்வேறு பணிகளை நிறைவேற்றிக்கொள்ள.

**வாய்மொழித் தொடர்பாடல் திறன்கள்**

- ஒரு தகவலைச் சிறந்த முறையில் முன்வைக்க, தொடர்பாடுநர் ஒருவரிடம் வாய்மொழித் தொடர்பாடல் திறன்கள் காணப்படவேண்டியது அவசியமாகும். அதற்காக,
- மொழிவளத்தை விருத்தி செய்துகொள்ளல்.
- தமது கருத்துக்கள் மற்றும் தகவல்கள் அடங்கிய அறிவு விருத்தி செய்தல்.
- முன்னாயத்தம்.
- முன்வைக்கும் திறன்களை மேம்படுத்தல்.
- சிறந்த மொழிப் பாவனை.
- தனிப்பட்ட அடையாளத்தையும் தனித்துவத்தையும் உருவாக்கிக் கொள்ளல்.
- பொறுப்புடன் சொற்களைப் பயன்படுத்தல்.

**2. வாய்மொழியற்ற தொடர்பாடல் (Non-Verbal Communication)**

- பேச்சு அல்லது எழுத்து மொழிப் பாவனையின்றி ஒருவர் இன்னொருவருக்குத் தகவல் வழங்குதல் வாய்மொழியற்ற தொடர்பாடலாகும்.

- வாய்மொழியற்றதொடர்பாடல்,குறியீடுகள் (Symbols),சைகைமொழி (Signs) மற்றும் உடல் மொழி (Body Language) எனவகைப்படும்.

- சைகை மொழி என்பதில், அனைத்துவிதமான குறிமுறைகள், எண்கள், புகைப்படங்கள், அட்டவணைகள், படங்கள், சுவரொட்டிகள், சுவர்ச் சித்திரங்கள், கேலிச் சித்திரங்கள், வரைபடங்கள் மற்றும் ஒலிச் சைகைகள் என்பன உள்ளடங்கும்.

- எளிதில் விளங்கிக் கொள்ளக் கூடிய மற்றும் நினைவில் வைத்துக்கொள்ளக் கூடிய, உலகம் முழுதும் பொதுவாகப் பயன்படுத்தும் கட்புல மற்றும் செவிப்புல சைகைகள் பல காணப்படுகின்றன. புகைப்பிடித்தல் தடை, ஆண் மற்றும் பெண் உருவங்கள், வீதிச் சமிக்ஞைகள், ஒளிச் சமிக்ஞைகள், மேளச் சத்தம், சைரன் சத்தம், சித்திரம், கேலிச் சித்திரங்கள் ஆகியன இவ்வகையின.

- உடல் மொழி என்பது, முகத்தில் வெளிக்காட்டப்படும் சைகைகள், சமிக்ஞைகள், அசைவுகள், முத்திரைகள், நடன அசைவுகள் மற்றும் அபிநயம் ஆகியனவாகும்.
- உடல் மொழிமூலம் வழங்கப்படும் தகவல் நாட்டிற்கு நாடு, சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும். உதாரணமாக, இருவர் சந்திக்கும்போது ஒருவரையொருவர் வரவேற்கும் முறையை ஆராய்க.

DRAFT

- சிறந்த தொடர்பாடலில் ஈடுபட சைகை மொழி மற்றும் உடல் மொழி ஆகிய வாய்மொழியற்ற தொடர்பாடல் முறைகளை வினைத்திறனாகப் பயன்படுத்த வேண்டும்.

### 3. பேச்சுத் தொடர்பாடல் (Oral Communication)

- வாய்மூலம் வெளிப்படும் ஓசை மற்றும் சொற்களின் துணையோடு பல்வேறு கருத்துக்களை உருவாக்குதல் பேச்சுத் தொடர்பாடல் எனப்படும். மொழியைப் பயன்படுத்தி அந்நியோன்னியத் தகவல்கள் பரிமாற்றப்படுவதோடு அன்றாடத் தொடர்பாடலிலும் அதிகளவு பேச்சுத் தொடர்பாடல் இடம்பெறும்.
- வாய்மொழித் தொடர்பாடலிலும் பேச்சுத் தொடர்பாடல் வேறுபட்டது. வாய் மொழித் தொடர்பாடலில் சொற்களை ஓசைகளாக எழுப்பியும், எழுத்துக்களாக எழுதியும் பயன்படுத்தலாம். ஆனால் பேச்சுத் தொடர்பாடல் வாய்மூலம் வெளிப்படும் சொற்களோடு மட்டுப்படுத்தப்படுகிறது. பேச்சுத் தொடர்பாடல் ஒழுக்கமாகவும், கவர்ச்சியாகவும், அர்த்தத்துடனும் பயன்படுத்தப்படவேண்டும்.
- பேச்சு என்பது மனிதரால் வளர்த்துக்கொள்ளக்கூடிய ஒரு ஆற்றலாகும். செவிமடுக்கும் திறனை விருத்தி செய்வது பேச்சுத் தொடர்பாடல் திறனை மேம்படுத்தும்.
- பேச்சுத் தொடர்பாடல்,
  - ♦ அடிக்கடி நிகழும்.
  - ♦ இயற்கையானது.
  - ♦ மற்றவரால் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடியது.
  - ♦ பெறுநருக்கேற்ற சொற்களைப் பயன்படுத்தலாம்.
  - ♦ வாய்மொழியற்ற தொடர்பாடலின் உதவிகளைப் பெறலாம்.
  - ♦ தொடர்பாடுநர், முன்வைப்பவர் எப்போதும் தொடர்பாடல் நிகழுமிடத்தில் காணப்படுவர். (Physically Present)

- பெறுநர் குழுவிற்கேற்ப பேச்சுத் தொடர்பாடல் வேறுபடும். உதாரணமாக, மதகுருமாருடன் உரையாடுதல், குழந்தைகளுடன் உரையாடுதல்.

- பேச்சுத் தொடர்பாடல், திறன்கள், விளங்கறிவு மற்றும் சிந்தனை விருத்திக்கும் கற்றல் நடவடிக்கைகளுக்கும் அத்தியாவசியமாகும்.

- பேச்சுத் தொடர்பாடல் ஆற்றல் விருத்திக்கான காரணிகள் சில பின்வருமாறு,
  - ♦ செவிமடுத்தல்.
  - ♦ வாசித்தல்.
  - ♦ சிறந்த பேச்சாளர்களின் பேச்சுப்பாணியைப் பின்பற்றல்.
  - ♦ பேச்சுப் பயிற்சி.
  - ♦ தனியொருவருக்குப் பேசுதல்.

DRAFT

- சமூகத்திற்குப் பேசுதல்.
- குரல் எழுப்பி உச்சரித்தல்.
- வெவ்வேறு விடயங்களைப் பேச்சில் முன்வைத்தல் (உதாரணமாக: நாடக வசனங்கள், அறிக்கைகள்).

**4. அளிக்கை (Performance)**

- ஓர் செயற்பாடாக அல்லது தொழிற்துறையாக ஏதேனும் நடிப்பில் ஈடுபடல்.
- நடித்தல் மூலம் சிற்சில கருத்துக்களைப் பரிமாறலாம்.
- ஆதி மனிதனின் காலம் தொட்டு தற்காலம் வரை நடிப்பின் மூலம் தொடர்பாடல் பணிகள் நிறைவேறியுள்ளன.
- சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் தொடர்பாடலை வினைத்திறனான தாக்குவதற்கு அளிக்கை முக்கியம் பெறுகிறது.
- ஒழுக்கமான முறையில் உரையாடலில் ஈடுபடுவதிலிருந்து மனித வாழ்க்கையில் அனைத்துத் தொடர்பாடல் நடவடிக்கைகளுக்கும் அளிக்கை அவசியமாகும்.
- உபகரணப் பாவனை, ஓசையெழுப்புதல், ஆடை ஆபரணம் முதலானவற்றைப் பயன்படுத்தி அளிக்கையைச் சிறப்பானதாக்கலாம்.
- அளிக்கை ஆற்றல் விருத்திக்குத் துணைபுரியும் காரணிகள் சில பின்வருமாறு,
  - அளிக்கைச் சந்தர்ப்பத்தை ஆய்வு செய்தல்.
  - பின்பற்றுதல்.
  - வெவ்வேறு சந்தர்ப்பங்களிற்கேற்ப அளிக்கை வேறுபடும் விதத்தை விளங்கிக் கொள்ளல்.

    உதாரணமாக: பேச்சாளர் ஒருவரது பேச்சு, ஆசிரியர் வகிபாகம், அறிவிப்பாளர் வகிபாகம், நடிகர் வகிபாகம், விவாதக் குழுவின் அங்கத்தவர்களின் இயல்பு.
  - வெவ்வேறு தொடர்பாடல் சந்தர்ப்பங்களை அளிக்கை வழி முன்வைத்தல்.

**5. எழுத்துத் தொடர்பாடல் (Written Communication)**

- மொழி மற்றும் குறிமுறைகள் மூலம் தகவல் முன்வைப்பது எழுத்துத் தொடர் பாடலாகும்.
- எழுத்துத் தொடர்பாடல் என்பதற்குக் கடிதம், அறிவிப்புக்கள், அறிக்கைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள் என்பவற்றை உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- எழுத்துத் தொடர்பாடல் படைப்பாக்கரீதியான ஓர் செயற்பாடாகும்.
- எழுத்துத் தொடர்பாடலுக்கு விளங்கறிவு அத்தியாவசியமாகும்.
- எழுத்துத் தொடர்பாடல் மூலம் வாசிக்கக்கூடிய மக்களுக்குத் தகவல் வழங்கப்படுகிறது.

DRAFT

- பேச்சுத் தொடர்பாடலுக்கு இணையாக முறையான முறையில் எழுத்துத் தொடர்பாடலையும் கட்டியெழுப்பலாம்.
- எதிர்காலப் பாவனைக்காகத் தகவல்களைச் சேமித்து வைக்கும் ஆற்றல் காணப்படுகிறது.
- கல்வி, படைப்பாக்கரீதியான ஆவணச் செயற்பாடு, நிறுவனச் செயற்பாடுகள் மற்றும் நீதிச் செயற்பாடுகள் முதலான செயற்பாடுகளுக்கு எழுத்துத் தொடர் பாடல் அவசியமாகும்.
- எழுத்து சரியான முறையில் நிகழாது விட்டால், தவறான கற்பிதங்கள் உருவாகும் அச்சம் உள்ளது.
- பேச்சுத் தொடர்பாடல் ஆற்றல் விருத்திக்கான காரணிகள் சில பின்வருமாறு,
    - ♦ எழுதும் ஆற்றலை இனங்காணல்.
    - ♦ விளங்கறிவு ஆற்றல்.
    - ♦ புத்தகம் வாசித்தல்.
    - ♦ சரியாக, தெளிவாக, முறையாக எழுத்து ஆவணங்களை எழுதுதல்.
    - ♦ படைப்பாக்கத் திறன் விருத்தி.

## 6. செவிப்புலத் தொடர்பாடல் (Audio Communication)

- செவிமடுத்தலை அடிப்படையாகக் கொண்ட ஒலி ஊடகங்களின் ஏதேனுமொரு ஒலி வடிவத்தைச் செவிமடுத்தல் செவிப்புலத் தொடர்பாடல் ஆகும்.
- ஓசை அல்லது குரல், உயிருள்ள அல்லது உயிரற்ற பொருட்களின் அல்லது ஊடகத்தின் மூலம் வெளிப்படும்.
- இங்கு நிகழ்வது, யாதாயினுமொன்றைச் செவிமடுப்பதன் மூலம் ஏதேனும் தகவலைப் பெறுவதாகும். இயற்கை ஒலி, செயற்கை ஒலி, இசை, அமைதி, கலந்துரையாடல், கவிதை, பாடல், விரிவுரை, கதை என்பன இதிலடங்கும்.
- செவிப்புலத் தொடர்பாடல் தொழினுட்பத்தோடு இணைந்திருப்பதால் வெவ்வேறு வடிவங்களிலான ஒலிக் கருவிகள் பாவனைக்கு வந்திருப்பதோடு, ஒலியைச் சேமித்து வைக்கும் செயற்பாடுகளும் தீவிரமடைந்துள்ளது. இறுவட்டு, செவிமடுக்கும் புத்தகங்கள், இசைத் தட்டு ஆகியன இத்தகைய கருவிகளாகும்.
- ஒருவரது குரல் மூலம் அவரது உறுதி, ஆளுமை, நோக்கம், சிந்தனை, தொனி முதலானவை மட்டுமல்லாது உள்ளார்ந்த விடயங்களையும் (திறந்த தன்மை, நேர்மை) அறிந்து கொள்ளலாம்.
- செவிப்புலத் தொடர்பாடல் ஆதிமனிதன் காலம் தொட்டு பிரபல்யமான தொடர்பாடல் வடிவமாகக் காணப்படுகிறது.
- செவிப்புலத் தொடர்பாடல் ஆற்றல் விருத்திக்கான காரணிகள் சில பின்வருமாறு,
    - ♦ அவதானத்துடன் செவிமடுத்தல்.
    - ♦ வெவ்வேறு குரல்களை வேறுபடுத்தியறிதல்.

DRAFT

- ♦ செவிப்புலத் தொடர்பாடல் சந்தர்ப்பங்களைக் கற்றல்.
- ♦ வெவ்வேறு ஓசைகளைப் பயன்படுத்திப் படைப்பாக்கங்களில் ஈடுபடல்.

**7. கட்புல அல்லது காட்சித் தொடர்பாடல் (Visual Communication)**

- கண்களைப் பயன்படுத்திப் பார்ப்பதன் மூலம் தகவல் திரட்டிக் கொள்தல் கட்புல அல்லது காட்சித் தொடர்பாடலாகும்.
- ஆதிமனிதன் காலம் தொட்டு தற்காலம் வரை தொடர்பாடல் பணிகளுக்காகக் கட்புலத் தொடர்பாடல் பயன்பட்டுள்ளது.
- கட்புலத் தொடர்பாடல் என்பதில் சமிக்ஞைகள், அச்செழுத்துக்கள், வரைபடங்கள், நிறங்கள், நேரடி ஒளிபரப்புகள், திரைப்படம் என்பன உள்ளடங்கும்.
- குறியீடுகள் பற்றிய கற்கைகள் ளுநஅழைவஉைள எனப்படும்.
- தற்காலத்தில் தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சியோடு கட்புலத் தொடர்பாடல் பிரபல்யமடைந்துள்ளது.
- இணையத்தளம், சமூக வலைத்தளம், தொலைக்காட்சி முதலானவற்றில் படைப்பாக்கம் மிக்க வகையிலும் கவர்ச்சியாகவும் கட்புலத் தொடர்பாடல் பயன்படுத்தப்படும்.
- கட்புலத் தொடர்பாடல் ஆற்றல் விருத்திக்கான காரணிகள் சில பின்வருமாறு,
  - ♦ படங்களை / காட்சிகளை ஆழ்ந்து பார்த்தல்.
  - ♦ படங்களை / காட்சிகளை இனங்காணல்.
  - ♦ கல்வி நடவடிக்கைகளுக்காகப் படங்களை / காட்சிகளைப் பயன்படுத்தல்.
  - ♦ கட்புலத் தொடர்பாடல் அம்சங்களைப் பயன்படுத்திப் படைப்பாக்கத்தில் ஈடுபடுதல்.

DRAFT

**8. முறைசார் தொடர்பாடல் (Formal Communication)**

- தொடர்பாடுநரைத் தெளிவாக இனங்காணக்கூடிய தொடர்பாடல் வடிவம் இதுவாகும்.
- அனைத்துச் சந்தர்ப்பத்திலும் அதிகாரபூர்வமாக வெளிவரும், பொறுப்புடன் கூடிய ஆவணம் அல்லது வெளியீடு.
- அதிகாரபூர்வமான அறிக்கை, நினைவுபடுத்தல்கள் (Memo), கடிதத் தலைப்புக்கள் வழியான கடிதங்கள் (Letters in Letterhead), வர்த்தமானி அறிக்கை (Gazette Notification), அதிகாரபூர்வமான மின்னஞ்சல் ஆகிய எழுத்துமூல வெளியீடுகள் முறைசார் தொடர்பாடலுக்கான உதாரணங்கள் சில.
- எழுத்துமூல வெளியீடுகள் போலவே அதிகாரபூர்வமாக வெளியிடப்படும்

வெளியீடுகளும் முறைசார் தொடர்பாடலில் அடங்கும். உதாரணம்: வருடாந்தப் பாதீடு, அரச தலைவர்களின் அதிகாரபூர்வ வெளியீடுகள், அரச நிறுவனங்களின் அதிகாரபூர்வ ஊடக வெளியீட்டாளர்களின் வெளியீடுகள், அமைச்சரவை அறிவிப்பு.

- முறைசார் தொடர்பாடல் நிச்சயிக்கப்பட்ட முறையில் செயற்படும் ஓர் செயற் பாடு.
- முறைசார் தொடர்பாடல் மிகவும் பயனுடைய ஒரு தொடர்பாடல் வடிவம்.
- முறைசார் தொடர்பாடல் படிமுறைகள் பலவற்றுக்கூடாகச் செயற்படும்.
- முறைசார் தொடர்பாடலின் போது பயன்படுத்தப்படும் அதிகாரபூர்வ ஆவணங்கள் மற்றும் வெளியீடுகளைத் தேவையேற்படும்போது மேற்கோள் காட்டப் பயன்படுத்தலாம்.

## 9. முறைசாராத் தொடர்பாடல் (Informal Communication)

- தகவல் மூலத்தைச் சரிவர இனங்காணமுடியாத தொடர்பாடல் வடிவமாகும்.
- அதிகாரபூர்வத் தன்மை காணப்படாது. (உதாரணம்: வதந்தி, அடையாளங் காட்டப்படாது எழுதப்படும் கடிதம், ஊர்வம்புகள் (gossips))
- அதிகாரபூர்வ வெளியீடுகள், முறைசார் தொடர்பாடல் காணப்படாத சந்தர்ப்பங் களில் முறைசாராத் தொடர்பாடல் செயற்படும்.
- முறைசாராத் தொடர்பாடல் துரிதமாகப் பரவலடையும்.
- முறைசாராத் தொடர்பாடல் மக்களது எண்ணம், மனப்பாங்கு, எதிர்ப்பு ஆகியவற்றை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கும்.
- நவீனத் தொடர்பாடல் தொழினுட்ப முறைகளைப் பயன்படுத்தி முறைசாராத் தொடர்பாடல் மிகவும் கவர்ச்சியாகவும் பிரபல்யமாகவும் நடைபெறுகிறது.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. வெவ்வேறு தொடர்பாடல் வடிவங்களை உதாரணங்களுடன் விபரிக்குக.

2. நீங்கள் விரும்பிய தொடர்பாடல் வடிவம் ஒன்றை அல்லது சிலவற்றைப் பயன்படுத்தித் தகவல் உருவாக்குக.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சிமட்டம்** | : | 3.3 | தொடர்பாடல் மாதிரிகள் பற்றிய கோட்பாட்டு ரீதியான கருத்துக்களைப் பகுப்பாய்வு செய்வார். |
| **பாடவேளைகள்** | : | 24 | |
| **கற்றற் பேறுகள்** | : | • | தொடர்பாடல் மாதிரிகளை இனங்கண்டு முன்வைப்பார். |
| | | • | தொடர்பாடல் செயற்பாடு நிகழும் விதத்தை மாதிரிகளூடாக விளக்குவார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க் காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

- தொடர்பாடல் பல்வேறு குணாதிசயங்களுடன் கூடிய சிக்கலான ஒரு செயற்பாடாகும். தொடர்பாடலின் இத்தன்மையை அறிந்துகொள்ளத் தொடர்பாடல் மாதிரிகள் உபயோகிக் கப்படும்.
- சமூகச் செயற்பாடு அல்லது தொடர்பாடல் செயற்பாட்டின் இயல்பை மாதிரிகள் விபரிக்கும். இதன்போது பொதுவாக வரைபடங்கள் பயன்படுத்தப்படும்.
- அத்தோடு தொடர்பாடல் மாதிரிகள் மூலமாக,
  - ♦ தொடர்பாடல் செயற்பாட்டில் நிகழும் விடயத்தைச் சுருக்கமாகக் காட்டலாம்.
  - ♦ தகவல் செல்லும் ஒழுங்கைக் காட்டலாம்.
  - ♦ தொடர்பாடுநர் மற்றும் பெறுநரது இயல்பு, திறமை மற்றும் அவர்கள் பெறும் முதன்மையை எடுத்துக் காட்டலாம்.
  - ♦ ஊடகச் செயன்முறை நிகழும் விதத்தைக் காட்டலாம்.
  - ♦ தொடர்பாடலின் இயல்பு, அவசியம், சந்தர்ப்பம் முதலானவற்றை இனங்காணலாம்.

  முதலான விடயங்கள் நிகழும்.

- சிக்கல் நிறைந்த தொடர்பாடல் செயற்பாட்டை எளிமையாக விபரிக்கப் பல்வேறு துறைகளிலும் உள்ள நிபுணர்களால் பல்வேறு கோணங்களில் இச் செயற்பாடு ஆராயப்பட்டு மாதிரிகள் பல முன்வைக்கப்பட்டன.
- தொடர்பாடுநர், பெறுநர், தாக்கம், தொடர்பாடலின் தொழினுட்பச் செயற்பாடு முதலான வற்றை மையப்படுத்தி வெவ்வேறு மாதிரிகள் முன்வைக்கப்பட்டுள்ளன.
- இங்கு தொடர்பாடல் பற்றிய நேர்வழி மாதிரிகள் (Linear Models) மற்றும்

DRAFT

நேர்வழியல்லா மாதிரிகள் (Non Linear Models) மட்டும் கலந்துரையாடப்படும்.

1. **நேர்வழி மாதிரிகள்** (Linear Models)

ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு மாத்திரம் தகவல் கடத்தப்படல்.

2. **நேர்வழியல்லா மாதிரிகள்** (Non Linear Models)

இங்கு தொடர்பாடல் செயன்முறை இருவழிப் போக்குடையது. வட்டவடிவிலும், வெவ்வேறு வடிவங்களிலும் பரந்து விரிந்து செல்லும். பெறுநரது எதிர்வினை மற்றும் தொடர்பாடுநரைப் போல பெறுநரது செயற்பாட்டைப் பொறுத்தும் தகவலின் இயல்பு வேறுபடும்.


- பிரதானமான தொடர்பாடல் மாதிரிகள் நான்கு பற்றி இங்கு அவதானிக்கப்படும்.

1. அரிஸ்டோட்டில் மாதிரி
2. ஹரோல்ட் டீ. லாஸ்வெல் மாதிரி
3. குளொட் ‘னன் மற்றும் வொரன் வீவர் மாதிரி
4. ஷ்ராம் - ஒஸ்குட் மாதிரி

1. **அரிஸ்டோட்டில் மாதிரி**

- கிரேக்கநாட்டைச் சேர்ந்த தத்துவஞானியான அரிஸ்டோட்டில் (கி.மு. 384 - 322) என்பவரால் பேச்சுத் தொடர்பாடல் தன்மைகளைக் கருத்திற்கொண்டு எழுதப்பட்ட பேச்சுக் கலையுடன் தொடர்புடைய “ரிடோரிக்” (Rhetoric – The Art of Persuasion) எனும் நூலில் தொடர்பாடல் பற்றிய விடயங்கள் காணப் படுகின்றன.

- இம்மாதிரியில் தொடர்பாடல் செயன்முறையின் பிரதானமான ஐந்து மூலக் காரணிகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.




DRAFT

- **பேச்சாளர்:**

  பேச்சாளர் என்பவர் தகவலை முன்வைப்பவர் ஆவார். பேச்சாளர், தான் இலக்குவைத்த பெறுநர் குழுவிற்கு மற்றும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானவகையில் தனது பேச்சைத் தயாரிக்கவேண்டும். அதன் மூலம் கேட்போர் மத்தியில் ஏதேனும் தாக்கத்தை அல்லது தூண்டலை ஏற்படுத்தலாம்.

- **பேச்சு:**

  பேச்சு எனப்படுவது பேச்சாளர் முன்வைக்கும் தகவல் ஆகும். பேச்சுக் கேட்போரைத் தூண்டக் கூடியதொன்றாகக் காணப்படவேண்டும். நவீன தொடர்பாடல் தொழினுட்பம் எதுவும் இல்லாத அக்காலப் பகுதியில் கூட்டமாகத் தொடர்பாடலில் ஈடுபடும் போது பயன்படுத்தப்பட்ட பேச்சு அல்லது விரிவுரை என்பதே இங்கு குறிப்பிடப்படுகிறது.

- **கேட்போர்:**

  கேட்போர் என்பவர் பேச்சு அல்லது விரிவுரையைக் கேட்போர் ஆவர். இங்கு கேட்போர் என்பவர் மந்த பெறுநர்களாகச் செயற்படுவர்.

- **சந்தர்ப்பம்**:

  தகவலை வழங்கக் காரணமான சந்தர்ப்பம் இதன்மூலம் அர்த்தப்படுகிறது.

- **தாக்கம்:**

  தொடர்பாடல் நிகழ்வது நிச்சயிக்கப்பட்ட ஒரு நோக்கத்திற்காகவாகும். கேட்போரை ஏதேனுமொரு கருத்தை நோக்கித் தூண்டுவதற்காகவாகும்.

- இம் மாதிரியின் விசேட இயல்புகள்:
  1. ஐந்து மூலக்கூறுகள் பற்றி விபரிக்கப்பட்டுள்ளது.
  2. நேர்வழி மாதிரி.
  3. எதிர்வினை மற்றும் பின்னூட்டம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை.
  4. அக்காலத் தொடர்பாடல் செயன்முறைபற்றி மட்டும் கருத்திற்கொண்டு விடயங்கள் விபரிக்கப்பட்டுள்ளது.
  5. நவீன சிக்கலான தொடர்பாடல் செயன்முறையை விபரிக்க இயலாதிருத்தல்.


### 2. ஹரோல்ட் டீ. லாஸ்வெல் மாதிரி

- அமெரிக்க நாட்டு அரசியல் விஞ்ஞானப் பேராசிரியரான ஹரோல்ட் டீ. லாஸ்வெல்லினால் (1902 - 1978) 1948 இல் முன்வைக்கப்பட்ட விடயங்களிலிருந்து

DRAFT

உருவாக்கப்பட்ட மாதிரி ஆகும். முதலாம் உலகப்போரின்போது பயன்படுத்தப்பட்ட பிரச்சார முறைகள் பற்றி லாஸ்வெல்லினால் அவதானிக்கப்பட்டது.


- அவர் முன்வைத்த மாதிரி பிரதானமாக ஐந்து காரணிகளைக் கொண்டுள்ளது.
  1. யார்? (Who?) – தொடர்பாடுநர்
  2. என்ன கூறுகிறார்? (Says What?) – தகவல்
  3. எந்த ஊடகத்தில்? (In Which Channel?) – ஊடகம்
  4. யாருக்கு? (To Whom?) – பெறுநர்
  5. எந்தத் தாக்கத்திற்காக? (With What Effect?) – தாக்கம்




- இம் மாதிரியின் விசேட இயல்புகள்:
  1. இது ஒரு நேர்வழிமாதிரி.
  2. பின்னூட்டல் மற்றும் தடைகள் இங்கு குறிப்பிடப்படவில்லை.
  3. இதன் மாதிரி மூலம் தொடர்பாடல் செயற்பாட்டால் நிகழும் தாக்கம் அதிகம் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3. ஷனன் மற்றும் வீவர் மாதிரி

- அமெரிக்க நாட்டுக் கணிதமேதைகளான குளொட் ஷனன் (1916 - 2001) மற்றும் வொரன் வீவர் (1894 - 1978) ஆகிய இருவரினால் 1949 இல் தொடர்பாடல் பற்றிய இக்கணிதமாதிரி முன்வைக்கப்பட்டது.
- தொடர்பாடலின் தொழினுட்பச் செயற்பாட்டில் அதிக அவதானம் செலுத்தப்பட்ட இம் மாதிரியில் மனிதன் மற்றும் இயந்திரங்கள் மூலம் தொடர்பாடல் செயற் பாட்டில் மேற்கொள்ளப்படும் தாக்கமும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.



பெற்றுக்கொண்ட சமிக்ஞை

சமிக்ஞை

- இம் மாதிரியில் பிரதான காரணிகள் சில உள்ளடங்குகின்றன,
  1. தகவல் மூலம் (Information Source)
  2. தகவல் (Message)
  3. செலுத்தி (Transmitter)
  4. சமிக்ஞை (Signals)
  5. தடை / இடையூறு (Noise)
  6. பெறுகை (Receiver)
  7. சேருமிடம் / உச்சஸ்தானம் (Destination)

- தகவல் மூலம் அல்லது தொடர்பாடுநர் வழங்கும் தகவல் இலத்திரனியல் செயற்பாட்டிற்கு உள்ளாகி இலத்திரனியல் சமிக்ஞையாக மாற்றப்படுகிறது.


- இங்கு, தகவலானது கடத்தப்படக் கூடிய சமிக்ஞையாக மாற்றப்பட்டு பெறுநரிடம் முன்வைக்கப்படுகிறது. தகவல் சமிக்ஞையாக மாற்றப்பட்டு பல்வேறு ஊடகங்களின் வழியே கடத்தப்படும்போது வெவ்வேறு தடை / இடையூறுகளுக்கு உள்ளாகிறது. அவை கருத்து அல்லது மொழிரீதியான தடை (Semantic Noise) மற்றும் ஊடகத் தடை (Channel Noise) ஆகியனவாகும்.

- இம் மாதிரியின் விசேட இயல்புகள்:
  1. நேர்வழி மாதிரி.
  2. தொடர்பாடலில் தாக்கம் செலுத்தக் கூடிய தடை / இடையூறு பற்றி முதல்முறை கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.
  3. பின்னூட்டம் பற்றிக் குறிப்பிடாமை.
  4. ஊடுகடத்தும் மற்றும் பெற்றுக்கொள்ளும் செயன்முறைகள் பற்றிய விபரிப்புக் காணப்படல்.
  5. தொழினுட்பநோக்கில் தொடர்பாடல் விபரிக்கப்பட்டமை.

DRAFT

## 4. ஒஸ்குட் – சுஷ்ராம் மாதிரி

- வில்பர் ஷ்ராம் (1907 - 1987) மற்றும் சார்ள்ஸ் ஒஸ்குட் (1933 இல் பிறப்பு) ஆகியோரினால் இத் தொடர்பாடல் மாதிரி 1954 இல் அறிமுகம் செய்யப்பட்டது. இவ்விரு அறிஞர்களும் சமூகவிஞ்ஞானத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால் தொடர்பாடல் செயன்முறை பற்றிய சமூகவிஞ்ஞானப் பார்வையைத் தமது மாதிரியில் வெளிப்படுத்தியுள்ளனர்.




DRAFT

- இம் மாதிரியில் தொடர்பாடுநர் குறிமுறையாக்குவராகவும், பெறுநர் குறிமுறை யவிழ்ப்பவராகவும் காட்டப்பட்டுள்ளனர். தொடர்பாடுநருக்கும் பெறுநருக்கும் கிடைக்கப்பெறும் தகவல்கள் அவர்களால் பொருட்கோடல் செய்யப்படும்.
- தகவல் மூலமாகத் தொடர்பாடுநருக்கும் பெறுநருக்கும் இடையிலான தொடர்பு கட்டியெழுப்பப்படுவதோடு இருவரது வகிபாகங்கள் மாற்றப்பட்டுத் தொடர்பாடல் தொடர்ச்சியாக நிகழும்.
- இதன் மூலம் தொடர்பாடல் செயற்பாடு ஓரிடத்தில் தொடங்கி இன்னுமொரு இடத்தில் முடியாது, தொடர்ச்சியாக, வட்டவடிவில் நிகழும் என ஒஸ்குட் மற்றும் ராம் இங்கு தெளிவுபடுத்துகின்றனர்.
- இம் மாதிரியின் விசேட இயல்புகள்:
    1. இது நேர்வழியல்லாத வட்டத் தொடர்பாடல் மாதிரி.
    2. தொடர்பாடுநர் போலவே பெறுநரும் தொடர்பாடலில் முக்கியம் பெறுவார்.
    3. குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு மற்றும் பொருட்கோடல் முதலான சந்தர்ப்பங்களை விபரித்தல்.
    4. தொடர்பாடல் தொடர்ச்சியான செயன்முறை.
    5. பின்னூட்டம் இதில் உள்ளடங்குகிறது.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தொடர்பாடல் மாதிரிகளை உதாரணங்களுடன் விளக்குக.

2. ஆளிடைத் தொடர்பாடல் சந்தர்ப்பம் ஒன்றைத் தெரிவுசெய்க. நீங்கள் தெரிவுசெய்த அச்சந்தர்ப்பத்தை விரும்பிய இரு மாதிரிகள் மூலம் பகுப்பாய்வுசெய்க.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| மெய்நிகர் தொடர்பாடல் | - | Virtual Communication |
| ஆளுள் தொடர்பாடல் | - | Intrapersonal Communication |
| ஆளிடைத் தொடர்பாடல் | - | Interpersonal Communication |
| குழுத் தொடர்பாடல் | - | Group Communication |
| பேச்சுத் தொடர்பாடல் | - | Oral Communication |
| வெகுசனத் தொடர்பாடல் | - | Mass Communication |
| கட்புலத் தொடர்பாடல் | - | Visual Communication |
| வாய்மொழியற்றதொடர்பாடல் | - | Nonverbal Communication |
| பொதுசனத் தொடர்பாடல் | - | Public Communication |
| எழுத்துத் தொடர்பாடல் | - | Written Communication |
| தொடர்பாடல் மாதிரிகள் | - | Models of Communication |
| தொடர்பாடல் வகைகள் | - | Types of Communication |
| தொடர்பாடல் வடிவங்கள் | - | Forms of Communication |
| செவிப்புலத் தொடர்பாடல் | - | Audio Communication |

DRAFT

**உசாத்துணை நுல்கள்:**


1 Berger, Charles R., Interpesonal Communication: The International Encyclopedia of Communication, New York, Wiley Blackwell, 2008

2. Bittner, John R. Mass Communication: An Introduction, U.S.A, 1986

3. Charles, Wright R., Mass Communication, New York, 1971

4. DeFleur and Dennis, Understanding Mass Communication, 7th Edition, U.S.A, 2002

5. Domimic, Joseph, R., The Dynamics of Mass Communication, 10th Edition, New York, 2010

6. James Waston and Anne Hill, A Dictionary of Communication and Media Studies, India, Universal Book Stall, 1991

7. Mac Bride Sean, Many Voices, One World, United Nations Educational, Scientific and

Cultural Organization, New York, 1980

8. Murphy, Herta A. , Herbert W. Hildebrandt, and Thomas Jane P., Effective Busines Communications, 7th edition, Mc Graw - Hill, 1997
9. Stewart L., Tubbs and Moss Sylvia, Human Communication, 7th Edition

## 4. பாரம்பரிய ஊடகம் மற்றும் வெகுசன ஊடகம், புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகம்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : 4.0 | பாரம்பரிய ஊடகம், வெகுசன ஊடகம் மற்றும் புதிய ஊடகம் பற்றிய கருத்துக்களைக் கலந்துரையாடி அவற்றின் விசேட இயல்புகளை அறிந்து அவற்றைப் பொருத்தமான தொடர்பாடல் சந்தர்ப்பங்களில் பயன் படுத்துவார். |
| தேர்ச்சி மட்டம் | : 4.1 | பாரம்பரிய ஊடகம் என்றால் என்ன எனக் கலந்துரை யாடி அவற்றின் விசேட இயல்புகளைத் தெளிவு படுத்துவார். |
| பாடவேளைகள் | : 08 | |
| கற்றற் பேறுகள் | : | • பாரம்பரிய ஊடகம் என்றால் என்ன எனக் கலந் துரையாடுவார்.<br>• பாரம்பரிய ஊடக வழிமுறைகளைப் பெயரிட்டு விளக்குவார்.<br>• பாரம்பரிய ஊடகத்தின் அவசியத்தை விபரிப்பார். |

DRAFT

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**பாரம்பரிய ஊடகம் பற்றிய அறிமுகம், அதன் உள்ளடக்கம், இயல்புகள் மற்றும் பணிகள்**

1. **பாரம்பரிய ஊடகத்தைப் பற்றி அறிந்து கொள்ளல்**

- நீண்டகாலமாகக் கிராமப்புற மக்களிடையே நிலவிய தகவல் பரிமாற்றம், அறிவு, ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்ததும், இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடியதுமான வளங்களைப்

பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தொடர்பாடல் முறைகளைப் பாரம்பரிய ஊடகம் என வரைவிலக்கணம் செய்யலாம்.

- இவை பாரம்பரிய சமூகங்களில் தோன்றி அதிலேயே செயற்பட்டும் வந்தன. அதேபோல் இவை நீண்ட காலமாகக் கிராமிய சமூகங்களில் தொடர்ந்து காணப்பட்ட, குறித்ததொரு வழிகாட்டுநரோ, தொழினுட்ப சாதனங்களதோ பயன்பாடுகள் இன்றிய கிராமிய மக்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்றவை யாகும்.

- மானுட வரலாற்றில், வரலாற்றுக்கு முந்திய காலத்தில் ஒலிச் சமிக்ஞைகள் (பறையொலி, குரல் ஒலி, ஊதுகுழல், கூக்குரல் எழுப்புதல்), கட்புல சமிக்ஞைகள் (புகை, மரக் கிளைகளைத் தொங்கவிடல், குறியீடுகளை இடல்) போன்றவற்றைப் பயன்படுத்தித் தொடர்பாடலை மேற்கொண்டுள்ளனர்.

- இத்தகைய பாரம்பரியத் தொடர்பாடல் முறைகள் பல்வேறு பண்பாட்டு மற்றும் சூழல்சார் காரணிகளின் அடிப்படையில் நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடுகின்றன.

- பாரம்பரிய ஊடகமானது சூழல் நேயமிக்க, எளிமையான தொடர்பாடல் முறையாகும். அதன் பல்வேறு சிறப்பியல்புகளைக் காணலாம். அவற்றுள் சில வருமாறு.

  01. எளிய கட்டமைப்பு
  சாதாரண மக்களால் விளங்கிக் கொள்ளக் கூடிய எளிய கட்டமைப்பினைக் கொண்டு பாரம்பரிய ஊடகங்கள் அமைந்திருந்தமை இதன் மூலம் கருதப்படுகின்றது. கிராமிய சமூகத்தையும் பண்பாட்டு ரீதியான தொடர்பு களையும் மையப்படுத்திச் சிக்கலற்றதும், மிகவும் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வளங்களையும் கொண்டு உருவாக்கப்பட்ட எளிய கட்டமைப்பினைப் பாரம்பரிய ஊடகங்களில் காண முடிகின்றது.

  02. கருத்துக்களின் உள்ளடக்கம்
  பாரம்பரிய ஊடகங்களில் அவை முன்வைக்கப்படும் நோக்கங்களுக்கு ஏற்ப அவற்றின் உள்ளடக்கமும் வடிவமைக்கப்பட்டிருக்கும். இந்நோக்கங் களில், நோய்களிலிருந்து காப்பாற்றுதல், பயிர்களைப் பாதுகாத்தல், நம்பிக்கைகள், பொழுதுபோக்குகள், உணர்வுகளை வெளிப்படுத்தல் போன்றன அடங்கும்.

DRAFT

03. நெகிழ்வுத்தன்மை

சந்தர்ப்ப சூழ்நிலை, அவசியத்திற்குப் பொருந்தும் வகையில் தகவலை இலகுவாக உருவாக்கிக் கொள்ளல் இதனூடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

04. பண்பாட்டுச் சூழமைவு

பண்பாட்டுச் சூழமைவு என்பதனூடாகக் கருதப்படுவது யாதெனில், மரபுகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், கலையறிவு போன்றன மனிதனின் பண்பாட்டு அம்சங்களாகும். தொழில்களுக்கு ஏற்பவும், அவசியத்திற்கு ஏற்பவும் (பொழுதுபோக்கினை வழங்குதல், ஆசீர்வதித்தல்) பாரம்பரிய பண்பாட்டுச் சூழமைவு மாற்றமடையும்.

05. குறைந்த செலவு

பாராம்பரிய ஊடகத்தில் சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் வளங்களைக் கொண்டு கருத்துக்கள் பரிமாறப்படுவதால் ஒப்பீட்டளவில் குறைந்த செலவில் அவற்றை மேற்கொள்ள முடியும்.

DRAFT

**பாரம்பரிய ஊடக முறைகள்**

**01. நாட்டார் பாடல்கள்**

- மக்களின் வாழ்வியற் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு நாட்டார் பாடல்கள் உருவாகியுள்ளன. நாட்டார் பாடல்கள் என்பது, கிராம மக்கள் மத்தியில் பாதுகாக்கப்பட்டு வருகின்ற, ஆக்கியோர் யாரெனத் தெரியாத இலக்கிய வகையாகும். கிராமிய மக்களின் வாழ்க்கைக் கோலம், வழக்காறுகள், நம்பிக்கைகள், தேவைகள், துன்பங்கள், எதிர்பார்ப்புக்கள் என்பன இதனூடாகப் பரிமாறப்படுகின்றன.

- நாட்டார் பாடல்களைக் கற்கும்போது கிராமிய மக்களின் சமூக, பொருளாதார, பண்பாடு, சமய ரீதியிலான தகவல்களை வெளிப்படுத்த முடியும். பாரம்பரியத் தொடர்பாடல் முறையான நாட்டார் பாடல்களில் காணப்படும் சில விசேட அம்சங்கள்,
    - ♦ வாய்மொழி வழியாகப் பேணப்பட்டு வருபவை.
    - ♦ சாதாரண மக்களின் வாழ்க்கைக் கோலத்துடன் தொடர்புடைய எளிமை யான மொழிநடை.
    - ♦ ஆக்கியோர் யாரெனத் தெரியாது.
    - ♦ பரந்த பிரதேசத்தில் வியாபித்திருத்தல் - கிராமப்புற மக்களின் தேவை

களுக்கு ஏற்ப உருவாகியிருத்தல், பரந்துபட்ட வியாபகத் தன்மையைக் கொண்டிருக்க முடியும். மறுசீரமைப்பு, மீளுருவாக்கம் ஆகிய பண்பு களைக் கொண்டது.

- ♦ நீண்டகாலமாக மக்களிடையே நாட்டார் கலையாக நிலவி வருதல்.

- உண்மைத்தன்மை, எளிமை, சுருக்கம், ஒழுக்கம், பேச்சு வழக்கு இயல்புகள், ஓசை, மக்களின் விருப்பு வெறுப்புக்களுடன் இணைந்த சொல்லாடல்கள் போன்ற காரணங்களால் நாட்டார் பாடல்கள் பாரம்பரியத் தொடர்பாடல் முறைகளில் சிறப்பிடம் பெறுகின்றன.
- பல்வேறு நாட்டார் பாடல் வகைகள் காணப்படுகின்றன. அவற்றுக்கான உதாரணம் தாலாட்டுப் பாடல்கள், தொழிற்பாடல்கள், படகோட்டும் பாடல்கள்.

## 02. நாட்டார் கதைகள்

- வாய்மொழியாகப் பேணப்பட்டுவரும், மனிதனின் அனுபவங்கள் மற்றும் அறிவுரைகளை வழங்கும் பாரம்பரியத் தொடர்பாடல் முறையாக நாட்டார் கதைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- நாட்டார் கதைகளில் பல்வேறு வகைகள் காணப்படுகின்றன. பிறப்புத் தொடர்பான கதைகள், விலங்குகள் தொடர்பான கதைகள், இறைவன் தொடர்பான கதைகள், மரஞ் செடிகள் தொடர்பான கதைகள், அதிசயக் கதைகள், பூதங்களைப் பற்றிய கதைகள், நகைச்சுவைக் கதைகள் என அவற்றை வகைப்படுத்தலாம்.
- நாட்டார் கதைகளில் சமூக அறிவு உள்ளடங்கியிருப்பது அதன் சிறப்பம்சமாகும்.
- அதேபோல், நாட்டார் கதைகளில் பிரதேச மொழிநடை தொடர்பாகவும் அறிந்துகொள்ள முடியும். இது பாரம்பரியத் தொடர்பாடல் முறையொன்றாகப் பிரபல்யம் அடைந்திருப்பது கிராம மக்களின் பொருளாதார, சமய, பண்பாடு நடவடிக்கைகள் பரிமாறப்படுவதனாலாகும்.
- அதேபோல், உளத் திருப்தியினைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமையும் இதற்கு உண்டு. அறிவைப் பரிமாற்றும் முறையாக நாட்டார் கதைகள் முக்கியம் பெறுகின்றன.

DRAFT

## 03. கிரியைகளும் சடங்குகளும்

- பாரம்பரியத் தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் மற்றுமொரு விசேட முறையாக கிரியைகள் மற்றும் சடங்குகளைக் குறிப்பிடலாம். இவற்றுள் வேப்பிலைக் கிரியை, தேகக் கிரியை, நீர்க் கிரியைகள், பலியிடல்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- இதன் நோக்கங்களாகப் பயிர்ச்செய்கையை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்ளல், சின்னமுத்து, பெரிய அம்மை போன்ற தொற்று நோய்களில்

இருந்தும், கிரக தோசங்களில் இருந்தும் மீளுதல், மகிழ்ச்சியை வேண்டி நிற்றல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- இவற்றில் அளிக்கை, விவாதம், நடிப்பு போன்றவற்றின் ஊடாகத் தொடர்பாடல் மேற்கொள்ளப்படுகின்றது. தமிழ்ப் பண்பாட்டிற்கு அமைய வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், காமன் கூத்து, நாட்டுக்கூத்து, தெருக்கூத்து போன்ற வற்றிலும் பல்வேறு சடங்கு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அதேவேளை, இவை இலக்கியம் சார்ந்த சடங்குகளாகவும் காணப்படுகின்றன.

## 04. நாட்டார் (கிராமிய) நாடகங்கள்

- கிராமிய / நாட்டார் நாடகம் என்பது யாதேனும் கதையொன்றை அல்லது பல கதைகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலையம்சமாகும். ஊதாரண மாகக் கூத்துக்கள், பொம்மலாட்டம், கோலம், சொக்கரி, வேடம் தரித்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.
- கிராமிய / நாட்டார் நாடகக் கலையில் சிங்களப் பண்பாட்டில் மேற்குப் பிரதேசங்களில் பத்தினித் தெய்வத்தினைப் பிரதானமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் சொக்கரி நாடகமும், கீழ்நாட்டுப் பிரதேசங்களில் கோலம் நாட்டார் நாடகங்களும் தமிழ்ப் பண்பாட்டில் வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள், காமன் கூத்து போன்றனவும் முக்கியத்துவம் பெறுகின்றன. பயிர்கள் அழிவடைதற்குரிய நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் கிருமிகள் போன்றவற்றால் ஏற்படும் அழிவினைத் தடுத்து அவற்றைப் பாதுகாத்துக்கொள் வதற்கும், மனிதர்களைப் பீடிக்கும் நோய்கள், தொற்று நோய்கள் மற்றும் கிரகதோசங்களில் இருந்து பாதுகாப்புப் பெறுவதும் கிராமிய / நாட்டார் நாடகத்தினூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.
- கூத்துக்கள் நெல் அறுவடை செய்து சூடு மிதித்தல் நிறைவு செய்த பின் களத்துமேட்டை மேடையாகக் கொண்டு அரங்கேற்றப்படும். இது கிராம மக்கள் ஓய்வெடுக்கும் காலம் என்றபடியால் களத்துமேட்டை நாடக மேடை யாகக் கொண்டு கூத்துக்கள் மற்றும் சொக்கரி நாடகம் பொழுதுபோக்குக் கருதி அரங்கேற்றப்படுவது சிறப்பம்சமாகும்.
- இவை தவிர வேடம் தரித்தல் எனும் முகமூடி நாடகங்களும் கிராமிய நாடக வகையைச் சாரும். மரத்தினால் ஆக்கப்பட்ட, பல்வேறு நிறங்கள் பூசப்பட்ட முகமூடிகளை அணிந்து இந்நாடகம் அரங்கேற்றப்படும்.
- வேடம் என்பது நடிகர் ஒருவரால் தரிக்கப்படுவதாகும். இது சிங்கள மொழியில் கோலம் எனப் பயன்படுத்தப்படுகின்றது. இதன் பொருள் ஒரு வேடத்தை

DRAFT

ஏற்றுக்கொள்ளும் பாங்கு என்பதாகும்.

- பாடல் மற்றும் ஓரங்க உரையாடல் என்பன இங்கு ஊடகங்களாகப் பயன் படுத்தப்படும். இங்கு கதை முழுமையாக நடித்துக் காட்டப்படும். இராமாயணம் மற்றும் மகாபாரதத்தையும் தமிழின் ஐம்பெரும் காப்பியங்களையும் அடிப்படை யாகக் கொண்ட கதைகள், மதி இரங்கல் கதைகள், கோதாம்பரக் கதைகள், ‘‘மனமே’’ நாடகக் கதை, ஊர்க் கதை என்பன இதற்கு உதாரணங்களாகும். வேடம் தரித்தல் என்பது பொழுதுபோக்கிற்காக மேற்கொள்ளப்படுவது எனப் பொதுவாகக் குறிப்பிட்டாலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்காக நடாத்தப்படும் சடங்கு முறையாகவும் இலக்கியம் சார்ந்த ஒன்றாகவும் அது அறியப்படுகின்றது.

**பாரம்பரியத் தொடர்பாடலின் முக்கியத்துவம்**

- **அறிவு வழங்குதல்.**
  மூத்தோரால் இளைய தலைமுறைக்குத் தேவையான சமூகம் சார்ந்த அறிவு வழங்கப்படுகின்றது.

- அறிவுரைசார் தகவல்களை உருவாக்க இயலுதல். மத, ஒழுக்கம், பண்பாட்டுப் பெறுமதிகளுடன் கூடிய சுகாதார, கல்வி மற்றும் பல்வேறு வாழ்க்கை அனுபவங்கள் போன்றவற்றைப் பரிமாறிக் கொள்வதற்காக இது பயன்படுத்தப்படுகின்றது.

- **பண்பாட்டுப் பரிமாற்றம்.**
  வழக்காறுகள், நம்பிக்கைகள், சடங்குகள், சம்பிரதாயங்கள், கலை, அறிவு, சட்டதிட்டங்கள், ஒழுக்க விழுமியங்கள் போன்றன பாரம்பரிய ஊடகங்களால் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்குப் பரிமாற்றப்படும்.

- **உணர்வுகளை வெளிப்படுத்தல்.**
  மனதில் தோன்றும் துன்ப துயரங்களையும், மகிழ்ச்சி போன்ற மனோநிலைகளை வெளிப்படுத்தும்போதும் தகவல்களைப் பரிமாற்றப் பயன்படுத்தும் முறையியலாக பாரம்பரிய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன.

- **சமூகத்தின் நேர்மறையான போக்குகளை விமர்சித்தல்.**
  சமூகத்தின் ஏதேனும் நேர்மறையான நிகழ்வு, மனிதர்களை விமர்சிக்கும் வண்ணம் நகைச்சுவை மற்றும் துள்ளல் உணர்வுகள் மேலோங்கும் வகையில்

DRAFT

கிராமிய மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குதல். உதாரணம் - நாட்டார் நாடகங்களிலும் கூத்துக்களிலும் கட்டியக்காரன் மற்றும் விகடகவிப் பாத்திரங்கள்

- **பொழுபோக்கிற்காகப் பயன்படுத்திக்கொள்ளல்.**

  கிராமப்புற மக்கள் தமது பொழுதுபோக்கிற்காகப் பாரம்பரிய ஊடகத்தைப் பயன்படுத்தியுள்ளனர். அறுவடை செய்தல் மற்றும் இளைப்பாறுதல் ஆகிய வற்றின் பொருட்டு பாரம்பரியத் தொடர்பாடல்களைப் பயன்படுத்தியுள்ளனர். பாரம்பரிய முறையியல்களைப் பயன்படுத்திக் மனிதன் தனது சூழலில் இருந்து பெற்றுக்கொள்ளும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ளுதல் இதன்மூலம் இடம்பெறுகின்றது.

  பாரம்பரிய ஊடகங்கள் மூலம் எதிர்பார்க்கப்படும் தொடர்பாடல் பணிகளும் இங்கு நோக்கப்படல் வேண்டும். அவற்றுள், அறிவுரை வழங்குதல், தூண்டுதல், விமர்சனம் செய்தல், பொருள் கோடல், மகிழ்□ட்டல் ஆகிய விடயங்களை அவதானித்தல் நன்று.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பாரம்பரிய ஊடகம் என்பதைத் தெளிவுபடுத்துக.

2. பாரம்பரிய ஊடகங்களின் சிறப்பியல்புகள் மற்றும் முக்கியத்துவத்தினைத் தெரிவு செய்த சில உதாரணங்கள் ஊடாக விளக்குக.

3. ''தொடர்பாடலை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குப் பாரம்பரிய ஊடக முறைகளைப் பயன்படுத்த முடியும்'' இக்கூற்றை உதாரணம் மூலம் விளக்குக.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : 4.2 | வெவ்வேறு வெகுசன ஊடக வகைகளை இனங்கண்டு அவற்றின் விசேட இயல்புகளைப் பகுப்பாய்வு செய்வார். |
| **பாடவேளைகள்** | : 16 | |
| **கற்றற் பேறுகள்** | : | • வெகுசன ஊடகம் என்றால் என்ன எனக் கலந்துரை யாடுவார்.<br>• வெகுசன ஊடகத்தின் விசேட இயல்புகளை விபரிப்பார்.<br>• வெகுசனத் தொடர்பாடல் மாதிரியை உதாரணங் களுடன் விபரிப்பார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**வெகுசன ஊடக அறிமுகம்**

போர் தொடர்பான செய்திகளை அறிக்கையிடுவதற்காக உலகப்போர்க் காலங்களில் பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் பிற்காலத்தில் வெகுசன ஊடகங்களாக வளர்ச்சியடைந்தன. போர் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் முதன்முதலில் 1922 இல் ஜோன் ரீத் என்பவரால் மனிதர்களுக்குரிய ஊடகங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. வெகுசன ஊடகங்கள் தோற்றம் பெற்றதற்குரிய காரணியாக அமைந்தது தொடர்பாடல் தொழினுட்பத்தில் ஏற்பட்ட வளர்ச்சியாகும். அதன்படி, வெகுசன ஊடகங்களாக - பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை நோக்கலாம்.

**வெகுசன ஊடகம் வரைவிலக்கணம்**

- வெகுசனத் தொடர்பாடலை வெற்றிகொள்ளக் காலம் அல்லது இடத்தை மையப் படுத்தித் தகவல்களைப் பரிமாற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் உபாயம் வெகுசன ஊடகமாகும்.

DRAFT

- நவீன சமூகத்தில் காணப்படும் பிரதான வெகுசன ஊடகங்களாகப் பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றை நோக்கலாம் என். டீ .புளுவர் மற்றும் டெனிஸ் ஆகியோர் தமது ''வெகுசனத் தொடர்பாடலைப் புரிந்துகொள்ளுதல்'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ளனர்.
  - ஓக்ஸ்போட் அகராதியில் குறிப்பிட்டதன்படி, ''கண்ணுக்கு எட்டாது காணப்படும் மக்களுக்கு ஊடகத்தின் மூலம் தகவல் வழங்கினால் அது வெகுசன ஊடகமாகும்.''
  - ''வெகுசன ஊடகம் எனப்படுவது, பரந்த பிரதேசத்தில் பரந்தும் விரிந்தும் காணப்படும் பல்வித, கண்ணுக்கெட்டாத பெறுநர்க்கு தகவல் வழங்கும் ஊடகமாகும்.''

  என்றும் வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

**வெகுசன ஊடகங்களின் பண்புகள்**

1. தொழினுட்ப சாதனப் பயன்பாடு.
2. விரைவானதும் தொடர்ச்சியானதுமாகக் காணப்படும்.
3. ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்புக் காணப்படும்.
4. தொழில்சார் தொடர்பாடுநர்கள் காணப்படுவர்.
5. வாயிற்காப்பாளர்கள் பலர் காணப்படுவர்.
6. பெருந்தொகையான பெறுநர்களைக் கொண்டது.
7. பிந்திய பின்னூட்டம் காணப்படும்.
8. பெரும்பாலும் இலாபத்தை இலக்காகக் கொண்டது.

**வெகுசன ஊடகத்தின் பணிகள்**

- பொதுவான தொடர்பாடற் பணிகளும் வெகுசன ஊடகங்கள் மூலம் நிறைவேற்றப்படும். அவையாவன: கல்வி வழங்குதல், தகவல் வழங்கல், தூண்டுதல் மற்றும் மகிழ்வூட்டல் அல்லது பொழுதுபோக்கினை வழங்குதல் ஆகியனவாகும்.
- வெகுசன ஊடகங்களுக்கு உரித்தான சிறப்பான பணிகள் ''சில யுனெஸ்கோவின் பல குரல்கள் ஒரு உலகம்'' எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன,

**மேற்பார்வை** (Surveillance)

சமூகத்தில் வாழும் நபர் ஒருவர் அறிந்திருக்க வேண்டிய தகவல்களைச் சேகரித்தலும், பாதிப்பினை ஏற்படுத்தும் தகவல்கள் தொடர்பில் தெளிவூட்டல், சமூகத் தேவைகள்,

DRAFT

அனர்த்தங்களின் போதான தகவல் திரட்டலும், உடனடியாக அவை தொடர்பில் சமூகத்தை அறிவூட்டுவதும் மேற்பார்வை என்பதில் அடங்கும்.

**பொருட்கோடல்** (Interpretation)

பல்வேறு நிகழ்வுகள் மற்றும் தகவல்களின் பொருளினை விளக்குதல், விவரித்தல் மற்றும் உரிய தகவல்கள் தொடர்பில் சமூகத்தின் அபிப்பிராயங்களையும் பெற்றுக்கொண்டு மதிப்பீடு செய்து முன்வைத்தல் ஆகியன இதில் அடங்கும்.

**இணைப்பாக்கம் செய்தல்** (Correlation)

வெகுசன ஊடகங்கள் ஊடாக முன்வைக்கப்படும் செய்திகள் ஊடாக நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்பு கட்டியெழுப்பப்படுதல் இதன் மூலம் குறிப்பிடப் படுகின்றது. வெகுசனத் தொடர்பாடலின் இணைப்பாக்கப் பணி மிகவும் முக்கியமானதாக காணப்படுவதோடு, சமூக நிலைநிறுத்தலினைப் பேணிக்கொள்வதற்கும் வெகுசன ஊடகங்கள் உதவுகின்றன.

DRAFT

**சமூகமயமாக்கல்** (Socialization)

சமூகத்தில் வாழும் நபரொருவருக்குச் சமூக வாழ்வில் பல்வேறு சந்தர்ப்பங்களின்போது நடந்துகொள்ள வேண்டிய விதம் தொடர்பிலான அறிவினை வெகுசன ஊடகத்தால் பெற்றுக்கொடுத்தல், சமூகம் தொடர்பான அறிவு மற்றும் பெறுமானங்களை முன்வைத்தல், அவற்றை மக்களுக்கு வழங்குதல் ஆகிய விடயங்கள் ஊடாக - சமூகத்தின் பொதுப் பிரச்சினைகளையும் சவால்களையும் சரியாக இனங்கண்டு கொள்வதற்கு வாய்ப்பளித்தல் போன்றவற்றை மேற்கொள்ளும் ஆற்றல் வெகுசன ஊடகங்களுக்கு உண்டு.

- வெகுசன ஊடகத்தின் பணிகள் தொடர்பில் பல்வேறு நிபுணர்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.
- வெகுசன ஊடகத்தின் பணிகள் தொடர்பில் கலாநிதி. ஹரோல்ட் டீ. லாஸ்வெல்
    1. சூழலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உறுதுணையாக இருத்தல்,
    2. சூழலில் செல்வாக்குச் செலுத்தும் சமூக அங்கங்களை இணைத்தல்,
    3. சமூக மரபுரிமைகளைத் தொடர்ந்தும் பரவலடையச் செய்தல்

  என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

- பேராசிரியர் வில்பர் 'ராம் வெகுசன ஊடகங்களால் நிறைவேற்றப்பட வேண்டிய மூன்று பிரதான வகிபாகங்களைக் குறிப்பிட்டுள்ளார்.
    1. பாதுகாவலர் ஒருவரின் வகிபாகம்

2. கலந்துரையாடல் சபையின் வகிபாகம்
3. ஆசிரியர் ஒருவரின் வகிபாகம்

- இவற்றைத் தவிர வெகுசன ஊடகங்களால் நிறைவேற்றப்படும் பணிகள் பல காணப்படுகின்றன.

♦ **ஜனநாயக சமூகத்தில் பாதுகாவலாளரின் பாத்திரத்தினை நிறைவேற்றுதல்.**

இதன் அடிப்படைக் கருத்து, பொதுமக்களுக்கு ஏற்படும் பல்வேறு அச்சுறுத்தல்கள் தொடர்பில் கரிசனையுடன் இருத்தல் மற்றும் அவற்றுக்கு எதிராகக் குரல் கொடுத்தலும் ஆகும்.
இங்கு, அரச செயற்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. சமூகச் செயற்பாடுகளின்போது ஆட்சியாளர்கள் தான்தோன்றித்தனமாகச் செயற் பட்டாலும், சமூக அக்கறையுடன் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்பினைத் தடுத்துக்கொள் வதற்காக வெகுசன ஊடகம் செயற்படும்.

♦ **சமகால சமூக மதிநுட்பத்தின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்வதற்கு உதவுதல்.**

வெகுசன ஊடகங்கள் மூலம் புதிய வாழ்க்கை முறை, புதிய சம்பிரதாயங்கள், புதிய ஆடையணிகள், புதிய பொருட்கள் ஆகியவற்றில் ஈடுபாடு மற்றும் உள்ளுணர்வு ஏற்படுத்தப்படுவதுடன், நாட்டு மக்களிடம் சமூக அபிவிருத்திக்குத் தேவையான நவீனத்துவம் தொடர்பான உணர்வினை ஏற்படுத்துவதிலும் வெகுசன ஊடகங்கள் பெரும் பங்களிக்கின்றன.

- நேயர்களின் இரசனையினை விரிவாக்குவதற்கான செயற்பாடுகளை உருவாக்குதல்.
- புதிய கண்டுபிடிப்புகளுக்கான தகவல் மத்திய நிலையமாக மாறியுள்ளமை.
- அறிவு விருத்திக்குப் பங்களித்தல்.

**வெகுசன ஊடகங்களை வகைப்படுத்தல்**

வெகுசன ஊடகங்கள் பல்வேறு வகைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது அச்சு ஊடகம் மற்றும் இலத்திரனியல் ஊடகம் என்பனவே அவையாகும். அச்சு ஊடகங்களாக பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் என்பன காணப்படுவதோடு, இலத்திரனியல் ஊடகங்களாக வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன காணப்படுகின்றன. தொழினுட்ப வளர்ச்சியால் எண்சார் (டிஜிட்டல்) ஊடகத்தின் வருகை வெகுசன ஊடகங்களை வேறொரு வழியில் வகைப்படுத்தச் செய்துள்ளது.

**பத்திரிகை**

DRAFT

- பத்திரிகை முதன்முதலில் தோற்றம் பெற்ற வெகுசன ஊடகமாகும். செய்திகளுடன் கூடியது எனும் முதன்மைக் கருத்துக் காணப்பட்ட போதிலும் பத்திரிகைகளில் செய்திகளுடன் விசேட கட்டுரைகளும் காணப்படும். பத்திரிகை என்பது, "செய்திகளைப் பிரபல்யப்படுத்தும் தாள்" எனச் சுமங்கல அகராதியில் (பக் - 629) குறிப்பிடப் பட்டுள்ளது.
- இதற்கு மேலதிகமாகப் பத்திரிகை பற்றிய வரைவிலக்கணங்கள் சிலவற்றை விபரித்தல் நன்று.

- குறித்த புவியியல் வலயங்களில் வாழும் பெரும்பாலான மக்களுக்குரிய பொது விருப்பு, வெறுப்புக்கள் அடங்கிய செய்திகளைக் காட்டும் நாளாந்தம் அல்லது வாராந்தம் வெளிவரும் வெளியீடாகும். யுனெஸ்கோ அமைப்பு, பத்திரிகை என்பதை இவ்வாறு அறிமுகப்படுத்தியுள்ளது,

"நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான தகவல்களைக் கொண்ட, குறித்த காலப்பகுதியில் தொடர்ந்தும் வெளிவரும், ஒன்றிணைக்கப்படாத தாள்களின் வெளியீடாகும்."

- ஆங்கில மொழியில் பத்திரிகை என்பது நேறளியிநச என அறியப்படுகின்றது. ஒக்ஸ்போட் அகராதி, பத்திரிகை என்பதைப் பின்வருமாறு வரையறுக்கின்றது,

> "பொதுமக்கள் ஆர்வம் காட்டும் செய்திகள், வர்த்தக விளம்பரங்கள், இலக்கியத்தோடு தொடர்புடைய விடயங்கள் மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கி நாளாந்தம் அல்லது வாராந்தம் வெளியிடப்படும் அச்சிடப்பட்ட வெளியீடாகும்"

"பத்திரிகைகள் அச்சிடப்பட்ட வெளியீடாவதோடு அவை ஒன்று சேர்க்கப்பட்ட, இணைக் கப்படாத தாள்கள் அடங்கிய தொகுப்பாகும். அது நாளாந்தம் அல்லது வாராந்தம் எனும் வகையில் வெளியிடப்படலாம். இதில் செய்திகள், படங்கள், விசேட அங்கங்கள் மற்றும் வர்த்தக விளம்பரங்கள் என்பன உள்ளடக்கப்பட்டிருப்பதோடு இதற்கான விசேட பெயர் ஒன்றும் வழங்கப்படும். (Brown, L. (1993). The New Shoter Oxford English Dictionary Thumb Index Edition. Volume 1-A-M. London. Oxford University Press: p.1914)

- இச் சுருக்கமான வரைவிலக்கணத்தின் விளக்கம் பேராசிரியர் சுனந்த மகேந்திரவினால் தொடர்பாடல் அகராதியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

- "Newspaper - நாளாந்தம், வாராந்தம் அல்லது வாரங்களின் அடிப்படையில் செய்திகளை வழங்குவதற்காக, செய்திகளை வழங்கும் நோக்கத்தை அடிப்படையாகக்

DRAFT

கொண்டு முதலில் தொடங்கிய விசேட அச்சு ஆவணமாகும். எனினும், காலத்திற்கு ஏற்பப் பத்திரிகை என்பது தனித்துவமாகச் செய்திகளை மட்டும் வழங்குவதற்கான தனியான ஊடகமாக அல்லாமல் அதற்கும் மேலதிகமான பல்வேறுபட்ட அம்சங்களை உள்ளடக்கிய வெளியீடாக அறிமுகமாகியுள்ளது. பத்திரிகை தொடர்பில் ஆரம்பத்தில் வழங்கப்பட்ட வரைவிலக்கணங்கள் நவீன தொழினுட்பங்களை அடிப்படையாகக் கொண்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளன. நவீன நாளாந்தப் பத்திரிகை அல்லது வாராந்தப் பத்திரிகை ஒன்று பல்வேறு வகையான விசேட அம்சங்களை உள்ளடக்கி யுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச செய்திகளுக்கு அப்பால் புகைப்படங்கள், கேலிச்சித்திரங்கள், சித்திரங்கள், கட்டுரைகள், வர்த்தக விளம்பரங்கள், ஆசிரியர் தலையங்கங்கள், படைப்புக்கள் போன்றன அதில் உள்ளடங்கும். பத்திரிகைகளில் பல வகைகள் உண்டு. சாதாரண தகவல்களை வழங்கும் மற்றும் விசேட அம்சங்களை உள்ளடக்கிய பத்திரிகைகளைத் தவிர்த்து பல்வேறு விடயங்களோடு தொடர்புடைய விசேட பத்திரிகைகளும் தோற்றம் பெற்றுள்ளன. சிறுவர், பெண்கள், விளையாட்டு, விஞ்ஞானம், சினிமா போன்றன அவற்றுள் சிலவாகும்.'' (மகேந்திர ஏ.சி. (1997) தொடர்பாடல் அகராதி, கொழும்பு 10. ஏ.சி. கொடகே மற்றும் சகோதரர்கள். ப. 209.)

**புத்தகங்கள்**

- புத்தகம் என்பதற்குச் சுமங்கல அகராதியில் ''எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட நூல்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட அல்லது அச்சிடப்படாத அல்லது தாள்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட ஆவணம் புத்தகம் என ஹரிச்சந்திர விஜேதுங்கவின் மகா சிங்கள அகராதியில் 1163 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- நவீன வெகுசன ஊடக வரலாற்றின் ஆரம்பமாகப் புத்தகங்கள் காணப்படுகின்றன. இவை சமூகத்தில் மாற்றத்தைத் தோற்றுவித்தன. இங்கு குறிப்பிடக் கூடிய விடயம் யாதெனில், அக்காலத்தில் காணப்பட்ட தொழினுட்பச் சாதனங்களின் மூலம் கையால் எழுதியும் வாயால் கூறியுமே தகவல் பரிமாறப்பட்டது. எனினும், அச்சியந்திரத்தின் வருகையால் அவை அச்சிடப்பட்ட புத்தகங்களாக வெளிவந்தன.
- இதன் நீட்சியாக, அரசியல் மற்றும் சமயம் சார்பான கையேடுகள் மற்றும் Tracts (மத்திய யுகத்தில் பயன்படுத்தப்பட்டவை) ஆகியன அச்சிடப்பட்ட நூல்களாக வெளிவந்தன.
- இதன்போது முதன்முறையாக நீதி, அரச கட்டளை, அரச தகவல்கள் மற்றும் அரச சார்பான ஆவணங்கள் நூல்களாக அச்சிடப்பட்டன.
- புத்தகங்கள் சமூக மாற்றத்திற்குக் காரணமாயின.
- தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சியின் பயனாக இலத்திரனியல் பத்திரிகை (e - Newspaper) தோற்றம் பெற்றுள்ளது. இதன் மூலமாகக் கணினியைத் தளமாகக்

DRAFT

கொண்டு செய்திகள் வெளிவருவதோடு, இலத்திரனியல் செய்திகளைக் (e - Newspaper) கைத்தொலைபேசி மூலம் பெற்றுக் கொள்ளும் வசதியும் ஏற்பட்டுள்ளது.

- பத்திரிகையினை இணையத்தில் இணைத்ததால் பத்திரிகை வாசிக்கும் முறையும் மாற்றம் பெற்றுள்ளது.

**சஞ்சிகைகள்**

- சஞ்சிகை என்பது, வாராந்தம் அல்லது மாதாந்தம் வெளிவரும் எழுத்து மூல ஆக்கங்கள் அல்லது புகைப்படங்களைக் கொண்ட ஒரு தனி ஆவணம் என ஒக்ஸ்போட் அகராதி வரையறுக்கின்றது.
- சஞ்சிகை என்பதை யுனெஸ்கோ அமைப்புப் பின்வருமாறு விளக்குகிறது, "அன்றாட வாழ்விற்குத் தேவையான தகவல்கள் அடங்கிய, குறிக்கப்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வெளிவரும், ஒன்றிணைத்துக் கட்டப்பட்ட வெளியீடாகும்".
- சஞ்சிகை என்பது ஏதேனும் துறையினை மையப்படுத்தி அல்லது குறித்த பெறுநர்களை இலக்கு வைத்துக் குறிப்பிட்ட காலங்களில் வெளியிடப்படும் சிறு கட்டுரைகள் மற்றும் படக் குறிப்புகள் அடங்கிய வெளியீடாகும். வாராந்த வெளியீடுகளாக இது அறியப்படும். சஞ்சிகை வெளியீடானது - மாதாந்தம், இரு மாதங்களுக்கு ஒருமுறை, காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் என்ற வகையிலும் வெளியிடப்பட முடியும்.
- கலை, சமயம், விளையாட்டு, விவசாயம், விஞ்ஞானம், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், மனையியல், பண்பாடு மற்றும் கல்வி போன்ற தலைப்புகளில் சஞ்சிகை வெளியிடப்படுகின்றது.
- அச்சு ஊடகம் என்ற வகையில் பத்திரிகையோடு ஒப்பிடும்போது சஞ்சிகைகளில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சஞ்சிகைகளின் கட்டுரைகளை நீண்டகாலம் பாதுகாத்து வைத்துக்கொண்டு அறிவினைப் பெற்றுக்கொள்ள முடியும். நாளாந்த விடயங்கள் அவற்றில் உள்ளடக்கப்படமாட்டாது.

DRAFT

**வானொலி**

- வானொலி முதலாவது இலத்திரனியல் வெகுசன ஊடகமாகும். தொழினுட்ப வளர்ச்சியின் காரணமாக ஒலியை வெளிப்படுத்தும் ஊடகமாக வானொலி தோற்றம் பெற்றது. ஒரு இடத்தில் பிறப்பிக்கப்படும் ஒலியானது கம்பிகள் இல்லாது வேறொரு இடத்தில் மீளப் பிறப்பிக்கப்படும் செயற்பாடு இங்கு இடம்பெறுகிறது.
- வானொலி என்பது செவிப்புல ஊடகமாகும். இது குரலினை அடிப்படையாகக் கொண்டது. குரல் என்பதை மனிதக் குரல், சங்கீதம் மற்றும் புற ஒலிகள் என மூன்றாகப் பிரிக்கப்படலாம். இவ்வெல்லா ஒலிகளிலும் விசேடதன்மை ஒன்று காணப்படுகிறது.
- தொலைபேசி மற்றும் தந்தித் தொழினுட்ப வளர்ச்சியின் பயனாக வானொலி தோற்றம் பெற்றது.

- வானொலி ஒலிபரப்பு முறையாக ஆரம்பித்தது 1914-15 காலப்பகுதிகளிலாகும். முதலாம் உலகப் போரின்போது, வானொலி இராணுவத் தகவல் பரிமாற்றத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது. வானொலி கம்பியில்லாத் தொழினுட்பம் என்பதை வயர்லஸ் என்று குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் மிகத் தொலைவிலுள்ள பிரதேசங்களுக்கும் தகவல் அனுப்பலாம்.
- வானொலி பிற்காலத்தில் வீட்டு ஊடகமாக மாற்றம் பெற்றதோடு, பண்பாட்டு மாற்றத்திற்கும் காரணமாகியது. வானொலி மூலம் தகவல் வழங்கல் மற்றும் மகிழ்வூட்டல் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

**வானொலியின் அடிப்படைப் பண்புகள்**

- விரைவானது.
- முழு வலயத்தையும் உள்ளடக்கும்.
- ஒரு வழித் தொடர்பாடல் காணப்படும்.
- எளிமையானது.
- ஒரே தடவையிலேயே தகவல்களை விளங்கிக் கொள்ளக் கூடியதாக முன்வைக்க முடியும்.
- ஒவ்வொரு பெறுநர் குழுக்களையும் இலக்கு வைத்து நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடியும்
- சர்வதேச, தேசிய, பிரதேசம் சார்ந்த மக்கள் வானொலி வலையமைப்புகளை உருவாக்கிக் கொள்ள முடியும்.
- கேட்டல் ஊடகம் என்பதால் நேயரகள் தம் மனங்களில் மனக் காட்சி ஒன்றை உருவாக்கிக் கொள்வர்.
- தொலைக்காட்சியுடன் ஒப்பிடும்போது மிகவும் செலவு குறைந்த ஊடகமாகும்.

DRAFT

**தொலைக்காட்சி**

- தொலைக்காட்சி கட்புல - செவிப்புல ஊடகமாகும். கட்புல - செவிப்புல இயல்புகள் தொலைக்காட்சி பிரபலமான ஊடகமாக விளங்கவும் மக்கள் மனங்களில் எளிதில் மாற்றத்தை ஏற்படுத்தவும் காரணமாகின.
- தொலைக்காட்சி உலகின் மிகவும் பிரபலமான வெகுசன ஊடகமாகும். உலகம் முழுவதும் சமய, பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுப் போக்குகளை உருவாக்குவதில் இவ்வூடகம் நீண்ட காலமாகச் செல்வாக்கு செலுத்துகிறது.
- கல்வி ஊடகமாகத் தோற்றம் பெற்ற இவ் ஊடகத்தால் உலகில் ஜனநாயக சமூகம் வலுப்பெற்றது.
- கல்வி வழங்கல், தகவல் வழங்கல், மகிழ்வூட்டல அல்லது பொழுதுபோக்களித்தல், தூண்டற் செயற்பாடு ஆகியன தொலைக்காட்சி மூலம் நிகழ்கின்றன.

- தொலைக்காட்சி ஊடகம் அன்றாட வாழ்வில் தாக்கம் செலுத்துவதோடு, மனப்பாங்கு, அறிவு மற்றும் நடத்தையிலும் தாக்கம் செலுத்துகிறது.
- சமகாலத்தில், தொலைக்காட்சி ஊடகமானது, அரசியல் மற்றும் பொருளாதாரக் காரணங்களுக்காக அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

**தொலைக்காட்சியின் அடிப்படைப் பண்புகள்**

- கட்புல - செவிப்புல ஊடகமாகும்.
- பல்வேறு உள்ளடக்கங்களையும் விசித்திரமான மாதிரிகளையும் கொண்டது.
- தனிப்பட்ட, வீட்டு மற்றும் நெருக்கமான ஊடகம்.
- கவர்ச்சியான ஊடகம்.
- நபரின் முழு அவதானத்தையும் பெறக்கூடிய ஊடகம்.
- சிக்கலான தொழினுட்பத்துடன் கூடியது.
- முறையான, நிறுவனம்சார் நிறுவனக் கட்டமைப்புடையது.
- சுதேசிய மற்றும் தேசியப் பண்புகளைக் கொண்டது.

**சினிமா**


- ஆரம்ப காலத்தில் அதாவது முதலாம் உலகப் போர் இடம்பெற்ற காலப் பகுதியில் சினிமா யுத்த தகவல் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. எனினும், தொலைக் காட்சியின் வளர்ச்சியோடு சினிமா ஓர் கலை ஊடகமாகப் பரிணாமம் பெற்றது.

**வெகுசனத் தொடர்பாடல் வீச்சின் மைல்கல்கள்**

- மனிதன் மொழியை உருவாக்கியதிலிருந்து வெகுசன ஊடகங்களின் தோற்றம் வரை அதன் வீச்சு தொடர்பில் ஆசிரியருக்குப் போதிய விளக்கம் காணப்படவேண்டும்.
- இவ் அறிவு பாட அலகுகளை விளக்கும்போது ஆசிரியருக்குத் தேவைப்படும். கால அட்டவணையைத் தயாரித்துக் கொள்வதன் மூலம் பிரதான நிகழ்வுகள் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறலாம்.
- வெகுசனத் தொடர்பாடல் வீச்சின் மைற்கல்கள் பற்றிய அட்டவணையை உள்நாடு, வெளி நாடு என்று தனித்தனியாக அல்லது ஒன்றாகத் தயாரிக்கலாம். வசனங்கள் போலவே புகைப்படங்களையும் பயன்படுத்தலாம். இதன்போது மாணவரது பங்கு பற்றலைத் தூண்டலாம்.

DRAFT

**கால அட்டவணை (Timeline)**




DRA

**வெகுசனத் தொடர்பாடல் மாதிரிகள்**

- இதன்போது HUB மாதிரியைப் பரீட்சிப்பதன் மூலம் வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையினை விளங்கிக் கொள்ள முடியும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஊடகம் என்பதை அறிமுகம் செய்க.

2. ஊடகங்களின் பணிகளை உதாரணங்களுடன் விவரிக்குக.

3. "ஊடகங்களின் வளர்ச்சியானது சமூகத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமன்றி வீழ்ச்சிக்கும் சீரழிவுக்கும் காரணமாகியுள்ளது"

4. நீர் விரும்பிய ஊடகமொன்றுக்கு ஊடகச் செய்தி ஒன்றைத் தயாரித்து முன்வைக்குக.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி மட்டம்** | : 4.3 | புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகங்களை இனங்கண்டு அவற்றின் சமூகச் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார். |
| **பாடவேளைகள்** | : 10 | |
| **கற்றல் பேறுகள்** | : | • புதிய ஊடகம் என்றால் என்ன என இனங்கண்டு முன்வைப்பார்.<br>• புதிய ஊடகத்தின் செயற்பாடுகளைத் தெளிவு படுத்துவார்.<br>• சமூக ஊடகம் என்றால் என்ன என விபரிப்பார்.<br>• சமூக ஊடகத்தின் செயற்பாடுகளைத் தெளிவு படுத்துவார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**புதிய ஊடகங்களை அறிந்துகொள்ளல்**

- புதிய ஊடகம் என்பது - எண்சார் தொழினுட்பத்துடன் தகவல்களை எண்ணிமப்படுத்தல், ஒலி, சொல், புள்ளிவிபரம், கிரா∴பிக்ஸ், சித்திரம், வரைபடங்கள், காணொளிகள் போன்றவற்றைச் சேகரித்து, மிக இலகுவாகப் பிரதிசெய்து, குறைந்த செலவில் மிகவும் வேகமாகப் பகிரக்கூடிய ஊடகமாகும். இவ்வாறான புள்ளிவிபரம், ஓசை, ஒலி போன்ற தகவல்களைப் பூச்சியத்திற்கும் ஒன்றிற்கும் இடையில் எண்ணிமத் தொழினுட்ப முறையில் சேகரித்துக் காட்ட முடியும்.
- புதிய ஊடகங்கள் தொலைபேசி மற்றும் இணையத்தளங்கள் ஊடாகத் தோற்றம் பெற்றவையாகும்.
- தொலைபேசி பிரதானமாகக் குரல் மற்றும் குறியீடுகளில் தங்கியுள்ளது. கம்பியிடைத் தொலைபேசிகள் தற்போது கம்பியில்லாத் தொலைபேசிகளாக மாறியுள்ளதோடு இது எண்சார் அல்லது திறன் தொலைபேசித் தொழினுட்பம் வரை விருத்தியடைந் துள்ளது.
- வலையமைப்பாக்கப்பட்ட தகவல்களை வேகமாகப் பரிமாறுவதாலேயே இணையத் தளத்தினைப் புதிய ஊடகமாகக் கருத முடிகின்றது. 1960களில் கணினியை மையப் படுத்திய விசேட ஆய்வுகளின் பிரகாரம் விஞ்ஞானத்தோடு தொடர்புடைய தகவல்களை ஒழுங்கமைத்தல் மற்றும் இராணுவத் துறைகளில் தேவையான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் எடுத்த முயற்சியின் பெறுபேறாக இது தோற்றம் பெற்றது.

DRAFT

- புதிய ஊடகங்கள் தோற்றம் பெறுவதில் பொருளாதார, சமூக, அரசியல், தொழினுட்பம் போன்ற துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் தாக்கம் செலுத்தியுள்ளன. இதில் தகவல் தொழினுட்பத்தின் நீட்சி முக்கியமானதாகும்.
- டீம் பேர்னர்ஸ் லீ இனால் உலகம் முழுவதுமான இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்ட தோடு புதிய ஊடகத்தின் வளர்ச்சி துரிதம் பெற்றது.
- தொழினுட்ப வளர்ச்சியின் பேறான வெவ்வேறு ஊடகங்கள் ஒன்றிணைதல் மற்றும் நெருக்கமாதல் ஆகியன புதிய ஊடகங்களின் பரவலுக்குக் காரணமாகின.

**புதிய ஊடகத்தின் பண்புகள்**

- **புதிய ஊடகங்களில் காணக்கிடைக்கும் பண்புகள் சில,**

| | | | |
|---|---|---|---|
| * | எண்ணிமப்படுத்தல் | - | Digitalisation |
| * | வலையமைப்பாதல் | - | Networking |
| * | இடைத்தொடர்பாக்கம் | - | Interactiveness |
| * | மீயுரை | - | Hypertext |
| * | தானியங்கி | - | Automation |
| * | தரவுத்தளம் | - | Database |
| * | அதிவேகச் செய்தியனுப்புகை | - | Fastest Messaging |

* **எண்ணிமப்படுத்தல்** (Digitalisation)

எண்ணிமப்படுத்தல் என்பது எண்ணிமத் தொழினுட்பத்தின் அம்சமாகும். எமது அன்றாட வாழ்க்கைச் செயற்பாடுகளோடு இத் தொழினுட்பம் இணைந்துள்ளது. தொழினுட்பத்தோடு இணைந்த இவ் உலகின் அபிவிருத்தி எண்ணிமப்படுத்தல் மூலம் நிறுவப்படுகிறது. இலகுவாகப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தகவல்கள் கணினிமயப்படுத்தப்படல் இதன் மூலம் நிகழ்கிறது.

* **வலையமைப்பாதல்** (Networking)

தகவல் வலையமைப்புக்கள் ஒன்றோடொன்று தொடர்புறுதல் வலையமைப் பாகும். உள்ளூர் வலையமைப்பு மற்றும் பரந்த வலையமைப்பு ஆகியன இதன் பகுதிகளாகும். பரந்த வலையமைப்பாக உலகம் முழுவதுமான இணையத்தளத்தைக் குறிப்பிடலாம்.

* **இடைத்தொடர்பாக்கம்** (Interactiveness)

இருவழித் தொடர்பாடல் கணினி அல்லது தொலைக்காட்சியை அடிப்படையாகக் கொண்டு செயற்படும். தகவல் பெற்றுக்கொள்வதற்கான அறிவுரை வழங்கல், துரிதமாகத் தகவல்களைப் பரப்புதல் மற்றும் பதிலளித்தல் ஆகியவற்றின் போதான மனித இடைத்தொடர்பு இடைத்தொடர்பாக்கமாகும்.

DRAFT

* **மீயுரை** (Hypertext)

  இலத்திரனியல் இணைப்புக்களைப் பயன்படுத்தி ஒரு தகவல் மூலமாக இன்னொரு தகவலை அடைதல் மீயுரையாகும். இங்கு தகவல்கள் ஒன்றோடொன்று இணைந்திருத்தல் நன்மை தரக் கூடியதொன்றாகும். உதாரணமாக, ஏதேனும் ஒரு தகவலுக்கூடாக அதனோடிணைந்த ஏனைய தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

* **தானியங்கி** (Automation)

  தானியங்கி எனப்படுவது தொழினுட்பத்தைப் பயன்படுத்தித் தகவல் பரிமாற்றும் தானியங்கிச் செயற்பாடாகும். முன்னறிவித்தலின் பிரகாரம் மனிதர்களுக்குத் தகவல் வழங்கும் செயன்முறை எனவும் இது அறியப்படும்.

* **தரவுத்தளம்** (Database)

  தகவல் களஞ்சியம். கணினிப் பொறிமுறைக்கிணங்கப் பெற்றுக்கொள்ள இலகுவான முறையில் தகவலைக் களஞ்சியப்படுத்தல். தகவலைத் தேடற் பொறிகள் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பத்திரிகை ஒன்றின் இணையத் தளத்தில் அதன் தகவல்கள் சேமிப்பில் காணப்படும்.

* **அதிவேகச் செய்தியனுப்புகை** (Fastest Messaging)

  புதிய ஊடகம் மிகவும் வேகமாகத் தகவல் தொடர்பாடல் செய்யும். தகவலைக் குறியீடுகளாகச் சேமித்து அவற்றைத் தேவையான பொழுதுகளில் பெற்றுக் கொள்ளவும் பரந்த பெறுநர்களிடையே வேகமாகப் பகிரவும் இயலுமான தன்மை.

DRAFT

- புதிய ஊடகங்களைப் பயன்படுத்தும்போது பண்பாட்டுக் கட்டமைப்பு மற்றும் வெளி ஆகியவற்றை வெற்றிகொள்ள முடியும். நவீன ஊடகங்களில் காணக்கிடைக்கும் தகவலாக்கும் வேகத்தினை விடவும் வேகமாகத் தகவல்களை புதிய ஊடகங்கள் மூலம் பரிமாறிக்கொள்ள முடியும். இதன்போது உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்களுக்கிடையிலான தூரத்தன்மைமையைக் குறைத்தல் அல்லது நெருக்கமாதல் நிகழ்கிறது.

**சமூக ஊடகம்:**

- புதிய ஊடகங்களின் முன்னேற்றகரமான சந்தர்ப்பமாகச் சமூக ஊடகங்களை அடையாளப்படுத்த முடியும். இவை புதிய ஊடகங்களின் ஊடாகவே மேலெழுந்தவையாகும். திறன்பேசி / திறன்தொலைபேசி மற்றும் இணையத்தளம் என்பன இதன் முக்கிய அங்கங்களாகும்.

- இதனூடாகப் புதிய ஊடக எண்ணக்கருக்கள் கட்டியெழுப்பட்டுள்ளதோடு அதன் விசேடமான போக்கொன்றாகச் சமூக ஊடகங்களை (Social Media) இனங் காணலாம்.
- சமூக ஊடகங்களின் சிறப்பியல்பாவது, படைப்பாக்கத்தன்மை, உள்ளடக்கப் பரிமாற்றம், மற்றும் பங்குபற்றல் ஆகியன. இவை சமூக ஊடக வலையமைப்புக் களில் நிகழும்.
- தனிநபர்கள் அல்லது மனிதக் குழுக்களுக்கிடையில் பிரிக்க முடியாத தொடர்பினை சமூக வலையமைப்புகள் கட்டமைத்துள்ளதோடு
- அவற்றைப் பயன்படுத்துபவர்கள் மேசைக் கணினி, மடிக்கணினி, திறன்பேசி / திறன்தொலைபேசி (ஸ்மார்ட் தொலைபேசி), இணையத் தொழினுட்பத்தின் ஊடாகச் சமூக ஊடகங்களின் சேவைகளினுள் நுழைகின்றனர்.
- தனிப்பட்ட தகவல்களைப் பரப்ப இயலுமாயிருப்பது இதன் பிரபலத்திற்கான காரணமாகும்.
- சமூக ஊடகங்கள் தொடர்பாடல் ஊடகங்களோடு ஒன்றிணைந்துள்ளன. இதன் மூலம் உள்ளகச் செயற்பாடு, ஒருமித்தத்தன்மை, உள்ளடக்கப் பகிர்வு ஆகியன நிகழ்கின்றன.

**சமூக ஊடகங்களின் வகைகளும் அதன் செயற்பாடுகளும்**

- பகிர்ந்து கொள்வதற்காகக் குறுஞ்செய்தி அனுப்புதல், நிழற்படங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் பெற்றுக்கொள்ளல், அறிவித்தல் மற்றும் காணொளியின் மூலம் கருத்துக்களைத் தெரிவிக்க முடிவதன் மூலமும் அதன் பணிகள் கட்டியெழுப்பப் பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடியும். இவ்வாறு கட்டியெழுப்பப்பட்டுள்ள செயற்பாடுகளின் ஊடாகப் பல்வேறு சமூக ஊடக வலையமைப்புகள் தோற்றம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

    - (Facebook) **முகநூல்**

    இது பிரசித்தி பெற்ற, சுதந்திர சமூக வலையமைப்பாகும். பயநர்களுக்குப் படங்கள் மற்றும் காணொளிகளைத் தரவேற்றுவதற்கும், தகவல்களை அனுப்புவதற்கும் மற்றும் ஏனையவர்களுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்பு வதற்கும் முடிந்துள்ளது. இது உலகின் மிகப்பெரிய சமூக வலையமைப்பாகும். இதன்மூலம் வியாபார, வர்த்தக நாமங்களையும் மேன்மையடையச் செய்ய முடியும்.

DRAFT

- Twitter **ருவிட்டர்**

.

குறுஞ் செய்திகளைப் பரிமாறக்கூடிய சமூக வலைத்தளமாகும். 140 சொற்களின் மூலம் எமது தகவல்களை உலகம் முழுவதும் ருவிட்டர் ஊடாகப் பகிர முடியும். எல்லாப் பிரச்சித்தி பெற்ற நிறுவனங்களும், பிரசித்தி பெற்ற நபர்களும் உத்தியோகபூர்வ ருவிட்டர் கணக்கொன்றைப் பேணிச் செல்கின்றனர்.

- Linkedin **லிங்க்டின்**

வர்த்தக சமூகத்திற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இணையத்தள மாகும். இந்த இணையத்தளத்தின் அடிப்படை நோக்கமாவது, பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்குத் தமது தொழில்சார் அறிவின் மூலம் நம்பிக்கையுடைய நபர்களுக்கிடையில் வலையமைப்பினைக் கட்டியெழுப்பு வதும் மற்றும் ஆவணமாக்கலுக்கு வாய்ப்பளிப்பதுமாகும்.

- Pinterest **பின்ட்ரஸ்ட்**

DRAFT

இணையத்தளத்தினூடாகத் தேடிக்கொள்கின்ற புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ளல் மற்றும் வகைப்படுத்தலுக்கான வழிகாட்டுதலாகும். இதன் போது காட்சிப்பார்வைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. படம் ஒன்றின் மேல் அழுத்துவதன் மூலம் மூலாதாரத்திற்குச் செல்லமுடியும். நீங்கள் சப்பாத்துச் சோடி ஒன்றைப் பற்றிய தகவலின் மேல் அழுத்தும் போது அது விலை கொடுத்து வாங்கப்பட்ட இடம் தெளிவுபடுத்தப்படும். இந்த சமூக வலையமைப்பினைப் பயன்படுத்துவோரில் 50 வீதத்திற்கும் மேலானவர்கள் பெண்களே. இதன்படி பெண்களின் விருப்புக்குரிய சமூக வலையமைப்பாக இதனை குறிப்பிடமுடியும்.

- Instagram **இன்ஸ்டகிராம்**

படங்கள் மற்றும் காணொளிகளைப் பகிர்ந்து கொள்வதற்கான சமூக ஊடகமாகும். முகநூல், ருவிட்டர் போன்ற பிரசித்தி பெற்ற சமூக வலைத்தளங் களுக்கு அவற்றை அனுப்ப முடியும். இது நிழற்படப் பகிர்வுக்காக பயன்படுத்தக்கூடியது என்பதோடு இதனை 95 வீதத்திற்கும் மேலான முகநூல் பாவனையாளர்கள் பயன்படுத்துவது விசேடமாகும்.

- **ஸ்கைப்**

மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் உரிமையின் கீழ் செயற்படும் இதனூடாக குரல் அழைப்புகள், காணொளி அழைப்புகள் மற்றும் குழு மாநாடுகளை நடாத்த முடியும்.

- **வைபர்**

30 இற்கும் மேற்பட்ட மொழிகளில் பயன்படுத்தக்கூடிய இப் பன்மொழி சார்ந்த சமூக வலையமைப்பின் ஊடாகக் குறுஞ்செய்திகள், குரல் அழைப்புகள், காணொளி அழைப்புகள் மற்றும் நிழற்படங்களை பகிர்ந்துகொள்ள முடியும். அத்தோடு வைபர் வெளி எனும் விசேட அம்சத்தின் ஊடாகப் பாவனையாளர் அல்லாத நபர்களுடனும் தொடர்பு கொள்ள முடியும்.

DRAFT

இவற்றிற்கும் மேலாக -

Whatsapp

WeChat

Tumblr

Baidu Tieba

Snap Chat

Reddit

QQ

Qzone

Google+

Sinaweibo

Vkontakte

போன்ற உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற சமூக வலைத்தளங்கள் பலவும் செயற்படுகின்றன.

**சமூக ஊடகங்களின் சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்கள்**

**சாதகமான தாக்கங்கள்**

- உலகம் முழுவதும் சமூக ஊடகங்கள் வேகமாக வளர்ந்து வருகின்றன. சிறுவர்கள், இளைஞர்களைப் போன்றே பெரியவர்களுக்கும் இந்த சமூக ஊடகங்கள் உள்ளகச் செயற்பாடுகளின்போது தாக்கம் செலுத்துகின்றன. இவை நபர்களுக்கும் சமூகத்திற்கும் பல்வேறு வகையான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றன.
- பயநர்களாலேயே வடிவமைத்துக் கொள்ள முடிதல்.
- பெறுநருக்கு விருப்பமான முறையில் பயன்படுத்திக் கொள்ள முடிதல்.
- விரைவானது.
- பயனுள்ள வகையில் மாற்றியமைப்பதற்கும், தேவையற்ற நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் இதன்மூலம் வாய்ப்புள்ளது. இதன்போது சமூக ஊடகங்களின் நேர்த் தாக்கங்கள் சமூகமயமாக்கலில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தைக் குறிப்பிடமுடியும்.
- உயிர்ப்பான பெறுநரைக் கொண்டிருத்தல்.
- அறிவினைப் பரிமாற்றிக்கொள்ள முடிதல்.
- ஒரு ஊடகத்திலிருந்து இன்னொரு ஊடத்திற்குச் செல்ல முடிதல்.
- உள்ளடக்கங்களைப் படைப்பாக்கம் செய்துகொள்ள முடிதல்.
- மாணவர்களுக்கு கடதாசிகளில் எழுதுவதிலும் பார்க்க வலைப்பூக்களைப் பயன்படுத்த முடியும். ஆசிரியர்களுக்கு அறிவு, திறன்களை விருத்தி செய்து கொள்ள முடிகின்றமை. தொலைநிலைக் கற்றல் செயன்முறையின் போது பயன்படுத்திக் கொள்ளமுடிதல்.
- வியாபாரச் செயற்பாடுகளில் பயன்படுத்த முடிதல்.
- பொருட்கள் மற்றும் சேவைகளை அறிமுகம் செய்வதற்கு இலகுவானதும், எளிமையானதும், செலவு குறைந்ததுமான முறையாகும். தமது வர்த்தக நாமங்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் பயன்படுத்திக்கொள்ள முடியும்.
- நபர்களின் படைப்பாற்றலைப் பகிர்ந்து கொள்ள முடிதல்.
- முரண்பாடுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த முடிதல்.

DRAFT

- விரைவாகவும் குறைந்த செலவிலும் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள முடிதல்.
- தேசிய சர்வதேச மட்டத்திலான விவாதங்கள், கலந்துரையாடல் திறன்களை விருத்தி செய்துகொள்ள முடிதல்.


**பாதகமான தாக்கங்கள்**

மேற்கூறியவற்றுக்கு அதிகமாகச் சமூக ஊடகங்கள் ஊடாக எதிர்மறையான தாக்கங்களும் ஏற்படுகின்றன.

- மனவழுத்தம், அதைரியப்படுதல், தனிமைப்படுதல், தன்னுயிர் மாய்த்தல் போன்ற ஆழமான உள - சமூகத் தாக்கங்களை ஏற்படுத்தல்.
- அங்கத்தவர்களின் தனிப்பட்ட தகவல்கள் சமூக ஊடக வலையமைப்புக்கள் மூலம் வேறு நபர்களுக்கு வழங்கப்படல்.
- தனிமை (Privacy) அல்லது அகவுரிமை தொடர்பான பிரச்சனைகள் தோற்றம் பெறல். இடங்கள் வெளிப்படுத்தப்படல் மற்றும் அனுமதி அற்ற வகையில் பயனாளர்களின் கணக்குகளில் உள்நுழைதல்.
- இணையவழி (சைபர்) தாக்குதல்.
- வன்முறைச் செயற்பாடுகளுக்குத் தூண்டப்படுதல்.
- தவறான தகவல் முன்வைத்தல்.
- போலி / பொய்க் கணக்குகளை உருவாக்குதல்.

**சமூக ஊடகங்களின் கடமைப் பொறுப்புகள்**

1 தகவல் வழங்குதல் /




DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. புதிய ஊடகங்கள் என்பதை அறிமுகம் செய்க.

2. புதிய ஊடகங்களின் கடமைப் பொறுப்புகளை உதாரணத்துடன் விளக்குக.

3. சமூக ஊடகங்கள் என்றால் என்ன என்பதையும் அதன் கடமைப் பொறுப்புகளையும் தெளிவுபடுத்துக.

4. ''சமகால சமூக ஊடகங்களின் செயற்பாடுகள் காரணமாகப் பல்வேறு பிரச்சனைகள் தோன்றியுள்ளன'' ஆராய்க.

5. புதிய ஊடகங்கள் மூலம் ஊடகத் தகவல் ஒன்றைத் தயாரிக்க.

DRAFT

தேர்ச்சி மட்டம் : 4.4 புதிய ஊடகம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன் படுத்தும் தேர்ச்சிகளை வெளிப்படுத்துவார்.

பாடவேளைகள் : 12

கற்றற் பேறுகள் :
- புதிய ஊடக ஆற்றல் மற்றும் தேர்ச்சியைப் பயன்படுத்தித் தகவல் தயாரித்து முன்வைப்பார்.
- சமூக ஊடக ஆற்றல் மற்றும் தேர்ச்சியைப் பயன் படுத்தித் தகவல் தயாரித்து முன்வைப்பார்.

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்கு

- புதிய ஊடகங்கள் தொடர்பான தகவல்களைப் பரிமாறும்போது அவற்றை நான்கு பிரிவுகளாக வகைப்படுத்த முடியும். அது தொடர்பான தெளிவு புதிய ஊடக திறன்கள் மற்றும் இயலுமைகள் பற்றிய விருத்திக்கு முக்கியமானதாகும்.
- தேடற் பொறி ஒருவரிடத்திலிருந்து இன்னொருவர் வரை நிகழும் தொடர்பாடல் - மின்னஞ்சல்
- பலரிடமிருந்து பலருக்கு மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் - வலைப்பூக்கள்
- ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கும், ஒருவரிடமிருந்து பலருக்கும் மேற்கொள்ளப் படும் தொடர்பாடல் - இணையத்தளம் ஊடான கருத்தாடல் பலரிடமிருந்து ஒருவருக்கு அல்லது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு அல்லது ஒருவரிடமிருந்து பலருக்கு மேற்கொள்ளப்படும் தொடர்பாடல்.
- புதிய ஊடக ஆற்றல், புதிய ஊடகத் தகவல்களை உருவாக்குவதற்கும் மற்றும் பயன்படுத்துவதற்கும் முக்கியமானது.
- புதிய ஊடகப் பயன்பாட்டின்போது காணப்படவேண்டிய தேர்ச்சிகள்
    1. காட்சி அல்லது படமொன்றைப் பதிவிறக்கம் செய்வது எவ்வாறு?
    2. ஒரு கட்டுரையில் இணைப்பு ஒன்றை இடுவது எவ்வாறு?
    3. காட்சி அல்லது படமொன்றைச் செம்மையாக்கம் செய்வது மற்றும் இணையத் தளத்தில் அதனைப் பதிவேற்றுவது எவ்வாறு?
    4. இணையத்தளத்தில் காணொளி ஒன்றுக்காகக் குறியீடு ஒன்றை வழங்கி, பின்னர்

DRAFT

அதனை மீளவடிவமைப்பது எவ்வாறு?

5. அத்தோடு கருத்தாடல்களுடன் தொடர்புடைய இணைப்புகளைக் கண்டுபிடித்து அவற்றை ஒன்றிணைப்புச் செய்வது எவ்வாறு? போன்ற தெளிவுபடுத்தல்கள்

- சமூக ஊடகங்களின் திறன்கள் மற்றும் இயலுமைகளைப் பயன்படுத்தும் இயலுமையானது, ஊடகத் தகவல் ஒன்றை உருவாக்கும்போதும் அதனைப் பயன்படுத்தும்போதும் முக்கியமானது.
- ஆவணங்கள் - பெரும்பாலான சமூக ஊடகங்கள் பல்வேறு வர்ணங்களை உள்ளடக்கி இருப்பதோடு பல வடிவங்களையும் உள்ளடக்கியுள்ளது. இதன் கருத்து சமூக ஊடகங்களில் அனுப்பப்படும் ஆக்கங்கள் சிறப்பாக அமைவதற்கு வர்ணங்களைப் பயன்படுத்தித் தெளிவான மற்றும் கவர்ச்சிகரமான தகவல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதாகும். இதன்போது மொழியினைப் பயன்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.
- படைப்புகள், நேரடிக் காணொளி உரையாடல்கள், வாடிக்கையாளர் சேவை மற்றும் தமது கருத்துக்களைத் தெரிவித்துத் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தல் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. மின்னஞ்சல் கணக்கொன்றினைத் தயாரிக்க. அதனூடாகத் தகவலொன்றைப் பரிமாற ஆவன செய்க.

2. ஆசிரியரின் உதவியைப் பெற்றுக் கொண்டு ஊடக சமூகங்களுக்கான வலைப்த்தளம் ஒன்றினை உருவாக்குக.

3. தேடற் பொறியின் உதவியுடன் வெகுசன ஊடகத்துடன் தொடர்புடைய முக்கியமான தகவல் ஒன்றை மின்னஞ்சல் கணக்கின் ஊடாக ஆசிரியருக்கு அனுப்புக.

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| வெகுசன ஊடகம் | - | Mass Media |
| புதிய ஊடகம் | - | New Media |
| சமூக ஊடகம் | - | Social Media |
| பாரம்பரியம் ஊடகம் | - | Traditional Media |

**உசாத்துணைகள்:**


1. Brown, L. The New Shoter Oxford English Dictionary Thumb Index Edition. Volum 1- A – M., Oxford University Press: London, 1993.

2. DeFleur and Dennis, Understanding Mass Communication, Houghton Miffin Company, Boston, USA, 199.

3. Eldon Ray Hiebert & Others. Mass Media: Newyork, 1987.

4. Joshep R. Dominic, Dynamics of Mass Communication, 2010


DRAFT

## 5. பண்பாட்டு விளக்கம், ஊடகத்தின் இயல்பு மற்றும் அதன் தாக்கம்

| | | |
|---|---|---|
| தேர்ச்சி | : 5.0 | பண்பாடு என்பதன் விளக்கத்தைப் பெற்று, ஊடகச் செயற்பாடுகளால் பண்பாட்டில் ஏற்படும் மாற்றம் மற்றும் தாக்கம் பற்றிய அறிவுடன் விமர்சனரீதியில் செயற் படுவார். |
| தேர்ச்சி மட்டம் | : 5.1 | பண்பாடு, அதன் இயல்புகள் மற்றும் விசேட அம்சங்கள் என்பவற்றை விளக்குவர். |
| பாடவேளைகள் | : 08 | |
| கற்றற் பேறுகள் | : | • பண்பாடு என்றால் என்ன எனத் தெளிவுபடுத்துவார்.<br>• பண்பாட்டின் இயல்புகள் மற்றும் விசேட அம்சங்கள் பற்றி விபரிப்பார். |

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அறிமுகம்**

- பண்பாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் மானுடத் தொடர்புகளினூடே நடைபெற்றுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். ஏனைய விலங்குகளில் இருந்து மனிதனைப் பிரித்தறியும் பிரதான சாதனம் பண்பாடாகும்.
- பண்பாடு என்பது இயற்கையின் திரிபாகும். பண்பாடு அதன் வளர்ச்சியின்போது இயற்கை நியதிகளுக்குக் கட்டுப்படாது சமூகத்தோடு தொடர்புடைய நியதிகளுக்கு ஏற்பவே செயற்படும். மனிதன் தனது சமூக மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையினை அதற்கேற்பவே ஒழுங்கமைத்துக்கொள்வான். மனிதனின் அவதானத்திற்கும் செயற்பாடு களுக்கும் கீழ்ப்படிந்து கட்டியெழுப்பப்படுவதும் உருவாக்கப்படுவதுமான அனைத்துப் பெறுதிகளும் பண்பாடு எனக் கருதப்படும்.

DRAFT

- பண்பாடானது மனிதனால் மனிதனின் விருப்பு வெறுப்புக்கள் மற்றும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் நடைபெறும் தொடர்ச்சியான செயற்பாடாகும். ஆரம்பத்தில் Culture எனும் சொல் இலத்தீன் மொழியில் இருந்து தோற்றம் பெற்றதோடு அது Cultus எனும் சொல்லில் இருந்து பிரிந்து வந்ததாகும். பண்பாடு எனும் சொல்லின் அடிப்படைக் கருத்து - யாதேனும் ஒன்றைப் பயிரிடுதல், ஒழுங்கமைத்தல், வளர்த்தல் என்பதாகிறது.
- பண்பாடு என்னும் பதமானது விவசாயத்துறையில் (Agriculture) மார்கஸ் போர்சியஸ் கேடோ (Marcus Porcius Cato– 234 - 149) என்பவரால் முதன்முதலில் பயன்படுத்தப் பட்டது. அதன்பின்னர், உரோம மக்கள் இச்சொல்லை ஒரு அடைமொழியாகப் பயன்படுத்தியதோடு, மொழிப் பண்பாடு, நடத்தைப் பண்பாடு என ஆரம்பித்து மனிதப் பண்பாடு வரை அது நீண்டது. அதேபோல் உரோமப் பேச்சாளரும், தத்துவஞானியும், ஆட்சியாளருமான மார்கஸ் டூலீயஸ் சீசர் (Marcus Tullius Cicero 106 – 43) என்பவரால் மானுட உணர்வுகளோடு தொடர்புடைய வகையில் பண்பாடு என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அவர் உள்ளுணர்வு மற்றும் அறிவின் பண்பாடு எனத் தத்துவத்தைக் கருதியதோடு, மனிதனின் நுண்ணறிவு மற்றும் உணர்வினை முழுமை அடையச் செய்யும் ஆற்றல் தத்துவத்துக்கு உண்டு என எடுத்துக்காட்டினார்.
- பண்பாடு என்ற சொல் முதன்முறையாக எண்ணக்கருவாகப் பயன்படுத்தப்பட்டது 17ஆம் நூற்றாண்டில் ஆகும். சாமுவேல் பூபென்டோப் என்ற ஜேர்மன் நாட்டுச் சட்டத்தரணி, பண்பாடு மனிதனின் செயற்கையான நடவடிக்கைகளின் விளைவு என விளக்கமளித்தார்.
- பண்பாடு என்பதற்குப் பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டன.
- ஊரடவரசந எனும் சொல்லை சமூக மற்றும் மானிடவியலில் முதன்முதலில் பயன்படுத்தியவர் இ.பி. ரெய்லர் (E.B. Tylor) ஆவார். அவர் 1871இல் எழுதிய "ஆதிப் பண்பாடு" (Primitive Culture) எனும் நூலில் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.
- ரெய்லரின் கருத்துப்படி பண்பாடு என்பது, "அறிவு, பழக்கவழக்கங்கள், கலைகள், சட்டம், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகப்பிராணி என்ற வகையில் ஏனைய ஏதேனும் முறைகளால் மனிதன் பெற்றுக்கொண்டுள்ள பழக்கங்கள் மற்றும் ஆற்றல்கள் அடங்கிய விரிவான அம்சமாகும்".
- பி.மலினோவ்ஸ்கி (B. Malinowski) 1944 இல் வெளியிட்ட பண்பாட்டின் விஞ்ஞான ரீதியான கோட்பாடு (Scientific Theory of Culture) எனும் நூலில் பண்பாடு பற்றிப் பின்வருமாறு விவரித்துள்ளார்.
- கருவிகள், நுகர்வுப் பொருட்கள், பல்வேறு சமூகங்களின் கட்டமைப்பு ரீதியான பண்புகள், மானுட எண்ணக்கருக்கள், நுட்பம், நம்பிக்கைகள் மற்றும் சம்பிரதாயங்கள் ஆகியவற்றின் சேர்க்கையின் முழுமையே பண்பாடாகும்.
    - ♦ பண்பாடானது சிக்கலான செயற்பாடாகும். சமூகத்தினால் ஒன்றாகக் கட்டி வைக்கப்படும் பொதுவான பெறுமானங்கள், நம்பிக்கைகள், சமூகச் செயற் பாடுகள், சட்டங்கள், கற்பிதங்கள் போன்றன பண்பாட்டில் அடங்கும்.

DRAFT

(Dymamic of Mass Communication – 2010)

- ♦ நவீன காலகட்டத்தில் நாகரீகமற்ற, மிலேச்சத்தனமான, இயற்கையான, கண்ணுக்குப் புலப்படாத கட்டுப்படுத்த முடியாத சக்திகளின் எதிரிடையாகப் பண்பாட்டினை விளங்கிக் கொள்ள முடியும். அதற்கேற்ப பண்பாடு என்பது புலமையானதும், கல்வியறிவுடையதும், பயிற்சி மிக்கதும் மற்றும் அறிவுபூர்வ மிக்கதாகவும் காணப்பட்டது.
- ♦ பண்பாடு, ஊடகம் மற்றும் தொடர்பாடல் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்புடைய மூன்று துறைகளாகும்.
- ♦ பதினெட்டாம் நூற்றாண்டு தொடக்கம் ஊடகம் என்ற சொல் வெகுசன ஊடகத்திற்கும், வரலாற்றில் முதலாவது ஊடகமான பத்திரிகையினைக் குறிப்பிடுவதற்கும் பயன்படுத்தப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன்னரைப்பகுதியில் விசேடமான ஊடகத்தொடர்புகளின் (அஞ்சல்) துணையுடன் செய்திப் பரிமாற்றம், வெளிப்படுத்தல், பன்முகப்படுத்தல் எனும் பொருளில் பயன்படுத்தப்பட்டது. பத்திரிகைசார் வர்த்தக விளம்பரத்தின் இடைத்தரகராக ஊடக எண்ணக்கரு பயன்படுத்தப்பட்டது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலாகும்.
- ♦ சமூகம், பண்பாடு மற்றும் தனிநபர் ஆகிய மூன்றும் வேறுபடுத்த முடியாத அளவுக்குப் பிணைப்புற்றுள்ளன. சமூகத்துக்கோ தனிமனிதனுக்கோ பண்பாடின்றி இயங்க முடியாது. வழமைபோலவே மனித வாழ்க்கையில் பண்பாட்டின் வகிபாகம் நடைமுறையிலும் முதன்மை பெறுகிறது. சமூகம், பண்பாடு, தொடர்பாடல் மற்றும் தனிமனிதன் எனும் நான்கு கூறுகளும் இயல்பாகவே தொடர்புற்று இருப்பது மட்டுமல்லாது நெருங்கிய செயற்பாட்டினையும் கொண்டுள்ளன.
- ♦ சமூகம், பண்பாடு, தனிநபர் ஆகிய அடிப்படைக் கூறுகள் தகவல்கள் ஊடாக இடம்பெறும் சமூக இடைத்தொடர்புகளால் வலுவடைகின்றன.
- ♦ தனிநபருக்கும் சமூகத்திற்கும் இடையில் ஆழமான தொடர்புகள் காணப்படு கின்றன. சமூகம் என்பது தனிநபர்களின் சேர்க்கை மாத்திரமன்றி அது ஆழமான இடைத்தொடர்புகளின் தொகுதிகளையும் கொண்டுள்ளது.
- ♦ தனிமனிதனின் தோற்றம், இசைவாக்கம், நன்னடத்தை, கற்றல் மற்றும் பண்புகளில் அவன் வாழும் சமூகம் செல்வாக்கு செலுத்துகின்றது. அதேபோல் தனிமனித வேறுபாடு, இன வேறுபாடு, தேசியம் மற்றும் மக்களின் தனித்துவம் என்பன உரிய சமூகத்தின் இசைவாக்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. இவ்வாறான சிக்கலான சமூகத்தை முன்னெடுத்துச் செல்வதற்குப் பண்பாடு உட்பட அதன் ஏனைய சாதனங்களும் அவசியமாகும். அதில் - தொடர்பாடல், கலை, சமயம், அரசியல், ஓவியம், சினிமா, கொள்கை ஆகியன உள்ளடங்கும். ஒருவகையில் அவை சமூகத்தின் பல்வேறு பாகங்களாகக் காணப்படுவதோடு மற்றொரு வகையில் அவை சமூக நிலைப்பிற்குக்குப் பயன்படுத்திக்கொள்ளக்

DRAFT

கூடிய ஊடகங்களுமாகும்.

- சமூகத்துக்கும் தனிநபர்களுக்கும் இடையிலான தொடர்பு தொடர்ச்சியாக சீரமைக்கப்பட வேண்டும். சமூகம் சிக்கலான தொகுதி மாத்திரமன்றி அது தொடர்ச்சியாக மாற்றமடையக் கூடியதுமாகும்.

- தொடர்ச்சியாக மாற்றமடையும் சமூக நிலைமைகளுக்கும், நிபந்தனைகளுக்கும் தனிநபர் பழக்கப்பட வேண்டும். அந்த நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் இசைவாக்கம் அடையவேண்டும். இச்செயற்பாடானது தனிநபர் செயற்பாடு மாத்திரமன்றி அது நிறுவனமயப்படுத்தப்பட்ட அறிவுபூர்வமான செயற்பாடுமாகும்.
- இச்செயற்பாடே சமூகமயமாதல் என்பதாகும். அதன் பொருள் - மாற்றமடை கின்ற சமூக, பண்பாட்டு நிலைமைகளுக்குத் தனிமனிதனை இசைவாக்கம் அடையச் செய்வதாகும். இது நபரொருவரின் பிறப்பு தொடக்கம் இடம்பெறும் செயற்பாடாகும். அதற்காக மனித சமூகத்தின் பெருமளவு நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன. குடும்பம், பாடசாலை, சமய நிறுவனங்கள், அரசியற் கட்சிகள், பல்வேறு சிவில் அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், வெகுசன ஊடகங்கள் போன்றவற்றை இதற்கு உதாரணம் காட்டலாம்.
- தனிப்பட்ட வாழ்வில் பல்வேறு காலகட்டங்களில் சமூகமயமாக்கல் செயற் பாடுகள் பல்வேறு வடிவங்களில் மற்றும் பல்வேறு நிலைகளில் இடம்பெறலாம். மனிதன் தான் வாழும் சமூகத்தில் மிகவும் நன்றாகவும் வெற்றிகரமாகவும் வாழ்வதற்குத் தேவையான வாழ்க்கைக் கோலத்தினை, நடத்தைக் கோலத்தினை, உளவியல் ரீதியான சாதனங்களை, சமூக மதிப்பீடுகள் மற்றும் பெறுமானங் களை இதில் உள்ளடக்கலாம். பொதுவாக சிந்தனையையும் அறிவினையும் பெற்றுக்கொள்ளும் செயன்முறையினைச் சமூகமயமாக்கல் எனக் கருதலாம்.
- சமூகமயமாக்கல் செயன்முறை வாழ்க்கை முழுதும் இடம்பெற்றாலும் மனிதனின் வாழ்க்கையின் ஆரம்பப் பருவத்தில் இருந்து குறிப்பாகக் குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், கட்டிளமைப் பருவங்களில் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும். ஆரம்ப சமூகமயமாதற் செயன்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய காரணிகளான (நிறுவனங்கள்) - குடும்பம், முன்பள்ளி, பெரியோர்கள் ஆகிய தரப்புக்களால் தனிநபரின் எதிர்கால ஆளுமை மற்றும் பார்வைநோக்கு ஆகியவற்றை ஒழுங்கமைப்பதில் பாரிய தாக்கம் ஏற்படுத்தப்படு கின்றது. அத்தோடு தற்காலத்தில் வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்களும் ஆகியனவும் அவற்றோடு உள்ளடங்குகின்றன.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பண்பாடு என்பதை வரைவிலக்கணங்கள் ஊடாகத் தெளிவுபடுத்துக.

DRAFT

2. தனிமனிதன், சமூகம் மற்றும் பண்பாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை உதாரணம் தந்து விளக்குக.

**தேர்ச்சி மட்டம்** : 5.2 பண்பாட்டுக் கற்கையின் மூலம் பண்பாடுகள் இடையேயான பல்வகைமையினை ஒப்பீட்டடிப்படையில் விபரிப்பார்.

**பாடவேளைகள்** : 24

**கற்றற் பேறுகள்** :
- ஊடக வளர்ச்சியோடு பண்பாடு மாற்றம் பெற்றமையைத் தெளிவுபடுத்துவார்.
- இப் பண்பாட்டின் பல்வகைமையினை மற்றும் விசேட இயல்புகளை வெவ்வேறாக விபரிப்பார்.

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

- சமூகத்தில் மனிதனின் செயற்பாடு பலவகைப்பட்டதாகும். அத்துடன் அவர்கள் அங்கம் வகிக்கும் சமூகத்தளத்திற்கு ஏற்ப செயற்பாடுகளின் தன்மையும் மாறுபடும். இச்செயற்பாடுகளின் பரம்பலோடு பண்பாடு தோற்றம் பெற்றது.
- மனிதனின் செயற்பாடுகளுடன் தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற இரண்டு பிரதான துறைகளாக இயற்கைச் சூழல் மற்றும் சமூகம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவ்விரண்டையும் பண்பாட்டில் காணக்கூடியதாக உள்ளது.
- தற்கால நவீன மனிதனின் பரிணாமத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய பண்பாட்டுவகைகள் பல தோற்றம் பெற்றிருப்பதைக் காணலாம்.
    - ♦ பாரம்பரியப் பண்பாடு (Traditional Culture)
    - ♦ வெகுசனப் பண்பாடு (Mass Culture)
    - ♦ மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு (Classical Culture)
    - ♦ பிரசித்த பண்பாடு (Popular Culture)
    - ♦ ஊடகப் பண்பாடு (Media Culture)
    - ♦ பூகோளப் பண்பாடு (Global Culture)

1. **பாரம்பரியப் பண்பாடு**

- ♦ இது உன்னதமான, புனிதமான, தூய்மையான வாழ்க்கைச் செயற்பாடுகளின்

DRAFT

தொகுதியாகும். இது அடிப்படையில் உன்னதமானதும், புனிதமானதுமான குறியீட்டுத் தொகுதிகளின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

- ♦ பாரம்பரியப் பண்பாடு, மனித இன வரலாற்றில் ஆரம்ப காலம் தொடங்கி தற்காலம் வரையில் நிலவி வருகிறது. இது மக்களாலேயே உருவாக்கப்படுகின்ற அவர்களின் மனித சமூகத்துக்கு உரித்தான பண்புகளுக்கு ஏற்பத் தோற்றம் பெற்றுள்ள உரிய சமூகத்தின் மரபுரிமை ஆகும்.
- ♦ பாரம்பரியப் பண்பாட்டின் வளர்ச்சியில் வெகுசனத் தொடர்பாடலின் வகிபாகம் முக்கியமானதாகும். வெகுசனத் தொடர்பாடலுக்கும் பாரம்பரிய சமூகத்திற்கும் இடையில் தொடர்புகள் காணப்படுகின்றன.
- ♦ கைத்தொழிற் சமூகத்தின் செயற்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பாரம்பரிய சமூகப்பண்பாடு நவீன சமூகப்பண்பாடாக மாற்றம்பெறுகிறது. ஆகவே - மத்திய யுகத்தில் பண்பாட்டின் வளர்ச்சி நிறைவுற்று நவீன யுகத்திற்குப் பிரவேசித்துள்ளது. நவீன யுகத்தில் பண்பாடு பிரதானமாக இரண்டு விதங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. ஒருபுறத்தில் மானுடவாதம், மதிநுட்பக் கொள்கை, தத்துவம், கல்வி ஆகிய உயர் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்த ஆரம்பகாலப் பண்பாடும் மறுபுறம் விசேடமாக இருபதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வெகுசனப் பண்பாடும் சமூகத்தில் முதன்மை பெற்றுள்ளன.

## 2. வெகுசனப் பண்பாடு

- ♦ வெகுசனப் பண்பாடு என்பது பாரம்பரிய சமூகத்தில் பிரதானமானதும் ஆதிக்கம் செலுத்தியதுமான பண்பாடாகும். வெகுசனப் பண்பாட்டிற்கும் பாரம்பரியப் பண்பாட்டிற்கும் இடையில் பொதுத்தன்மை ஒன்று காணப்படுகின்றது. வெகுசனப் பண்பாடு பொதுமக்களின் ஒண்றிணைந்த செயற்பாட்டின் விளைவாகும். அது மக்களின் உரிமையின் ஒரு பிரிவுமாகும்.
- ♦ வெகுசனப் பண்பாடு இன வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டே உருவாகின்றது. உலகில் 6000 இற்கும் மேற்பட்ட இனங்கள் காணப்படுவதுடன் ஒவ்வொரு இனத்துக்கும் தனித்துவமான பண்பாடும் காணப்படுகிறது. பிரதானமாகப் பாரம்பரிய சமூகத்தின் பரிணாமத்தின் பல்வேறு நிலைகளில் வாழும் மக்கள் மற்றும் அவர்களின் பண்பாடும் பெருவாரியான மாற்றங்களை உருவாக்கியுள்ளன.
- ♦ வெகுசனப் பண்பாட்டை உருவாக்கியோர் அறியப்படுவதில்லை. வெகுசனப் பண்பாடு மக்களின் ஈடுபாடு மற்றும் தேவைகள் போன்றவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும். அது மக்களின் ஆக்கமாக இருப்பதோடு பொதுவான பெறுமதியும் காணப்படுகின்றது. வெகுசனப் பண்பாடு நேரடியாகக் சமூகச் செயற்பாடுகள் அனைத்திலும் தொடர்புபடுகின்றது.

DRAFT

- மக்களின் நாளாந்தச் செயற்பாடுகளுக்கும் வெகுசனப் பண்பாடிற்கும் இடையில் நேரடியான மற்றும் இயற்கையான தொடர்பு காணப்படுகின்றது.
- வெகுசனப் பண்பாடு பாரம்பரிய மானுடவாதப் பண்பாட்டிலிருந்து அடிப்படையில் வேறுபடுகின்றது. வெகுசனப் பண்பாடு மனித சமூக பரிணாமத்தின் விளைவாவதோடு அது கைத்தொழில் மற்றும் அதற்குப் பிற்பட்ட சமூகத்தின் வளர்ச்சியுமாகும்.
- வெகுசனப் பண்பாடு (Mass Culture) எனும் கலைச்சொல் முதன்முதலில் 1957 இல் டேவிட் வைட் மற்றும் பேனார்ட் ரொசன்பேர்க் (னு. றூவைந யனெ டீ. சுழளநடிநசப) ஆகியோரால் பயன்படுத்தப்பட்டது.
- வெகுசனப் பண்பாட்டு மூலங்கள், கைத்தொழில், நகர மற்றும் வெகுசன உற்பத்திகளோடு தொடர்புடையது. வெகுசனப் பண்பாடு அறிவுசார், விழுமியம்சார், கலைசார், மற்றும் மரபார்ந்த (செவ்வியல்) பண்பாட்டுடன் ஒப்பிடும்போது மிகவும் கீழ் மட்டத்திலும் ஆரம்ப நிலையிலும் காணப்படுகின்றது. அது பல இலட்சக்கணக்கான மக்களுக்காக உருவாக்கப்பட்டதன்றி உற்பத்தி செய்யப்பட்டதாகும்.

### 3. மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு

- வெகுசனப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு தோற்றம் இடம்பெறுவதோடு, வெகுசனப் பண்பாட்டிற்கு ஈடான உயர் ஒழுக்க விழுமியங்களையும் அறிவு சார்ந்த ஆற்றலையும் மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு கொண்டுள்ளது.
- மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு, மனித சமூகத்தின் பரிணாமத்தின் பல மட்டங்களோடு தொடர்புபடுவதோடு, அது உருவாக்கப்படுவது அதற்குரிய விசேட அறிவினையும் கலை ஆற்றலையும் கொண்ட நபர்களால் ஆகும். அவர்களுள் புகழ்மிகு எழுத்தாளர்கள், கலைஞர்கள், இசைஞானிகள், நடனக் கலைஞர்கள், சிந்தனையாளர்கள் காணப்படுகின்றனர். அவ்வாக்கங்கள் உயர்ந்த கலைத்துவமும் அழகியற் பெறுமானங்களும் கொண்டுள்ளதோடு, அவற்றில் அறிவு மற்றும் ஒழுக்கம் என்பன உயர் நிலையில் காணப்படும்.
- சமூகம் மற்றும் மனித விருத்திக்கு, அறிவார்ந்த மனிதனின் மானுடவாதம், ஒருங்கிணைப்புவாதத்தின் உயர் இலட்சியங்கள் மற்றும் மனித விருத்தியின் ஆரம்பத்தில் தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கிய மனிதப் பண்பாட்டின் விசேட பிரிவாக மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு துணைபுரிகின்றது. அது விஞ்ஞானத்தின், கல்வியின் மற்றும் கலையம்சங்களின் உயர் வெற்றிகளின் பிரதிபலனாகும்.

### 4. பிரசித்த பண்பாடு

DRAFT

- வெகுசனப் பண்பாட்டில் அதிக மக்களால் விரும்பப்படுகின்ற பண்பாடாகப் பிரசித்த பணபாட்டைக் குறிப்பிடலாம். எனவே, வெகுசன பண்பாட்டுடன் இரண்டறக் கலந்துள்ள அம்சமாகப் பிரசித்த பண்பாடு காணப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் Mass Culture மற்றும் Popular Culture ஆகிய பதங்கள் ஒரே அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகின்றன.
- 20 ஆம் நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்த மரபார்ந்த (செவ்வியல்) பண்பாட்டுக்கு மாற்றீடாக முறையே வெகுசனப் பண்பாடும் மற்றும் அதன் உப பிரிவான பிரசித்த பண்பாடும் வளர்ச்சியுற்றன.
- பிரசித்த பண்பாட்டின் விசேட பண்புகளுள் - அது ஆழமற்ற ஒன்றாக இருக்கின்றமை, எளிமையானதாக இருக்கின்றமை, பாரிய உற்பத்தியாக இருக்கின்றமை, அனைவருக்கும் நெருக்கமானதாக இருக்கின்றமை, மரபார்ந்த (செவ்வியல்) பண்பாட்டில் காணப்படுகின்ற பற்றாக்குறை மற்றும் கடினத்தன்மைக்குப் பதிலாக மிதமிஞ்சியதன்மையும் இலகு தன்மையையும் காணப்படுகின்றமை ஆகியன குறிப்பிடத்தக்கவை.
- இப்பண்பாட்டினை அனைவரும் இலகுவாக அனுபவிக்கலாம். இங்கு அறிவு ரீதியான மற்றும் விழுமியம் சார்ந்த கலைத்துவம் அருகி இருப்பதோடு இதனைக் கையாள்வோர் பொதுமக்கள் என்றபடியால் பயன்படுத்துவதற்கும் களஞ்சியப்படுத்துவதற்கும் குறித்த இடம், நேர-காலம், விசேடமான உழைப்பு, பணம், அறிவு,மற்றும் கல்வி நிலை ஆகியன அவசியமில்லை.
- வெகுசன மற்றும் பிரசித்த பண்பாடுகள் முதலாளித்துவத்தின் வர்த்தக நோக்காக மாறியுள்ளன. பண்பாட்டுத்துறை சந்தைத்துறையாக மாறியுள்ளமையால் அழகியல் ரீதியான பெறுமானங்கள் சந்தை விலையினால் வீணடிக்கப்படுகின்றன. இதனால் கலைப்படைப்புக்களின் தரத்தின் தலையெழுத்தினைத் தீர்மானிக்கும் காரணியாக ஊடகங்கள் மாறியிருப்பதோடு ஆக்கங்களின் தரத்தினைத் தீர்மானிக்கும் நியதிகளாக அழகியல், கல்வி, மானுடவியல், விழுமியங்கள் என்பன காணப்படாமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
- நடைமுறையில் இப்பண்பாட்டின் ஸ்தாபகர்களாகவும், உற்பத்தியாளர்களாகவும் இருப்பவர்கள் சாதாரண அறிவு மட்டத்தைக் கொண்ட, இடைமட்டப் படைப்பாக்கத்திறனைக் கொண்ட, ஆழமான நோக்கமற்ற கூட்டத்தினர் ஆவர். இவ்வெகுசன மற்றும் பிரசித்தமான பண்பாடுகள் கைத்தொழிலாக மாறியிருப்பதோடு அதில் பிரதான பாத்திரங்களை ஏற்றிருப்பவர்கள் வர்த்தகர்களும் நிறுவன உரிமையாளர்களும் ஆகும்.

### 5. ஊடகப் பண்பாடு

- ஊடகப் பண்பாடானது மனிதப் பண்பாட்டுப் பரிணாமத்தில் மிக அண்மையில் தோற்றம் பெற்ற ஒன்றாகும். குறிப்பாக 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில்

DRAFT

தோற்றம் பெற்ற பண்பாட்டியல் (ஊரடவரசழடழபல) துறையின் குழந்தையாக ஊடகப் பண்பாடு எனும் துறை தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளது.

- ♦ பண்பாட்டில் வெகுசனத் தொடர்பாடல் செயன்முறை வரலாற்று ரீதியான தாக்கத்தை வழங்குவதோடு, அது சமுகத்தேவையின் மீது கட்டுண்டு, மனிதனின் சமூகமயமாக்கம் மற்றும் பண்பாட்டு ரீதியான செயற்பாட்டிற்கும் உதவியாக இருக்கின்றது.
- ♦ உலகப்பண்பாட்டுக் கல்வியில் குழந்தையான “ஊடகக் கற்கை” எனும் சொல்லின் பயன்பாடு 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தோற்றம் பெற்றது.
- ♦ ஊடகப் பண்பாடு தற்காலப் பண்பாட்டின் முக்கிய அங்கமாகும். அது, மனித சமூகத்தின் பரிணாம வளர்ச்சியை வெளிக்காட்டும் பண்பாட்டுப்பிரிவாகும்.
- ♦ ஊடகப் பண்பாடு என்பது தகவல் சமுகத்தின் பண்பாடாகும். ஊடகம் எனும் எண்ணக்கரு 20ஆம் நூற்றாண்டுக்குரிய எண்ணக்கருவாவதோடு, வெகுசனப் பண்பாட்டினை விளக்குவதற்காகவே அதனை முதலில் பயன்படுத்தினர்.
- ♦ 20ஆம் நூற்றாண்டில் ஊடகப் பண்பாட்டிற்கான எண்ணக்கருக்களைத் தோற்றுவித்தவர்களுள் முன்னோடியாகக் கருதப்படுபவர், வோல்ற்றர் பென்ஜமின் (Walter Benjamin) என்பவர். இவர், விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் காரணமாக கலை மற்றும் ஊடகத்துறையில் ஏற்படும் முக்கியமான மாற்றங் களை 20ஆம் நூற்றாண்டின் மூன்றாவது தசாப்தத்தில் எடுத்துக்காட்டினார். தொழினுட்ப மீளுருவாக்கத்தின் அபார ஆற்றல் காரணமாக மூலநூலுக்கும் பிரதிக்கும் இடையில் நிலவும் சமூக ரீதியான மற்றும் அழகியல் ரீதியான வேறுபாடுகள் இல்லாதொழிந்தன.
- ♦ இந்நிலையின் கீழ், ஊடகத் தொடர்பாடல்களினதும் கலையாக்கங்களினதும் சிறப்பியல்பு, தனித்துவம், தோற்றம், இலட்சியம், நிலையான தன்மை, அழகியல் தன்மை மற்றும் உயர்ச்சி போன்ற அம்சங்கள் மாற்றமடைந்து - அவை பொருள், சுவையற்றுக் காணப்படுகின்றன. தற்கால அச்சு மற்றும் வானொலி, தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்கள் பலவற்றில் இந்நிலையினை அவதானிக்கலாம்.
- ♦ மீளுருவாக்கத் தொழினுட்பமானது, கலை மற்றும் தொடர்பாடல் தகவல்களைப் பாரம்பரிய முறைகளிலிருந்து விலக்கி, அதன் தனித்துவம் மற்றும் தரத்தினை இல்லாது செய்து அதனைச் சாதாரண ஒன்றாக மாற்றியுள்ளது.
- ♦ ஊடகப் பண்பாட்டின் அடிப்படை இயல்பாக அமைவது, அது தனிப்பட்டவர்களின் மகிழ்ச்சி, ஆனந்தம், களிப்பு, அனுபவம் தொடக்கம் பொது மக்களின் நுகர்வு வரை பரவிச்சென்றுள்ளமையாகும்.
- ♦ ஊடகப் பண்பாட்டினை விளங்கிக்கொள்வதற்கு மார்ஷல் மக்லூஹன் என்பவரின் பங்களிப்பு விசேடமானது. அவர் ஊடகப் பண்பாட்டு எண்ணக்கருவினை உருவாக்குவதிலும் அதனை வளப்படுத்துவதிலும் பாரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார். மார்‘ல் மக்லூஹன் முதன்முறையாக “ஊடகமும் சமூகமும்”,

DRAFT

“ஊடகமும் பண்பாடும்”, “ஊடகமும் தொலைத்தொடர்பும்”, “ஊடகமும் அதன் வரையரையும்”, “ஊடகமும் செய்திகளின் உள்ளீர்ப்பும்” ஆகிய விடயங்கள் தொடர்பில் பரந்துபட்ட பார்வையைச் செலுத்தினார்.

- ♦ அவருடைய எண்ணக்கருவின்படி, மனித நாகரீகத்தை மூன்று பிரதான காலகட்டங்களாக எடுத்துக்காட்டலாம். அவை

1. எழுத்துப் பண்பாட்டுக்கு முற்பட்ட காலம்,
2. எழுத்து - அச்சு ஊடகப் பண்பாட்டுக்காலம் மற்றும்
3. காட்சி / கட்புலப் பண்பாட்டுக் காலம் ஆகியனவாகும்.

மார்‘ல் மக்லூஹனின் ஊடகப்பண்பாடு பற்றிய எண்ணக்கரு பரந்துபட்ட தன்மையைக் கொண்டுள்ளதோடு, மனிதச் செயற்பாட்டிற்கு ஆதாரமாக அமையும் அனைத்து ஊடகங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவ்வூடகங்கள் தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்து வருவதோடு இவை மனிதனின் வெளிவாரியான விரிவாக்கம், பரவல் மற்றும் தொடர்ச்சியாகக் கருதப்படுகின்றன.

- ♦ மனித உடல், ஐம்புலன்கள், உள்ளுணர்வுகள், மற்றும் செயற்றிறனில் நேரடியான தொழினுட்பத் தாக்கம் ஏற்படுவதற்கு இணையாக அவை மனிதனில் இருந்து நீங்கி வேறுபட்டு மனிதனுக்கு எதிராகச் செயற்படும் வெளிச் சக்தியாகவும் மாறியுள்ளன. இவ்வாறு ஊடகப் பண்பாட்டின்பால் மனிதன் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதை மக்லூஹன் ‘Amputation’ எனக் குறிப்பிடுகின்றார்.
- ♦ ஊடகப் பண்பாடு தற்கால உலகில் மேற்கொள்ளும் பணிகளுள் -
  தகவல் வழங்கல்,
  தொடர்பாடல்,
  புலக் காட்சி உருவாக்கம்,
  மீளுருவாக்கம்,
  படைப்பாக்கம்,
  ஒருங்கிணைத்தல் (Intergration) மற்றும்
  இடைத்தரகர் பணி ஆகியன அடங்கும்.
- ♦ ஊடகப் பண்பாடு என்பது ஊடகத்துறையில் காணப்படும் பௌதீக மற்றும் தார்மீக ரீதியான பெறுமானங்களின் தொகுப்பாகும். அதேபோல், அவற்றில் சமூகத்தின் மீளுருவாக்கத்திற்கும் செயற்பாட்டிற்கும் காரணமாகும் காரணிகளும் உள்ளடங்கியுள்ளன.
- ♦ ஊடகப் பண்பாடு என்பது மனிதனைச் சமூகமயமாக்குவதற்கும் சமூகக் கருத்தினை உருவாக்குவதற்கும் மனிதர்களால் கட்டியெழுப்பப்பட்ட தகவல் தொடர்பு ஊடகங்களின் ஒளி-ஒலிபரப்பாகும்.
- ♦ மற்றொருவகையில் ஊடகப் பண்பாட்டினை விளக்குவோமாயின், அது பல்வேறு கண்டங்கள் மற்றும் நாடுகளுக்கு இடையிலும், அரசுக்கும் சமூகத்துக்கு மிடையிலும் தொடர்ச்சியாகச் செயற்படும் தகவல் தொடர்பு ஊடகங்களின்

DRAFT

சேர்க்கையுமாகும். ஊடகப் பண்பாடு தகவல் பண்பாட்டின் விசேடமான பிரிவாகும்.

- அதன்படி, ஊடகப் பண்பாட்டில் தகவல் உருவாக்கப் பண்பாடு, தகவல் ஒலி-ஒளிபரப்புப் பண்பாடு, தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான பண்பாடு, தகவல்களைக் கையாள்வதற்கான பண்பாடு, தகவல் மதிப்பீடு தொடர்பான பண்பாடு, தகவல் தொடர்பு ஊடக உருவாக்கம் தொடர்பான பண்பாடு ஆகியன உள்ளடங்கும். ஊடகத்தை அடிப்படையாகக் கொண்ட அனைத்துச் செயற்பாடுகளும் ஊடகப் பண்பாடாகும்.

## 6. பூகோளப் பண்பாடு

- மனித சமூக வளர்ச்சியானது பூகோள நிலை வரை சென்றுள்ளது. ‘பூகோளமயமாதல்’ தற்கால மனித வாழ்வில் அனைத்துத் துறைகளிலும் ஊடுருவியுள்ளது. பூகோளமயமாதல், பூகோள மரபு எனும் எண்ணக்கருக்கள் முதன்முதலில் 1981 இல் ஜோன் மக்லீன் (John MacLean) என்பவரால் பயன்படுத்தப்பட்டதோடு, பூகோளப் பண்பாடு எனும் கருத்து 1985 இல் ரொபேர்ட்சன் (Robertson) என்பவரால் அறிமுகப்பட்டது. அறிமுகப்பட்டது.
- பூகோளமயமாதல் என்பது அடிப்படையில் ஒரு பொருளாதாரச் செயற்பாடாகும். உற்பத்திச் சக்திகளும் உற்பத்தித் தொடர்புகளும் உலகளாவிய ரீதியில் பரவலடைந்துள்ளமை, சகல தேசிய மற்றும் பிரதேச ரீதியான உற்பத்தி களையும் மீறிச்சென்றுள்ள பல்தேசிய (Multi National) நிறுவனங்களின் தொழிற்பாடு உலகம் முழுதும் பரவிக் காணப்படுகின்றமை, பல்வேறு பொருளாதாரச் செயற்பாடுகளை ஒன்றிணைந்த வகையில் முன்னெடுத்தல் ஆகியன பொருளாதாரப் பார்வையில் பூகோளமயமாதல் எனப்படுகிறது.
- பொருளாதாரப் பூகோளமயமாதலுக்கு இணையாக அரசியல், பண்பாடு, கல்வி, ஊடகம் மற்றும் ஆதி மனிதனின் அனைத்துச் செயற்பாடுகளும் பூகோள மயமாதலுக்கு உட்படுதல் தற்கால மனித சமூகத்தின் பரிணாமத்தின் வலுவான வளர்ச்சிப்போக்காகும்.
- மனித சமூக மாற்றத்தின் விளைவாகத் தற்காலத்தில் உருவெடுத்துள்ள பூகோள மேன்நிலைச் சமூகம் (Global Super Society) - அதற்குரிய உயர் பொருளாரத்தின், உயர் பண்பாட்டின், உயர் ஊடகப் பண்பாட்டின் ஆதிக்கத்திற்கு உட்படுதல் தற்காலப் பூகோள வளர்ச்சியின் சிறப்பம்சமாகும்.
- அதற்கேற்ப, பூகோளப் பண்பாடு என்பது பூகோள உயர் சமூகத்தின் அறிவு

DRAFT

மற்றும் வழிகாட்டலின் கீழ் உலகின் அனைத்து இனப் பண்பாடுகளையும் அழித்து பரவிச் செல்லும் வெகுசன பண்பாடேயன்றி வேறொன்றும் அல்ல என்றே கூறலாம்.

- இப்பண்பாடு அடிப்படையில் பாரம்பரிய, வெகுசன மற்றும் தேசிய பண்பாட்டு வகைகளுக்கு எதிரானதாகும்.

- பூகோளமயமாதலில் இடம்பெறுவன ஆதிக்கச் செயற்பாடுகளாகும். உதாரணமாக, பெரும்பாலான தேசிய தொலைக்காட்சிகளில் ஆதிக்கத்தைக் கொண்டிருப்பது பூகோள உயர் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்தேசிய நிறுவனங்களின் தொலைக்காட்சித் தயாரிப்புகளாகும். பூகோளத் தகவல் பிரவாகத்தில் 85 வீதமானவை பூகோள உயர் சமூக நிறுவனங்கள் ஐந்திற்கு உரித்துடையவை எனக் கூறப்படுகின்றது.
- அனைத்துத் தேசிய பண்பாடுகளும் ஒரே தன்மையானதாக (ர்ழஅநபநநெழரள) இருத்தல் தற்போது பூகோளப் பிரச்சினையாக மாறியுள்ளது.
- உலகில் காணப்படும் பாரிய வர்த்தக விளம்பர நிறுவனங்கள் பத்தில், ஒன்பது நிறுவனங்கள் வட அமெரிக்காவுக்கு உரித்துடையவை. வர்த்தக விளம்பரங்கள் மூலமாகப் பலவந்தமாக மேலைத்தேயப் பண்பாடு உலக நாடுகளில் திணிக்கப்படுகிறது. ''ஐரோப்பிய தராதரம்'', ''மேலைத்தேய மாதிரிகள்'', மற்றும் ''அமெரிக்க மயம்'' ஆகியன தேசிய பண்பாட்டம்சங்களான - சினிமா, இலக்கியம், தொலைக்காட்சி, சங்கீதம், நேரடி நிகழ்ச்சிகள் மற்றும் ஆவணங்கள் போன்ற ஆக்கங்களில் ஊடுருவியுள்ளன. உலகின் புகழ்மிக்க 100 திரைப்படங்களில் 88 திரைப்படங்கள் அமெரிக்கத் திரைப்படங்களாவதோடு உலக நாடுகள் இறக்குமதி செய்யும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் 75 வீதமானவை அமெரிக்கா சார்ந்தவையாகும்.
- பண்பாட்டுப் பூகோளமயமாதல் மூலம் சகல தேசிய பண்பாடுகளுக்குமுரிய உணவு, மொழிப் பயன்பாடு, நாகரீகம், கல்வி,மற்றும் தேசிய சிந்தனை ஆகியன அச்சுறுத்தலுக்கு உள்ளாகிவருகின்றன. பூகோள வெகுசன பண்பாட்டின் பரம்பல் காரணமாக சகல தேசிய பண்பாடுகளும் ஒரே தன்மையானதாக இருத்தல் உலகப் பிரச்சினையாக மாறியுள்ளது.
- இணையப் பண்பாட்டின் நியதிகளுக்கு உட்பட்டு தற்காலத்தில் பூகோள, வெகுசன மற்றும் பராம்பரியப் பண்பாட்டுக்குரிய தனித்துவமான அம்சங்கள் பூகோள வெளியில் மறக்கப்படுகின்றன.

**பண்பாட்டிடைக் கற்றல்**

- பனிப்போர்க் காலத்தில் அதனுடன் தொடர்புடைய பிரிவினர் ஏனையோருக்கு அழுத்தம் கொடுக்கும் ஒரு ஊடகமாகப் பண்பாட்டினைப் பயன்படுத்திக்

DRAFT

கொண்டனர். அதேபோல், அமெரிக்க வர்த்தகர்களுக்கும் அரசியல்வாதி களுக்கும் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கும் பிற நாட்டவர்கள் மற்றும் இனத்தவர்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை அறிந்து கொள்வதற்கும் விளங்கிக் கொள்வதற்குமான தேவையானது 1950களின் பின்னர் (இரண்டாம் உலகப்போரின் பின்னர்) தீவிரமாக உணரப்பட்டது.

- அதற்காக, 1947இல் அமெரிக்க அரசால் வெளிநாட்டுச் சேவைகள் நிறுவனங்கள் (Foreign Service Institutes – FIS) ஆரம்பிக்கப்பட்டன. அந்நிறுவனங்கள், உள் நாட்டுப் பண்பாடு, இடைப்பண்பாடு, பண்பாட்டிடைத் தொடர்பாடல் ஆகிய துறைகளின் வளர்ச்சி மற்றும் பரவலுக்கு பாரிய பணியினை ஆற்றியுள்ளன. குறிப்பாக, பண்பாட்டிடைத் தொடர்பாடல் எனும் எண்ணக்கரு 1954ஆம் ஆண்டில் இந்த வகையில் தோற்றம் பெற்றதாகும்.
- எட்வர்ட் டி. ஹோல் (Edward T. Hall) மற்றும் ஜோர்ஜ் எல். டிரேகர் (Jorge L. Trager) ஆகிய ஆய்வாளர்களால் வெளியிடப்பட்ட "தொடர்பாடலாகப் பண்பாடு: மாதிரிகளும் பகுப்பாய்வும்" (Culture as Communication: Models and Analysis) மற்றும் எட்வர்ட் டீ. ஹோல்ட் 1950 இல் வெளியிட்ட மௌன மொழி (The Silent Language) ஆகிய நூல்கள் பண்பாட்டிடைக் கற்கைத் துறையினை மேலும் ஆழமாக ஆய்வு செய்தன. பண்பாட்டின் அனைத்துச் செயற்பாடு களையும் ஆய்வு செய்தல் மட்டுமன்றி பல்வேறு பண்பாடுகளின் நடத்தை ரீதியான உப தொகுதிகளை ஆய்வு செய்தல் தொடர்பில் பண்பாட்டியல்வாதிகள் அதிக கவனம் செலுத்தினர்.
- மனிதன் தன்னை உலகிற்கு இசைவாக்கிக் கொள்வதற்கு பயன்படுத்தும் பிரதான கருவியாகப் பண்பாட்டிடைத் தொடர்பாடலைக் குறிப்பிடலாம்.
- பண்பாட்டிடைத் தொடர்பாடல் அல்லது கற்கை என்பது, இரு / பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த இனக் குழுவினர் ஒருவரோடொருவர் தொடர்பாடலில் ஈடுபடும்போது அவர்கள் தொடர்பாடலைப் பயன்படுத்தும் முறை பற்றிய கற்கையாகும்.
- மனிதனிடத்தில் இயல்பாகவே ஏனைய பண்பாடுகளை அறிந்து கொள்வதற்கான ஆர்வம் காணப்படுகிறது. பல்வேறு இனக் குழுக்களின் பண்பாட்டு ரீதியான நடத்தைக் கோலங்கள், மனப்பாங்குகள் ஆகியவற்றுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகளை தேடியறிவதற்கும், சில பண்பாட்டுப் பாரம்பரியங்கள் குறிப்பிடத் தக்களவில் மாற்றமடைவதும் சில சந்தர்ப்பங்களில் ஒன்றுக்கொன்று நேரெதிராவதும் ஏன் என்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்துவதற்கும் மனிதனால் ஆரம்பம் தொட்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.
- சில பண்பாடுகளை உயர்வாகக் கருதுவதற்கும், சில பண்பாடுகளைத் தாழ்வாகக் கருதுவதற்கும் அவற்றின் பெறுமானங்கள் மற்றும் ஒழுக்கநெறிகளை இழிவுபடுத்துவதற்கும் காரணமான பண்பாடுகளுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகள்

DRAFT

மற்றும் பல்வகைமை தொடர்பான பல்வேறு கருத்துக்களின் பரவலும் காணப்பெற்றது. இத்தகைய பின்னணியில் பண்பாடுகள் தொடர்பாக ஆய்வு செய்யவேண்டும் என்பது தொடர்பான கருத்துக்களும், விவாதங்களும், ஆய்வுகள் மற்றும் கோட்பாடுகள் தோற்றம் பெறுதலும் பண்பாட்டிடைக் கற்கைத் துறையின் வளர்ச்சிக்கு ஏதுவாகியது.

- பல்வேறு பண்பாடுகளைக் கொண்ட மனித சமூகத்தின் பண்பாட்டு வெளிப்பாடு களைக் கற்பதன் மூலம் மனிதத் தொடர்புகளிலும் தொடர்பாடல்களிலும் நிலவும் சிறப்பியல்புகளை இனங்கண்டுகொள்ள முடியும்.
- தொடர்பாடல் தொழினுட்பத்தின் வளர்ச்சியால் பண்பாடுகள் சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பொருளாதார, சமூக, அரசியல் ரீதியான நடவடிக்கைகளால் ஒரு பண்பாட்டில் வாழும் மக்கள் மாற்றங்களுக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாக உருவாகியுள்ள பண்பாட்டுப் புரிதல் களையும் மோதல்களையும் ஆய்வுசெய்து அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற் கான வழிமுறையாக மாற்றங்களுக்கு உள்ளாகாதிருக்கும் பல்வேறு பண்பாடுகளின் சிறப்பியல்புகளையும் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.
- பேராசிரியர். சுனந்த மகேந்திர - தொடர்பாடல் அகராதியில் குறிப்பிட்டதன்படி, ‘‘ஆரம்பத்தில் மானுடவியல் மற்றும் சமூகவியலின் பணியாகவிருந்தாலும் அண்மைக்காலம் தொட்டு பண்பாடுகள் தொடர்பான கற்றல் தொடர்பாடல் கற்கைத்துறையிலும் உள்வாங்கப்பட்டுள்ளது. தொடர்பாடல் கற்கைத்துறையில் அது பல்வேறு பண்பாடுகளைச் சமநிலைப்படுத்தல் என அறியப்படும். அக்கற்கை பண்பாட்டிடைக் கற்கை எனப்படும். இப்பாடத்துறை தொடர்பாடல் கற்கையின் வளர்ச்சியாகக் கருதப்படும். ஒரு பண்பாட்டில் நிலவும் சமூகக் காரணிகளை ஆய்வு செய்து அக்காரணிகளை ஏனைய பண்பாட்டுக் காரணிகளோடு ஒப்பிடுதல் இதன் நோக்கமாகும். அதன்படி குறித்ததொரு பண்பாட்டினை ஆய்வு செய்வதன் மூலம் அறிந்து கொள்ளப்பட்ட அதன் ஒழுக்க விழுமியங்கள், மனித நடத்தைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை ஏனைய பண்பாட்டுக் காரணிகளுடன் ஒப்பிட முடியும். குறித்ததொரு பண்பாட்டினால் ஏற்றுக்கொள்ளப்படும் விடயங்கள் வேறொரு பண்பாட்டினால் ஏற்றுக்கொள்ளப்படாமை அல்லது அந்நியமாகக் கருதப்படுவதைக் காண முடியும்.’’
- தொடர்பாடல் தொழினுட்பத்தின் விரைவான வளர்ச்சியோடு நாடுகளின் தேசிய பண்பாடுகள் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளன. தொடர்பாடல் தொழினுட்பத்தின் ஊடாகப் படைப்பாக்கபூர்வமான முறையில், விசித்திரமான மாதிரிகளில், வர்த்தகப் பெறுமதிகளுடன் பல்வேறு பண்பாட்டு அம்சங்கள் பரிமாறப்படுகின்றன. பல்வேறு பண்பாடுகள் தொடர்பாகக் கற்றலும் விளக்கம் பெறுவதும் விமர்சன ரீதியான ஊடகப் பயன்பாட்டிற்கு வழிகாட்டும்.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பல்வேறு பண்பாடுகளை அவற்றுக்கே உரிய விசேட பண்புகள் ஊடாகத் தனித்தனியே விளக்குக.

2. தொடர்பாடல் துறையின் புதிய போக்கான பண்பாட்டிடைக் கற்கையின் முக்கியத்துவத் தினை உதாரணம் தந்து விளக்குக.

DRAFT

தேர்ச்சி மட்டம்: 5.3. பண்பாட்டில் ஊடகங்கள் செலுத்தும் தாக்கம் பற்றிய தகவல்களைப் பகுப்பாய்வு செய்து முன்வைப்பார்.

**பாடவேளைகள்** : 12

**கற்றற் பேறுகள்** :
- ஊடகத் தாக்கம் பற்றி விளக்குவார்.
- பண்பாட்டில் ஊடகங்கள் செலுத்தும் தாக்கம் பற்றிய விமர்சனரீதியான கருத்துக்களை முன்வைப்பார்.

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

- பண்பாடு, ஊடகம் மற்றும் தொடர்பாடல் ஆகியன ஒன்றிலிருந்து மற்றயதை வேறுபடுத்த முடியாத மூன்று விடயங்களாகும். நவீன காலம் வரை பண்பாடு மற்றும் தொடர்பாடல் என்பன பாரம்பரிய ஊடகங்களுடன் தொடர்பினைப் பேணியது என்பது மட்டுமன்றி பராம்பரிய ஊடகங்களை மையப்படுத்திப் பண்பாடு மற்றும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும் எடுத்துக்காட்ட வேண்டும்.
- நவீன காலத்தில் முதலில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் தோற்றம் பெற்றன. பின்னர் புகைப்படவியல், சினிமா, வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற வெகுசன ஊடகங்களும், பின்நவீன காலத்தில் இணையத்தளத்தினை அடிப்படையாகக் கொண்ட சமூக ஊடகங்களும் தோற்றம் பெற்றதோடு பண்பாட்டின் தோற்றம், நிலைப்பு, செயற்பாடு, பரம்பல், பொறிமுறை மற்றும் மாதிரியில் பாரிய பரிமாற்றம் ஏற்பட்டது.
- தற்காலத்தில் வெகுசன ஊடகங்கள், சமூக மனநிலை, வெகுசன அறிவு, சமூக விஞ்ஞானம், தனியாள் அறிவு, பண்பாடு ஆகியவற்றில் கணிசமானளவு செல்வாக்கினைச் செலுத்துகின்றன. தனியாள் ஆளுமையைத் தீர்மானிப்பதில் வெகுசன ஊடகங்கள் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன.
- தகவல் பரிமாற்றத்தின் பன்மைத்தன்மை காரணமாகத் தற்காலத்தில் சாதாரண மனிதர்களால் மாத்திரமல்ல நிபுணர்களால் கூட அதனை விளங்கிக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
- தற்கால வெகுசன ஊடகங்கள் என்பது மனிதர்களின் உள மற்றும் சமூக நிலைகளில் செல்வாக்குச் செலுத்தும் வலுமிக்க காரணிகளாகும். குறிப்பாக இளம்பராயத்தினர், மாணவர்கள் மற்றும் குழந்தைகளின் உளவியலிலும் அவர்களின் நடத்தையிலும் அவை ஏற்படுத்தும் தாக்கம் வலுவானதாகும். இத்தாக்கம் நேர் மற்றும் எதிர்மறையானதும், நன்மையானதைப் போன்றே தீயதாகவும், செயற்றிறன் மிக்கது போன்றே செயற்றிறன் அற்றதாகவும் உள்ளது.

DRAFT

- தகவல் தொடர்பாடல் செயற்பாட்டின் தொழினுட்பக் கட்டமைப்பின் அளவு ரீதியான மற்றும் பண்புரீதியான வளர்ச்சியும், வர்த்தக பன்மைத்துவமும் வெகுசன ஊடகங்களும் அதன் உள்ளடக்கமும் தனியாள் மற்றும் பண்பாட்டின்மீது ஏற்படுத்தும் தாக்கத்திற்குக் காரணமாக அமைந்துள்ளன.
- மனிதனின் ஆரம்பம் தொடக்கம் பல்வேறு ஊடகங்கள் தனிநபர் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கங்கள் சமூக அபிவிருத்திச் செயற்பாடுகளோடு இணைந் துள்ளன. அதில் ஒவ்வொரு ஊடக வகையும் வடிவமும் தனியாள் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்திய தாக்கம் அவ் ஊடக வகை மற்றும் வடிவத்தைப் போலவே பல்வேறு ஊடகங்களுக்கிடையில் காணப்படும் தொடர்புகளின் தன்மைக்கு ஏற்பவும் மாறுபடும்.
- பாரம்பரிய ஊடகத்தின் தாக்கத்தின் தன்மையை விடவும் வெகுசன ஊடகங்களின் தாக்கம் வேறுபடுகின்றது. அதேபோல், பின்நவீன யுகத்தில் செயற்படும் புதிய ஊடகங்களின் தாக்கம் வெகுசன ஊடகங்களின் செல்வாக்கிலும் பார்க்க விசேட இடத்தைப் பெறுகின்றது.
- இதற்கும் மேலாக, அவ்வொவ்வொரு காலத்திலும் காணப்பெற்ற ஊடகங்களின் தாக்கங்கள் மாறுபடுவதோடு ஒரு யுகத்தில் காணப்படும் பல்வேறு ஊடகங்களின் தாக்கத்திலும் வேறுபாடுகளைக் காணலாம். தற்கால வெகுசன ஊடகங்களின் தாக்கத்தினை ஆராயும்போது பிரதேச, தேசிய, வலய, சர்வதேச மற்றும் பூகோளத் தன்மைகள் மற்றும் போக்குகள் தொடர்பிலும் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ‘‘ஊடகம் தனிநபர், சமூகம் மற்றும் பண்பாட்டின் மீது நேர் மற்றும் எதிரான வகையில் செல்வாக்கு செலுத்துகின்றது’’ விமர்சன ரீதியாக ஆராய்க.

DRAFT

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| பண்பாடு | - | Culture |
| பண்பாட்டு வரைவிலக்கணங்கள் | - | Definitions of Culture |
| பராம்பரியப் பண்பாடு | - | Traditional Culture |
| வெகுசனப்பண்பாடு | - | Mass Culture |
| மரபார்ந்த (செவ்வியல்) பண்பாடு | - | Classical Culture |
| பிரசித்த பண்பாடு | - | Popular Culture |
| ஊடகப் பண்பாடு | - | Media Culture |
| பூகோளப் பண்பாடு | - | Global Culture |
| பண்பாட்டிடைக் கற்கைகள் | - | Cross Cultural Studies |
| ஊடகச் செல்வாக்கு / தாக்கம் | - | Media Effect |

DRAFT

**உசாத்துணை நூல்கள்:**

1. Dominic, Joseph, R., Dhynamic of Mass communication, USA, Maee Grow: Hill (Publisher) 2010

## 6. ஊடக விளங்கறிவு மற்றும் ஊடக விமர்சனம்

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | **6.0** | வெகுசன ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் எல்லையற்றதான தகவல்களிலிருந்து சமூகப் பிராணி என்ற வகையில் தனக்கு அவசியமான தகவல்களைத் தெரிவு செய்து விமர்சன ரீதியாக ஊடகத்தை நுகரவும் ஊடக விளங்கறிவை வாழ்க்கையில் பயனுடையதாக மாற்றிக்கொள்ளவும் செயற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 6.1 | ஊடக விளங்கறிவு என்றால் என்ன எனும் விளக்கத் துடன் ஊடக விளங்கறிவின் அடிப்படைக்கூறுகளைப் பரீட்சிப்பார். |
| **பாடவேளைகள்** | : | 35 | |
| **கற்றற் பேறுகள்** | : | | • விளங்கறிவு என்றால் என்ன என்பதை விளக்குவார்.<br>• ஊடக விளங்கறிவு என்பதன் விளக்கத்தை வரைவிலக் கணங்கள் மூலம் தெளிவுபடுத்துவார்.<br>• ஊடக விளங்கறிவின் அடிப்படைக்கூறுகளை விபரிப்பார்.<br>• ஊடக விளங்கறிவின் அவசியத்தை அறிந்து முன்வைப்பார்.<br>• ஊடக விளங்கறிவு பற்றிய அறிவைப் பிரயோகம் செய்வார். |

DRAFT

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அறிமுகம்**

மானுடத் தொடர்பாடலில் பிரதான கருவியாக மொழி காணப்படுகிறது. மொழி என்பது குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகளின் ஒன்றிணைப்பாகும். மனிதன் தனது கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த மொழியை உபயோகிக்கின்றான்.

- மொழியை எழுதுவதற்கும் வாசித்தலுக்குமான ஆற்றல் விளங்கறிவு எனப்படுகிறது. விளங்கறிவு என்பதற்கு இத்தகைய எளிய விளக்கம்

காணப்பட்டபோதும், தற்போது அதன் அர்த்தம் விரிவடைந்துள்ளது.

- எழுத்துக்களை எழுதும் மற்றும் வாசிக்கும் ஆற்றல் விளங்கறிவு என ஒக்ஸ்போட் அகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- பரந்த அர்த்தத்தில் பார்க்கின்றபோது, அச்சு மற்றும் எழுத்து ஆவணங்களைப் பயன்படுத்திச் சிக்கலான வசனங்களை இனங்காணல், அறிந்து கொள்தல், பொருட்கோடல் செய்தல், உருவாக்குதல், தொடர்பாடல் செய்தல் மற்றும் இலக்கமாக்குதல் முதலானவற்றிற்கான ஆற்றல் என விளங்கறிவு அர்த்தம் கொள்ளப்படுகிறது. (UNESCO-Education Sector – 13, 2004)
- ஆதிகாலத்தில் பேச்சு வல்லமையும், எழுத்துக்களின் வருகைக்குப் பின்னர் எழுத்துக்களை எழுதவும் வாசிக்கவுமான ஆற்றல் விளங்கறிவு எனக் கருதப்பட்டது.
- தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சியின் விளைவால் தொடர்பாடல் கருவிகள் பயன்பாட்டுக்கு வந்ததன் காரணத்தால் விளங்கறிவு என்பதன் அர்த்தமும் பல துறைகளுக்கூடாக விரிவடைந்துள்ளது.
- கட்புல விளங்கறிவு, செவிப்புல விளங்கறிவு, கணினி விளங்கறிவு, தகவல் விளங்கறிவு, தொழினுட்ப விளங்கறிவு மற்றும் எண்கள் தொடர்பான விளங்கறிவு என்பனவும் காணப்படுகின்றன.
- தொடர்பாடல் துறையில் இவை அனைத்தையும் மொத்தமாக நோக்கும் போது "ஊடக விளங்கறிவு" எனப்படுகிறது.

DRAFT

**ஊடக விளங்கறிவு என்றால் என்ன?**

- ஊடக விளங்கறிவு என்பது, வெகுசன ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் வெவ்வேறு தகவல்களை வாசித்து விளங்கிக் கொள்வதற்கும் அவற்றைப் பயன்படுத்துவதற்குமான ஆற்றல், தேர்ச்சி மற்றும் அறிவு ஆகும்.
- ஊடக விளங்கறிவு ஒரு பாடமாகப் பரிணாமம் பெறக் காரணமாக அமைவது வெகுசன ஊடகங்களின் பரவலாகும். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட வெகுசன ஊடகங்களின் தாக்கம் பற்றி ஆய்வு செய்த போது, ஊடகத்தின் உள்ளடக்கத்தை விளங்கிக் கொள்ளவதற்கான முறையியலாக ஊடக விளங்கறிவுக் கற்கை ஆரம்பிக்கப்பட்டது.

**வரைவிலக்கணம்**

1. எமக்குக் கிடைக்கின்ற ஊடகத் தகவல்களை விளங்கிக் கொள்ளவும், ஊடகத்தில் நாம் எவ்வளவு தங்கியுள்ளோம் என்பதை அறியவும் துணைபுரிவது ஊடக

விளங்கறிவாகும். எம்மால் மதிநுட்பம் கட்டியெழுப்பப்படுவது எமது அறிவாற்றல் மூலமாகும். (டப்ளியு. ஜேம்ஸ் பொடர், 1998)

2. ‘‘ஊடக விளங்கறிவு என்பது, ஊடகத்தால் முன்வைக்கப்படும் தகவல்களை நுகரவும், பகுப்பாய்வு செய்யவும், மதிப்பிடவும், படைப்பாக்கம் செய்யவும் பெற்றுக் கொள்ளும் ஆற்றல்’’. (ஐரோப்பிய ஒன்றியம்)

3. ஊடக விளங்கறிவுக் கல்வி □ ஊடகத் தகவல்களை விமர்சன ரீதியான சிந்தனையுடன் விளங்கிக் கொள்வதற்கும், சுயமாகத் தகவல்களை உருவாக்கிக் கொள்வதற்கும் மற்றும் ஊடகத்தைப் பயன்படுத்துவது பற்றியும் கற்பிப்பதாகும். இது 21 ஆம் நூற்றாண்டின் தேர்ச்சியாகும்.

4. ஊடக விளங்கறிவு என்பது,
ஊடகங்களில் நுழைதல்
ஊடகங்களை ஆய்வு செய்தல்
ஊடகங்களை மதிப்பிடல்
ஊடக உள்ளடக்க உருவாக்கம் மற்றும்
ஊடகத்தில் செயற்றிறன் மிக்க வகையில் செயற்படல் ஆகியனவாகும்.

- தேசிய ஊடக விளங்கறிவிற்கான தேசிய நிலையம், அமெரிக்கா-

இங்கு ஊடகம் எனப்படுவது, தகவல்களை ஒலி-ஒளிபரப்பு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் இன்னோரன்ன இலத்திரனியல் மற்றும் எண்சார் ஊடகங்கள், அச்சு ஊடகங்கள், படங்கள், குறியீடுகள் ஆகியவையாகும்.

5. சமிக்ஞை மற்றும் குறியீடுகளைப் பயன்படுத்தித் தகவல்களை உருவாக்குவதும் அவற்றை ஒலி-ஒளிபரப்புச் செய்வதும் அவ்வாறு ஒலி-ஒளிபரப்பப்படும் தகவல்களை மீளப் பொருட்கோடல் செய்வதும் ஊடக விளங்கறிவின் பணிகளாகும்.

- ♦ ஊடகத் தகவல் செயன்முறையை இனங்காணும் ஆற்றல், ஊடகத் தகவலின் தாக்கத்தை இனங்காணும் ஆற்றல், ஊடகத் தகவலைப் பகுப்பாய்வு செய்யும் மற்றும் அதனோடிணைந்த திறன்களைக் கட்டியெழுப்பும் ஆற்றல், ஊடகத் தகவல்களை நுகரும் ஆற்றல், ஊடகத் தகவல்களை மதிப்பிடும் ஆற்றல் முதலானவை பற்றிய கற்பித்தலில் இவ் அத்தியாயத்தின் ஏனைய தேர்ச்சி மட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களைக் கற்றல் உசிதம்.
- ♦ ஊடக விளங்கறிவில் மூன்று சித்தாந்தங்கள் காணப்படுகின்றன. ஊடக விளங்கறிவு கட்டியெழுப்பப்படுவது, தனிப்பட்ட அவதானம்(Personal Focus), அறிவுக் கட்டமைப்பு (Knowledge Structure) மற்றும் திறன்கள் (Skills) எனும் மூன்று முக்கிய சித்தாந்தங்களின் மூலமாகும். இம் மூன்றும் ஊடகங்கள் பற்றிய மனிதர்களின் அறிவை விஸ்தரிப்பதற்கு மிகவும் அவசியம். ஒருவரது தனிப்பட்ட அவதானம் என்பது அவரது சக்தியும் திட்டமிடலும் ஆகும். இதற்கு அவசியமான மூலப்பொருட்கள் மூலம் மதிநுட்பக் கட்டமைப்பு உருவாக்கப்படும். ஆற்றல் அல்லது தேர்ச்சி இதற்குத் துணையான கருவியாகப் பயன்படுத்தப்படும்.

DRAFT

**தனிப்பட்டஅவதானம் : Personal Focus**

- தனிப்பட்ட அவதானம் உருவாக்கப்படுவது எம்மை இயக்கும் எமது இலக்கினாலாகும். அவ் இலக்கின் மூலம் தேவையான தகவல்கள் எமக்கு வழங்கப்படும். நாம் எமக்குத் தேவையான தகவல்களை மட்டும் பெற்றுக் கொள்வதோடு தேவையற்ற தகவல்களைப் புறக்கணிப்போம். எமது இறுதி இலக்குப் பற்றிய விளக்கம் காணப்படுமிடத்து, தகவல் பெற்றுக் கொள்வதற்காக எம்மை இயக்கும் சக்தி வலுவானதொன்று என்றால் அதற்கான எமது முயற்சிகளை நாம் மேற்கொள்வோம். எனினும் தனிப்பட்ட அவதானம் வலிமை குன்றியதொன்றென்றால், இறுதி இலக்குப் பற்றிய தெளிவு இல்லாதுபோனால் அதற்காக எம்மை இயக்கும் சக்தியும் வலுவற்றதாகக் காணப்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் எம்மைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் ஊடகங்களுக்குக் கிடைக்கும் என்பதோடு ஊடகத்தால் மேற்கொள்ளப்படும் தகவல் வழங்கும் செயற்பாடுகளின் தாக்கத்திற்கும் நாம் முகம் கொடுக்க நேரிடும்.

- எமது தனிப்பட்ட அவதானம் இரண்டு வழிகளில் செயற்படும். அதாவது, உணர்வுடன் மற்றும் உணர்வின்றி அது செயற்படும். தனிப்பட்ட அவதானம் உணர்வுடன் செயற்படும் போது, எமது தெரிவு செய்யும் வலிமை அதிகரிப்பதோடு தீர்மானம் எடுப்பதும் இலகுவாக்கப்படும். தனிப்பட்ட அவதானம் உணர்வின்றிச் செயற்படும் போது, எம்மால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை எம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போவதோடு எமது அறிவுக்கப்பாற்பட்ட வகையில் சில முடிவுகளுக்கு ஆள்பட நேரிடும். இவ்விரு வழிகளிலும் எமது மதிநுட்பம் அதிகரிக்கும். எனினும், தனிப்பட்ட அவதானம் உணர்வுடன் செயற்படும் போது, எமக்குத் தேவையான தகவல்களை மட்டும் தெரிவு செய்ய முடியும், மாறாகச் தனிப்பட்ட அவதானம் உணர்வின்றிச் செயற்படும்போது ஊடகத்தின் தாக்கம் அதிகமாகக் காணப்படும்.

- ஊடக விளங்கறிவு என்பது தொடர்ச்சியாக நிகழும் ஒன்று, அது ஒரு இடத்தில் முற்றுப்பெறாது. ஆதலால், ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதன் மூலம் தனிப்பட்ட அவதானத்தை அதிகளவு பயன்படுத்தவும் பண்புத் தரத்தில் குறைவான ஊடகங்களிடமிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் எம்மால் முடியும்.

DRAFT

**அறிவுக் கட்டமைப்பு : Knowledge Structure**

- அறிவுக் கட்டமைப்பு என்பது மனிதர்களின் மனங்களில் உள்ளடங்கப்பட்டிருக்கும் தகவல் பொதியாகும். அறிவுக் கட்டமைப்பு, சுயமாக அல்லது எதேச்சையாகக் கிடைக்கும் ஒன்றல்ல. மாறாக, அது மிகவும் அவதானமாக, மிகவும் சரியாகக் கட்டியெழுப்பப்படவேண்டிய ஒன்று. அறிவுக் கட்டமைப்பில் சாதாரண தகவல்கள் மாத்திரம் காணப்படாது, அவை உருவாகுவது திட்டமிட்ட வகையில் தெரிவு செய்யப்பட்ட குறித்த தகவல்களினூடாகவே. அவ்வாறாகத் தகவல்களை வடிகட்ட எமக்குத் திறன்கள் அவசியம். இத் திறன்கள் கருவிகளாக மாற்றம் பெறும்.

- இத் திறனைப் பயன்படுத்தித் தேவையான தகவல்களைத் தெரிவு செய்து தேவையற்ற தகவல்களைப் புறக்கணிக்கும் ஆற்றல் எமக்குக் கிடைக்கிறது. ஊடகத் தகவல்களில் எமக்குத் தேவையான தகவல்களை மாத்திரம் தெரிவுசெய்யும்போது அவை எமக்கே உரித்தான தகவல்களாக மாறுவதோடு எமது அறிவுக் கட்டமைப்பின் ஒரு இடத்தில் அவை தேக்கப்படும். எம்மிடம் காணப்படும் தகவல்களில் ஒரு இணைப்பு வெளிப்படும். அத்தோடு, இத் தகவல்கள் நாம் மேலும் தகவல்களைத் தேடியறிய எம்மைத் தூண்டும். ஒருவிதமான வரைபடம் போன்று எமக்குத் தேவையான வழிகாட்டல்களை இத் தகவல்கள் எமக்கு வழங்கும். எங்கு தகவல் பெற்றுக்கொள்வது?, எவ்வாறு பெற்றுக்கொள்வது?.

- அறிவுக் கட்டமைப்பை உருவாக்கிக் கொள்ளத் துணைபுரிவது ‘‘தகவல்’’ ஆகும். எனினும் அனைத்துத் தகவல்களும் அறிவைக் கட்டியெழுப்பத் துணைபுரியாது. சில தகவல்கள் நிச்சயமற்ற, ஆழமற்ற, எதேச்சையான தகவல்களாகும். உதாரணமாக, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் பெயர்கள். ஊடக நிகழ்ச்சிகள் பற்றிய ஒருவரது அறிவு அந்நிகழ்ச்சியின் வெளியார்ந்த அல்லது மேலோட்டமான தகவல்களான ஒலிக் குறிப்புகள், பாடல்களில் இசைக்கப்படும் வரிகள், அதில் பங்குபற்றும் கதாபாத்திரங்கள், அவர்களது பெயர்கள், வதிவிடம் பற்றியது என்றால் அவரது ஊடக விளங்கறிவு மிகவும் குறைவானது. ஏனென்றால், அத்தகைய தகவல்கள் மூலம் கிடைப்பது ‘‘எது?’’ எனும் கேள்விக்குரிய பதில் மாத்திரமே. ஆனால் மிக முக்கியமான தகவல்கள் கிடைப்பது ‘‘எவ்வாறு?’’ ‘‘ஏன்?’’ முதலான கேள்விகள் கேட்பதன் மூலமாகும். இருந்தபோதிலும், ‘‘எவ்வாறு?’’ ‘‘ஏன்?’’ எனும் கேள்விகள் கேட்பதற்கு முன்னர் ‘‘எது?’’ எனும் கேள்விக்குரிய பதில் கிடைக்கப் பெறுவது அவசியம்.

DRAFT

- அன்றாட வாழ்வில் தகவல் மற்றும் அறிவு ஆகியன ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தும். எனினும் அவ்விரு சொற்களும் முற்றிலும் வேறுபட்டவை. தகவல் படிப்படியாக மாற்றமடைகிறது. அறிவு யாதேனும் மாதிரிக் கூடாக, முறையான வழியில், தொடர்ந்து காணப்படும் அர்த்தமுள்ள மற்றும் விலைமதிப்பற்ற ஒன்றாக அமைகிறது. குறியீடுகளில் உள்ளார்ந்து காணப்படும் தகவல் இருப்பது மனிதனின் மனதிலாகும். கிடைக்கப்பெறும் தகவல் மூலம் மனிதர்கள் பொருட்கோடல்கள் செய்வதோடு அவ்வாறு பொருட்கோடல் செய்யப்பட்ட விடயம் அறிவாக மாற்றம் பெறும்.

- தகவல் உருவாக்கப்பட்டிருப்பது காரணிகள் மூலமாகும். பலகைகள் கொண்ட கட்டடத்தை நாம் வீடு என்று கூறமாட்டோம் அதுபோல, வெறுமனே காரணிகள் மாத்திரம் அறிவாகக் கொள்ளப்படமாட்டாது. அறிவுக்குக் கட்டமைப்பொன்று அவசியம். அதுபோலவே கருத்தை விளங்கிக் கொள்ள வசனங்களுக்கிடையேயான தொடர்பை அறிந்திருத்தல் அவசியம். தகவல் என்பது ஒரு மூலகாரணியாகக் காணப்படும், கற்பனை செய்தால் அம் மூலகாரணியைக் கொண்டு யாதேனும் ஒன்றை நிர்மாணிக்கும் ஆற்றல் கிட்டும். உயர் ஊடக விளங்கறிவுடைய ஒருவருக்குத் தகவலை அறிவாக மாற்றும் திறன் அதிகம் காணப்படும்.

- தொடர்பாடல் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் ''தகவல்'' மற்றும் ''அறிவு'' பற்றி நோக்கும்போது கீழ்க்காணும் வரைவிலக்கணம் பயனுடையதாகக் காணப்படும். இவ் வரைவிலக்கணம் தகவலுடன் தொடர்புடையது. அதாவது, தகவல் (Message), நிரூபிக்கப்பட்ட தகவல் (Factual Information), சமூகத் தகவல் (Social Information) ஆகியவை. குறியீடுகள் என்பது எமக்குத் தகவல்களை வழங்கும் உபகரணமாகும். குறியீடுகளில் தகவல் அடங்கியுள்ளது. குறியீடுகளை வழங்கத் தொலைக்காட்சி, வானொலி, இறுவட்டு, இலத்திரனியல் தட்டு, புத்தகம், சஞ்சிகை, பத்திரிகை, இணையத் தளம், உரையாடல், வகுப்பறை விரிவுரை முதலான பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தலாம்.

- குறியீடுகளில் இருவகையான தகவல்கள் காணப்படுகின்றன, அதாவது, நிரூபிக்கப்பட்ட தகவல் மற்றும் சமூகத் தகவல் ஆகியவை. தற்போது காணப்படும் தகவல் என்பது ஒழுங்கமைக்கப்படாத, கருத்துத் தெளிவாகக் காணப்படாத ஒன்றாகும். சமூகத் தகவல்களில் காணப்படும் அனைத்து விடயங்களும் உண்மை என உறுதிப்படுத்த முடியாது. இதனால், சமூகத் தகவல்கள் பண்புத் தரம் குறைந்தவை எனவும் கூறிவிட முடியாது. சமூகத் தொடர்புகளை மற்றும் பதில் செயற்பாடுகளை ஆய்வு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள் சமூகத் தகவலில் அடங்கும். உதாரணம் - ஆடை அலங்காரம் பற்றிய தகவல், நாகரிகமான முறையில் உரையாடுவதற்கான அறிவுரை, விளையாட்டுத் தொடர்பான அறிவுரை, உடல்

DRAFT

ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான அறிவுரை ஆகியன சமூகத் தகவலில் அடங்கும்.

- ஊடக விளங்கறிவு எனும்போது பல துறைகளிலிருந்தும் அறிவைப் பெற்றுக்கொள்வது பற்றிக் கலந்துரையாட வேண்டும். அதாவது, ஊடகத் தாக்கம், ஊடக உள்ளடக்கம், ஊடகக் கைத்தொழில், வியாபாரப் பணிகள், மற்றும் நிஜ உலகில் நிகழும் செயற்பாடுகள் ஆகியன. இத் துறைகள் மூலம் தகவல் உருவாக்கப்படும் முறை பற்றி அறிந்து கொள்வதன் மூலம் தகவலைச் சரியான முறையில் மதிப்பிட்டுச் சரியான தீர்மானங்களையும் மேற்கொள்ளும் ஆற்றல் ஒருவருக்குக் கிடைக்கும்.

- உலகின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றிப் பழக்கப்பட்டவர்களுக்கு ஊடகத் தகவல்களை மிக இலகுவாகப் பகுத்தாய்ந்து அவற்றின் பண்புத் தரத்தை ஆய்வு செய்யும் ஆற்றல் காணப்படும். உதாரணமாக - கிரிக்கட் (துடுப்பாட்ட) வீரர் ஒருவர் தொலைக்காட்சியில் கிரிக்கட் (துடுப்பாட்ட) நிகழ்ச்சி ஒன்றைப் பார்க்கும்போது ஒவ்வொரு வீரரும் விளையாடும் விதம் பற்றிச் சரியாக மதிப்பிடுவார், இது சாதாரண ஒருவரிலும் பார்க்க வேறுபட்டதாகக் காணப்படும்.

- அறிவுக் கட்டமைப்பின் மூலம் ஊடகத்தால் வெளியிடப்படும் தகவலை அறிந்துகொள்ளத் தேவையான பின்புலம் எமக்குக் கிடைக்கும். எமது அறிவுக் கட்டமைப்பு எவ்வளவு விசாலமாகக் காணப்படுகிறதோ அவ்வளவிற்கு எமது ஊடக விளங்கறிவு மட்டம் காணப்படும். ஊடக உலகத்தால் வெளியிடப்படும் வெவ்வேறு நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எமக்குத் தெரிந்த நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு எம்மிடம் காணப்படும். எமது அறிவு மட்டம் அந் நிகழ்ச்சி பற்றியதாக மட்டும் காணப்படும் ஏனைய நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு எம்மிடம் காணப்படாது.

- ஏனைய நிகழ்ச்சிகள் பற்றிய அறிவு எம்மிடம் காணப்படாதவிடத்து ஊடகங்களின் உரிமையாளர்கள் யார்? அவற்றைக் கட்டுப்படுத்துபவர்கள் யார்? எவ்வாறு கட்டுப்படுத்துகிறார்கள்? ஊடகங்கள் மேலுயர்த்தப்படுவது எவ்வாறு? ஒரு சில விடயங்கள் சில ஊடகங்களில் தொடர்ச்சியாக வெளியிடப்பட அத்தகைய தகவல்கள் ஏனைய ஊடகங்களில் வெளிவராமை ஏன்? முதலானவை பற்றிய விளக்கம் எமக்குக் கிடைக்காது. எனினும், எமது அறிவுக் கட்டமைப்பை விஸ்தரிப்பதன் மூலம் ஊடகத் துறை பற்றிய பரந்த அறிவைப் பெறலாம்.

DRAFT

**திறன்கள் – Skills**

- ‘‘திறன்கள்’’ அல்லது ஊடக ஆற்றல் எமக்குக் கிட்டுவது அதில் தொடர்ந்து ஈடுபடுவதன் மூலமாகும். உதாரணமாக- நாம் எமது தசைகளுக்குத் தொடர்ச்சியாகப் பயிற்சியளிக்கும் போது அவை வலுப்பெறும். பயிற்சி வழங்காது போனால் தசைகள் வலுப்பெறாது.

- ஊடகத் திறன்களாக - ஊடக ஆய்வு, ஊடக மதிப்பீடு, குழுக்களாகப் பிரித்தல், தொகுத்தறிதல், உய்த்தறிதல், தொகுப்பாக்குதல், தேவையற்றவற்றைப் புறம்தள்ளுதல், தகவல் ஒன்றில் காணப்படும் முக்கிய விடயங்களைத் தெளிவாக ஆராய்தல், மற்றும் சாராம்சப்படுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை ஆங்கிலத்தில் analysis, evaluation, grouping, induction, deduction, synthesis and abstraction எனப்படும்.

- ‘‘ஊடக விளங்கறிவு’’ என்பது தொடர்பாடல் ஊடகங்கள் மூலம் வெளிவரும் தகவல் களின் கருத்தைச் செயற்றிறன் மிக்க வகையில் பிரித்தறியப் பயன்படும் நிலை நோக்குத் தொகுதியாகும் (A set of perspectives). இவற்றை நாம் பெற்றுக்கொள்வது எமது சுய அறிவுக் கட்டமைப்பின் (Knowledge Structure) மூலமாகும்.

- இவ் அறிவுக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள உதவும் கருவிகள், மூலப் பொருட்கள் மற்றும் அது தொடர்பில் நாம் வெளிப்படுத்தும் விருப்பு ஆகியன அவசியம். இக் கருவிகள் எமது ஆற்றல்களாகும். ஊடகத்தின் மூலம் வெளியிடப்படும் தகவல் மூலப்பொருட்களாகக் காணப்படுவதோடு, எமது தனிப்பட்ட அவதானம் அல்லது விருப்பம் அத் தகவலை இயக்கும் சக்தியாகும்.

- ஊடக விளங்கறிவை விளக்கும் மேலும் இரு விடயங்கள் உள்ளன. முதலாவது, ஊடக விளங்கறிவு பல கோணங்களைக் கொண்டது (Multi Dimensional). அதில் பயனுறுதியுடைய பல முகங்கள் காணப்படுகின்றன. அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்களை உணர்ந்துகொள்ள நாம் பல்வேறு நிலைநோக்குத் தொகுதிகளுக்கூடாக அவற்றை அணுக வேண்டும். இரண்டாவது, ஊடக விளங்கறிவு தொடர்ச்சியான ஒன்று.

- ஊடக விளங்கறிவு பல்வேறு அடிப்படைகளில் காணப்படும். சாதாரணமாகத் தகவல் என்பது, புத்தகத்தில் காணப்படும் தகவல் அல்லது பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் காணப்படும் தகவல் ஆகும். எனினும், இத் தகவல்கள் ஒரு அடிப்படையில் காணப்படும். அதாவது இவை புலனுணர்வுகளால் பெறப்படும் தகவல்கள்.

DRAFT

- ஊடக விளங்கறிவைப் பெற்றுக்கொள்ள புலனுணர்வுகளால் பெறப்படும் தகவல்கள் மாத்திரமன்றி, அழகியல்சார், உணர்வுசார், பண்பாடுசார் தகவல்களும் அவசியம். இவற்றால் எமது அறிவும் விரிவடையும்.

- புலனுணர்வுகளால் பெறப்படும் தகவல்கள் ஊர் பெயர் விபரம், வரைவிலக்கணங்கள், யாதாயினுமொரு விடயத்தின் காலப்பகுதி முதலானவற்றை எமக்கு வழங்கும். எமது மூளையில் காணப்படும் தகவல்களாகப் புலனுணர்வுகளால் பெறப்படும் தகவல்கள் காணப்படுகின்றன.

- உணர்வுகள் மூலம் பெறப்படும் தகவல்களான அன்பு, கோபம், மகிழ்ச்சி, கவலை, தொந்தரவு, பயந்த சந்தர்ப்பம், சபைக் கூச்சத்தை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட உணர்ச்சி மற்றும் வேறு பல சந்தர்ப்பங்களில் தமக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் பற்றிய தெளிவு பலருக்கு இல்லை. எனினும், வேறு சிலர் அனைத்து உணர்ச்சி களையும் ஊடகங்கள் மூலமாக உணர்வர், இனங்காண்பர்.

- நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் இவ் உணர்ச்சிகளை மிகவும் எளிதில் விளங்கிக்கொள்ளக் கூடிய குறியீடுகள் மற்றும் சமிக்ஞைகள் மூலம் நிகழ்ச்சிகளுக்குள் சேர்ப்பதோடு அவற்றை விளங்கிக்கொள்ள ஒருவருக்கு உயர் ஊடக விளங்கறிவு அவசியம் தேவைப்படாது.

- எம்மில் சிலருக்கு மற்றையவரைவிட எதிர்மறையான தன்மை, சிக்கல் தன்மை மற்றும் சந்தேகத் தன்மை முதலானவற்றை அறிந்துகொள்ளும் ஆற்றல் உண்டு. இத்தகைய உணர்வுகளைத் தோற்றுவிக்க இன்னோரன்ன உபாயங்களை ஊடகத் தயாரிப்பாளர்கள், ஊடக எழுத்தாளர்கள் மற்றும் நடிக, நடிகையர் பயன்படுத்து கின்றனர். இக் குறியீடுகளை அறிந்துகொள்வது உயர் ஊடக விளங்கறிவு பெறுநர்களுக்கு அவசியம்.

- அழகியல் உணர்வு ஒரு தகவலை எவ்வாறு உருவாக்குவது என்பதைக் கூறும். இவ் உணர்வின் மூலம் நாம் சிறந்த எழுத்தாளர்கள், புகைப்படவியலாளர்கள், கலை இயக்குநர்கள் மற்றும் பாடக பாடகியரை இனங்காணலாம். இதனால் எமது உணர்வு தட்டியெழுப்பப்படும்.

- அழகியல் உணர்வு மூலம் பெறப்படும் தகவல்கள் எமது கண்களால் அல்லது காட்சிவழி பெற்றுக்கொள்ளும் தகவலாகும். எம்மில் சிலருக்கு சிறந்த புகைப்படங் களை எடுக்கத் தேவையான கண்கள் மற்றும் இசையை ரசிக்கத் தேவையான செவிகளும் காணப்படுகின்றன.

DRAFT

- பண்பாடுசார் உணர்வு, சமூக மதிப்புக்கள் பற்றிய விளக்கத்தை எமக்குத் தரும். எமது மனதில் அல்லது உள்ளத்தில் காணப்படும் தகவல்கள் இதிலடங்கும்.

- ஒவ்வொரு செயலினதும் நன்மை மற்றும் தீமை முதலான அனுமானங்களை மேற்கொள்ள இத் தகவல்கள் உதவும். ஊடகத்தில் காட்சிப்படுத்தப்படும் ஒரு கதாபாத்திரம் மேற்கொள்ளும் தீர்மானங்கள் எவ்வளவு தூரம் ஒழுக்கமானது என்பதை நாம் ஆராயலாம்.

- ஊடக விளங்கறிவில் மேற்கூறப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். உதாரணமாக, ஒரு திரைப்படம் பார்க்கும்போது நாம் அதைப் பல்வேறு கோணங் களில் ;திரைப்படத்தின் இயக்குநர், அவரது பார்வை, அதில் அடங்கியுள்ள உட்கருத்து முதலானவற்றை ஆய்வு செய்யலாம். எனினும், அதன் மூலம் உங்கள் உணர்ச்சிகள் தூண்டப்படவில்லை என்றால் நீங்கள் வெறுமனே பரீட்சைக்குத் தயாராகுபவரைப் போல பயிற்சி பெறுகிறீர்கள் என்று பொருள்.

- ஊடக விளங்கறிவு தொடர்ச்சியான பயனை வெளிக்காட்டும். அது ஒரு தனி வகை (Category) இல்லை. உதாரணமாக, நாம் ஒருவரை ஆண் அல்லது பெண் என்றோ, இலங்கையர் என்றோ இலங்கையர் இல்லை என்றோ வகைப்படுத்துவோம். அதுபோல் ஊடக விளங்கறிவை வகைப்படுத்த முடியாது.

- ஒருவரது ஊடக விளங்கறிவு பூச்சியம் என்றோ நூறு வீதம் என்றோ கணிப்பிட முடியாது. இதன் மூலம் கூறப்படுவது, ஒவ்வொருவரும் தமது ஊடக விளங்கறிவைத் தற்போது காணப்படும் மட்டத்திலிருந்து அதிகரித்துக்கொள்ளலாம் என்பதே.

- ஒருவரது நிலைநோக்குத் தொகுதி வலுவானதாகவும் பரந்ததாகவும் மாற்றம் பெறுவது அவரது அறிவுக் கட்டமைப்புக்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பண்புத் தரத்தினாலாகும். ஒருவரது நிலைநோக்குத் தொகுதி வலுவற்றது எனில் அவரது ஊடக விளங்கறிவு மந்த நிலையில் காணப்படும். இதனால் ஊடகத் தகவல்களைச் சரிவரப் பிரித்தறிந்து கொள்ள அவர்களால் இயலாது.

DRAFT

**உயர் ஊடக விளங்கறிவைப் பெறுவதன் அவசியம்**

- டப்ளியு. ஜேம்ஸ் பொடர் (2011) கூறியதன்படி,உயர் ஊடக விளங்கறிவைப்பெறுவதால் அல்லது ஊடக விளங்கறிவை விருத்தி செய்வதால் கிடைக்கும் நன்மைகள் மூன்று வகைப்படும்.
    1. வெவ்வேறு ஊடகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விருப்பம் அதிகரித்தல்.
    2. எமது உள நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்.
    3. ஊடகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்.

1. வெவ்வேறு ஊடகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் விருப்பம் அதிகரித்தல்.

- வெவ்வேறு ஊடகங்கள் பல்வேறு தகவல்களை எமக்கு வழங்குகின்றன. உதாரணமாக, நாம் இணையத்தளமொன்றிற்குள் பிரவேசித்தால் குறித்த சில நேரத்திற்குள் நாம் பல்வேறு வகையான தகவல்களைப் பெற்றுக்கொள் வோம். அத் தகவலில் எல்லை காணப்படாது.

- வெவ்வேறு விடயங்கள் பற்றிய ஏராளமான புத்தகங்கள் உலகம் முழுவதும் வெளிவந்துள்ளன. ஒரு வருடத்தில் வெளிவரும் சஞ்சிகைகளின் எண்ணிக்கையோ அளவற்றது. கேபிள் தொலைக்காட்சி அலைவரிசைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன.

- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெகுசன ஊடகங்கள் எமது விருப்பத் தெரிவுகளைப் புறம் தள்ளிவிட்டுத் தமது அலைவரிசையை மாத்திரம் பார்த்து ரசிக்க எம்மைத் தூண்டும்.

- ஒரு அலைவரிசையில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மாத்திரம் நாம் பார்வை யிட்டோம் என்றால் அவ் ஊடக வியாபார உரிமையாளர்கள் அவர்களது வியாபாரத்தின் மீதான அவதானத்தைக் குறைத்து ஏனைய ஊடகங்களைக் கடந்து தமது வெற்றியை அடையவும், ஊடகங்களுக்கிடையிலான போட்டிகளைக் கடந்து எமது மதிநுட்பத்தைக் இழிவளவாக்கவும் செய்வர்.

- இவ்வாறு ஊடகத் தாக்கங்களுக்கு ஆளாகாது ஊடக விளங்கறிவை மற்றும் அறிவுக் கட்டமைப்பை விருத்தி செய்துகொண்டால் பண்புத் தரம் அதிகமான ஊடகங்களை மாத்திரம் நுகரும் வினைத்திறனான ஆய்வாளராக நாம் மாறலாம்.

DRAFT

2. எமது உள நடத்தைகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்.

- எமது உள்ளம் மற்றும் தனிப்பட்ட அவதானம் என்பவற்றைத் தம் பக்கம் ஈர்க்கும் முயற்சிகள் ஊடக வியாபார உரிமையாளர்களிடம் காணப்படும். எனினும், அவர்களது அம் முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டு எம்மை வலுப்படுத்தும் ஆற்றல் ஊடக விளங்கறிவின் மூலம் கிடைக்கப்பெறும்.

- ஊடகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் வெவ்வேறு கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தத் தனிப்பட்ட முறையில் எம்மால் இயலாது என்றாலும் அவ் ஊடகங்கள் எம்மைத் தம் பக்கம் ஈர்க்க மேற் கொள்ளும் முயற்சிகளிலிருந்து எம்மைக் கட்டுப்படுத்தலாம்.

3. ஊடகத்தைக் கட்டுப்படுத்தும் ஆற்றல்.

- ஒவ்வொரு ஊடக உரிமையாளரின் ஆவலாக இருப்பது தமது ஊடக வியாபாரத்தின் மூலம் உச்ச இலாபத்தை அடைவதாகும். பெறுநர்களின் உளம், கண்கள் மற்றும் செவிகளைக் கவர்ந்து அவர்களது முழு அவதானத்தையும் மீண்டும் மீண்டும் தமது ஊடகத் தகவல்கள்பால் பெற்றுக் கொள்வதாகும்.

- தாம் இலாபம் ஈட்டுவதற்காகப் பெறுநரைக் குழப்பத்திற்குட்படுத்துவது அவர்களது இலக்காகும். ஊடக உரிமையாளர்களின் வியாபார நோக்கங்களும், பெறுநர்களின் நோக்கங்களும் ஒருமித்ததெனில் ஊடக உரிமையாளர்கள் வெற்றி பெற்றதாகக் கருதப்படும்.

- ஊடக உரிமையாளர்களின் பிடியிலிருந்து விடுபட்டுச் சுயமாக இயங்கும் ஆற்றலை ஊடக விளங்கறிவு ஒருவருக்கு வழங்கும். இழிவு நிலையில் காணப்படும் ஊடகங்களைப் புறம் தள்ளி மாற்று ஊடகங்களைத் தெரிவு செய்யும் ஆற்றலை ஊடக விளங்கறிவு எமக்களிக்கும்.
அதன்படி,

- ஊடக விளங்கறிவு என்றால் என்ன? அதன் பல்வேறு பரிமாணங்கள் என்ன? மற்றும் ஊடக விளங்கறிவைப் பெறுவதால் கிடைக்கும் பயன்கள் என்ன என்பதை இப் பாடத்தில் விளக்கியுள்ளோம். ஊடக விளங்கறிவு விருத்தியடைவது எமது நிலைநோக்குத் தொகுதி விருத்தியடைவதன் மூலமாகும்.
- ஊடக விளங்கறிவை வகைப்படுத்த முடியாது. ஒருவரது ஊடக விளங்கறிவு அதிகமாக அல்லது குறைவாகக் காணப்படும்.

DRAFT

- ஊடக விளங்கறிவின் முக்கிய அம்சம் யாதெனில் அதற்குப் பல்வேறு பரிமாணங்கள் காணப்படுகின்றன. அதாவது, ஊடக விளங்கறிவு பன்முகம் கொண்டது.

- ஐம் புலனறிவு, உணர்வுகள் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவு, அழகியல்சார் அறிவு மற்றும் பண்பாடுசார் அறிவு என்பவற்றை விருத்தி செய்வதன் மூலம் எமது ஊடக விளங்கறிவை வளர்க்கலாம்.

- ஒருவரது ஊடக விளங்கறிவு தனிப்பட்ட அவதானம் (Personal Focus), அறிவுக் கட்டமைப்பு (Knowledge Structure) மற்றும் திறன்கள் (Skills) எனும் மூன்று விடயங்களுக்கூடாகக் கட்டியெழுப்பப்படும்.

- திறன்கள் எனப்படுவது வெவ்வேறு ஊடகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் தகவல் களைப் பெற்று எமது அறிவை வளர்த்துக்கொள்ளும் ஆற்றலாகும்.

- திறன்கள் ஊடகங்களிலிருந்து தகவல் பெற்றுக்கொள்ள உதவும் கருவியாகும். எமது தனிப்பட்ட அவதானம் தகவல் பெற்றுக்கொள்ள எம்மைத் தூண்டும்.

- உயர் ஊடக விளங்கறிவுடைய ஒருவர் தமக்குக் கிடைக்கும் தகவல்களின் வெளிப்படைத்தன்மையை இலகுவில் அறிந்துகொள்வார். எதுவிதத் தலையீடுகளும் இன்றித் தகவல்களைத் தாமே உணர்ந்து கொள்ளும் ஆற்றல் கிடைக்கப்பெறும்.

- உயர் ஊடக விளங்கறிவு, திரையில் காட்டப்படும், வாசிப்பதற்கு வழங்கப்படும் தகவல்களைத் தர்க்க ரீதியாக விமர்சிக்கத் தூண்டும்.

DRAFT

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஊடக விளங்கறிவு என்பதை வரைவிலக்கணங்கள் மூலம் விபரிக்குக.

2. உயர் ஊடக விளங்கறிவை ஏற்படுத்த சுய அவதானம், அறிவுக் கட்டமைப்பு, மற்றும் திறன்கள் அவசியம். விளக்குக.

3. உயர் ஊடக விளங்கறிவைப் பெறுவதால் உமக்குக் கிடைக்கும் பயன்களைக் கலந்துரையாடுக.

தேர்ச்சி மட்டம் : 6.2 ஊடக விமர்சனம் மற்றும் அதனோடு தொடர்புடைய அம்சங்களை இனங்கண்டு விமர்சனரீதியான பெறுகையின் சிறப்பை விபரிப்பார்.

பாடவேளைகள் : 24

கற்றற் பேறுகள் :
- ஊடக விமர்சனம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- ஊடக விமர்சனத்தின் அவசியத்தை விபரிப்பார்.
- ஊடக விமர்சனத்தோடு தொடர்புடைய பல்வேறு அம்சங்களை விளக்குவார்.
- தெரிவுசெய்த ஊடகத் தகவலொன்றை விமர்சனத்திற் குட்படுத்துவர்.
- விமர்சனரீதியான பெறுநர் என்பவர் யார் என்பதை விளக்குவார்.
- விமர்சனரீதியான பெறுநர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளை விபரிப்பார்.

DRAFT

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

**அறிமுகம்**

ஏதாவதொன்றின் தரத்தை ஆராய்வதையே விமர்சனம் அல்லது திறனாய்வு என்கிறோம். ஊடகத் திறனாய்வின் முக்கிய கூறுகளாகக் காணப்படுபவை, பகுப்பாய்வு, பொருட்கோடல் மற்றும் மதிப்பிடல் ஆகியன. இதன் மூலம் நிகழ்த்தப்படுவது ஆக்கமொன்றை விபரித்தல், மாதிரியைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதன் பண்புகளை மதிப்பிடல் ஆகியன. விமர்சனரீதியான சிந்தனை, ஒருவர் ஆளுமையுடன் கூடிய தொடர்பாடல், கதாபாத்திரமாக மாற அவசியமான அம்சமாகும். அன்று தொட்டு இன்று வரை கலை இலக்கியங்களை விமர்சிப்பதற்கான பல எண்ணக்கருக்கள் தோற்றம் பெற்றுள்ளன. யாதேனும் படைப்பின் கருப்பொருள் மற்றும் பெறுநரது அனுபவக்களத்தைத் தொடும் முயற்சிகள் பற்றித் தெளிவு படுத்தல், பெறுநரது அறிவை விருத்தி செய்யும் முகமாகப் படைப்பைத் தெளிவு படுத்தல் மற்றும் படைப்பை வாழ்க்கையில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய விதங்களை விபரித்தல் என்பன திறனாய்வின் முக்கிய பணிகளாகும். ஊடகம் மற்றும் சமூகம் பற்றி அறிந்துகொள்ள ஊடகத் திறனாய்வு அவசியம். விமர்சனம் இன்றி புதிய ஊடகம் மற்றும் அதன் போக்குகளை இனங்காண முடியாது. ஊடகங்களைப் பொறுத்தவரை திறனாய்வாளர் என்பவர் வெளியிலுள்ள ஒரு தனிநபர் என்பதைப் போலவே சில வேளைகளில் பெறுநரும் திறனாய் வாளராகக் காணப்படுவர்.

- ஊடகத் திறனாய்வின்போது வெவ்வேறு ஊடகங்கள் மூலம் முன்வைக்கப்படும் தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்படும். ஊடகங்கள் மூலம் வெவ்வேறு மாதிரிகளுக் கூடாக முன்வைக்கப்படும் தகவல்கள் சாதாரணப் பெறுநர் ஒருவரை அத் தகவலகள் மீது ஈடுபாடு ஏற்படச் செய்யும். இது, ஊடகங்களுக்கு அடிபணிவதாகும் நிலை வரை கொண்டுசெல்லும். ஊடகத் திறனாய்வு அவசியமாவது பெறுநர்களை இவ் அடிமைத் தனத்திலிருந்து விடுபடச் செய்வதற்காகும்.

- ஊடக விளங்கறிவின்மை மற்றும் விமர்சன அறிவு குறைவு முதலான காரணங்களால் மக்கள் ஊடகங்களுக்கு அடிமையாகின்றனர். அதனால், ஊடகங்கள் மக்களின் அன்றாட வாழ்வில் செலுத்தும் தாக்கம், அவர்களது நம்பிக்கை மற்றும் பண்பாட்டில் செலுத்தும் தாக்கம் ஆகியவற்றிலிருந்து மீள ஊடகத் திறனாய்வு அவசியமாகிறது.

- இதற்கு மேலதிகமாக, ஊடகங்கள் சிறுவர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் மீது செலுத்தும் தாக்கம் பற்றியும் தனித்தனியாக விமர்சிக்கலாம்.

1. **ஊடகம் மற்றும் அன்றாட வாழ்க்கை**

    - ஊடகம் தகவலுக்கும் பொழுதுபோக்கிற்கும் பிரதானமானதொன்று. அதனால் ஊடகங்கள் எமது அன்றாட வாழ்க்கையுடன் அதிக தொடர்புடையது. இளைஞர்கள் ஊடகங்கள் மூலம் அன்பு, ஆடை அலங்காரம், உறவுகள் மற்றும் இன்னோரன்ன விடயங்களைப் பார்த்து ரசிக்க விரும்புவர். சிலர் இணையத்தளங்களில் காணப்படும் புதிய விடயங்களை அறிந்து கொள்ள விரும்புவர். பண்பாட்டுக்கு ஒவ்வாத பாலியல்சார் இணையத்தளங்களைப் பார்க்கச் சிலர் விரும்புவர். சிலர் செய்திகள், உணவுத் தயாரிப்பு, உடல் ஆரோக்கியம், பயிற்சி முதலான நிகழ்ச்சிகளைப் பார்க்க விரும்புவர். ஆய்வுத் தகவல்களின்படி, நாளொன்றுக்கு இரண்டரை மணித்தியாலங்கள் சிறுவர்கள் தொலைக்காட்சி பார்க்கின்றனர். வெவ்வேறு ஊடக நிகழ்ச்சிகள் ஆண் மற்றும் பெண் பிள்ளைகள் மீது அதிக தாக்கம் செலுத்துகின்றன.

    - நவீன ஊடக உலகில் காணப்படும் தகவல்கள் பண்புத் தரம் பற்றி அதிக ஆர்வம் காட்டாது. திரைப்படங்களில் ஆபாசம் மற்றும் வன்முறைக் காட்சிகள் அதிகம் காட்டப்படுகின்றன. மது மற்றும் புகைத்தல், பாலியல் இச்சை உடையவர்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் இடம் ஊடகங்கள் என சில நிபுணர்கள் கூறுகின்றனர். ஊடகங்கள் எமக்கு இத்தகைய காட்சிகளைக் காண்பிக்கின்றன. திரையில் அவர்கள் இவற்றையெல்லாம் செய்யும்போது நாம் ஏன் செய்யக் கூடாது என்று இதன் போது சிலர் எண்ணக்கூடும்.

DRAFT

- கடந்த நூற்றாண்டில் ஊடகங்களால் இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்திய பாதகமான தாக்கம் எதுவென்றால் - அது, உடனடி உணவுகள் (fast food) மீதான நாட்டத்தை அதிகரித்தமையாகும். இதன் விளைவாக, இன்று ஏராளமான இளைஞர்கள் உடல் பருமனைக் குறைப்பதற்காக அதிகம் சிரமப்படுகின்றனர். ஊடகங்களில் காட்டப்படும் உணவு விளம்பரங்கள் ஆயிரக்கணக்கானவற்றை அவர்கள் பார்வையிட்டதும் அவற்றினால் தூண்டப்பட்டதுமே இதற்குக் காரணமாகும்.

- ஊடகங்கள் மீதான எமது கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. இதனால் ஊடகங்கள் எமது அன்றாட வாழ்வில் நிலையானதொரு பங்கு வகிக்கின்றன. ஊடகங்களால் எமது தோற்றம், நம்பிக்கை, விருப்பங்கள் மற்றும் கருத்துக்களில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாது, எம்மைச் சுற்றியுள்ள நகரங்கள் மற்றும் வீதிகளில் எமது அன்றாட வாழ்க்கையில் செல்வாக்குச் செலுத்தும் பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் என்பவற்றைக் காட்சிப்படுத்துவதன் மூலம் எமது சுற்றுச் சூழலையும் ஊடகங்கள் அலங்கரிக்கின்றன. இவை அனைத்தும் பெறுநர்கள் மீது அன்றாடம் தாக்கம் செலுத்துமா இல்லையா என நாம் விமர்சிக்க வேண்டும்.

## 2. ஊடகம் மற்றும் பல்வேறு கருத்தியல்கள்

- ஊடகம் மற்றும் பல்வேறு கருத்தியல்கள்என்று குறிப்பிடப்படுவது ஊடகத் திறனாய்வின்போது பல்வேறு கருத்தியல்கள்பயன்படுத்தப்படும் என்பதையாகும். வெவ்வேறு துறைகளிலிருந்தும் நுண்ணறிவுகளைப் பெற்று ஊடகத் திறனாய்வை ஊட்டம்மிக்கதொன்றாக மாற்றலாம்.

- மார்க்சியத் திறனாய்வு, உளப் பகுப்பாய்வு, மற்றும் பெண்ணியம்சார் திறனாய்வு என்பன இங்கு அவதானிக்கப்படுகின்றன.

### மார்க்சியத் திறனாய்வு

- மார்க்சியத் திறனாய்வின் முக்கிய கருத்தாவது, ஊடகத் தயாரிப்புகள் பொருளதாரரீதியிலான உயர் சமூகத்தின் தேவை விருப்பங்களை நிறைவேற்றுகின்றன என்பதாகும். இதன் காரணமாக, ஊடகக் கலை மற்றும் ஊடகத் தயாரிப்புகள் என்பனபோன்றே ஊடகங்கள் பெறுநர்களுக்குத் தகவல் வழங்கல், பரப்புதல், மற்றும் பிரதிபலிப்புக்களை மேற்கொள்ளும் விதங்களையும் ஊடகத் திறனாய்வாளர்கள் விமர்சிப்பர். ஊடகங்களில் காணப்படும் பொருளாதார மற்றும் பண்பாட்டு அடிப்படைகளையும் அதிகாரம் மற்றும் பணம் என்பவற்றை இலக்காகக் கொண்டும் ஊடகத் தயாரிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

DRAFT

என்பதையும் இதன் மூலம் ஆய்வு செய்யலாம். அதிகாரம் மற்றும் பணம் பற்றிய சமநிலைத்தன்மையைப் பேணும் நிறுவனங்கள் ஊடகங்களால் வலுப்படுத்தப்படும் விதம், ஊடக ஆதிக்கத்தால் அவை நிலைநிறுத்தப்படும் விதம் என்பவற்றையும் விமர்சிக்கலாம். இத்தகைய திறனாய்வுகள் நவீன பெறுநருக்கு அவசியமாகும்.

**உளப் பகுப்பாய்வு**

- உளப் பகுப்பாய்வாளர்கள்உளவியல் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு ஊடகத் தகவல்களை ஆராய்வர். சிறுவர்களை அமைதியற்ற நிலைக்குட்படுத்த ஊடகங்கள் துணைபுரிவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். எமது கவனம் இதன்பால் திருப்பப்படவேண்டும். விளம்பரங்கள் எமது ஆழ்மனதில் மறைந்து காணப்படும் எண்ணங்களைத் தூண்டுவதாக உலக உளவியல் நிபுணர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதன் மூலம் எமக்குப் புதிய சிந்தனைகள் உருவாகும் ; ஊடகங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகளின் உட்கருத்தைச் சரிவர குறிமுறையவிழ்ப்புச் செய்வோம் ; தவறான தொடர்பாடலை இனங்காண்போம் ; உளவியல் அடிப்படையில் நோக்கினால் பெறுநரது சிந்தனை மேம்படும்.

- உளப் பகுப்பாய்வின் மூலம் ஊடகங்களால் மனிதரது சிந்தனையில் ஏற்படுத்தப் படும் தாக்கம் பகுப்பாய்வுக்குட்படுத்தப்படும். ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப் படும் சிந்தனை மற்றும் உணர்வுகள் மனவழுத்தத்தை எவ்வாறு ஏற்படுத்து கின்றன என்பது ஆய்விற்குட்படுத்தப்படும். அதேபோல், விளம்பரங்கள் மூலம் நிகழ்த்தப்படும் உளத் தாக்கங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பெறலாம். முன் அனுபவம் மற்றும் ஊடகம் ஆகியவற்றிற்கிடையிலான இடைத்தொடர்பையும் இதன் மூலம் அறியலாம். அத்தோடு, ஊடகங்கள் மூலம் உருவாக்கப்படும் ஆளுள் மற்றும் ஆட்களிடை உறவுகளையும் ஆராயலாம். பொய்யான வாழ்க்கை வாழ ஊடகங்கள் தூண்டும் விதம் பற்றி ஆராய்ந்து ஊடகத் திறனாய்வின் மூலம் சிறந்த பிரஜைகளை உருவாக்கலாம்.

DRAFT

**பெண்ணியம்சார் திறனாய்வு**

- இதன் அடிப்படையாவது, பெண்கள் உரிமைகள் பற்றி பால்நிலைச் சமத்துவ அடிப்படையில் விமர்சிப்பதாகும். பெண்ணியச் சிந்தனைகள் மூலம் ஊடகங் களில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவது ஆராயப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக ஊடகங்களில் பெண்கள் இழிவுபடுத்தப்படுவதற்கான காரணங்கள் ஆராயப்படும். பெண் மற்றும் ஆண் பால்நிலைகள் பற்றி இங்கு விமர்சிக்கப்படும். ஊடகங் களால் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள் சிறப்பு அவதானம் பெறும்.

- ஊடகங்களில் பெண்கள் பொதுமைப்படுத்தல்களுக்கூடாகவே சித்தரிக்கப்படு கின்றனர் எனும் இக் கருத்தியலின்படி, பெண்களின் இயல்பு நிலை ஊடகங்களில் வெளிவராது. தாய்மார், மனைவிமார், மகள்மார் மற்றும் காதலி ஆகியோர் பாலியல் பொருட்களாகச் சித்திரிக்கப்படுவது இம் முறை மூலமாகத் திறனாயப்படுகிறது. குறிப்பாக, ஊடக ஆதிக்கம் ஆண்களிடம் உள்ளது என்பது இதன்போது தெளிவாகும்.

- பெண்கள் மற்றும் பெண்ணியம் பற்றிய மதிப்பீடுகளை வெளிப்படுத்த ஊடகங்கள் துணைபுரியவேண்டும். பெண்களது பிரச்சினைகள் ஊடகத்தால் விகாரப்படுத்தப் பட்டு அவற்றுக்கு ஆணாதிக்கத் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. பெண்களது சிறப்புக்கள் ஊடகத்தால் புறக்கணிக்கப்படுவது திறனாய்வுக்குட்படுத்தப்பட வேண்டும்.

**3. ஊடகம் மற்றும் தகவல்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமை**

- தகவல் என்றால் என்ன? அது யாருக்காக உருவாக்கப்பட்டது? யாரால்? எதற்காக? எந்த ஊடகத்தின் வழியாக? முதலான கேள்விகளை எழுப்புவதன் மூலம் ஊடகத் தகவல்களின் ஒற்றுமை மற்றும் வேற்றுமைகளை விமர்சிக்கலாம். எந்தவொரு ஊடகத் தகவலையும் வழங்கச் சரியான முறை என்று எதுவும் இல்லை. நாம் எமது அறிவு, நம்பிக்கைகள், அனுபவம் மற்றும் பண்பாடு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு வெவ்வேறு வழிகளில் ஊடகத் தகவல்களை உருவாக்குகிறோம்.

- தகவலின் பனுவல் (Text) (நாம் பார்ப்பது, கேட்பது, எழுத்து அல்லது வாய் மொழி, புகைப்படம், சித்திரம், அட்டவணை, இலட்சினைகள், ஆக்கங்கள், இசை, ஒலி முதலானவை) எது?, அதில் காணப்படும் வசனங்கள், காட்சி அல்லது ஒலி மூலம் கூற முனையப்படுவது யாது? தகவலின் பனுவல் என்பதில் மறைந்திருக்கும் கருத்து பற்றிய எமது எண்ணம் ஆகியவை ஆராயப்படும். ஊடகத் தகவல்களில் பனுவல் மற்றும் உப பனுவல் காணப்படும்.

DRAFT

- ஊடகத் தகவலில் காணப்படும் வசனம், புகைப்படம், ஒலி என்பன பனுவல் களாகும். உப பனுவல் என்பது தகவலில் மறைந்துள்ள மற்றும் உட்கருத் தாகும். ஊடகத் தயாரிப்பாளர்கள் வசனம், காட்சி, ஒலி மற்றும் ஏனைய அம்சங்களைப் பயன்படுத்தித் தகவல் தயாரிக்கும் விதம் பற்றி அறிய வேண்டும். இதன் மூலம் ஊடகத் தயாரிப்பாளர்களின் நிலைநோக்கு, அவர்களது இலக்குகள் மற்றும் அவற்றின் பக்கச்சார்புத் தன்மை என்பவற்றைக் கலந்துரையாட முடியும். அவற்றின் உட்கருத்தையும் ஆராயலாம்.

- ஊடகத் தகவல், தயாரிப்பாளர்களின் இலக்குகளையும் கருத்துக்களையும் வெளிப்படுத்தும். அனைத்துப் பெறுநர்களும் ஏதேனும் நிலைநோக்கில் அவற்றை அவதானிப்பர். ஊடகங்கள் மூலம் தொடர்பாடல் செய்ய நாம் தெரிவுசெய்யும் வசனங்கள், ஒலி மற்றும் காட்சிகள் எமது தனிப்பட்ட கருத்துக் களை அடிப்படையாகக் கொண்டு எமது இலக்குகள் மற்றும் மனப்பாங்குகளில் தாக்கம் செலுத்தும். இவ்வாறு மனிதர்கள் தகவல் மூலமாகத் தமது கருத்துக் களை ஊடகங்களில் பெற்றுக்கொள்வர்.

- ஊடகவியலாளர்கள் முன்வைக்கும் தகவல்களை மக்கள், அவர்களது முன்னறிவு, அனுபவம், இலக்குகள் மற்றும் நம்பிக்கைகள் மற்றும் வேறு அடிப்படைகளில் மொழிபெயர்த்துக்கொள்வர். இதன் மூலம் கூறப்படுவது, ஊடகத் தகவல் வெவ்வேறு உப பனுவல்களைப் பெறும் என்பதாகும். இதன்போது நாம் எம்மிடம் இருக்கும் ''ஊடகக் கருவிகளை''ப் பயன்படுத்துவது எவ்வாறு? ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் நன்மையான தகவல்கள் எவை? எத்தகைய பண்புத் தரம் காணப்படுகிறது என்பவற்றை விமர்சிக்கலாம்.

- இக்காரணிகளின் கீழ் சகல ஊடகத் தகவல்களும் (தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகை, திரைப்படம், விளம்பரங்கள் முதலானவை) யாரால் உருவாக்கப் பட்டவை என்பது அவதானிக்கப்படும். அத் தகவல்களை உருவாக்கியவர் யார்? என்பதையும் ஊடகத் தகவலை வழங்குவதன் நோக்கம் என்ன? என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். அதேபோல், ஊடகத் தகவல்கள் எமது கருத்து, மனப்பாங்கு மற்றும் செயற்பாடுகளில் தாக்கம் செலுத்தும். பிரச்சாரங்கள், செய்திகள், பொப் இசை, வீடியோ விளையாட்டுக்கள் என்பன எம்மில் அதிக தாக்கம் செலுத்துகின்றன.

- ஊடகங்கள் பலம்பொருந்திய பண்பாட்டுப் பிரவாகமாக மாறுவது இதன் காரணத்திலாகும். சிந்தனைப் பலத்தை அதிகரிக்க ஊடகங்களைப் பயன்படுத்தலாம். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் திரைக்கதையை வலுப்படுத்தப் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்படும் (கமரா

DRAFT

கோணம், சட்டகப்படுத்தல், படத்தொகுப்பு அல்லது செம்மையாக்கம், விசேட உத்திகள், ஒளி, இசை மற்றும் ஒலிக் குறிப்புகள் - Camera angle, Framing, Editing, Special effects, Light, Music, Sounds). சஞ்சிகை, அறிவித்தல் மற்றும் இணையத்தளங்களில் கவர்ச்சியான முறையில் தகவல் உருவாக்கப்படும். தகவல் மூலம் ஊடகச் சித்தாந்தங்கள் மற்றும் இலக்குகள் பரிமாற்றப்படும்.

உதாரணம்- செய்தியறிக்கை (முரண்பாடு அல்லது சம்பவத்தைத் தெளிவுபடுத்தச் செய்திகள் மூலம் பலம் மற்றும் ஆதிக்கம் பற்றிய உப பனுவல்கள் உருவாக்கப்படும்.) மற்றும் தயாரிப்புகளை விற்பனை செய்ய நுகர்வோரின் இலக்குகள் விளம்பரங்கள் மூலம் தொடர்ந்து மாற்றத்திற்குட்படுத்தப்படும்.

**4. ஊடகத் தகவலின் ஆதிக்கம்**

- ஊடகத் தகவலின் ஆதிக்கம் என்பது, சமூகப் பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் சிந்தனைகள் மீது ஊடகம் செலுத்தும் ஆதிக்கம் என்பதாகும். பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, இணையத்தளம் என்பன இவ்வாறு ஆதிக்கம் செலுத்தும் ஊடகங்களாகும். இவ் ஊடகங்கள் எமது பண்பாடு மற்றும் சிந்தனை மீது தாக்கம் செலுத்தும்.
  உதாரணமாக, தொலைக்காட்சிச் செய்தி நிகழ்ச்சி, பணக்கார வர்க்கத்தின் கொள்கைகளுக்கிணங்க வர்த்தக விளம்பரங்களை உட்சேர்த்திருப்பதைக் குறிப்பிடலாம். ஊடகத் தகவல் ஆதிக்கம், பொருளாதார, அரசியல் மற்றும் பண்பாட்டுப் பலத்தில் உருவாக்கப்படும். ஊடகங்கள் பணம்படைத்தவர்களது கருவியாகக் காணப்படுகின்றன. சமூகத்தில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டப் பணக்காரர்கள் மற்றும் அதிகாரம் படைத்தவர்கள் ஊடகங்களைப் பயன் படுத்துவர். அதன் மூலம் அவர்கள் தம் விருப்பங்களை, கொள்கைகளை ஊடகங்கள் மூலம் பரப்புவர். தொலைக்காட்சி மற்றும் சினிமா முதலான ஊடகங்களில் காணப்படும் ஆதிக்கத் தன்மை பிரபலமானது. தொலைக்காட்சி அரசியல் மற்றும் வணிகக் குழுவினரால் நிர்வகிக்கப்படுவதால் அவற்றிற்கிணங்க தொலைக்காட்சித் தகவல்கள் உருவாக்கப்படும்.

- தகவலின் மூலாதாரம், பெறுநர், பனுவல், உப பனுவல், உள் நோக்கம், மற்றும் நிலைநோக்கங்கள் என்பவற்றைத் திறனாய்வு செய்வதன் மூலம் தகவலின் இயல்பை அறிந்துகொள்ளலாம். நவீன ஊடகத் துறையில் பனுவல் தகவல்கள் (Text Message) பலவற்றைக் காணலாம். திறனாய்வின் மூலம் அவற்றையும் திறனாய்வது உசிதம்.

DRAFT

- மார்‘ல் மக்லுஹன் எனும் தொடர்பாடல் நிபுணர் கூறுவது, ‘‘ஊடகங்களே தகவலாகும்’’ என்று. அதன்படி, ஊடகத் தொழினுட்பம் மூலமாகவும் தகவல் உருவாக்கப்படும். இதற்குப் புறம்பாக, எதிரெதிர்க் கருத்துக்கள் ஊடகங்களில் காணப்படுகின்றன. எனினும், முதலாளித்துவ சமூகத்தின் கருத்துக்கள் ஊடகங்களில் காணப்படுவது தெளிவானதொன்று. ஊடகத் தகவல் ஆதிக்கம், நேர் அல்லது வட்ட வடிவில் காணப்படும். ஏதேனும் செய்தி அல்லது தகவல், நிறுவன வழிகாட்டல்கள், நிறுவன ஊடகங்கள் அல்லது ஆதிக்கக் கருத்துக்கள் மூலம் உருவாக்கப்படும் விதத்தைத் திறனாய்வு செய்யலாம்.

## 5. ஊடகப் பொருளாதாரம்

- ஊடகப் பொருளாதாரம் என்பது கடந்த 40 வருடங்களில் கவனிக்கத்தக்க விருத்தியை அடைந்த ஒரு துறையாகும். ஊடகத்தொழில் மீது கட்டியெழுப்பப்படும் ஊடகப் பொருளாதாரம் விளம்பரதாரர்கள், பெறுநர்கள் மற்றும் ஊடகம் ஆகியவற்றிற்கிடையிலான புதிய இணைப்பாகும்.

- தொடர்பாடல் என்பது ஓர் வணிகப் பண்பாடாகும். தொடர்பாடல் மூலமாகச் சந்தைக்கான அடித்தள வசதிகள் வழங்கப்படுகின்றது. ஊடகப் பொருளாதாரம் ஊடக உரிமையைக் கற்கும் புதிய பிரவாகமாகும். ஊடகப் பொருளாதாரம் தகவல் வழங்குவோர் மற்றும் மகிழ்வூட்டலளிப்போர் மீது தங்கியுள்ளது. ஊடக நிறுவனம் என்றால் என்ன? மற்றும் அதன் உள்நோக்கம் யாது? அதற்குரிய போட்டிச் சந்தை எது? என்பவற்றை இனங்காண்பது ஊடகப் பொருளாதாரத்தில் அடங்கும்.

- ஊடகம் என்பது, வியாபாரத் துறையிலிருந்து படைப்பாக்கத் தகவல் வரை பரந்த பாட விடயங்களை உள்ளடக்கிய ஒரு சிக்கலான தொழிற்துறையாகும். எவ்வாறெனினும், அடிப்படையில் ஊடகப் பொருளாதாரக் கற்கைகள் அவதானிப்பது ஊடகத்தொழிலின் பிரதான நிறுவனங்கள், நுகர்வோர் மற்றும் ஊடகச் சூழல் பற்றியேயாகும். அதன்படி, தயாரிப்பாளர்கள், பார்வையாளர்கள், விளம்பரதாரர்கள், அரசு மற்றும் குடிமக்கள் இடையேயான உறவைப் பகுப்பாய்வு செய்து விளங்கிக் கொள்ள ஊடகப் பொருளாதாரம் எமக்கு உதவிபுரியும்.

DRAFT

## 6. ஊடகம் மற்றும் தொழினுட்பம்

- ஒவ்வொரு ஊடகத்திற்குமுரிய தொழினுட்பம் இங்கு கவனத்தில் கொள்ளப்படும். அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடங்கங்களாக விருத்தியடைந்த இயந்திரம் சார் ஊடகங்களான வானொலி மற்றும் தொலைக்காட்சி என்பன தொழினுட்பங்களாக மாறியுள்ளன. இதன் பின்னர் எண்சார் ஊடகங்கள் மூலம் பல்வேறு புதிய தொழினுட்பங்கள் தோற்றம் பெற்றுள்ளன.

- நவீன ஊடகத் தொழினுட்பங்களை மனிதப் பிரச்சினைகளைத் தீர்க்கும் அடிப்படையிலேயே விளங்கிக் கொள்ள வேண்டும். ஊடகத் தொழினுட்பம் மற்றும் சுதந்திரத்தைப் பகுத்தறிவு செய்தல் வேண்டும். உதாரணமாக, இணையத்தளத்தில் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் வெளியீட்டுச் சுதந்திரத்தைப் பகுத்தறிவு செய்தல் வேண்டும். உலகளாவிய ரீதியில் ஊடகத் தொழினுட்பம் பயன்படுத்தப்படும் முறை பற்றி அறிந்து கொள்ள வேண்டும். குடிமை ஊடகங்கள் மற்றும் இணையத்தளத் தொழினுட்பம், எண்ணிமப்படுத்தல் மற்றும் ஊடக வியாபாரத்தில் ஊடகத் தொழினுட்பம் தொடர்புபெறுகிறது.

- புதிய ஊடகங்களில் தொலைக்காட்சி வர்த்தக விளம்பரக் காணொளிகள், காணொளி விளையாட்டுக்கள், இறுவட்டுப் பாடல்கள், கணினி,கைத்தொலைபேசி மற்றும் இணையத்தளங்களில் பயன்படுத்தப்படும் தொழினுட்பங்களை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் நிழற்படங்கள், கதைகள், காணொளி மற்றும் பல்வேறு கலை அம்சங்களைப் பரிமாற்றிக்கொள்ளும் தொழினுட்பம் தொடர்பில் தேடியறிய வேண்டும்.

- ஆராய்ந்தறியும் சூழலில் மாத்திரமே புதிய ஊடக உலகின் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ள முடியும். நவீன சமூகத்தில் தொழில்நுட்பங்கள் மற்றும் ஊடகப் பாவனையினால் ஏற்படும் சமூக சமத்துவம் மற்றும் சமூகப் பரிமாற்றம் தொடர்பில் தெளிவடைவதற்கும் ஊடகத் தொழினுட்பத்தை ஆராய்தல் முக்கியமானதாகும். ஊடகமயமாக்கத்தின் நன்மை மற்றும் தீமைகளை அதனூடாகக் கவனத்திலெடுக்க முடியும். தொழினுட்பம், உலகமயமாக்கம் போன்ற விடயங்களை அவற்றின் தாக்கங்களை விளங்கிக் கொள்ளாவிடின், நாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்.

- பல்வேறு சமூகப் பார்வைகளில் ஊடகம் மற்றும் தொழினுட்பம் என்பவற்றைப் பகுப்பாய்வு செய்து கலந்துரையாடுவது மிகவும் முக்கியமானதாகும். மானுட சமூகத்தின் இடைச் செயற்பாடுகள் மேல்நிலையடைந்துள்ள விதத்தினை விளங்கிக் கொள்வதற்கு தொழினுட்பத்தின் தாக்கத்தினை ஆராய்தல் வேண்டும். அத்தோடு, தற்போதைய தொழினுட்பமானது, நவீன சமூகம் மற்றும் நாளாந்த

DRAFT

வாழ்க்கையாக மாறியுள்ளது. விசேடமான காலங்களில் விசேடமான தொழினுட்பத் தாக்கங்களையும் அழுத்தங்களையும் மற்றும் அதன் விசேட செயற்பாடுகளையும்ஆராய்தல் போன்றன இதில் அடங்கும்.

- மாணவ, மாணவியர் வெவ்வேறு மாதிரிகளுக்கூடாக ஊடகத் தொழினுட்பங் களையும் மாற்றங்களையும் (அதிகாரம், அரசியல்,தனித்துவம் போன்றன) எவ்வாறு ஆராய்கின்றனர்? ஊடகத் தொழினுட்பங்களின் தோற்றங்கள் (அதிகாரம், அரசியல்,தனித்துவம் போன்றன) என்பவற்றை ஆராய்வதற்குத் தேவையான விமர்சனரீதியானதும் பகுப்பாய்வு சார்ந்ததுமான தெளிவினைப் பெறுவதை இத்தலைப்பின் கீழக் கலந்துரையாட முடியும்.

**7. ஊடகம் மற்றும் பண்பாடு**

- பண்பாட்டுத் தெளிவு ஊடக ஆய்வுக்கு அத்தியாவசியமானதாகும். பண்பாடு பல்வகைப்பட்டதாகும். பிரசித்த, உப, மீள்,மேல் மற்றும் கீழ், உயர்குடி, மக்கள் எனப் பண்பாடு பலவகைப்படுகிறது. தொலைக்காட்சி முக்கியமானதொரு பண்பாட்டுச் சக்தியாகும். இது சமூகத்தின் இலட்சியவாத மற்றும் யதார்த்தவாதத் தத்துவங்களை வெளிப்படுத்தும் சட்டங்கள் மற்றும் வகிபாகம் தொடர்பில்அறிவினை வழங்கும். அத்தோடு தொலைக்காட்சி என்பது சமூக, தொழில் மற்றும் பாலியல் செயற்பாடுகள், சமூக வகுப்புக்கள், தியாகங்கள் மற்றும் ஏற்புடைமை, இனம் மற்றும் வர்க்கம் என்பவற்றை வெளிக்காட்டும், விமர்சனத்திற்குரிய வகையில் கட்டமைக்கப்படும் ஒரு சமூக நிறுவனமாகும்.
- சமூக, தொழில் மற்றும் பாலியல் செயற்பாடுகள்,பொதுமைப்படுத்தல்கள், நேர் மற்றும் எதிர் பண்பாட்டுப் பெறுதிகள் போன்றவற்றையும் தொலைக்காட்சி தனது சித்திரிப்புக்கள் மூலம் பகிர்ந்து கொள்கின்றது. ஊடகம் மற்றும் பண்பாட்டிற்குரிய பண்புகள், மனப்பாங்கு மற்றும் நடத்தைகள் யாவை? ஊடக வகிபாகங்கள்உளநிலைசார்ந்து, உணர்ச்சிசார்ந்து, பொருளாதார ரீதியாக அல்லது ஆத்மார்த்தமான ரீதியில் படமாக்கப்பட்டுள்ளதா? பல்வேறு நிகழ்ச்சிகளில் வருகின்ற பாத்திரங்களின் வசனங்கள் மற்றும் செயற்பாடுகளின் மூலம் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் பண்பாட்டு ரீதியாக என்ன தொடர்பாடல் செய்யப்படுகின்றது? போன்ற கருத்தாடல்களுக்கு ஊடக ஆய்வு இடமளித்தல் வேண்டும்.

DRAFT

## 8. ஊடகம் மற்றும் தோற்ற மயக்கம்

- புலனுணர்வின்போது மனிதர்கள் தவறுகளை அனுபவிப்பார்களாயின், அவை தோற்ற மயக்கங்கள் எனப்படும். ஊடகத் தகவலில் திரிபுபடுத்தலும் அடங்கும். ஊடகங்கள் மூலம் கட்டியெழுப்பப்படும் பொதுசன அபிப்பிராயம் போலிகளுடன் பிணைந்துள்ளது. வர்த்தக விளம்பரங்களில் காட்டப்படும் பல்வேறு குறியீடுகள் ஊடாகப் போலிகளுக்கான விளக்கங்கள் வழங்கப்படுகின்றன. விளம்பரதாரர்கள் போலிகளைப் பயன்படுத்துகின்றனர். எமதுநிலைநோக்குத் தொகுதியின் அடிப்படையிலேயே நாம் செயற்படும் முறை தீர்மானிக்கப்படுகின்றது. ஊடகத் தொடர்பாடலில் உள்ள போலிகளை வேறுபடுத்தி அறிவதே இதன் கருத்தாகும். உண்மை அல்லது பொய்யான விடயமொன்றை ஊடகம் தொடர்ந்தும் பரப்பும்போது அது உண்மையாக மாறிவிடுகின்றது.
- வர்த்தக விளம்பரங்களில் வசனங்கள் மற்றும் காட்சிகள் ஊடாகத் தோற்ற மயக்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன. அதேபோல், விளம்பரங்களில் உட்கருத்துக்களும் உண்டு. அதனால் விளம்பரதாரர்கள் போலிகளை எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதை ஆராய வேண்டும். உதாரணமாக, ஊடக நிகழ்ச்சிகளில் பெண்கள் மற்றும் அலங்காரங்களில் தோற்ற மயக்கங்கள் காணப்படுகின்றன. பெண்களை மாதிரிகளாகவும் வர்த்தகப் பொருளாகவும் பயன்படுத்துவது போலி அலங்காரத்தினைப் பயன்படுத்தியேயாகும்.
- ஊடகச் செயற்பாடுகளை விளங்கிக்கொள்வதற்குப் பின்வரும் போலிகள் எமக்குப் பயன்படும்.

DRAFT

| | | |
|---|---|---|
| போலிகள் | : | நாங்கள் நினைக்கும் போது, எமக்குத் தேவையானபோது மட்டும் தொடர்பாடல் செய்வோம். |
| யதார்த்தம் | : | நாங்கள் தொடர்ந்து தொடர்பாடல் செய்வோம். |
| போலிகள் | : | வசனங்களில் அர்த்தங்கள் காணப்படும். நாங்கள் அதனைத் தொடர்பாடல் செய்வோம். |
| யதார்த்தம் | : | வசனங்களில் விசேடமான அர்த்தங்கள் இல்லை. அர்த்தங்கள் பெறுநரிடத்தே தோற்றம்பெறுகின்றது. |
| போலிகள் | : | தொடர்பாடல் நபரொருவருக்கு ஏதேனும் ஒன்றைச் சொல்வதற்குள்ள ஒருவழிச் செயற்பாடாகும். |
| யதார்த்தம் | : | தொடர்பாடல் அடிப்படையிலேயே இருவழிச் செயற்பாடொன்றாகும். |
| போலிகள் | : | எங்களால் மற்றவர்களுக்குத் தகவல்களை வழங்க முடியும் என்பது பொதுவான கருத்தாகும். |
| யதார்த்தம் | : | போதுமான தகவல்கள் இன்றி மற்றவர்களுக்குத் தகவல்களை வழங்குவதால் சிக்கலான தகவல்கள் தோற்றம் பெற்று மேலும் அவை சிக்கல்மிக்கதாக மாற்றமடையும். |

**விமர்சனரீதியான பெறுநர்**

- ஊடகங்கள் மூலம் கிடைக்கும் எல்லாத் தகவல்களும், எல்லாப் படங்களும் மற்றவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது (Creation) அல்லது தயாரிக்கப் பட்டுள்ளது. உண்மை அல்லது யதார்த்தம் அதன் மூலம் வெளிப்படுத்தப்படு வதில்லை. ஊடகங்களால் சூழப்பட்ட சிக்கல்மிக்க சமூகச் சூழலில் வாழும் நபர்களாக, ஊடகங்களை விளங்கிக் கொள்ளல், விமர்சன ரீதியாக ஊடகத் தகவல்களை விளங்கிக் கொள்ளல் மற்றும் ஊடகங்களின் மாயை மற்றும் உண்மைகளை விளங்கிக் கொள்ளல் உள்ளிட்ட ஊடக விளங்கறிவுப் பண்புகள் விமர்சன ரீதியான பெறுநரிடம் காண்ப்பட வேண்டும்.
- விமர்சனரீதியான பெறுநர்செயற்படு பெறுநராவர். செயற்படு பெறுநர், தகவல்கள் எவ்வாறு கிடைக்கின்றன, யாரிடமிருந்து கிடைக்கின்றது, எங்கிருந்து கிடைக்கின்றது என்பதை ஆராய்வர். செயற்படு பெறுநர் நம்பிக்கையான மூலாதாரங்களில் இருந்து தகவல்கள் கிடைக்கின்றனவா என்பதை எப்போதும் ஆராய்ந்து பார்ப்பர். செயற்படு பெறுநர், ஊடகத் தகவல்களை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் அது தொடர்பில் கேள்விகளை எழுப்பவும் செய்வர்.
- செயற்படு ஊடக நுகர்வு என்பது தானாகவோ அல்லது பரம்பரை ரீதியாகவோ கிடைக்கும் சக்தியல்ல. அது கற்கப்பட வேண்டிய ஒன்றாகும். ‘‘இதன்மூலம் பல்வேறு வெகுசன ஊடகங்கள், பிரசித்த பண்பாடுகள், நவீன தொழினுட்பங்கள் பற்றி விமர்சனரீதியாக ஆராய்ந்து பார்ப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படும்.’’ (டக்ளஸ் கெல்னர் - 1979)

**விமர்சனரீதியிலான பெறுகையில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்**

- ஊடகங்கள் மற்றும் அதன் பெறுநர் தொடர்பில் தகவல்களைப் பெறுவதால் கிடைக்கும் வலுவூட்டல்கள் தொடர்பில் கற்றல்.
- பிரதான வெகுசன ஊடகங்களால் கிடைக்கும் தகவல்களைப் போன்றே மாற்று ஊடகங்களால் கிடைக்கும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதன் முக்கியத்துவமும் சவால்களும்.
- எமது படைப்புகளைப் பல்வேறுபட்ட வெகுசன ஊடகங்களுக்கு வழங்குவதில் உள்ள சவால்கள்.
- வினைத்திறனானதும் விமர்சனரீதியானதுமான ஊடக விளங்கறிவினூடாக ஊடகங்களின் பின்னால் உள்ள பல்வேறு சக்திகள் தொடர்பில் தெளிவடைதல்.
- பால்நிலை, இனம், வர்க்கம், குலம், பால் போன்றன ஊடகங்களால் மீளமைக்கப்படும் விதம் குறித்துக் கற்றல்.

DRAFT

- இது ஊடக விளங்கறிவை ஏற்படுத்துவது மட்டுமல்லாது, பல்வேறு வெகுசன ஊடகங்களை விமர்சனரீதியாகப் பார்த்தல்,அதன் பின்னால் மறைந்துள்ள சக்திகள் மற்றும் பெறுநர் மற்றும் வெகுசன ஊடகங்கள் இடையிலான தொடர்பை ஆராய்வதற்கும் துணைபுரியும்.
- செயற்படு பெறுநர் எப்பொழுதும் தாம் செய்ய வேண்டியது, சிந்திக்க வேண்டியது, சிந்திக்கக் கூடாதது என்பன பற்றி விமர்சனரீதியாகச் சிந்திப்பவராகிறார்.
- வெவ்வேறு வெகுசன ஊடகங்கள், சமூகத்தில் எவ்வகையான மனிதர்களாக அல்லது பெண்ணாக நாம் இருக்க வேண்டும் என்பதை எமக்குக் காட்டித்தருகின்றன. எவ்வாறு பிரசித்தியடைவது? வாழ்க்கையை வெற்றி கொள்வது எவ்வாறு? வாழ்க்கையில் உள்ள தோல்விகளை இல்லாது செய்வது எவ்வாறு? சமூகத்தில் செயற்படும் பிரதான சக்திகள் மற்றும் சமூக நிறுவனங்களுக்கு ஏற்ற பழக்கவழக்கங்களை எமக்கு ஊடகங்கள் கற்றுத்தருகின்றன.
- விமர்சனரீதியான பெறுகை மற்றும் ஊடக விளங்கறிவு என்பன எல்லாப் பிரஜைகளை யும் வலுவூட்டுகின்றன. ஊடகங்களால் உருவாக்கப்படும் போலி உலகத்தின் யதார்த்தத்தை விளங்கிக் கொள்வதற்குத் திறனாய்வு எமக்கு வழிகாட்டும்.

**விமர்சனரீதியிலான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகள்**

1. பகுப்பாய்வு (Analysis) – ஊடகத் தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது மறைக்கப்பட்டுள்ள அங்கங்களை வேறுபடுத்தல்.
2. மதிப்பீடு (Evaluation) - ஊடகத் தகவலின் நன்மை மற்றும் தீமைகளைத் தேடியறிந்து மதிப்பிடுதல்.
3. குழுவாக்கல் (Grouping) – ஊடகத் தகவல்களைக் 5 குழுவாகப் பிரித்துக் கொள்ளல்.
4. தொகுத்தறிதல் (Induction) –ஊடகத் தகவலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு ஏற்ப சிந்தித்து ஒட்டுமொத்த தொடர்பாடலை அனுமானித்தல்.
5. உய்த்தறிதல் (Deduction) – ஊடகத் தகவலின் பொதுத் தன்மைகளின் ஊடாக விசேடமான ஏதேனும் கருதுகோள்களை அனுமானம் செய்தல்.
6. தொகுப்பாக்குதல் (Synthesis) – ஊடகத் தகவல்கள் அனைத்தையும் இணைத்து புதிய தொகுப்பொன்றினை உருவாக்குதல்.
7. சாராம்சப்படுத்தல் (Abstraction) – ஊடகத் தகவலின் மையம் மற்றும் முக்கிய விடயங்களை மிகவும் சுருக்கமாக விளக்குதல்.

இத் திறன்கள் ஊடகத் திறனாய்விற்கு மட்டுமின்றி நாளாந்த வாழ்க்கைக்கும் அவசியம். இத்திறன்களைப் பயன்படுத்துவதற்காக யாதாயினும் அறிவு எமக்குண்டு என்பதோடு அவற்றை மென்மேலும் விருத்தி செய்து ஊடகத் தகவல்களை விளங்கிக்கொள்ளல் எமக்குள்ள சவாலாகும்.

DRAFT

1. **பகுப்பாய்வு** (Analysis)

- இதன் கருத்தாவது, தகவலை விளங்கிக்கொள்ளும் வகையில் சில பகுதிகளாகப் பிரித்துக்கொள்ளல் என்பதாகும். ஊடகங்கள் மூலம் எமக்குக் கிடைக்கப்பெறும் தகவலை அதேபோல் ஏற்றுக்கொள்ள அல்லது அத் தகவல்களைத் தனித்தனியே, ஆழமாக, அதன் விளக்கத்திற்கு ஏற்ப, பகுதிகளாகப் பிரித்து, அது முன்வைக்கப்பட்டுள்ள விதத்தினைப் பரிசீலிக்கவும் முடியும். ஊதாரணமாகப் பத்திரிகை ஒன்றில் வெளியாகும் செய்தியொன்றை எடுத்தால், அதனை எழுதியுள்ள ஊடகவியலாளரின் கருத்தை அச்செய்தி எழுதப்பட்டுள்ள முறையிலேயே ஏற்றுக்கொள்ளவோ அல்லது அதன் நடுநிலைத்தன்மை தொடர்பில் பரிசோதிக்கவோ எம்மால் முடியும். அச்செய்தி என்ன? எத்தினத்திற்குரியது?, எவ்விடத்தில்?, எதற்காக? என்ற வினாக்களை எழுப்பி அது முழுமையானதொரு செய்தியா? அல்லது குறைபாடுடைய செய்தியா? எனும் முடிவுக்கு வர முடியும்.

2. **மதிப்பீடு** (Evaluation)

- செய்தி ஒன்றின் அல்லது தகவல் ஒன்றின் ஏற்புடைமை அல்லது குறைபாடு ஆகியவற்றை மதிப்பிடுவது என்பதே இதன் கருத்தாகும். இதன்போது, செய்தியொன்றில் உள்ளடக்கப்படும் தகவல்களை ஏதேனும் அளவீட்டுக்கு அல்லது தரத்திற்கு ஏற்ப சமப்படுத்தல் அல்லது ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஊடக நிபுணர்கள் எழுதும் கருத்துக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை மனனம் செய்து அதனை எமது சிந்தனைகளாகவும் நம்பிக்கைகளாகவும் ஏற்றுக்கொள்ளல் அல்லது அதனை எமது கருத்துடன் ஒப்பிட்டும் பார்க்க முடியும். எமது கருத்துக்களுடன் அவை பொருந்துமாயின் அவற்றைச் சரியான கருத்துக்கள் என்றோ அல்லது எமது கருத்தினை விடவும் நல்ல கருத்துக் களென்றும் ஏற்றுக்கொள்ள முடியும். எனினும், எம்மிடம் உள்ள கருத்துக்களுக் குப் பொருத்தமற்றது அல்லது பிழையானது போன்றவற்றை நிராகரிக்கவும் முடியும்.

DRAFT

3. **குழுவாக்கல்** (Grouping)

- தகவல் ஒன்றில் அல்லது செய்தி ஒன்றில் காணப்படும் விடயங்களில் ஒத்த மற்றும் ஒவ்வாப் பிரிவுகளை ஒப்பிடுதல் என்பதே இதன் மூலம் கருதப்படுகின்றது. இதற்காக வகைப்படுத்தல் சட்டதிட்டங்கள் (Classification rules) பயன்படுத்தப்படும். சிற்சில விடயங்களை நாம் எவ்வாறு வகைப்படுத்த வேண்டும் என்பதை ஊடகங்கள் எமக்குச் சொல்லித்தருவதோடு அதனை நாம் அவ்வாறே ஏற்றுக்கொண்டால், அவர்களின் வகைப்படுத்தல்களுக்கு ஏற்ப நாம் செயற்பட வேண்டிவரும். எனினும், அவ்வூடக வகைப்படுத்தலின் நன்மை மற்றும் தீமைகளை நாம் ஏற்றுக்கொண்ட பெறுதிகள் மற்றும் எமது வகைப்படுத்தல் களுக்கு ஏற்ப ஒப்பீடு செய்து பார்த்தால் மிகவும் விளக்கமானதும், பண்புத் தரத்துடன் கூடியதுமான வகைப்படுத்தல் ஒன்றை எம்மால் உருவாக்கிக்கொள்ள முடியும்.

4. **தொகுத்தறிதல்** (Induction)

- சிறு கருத்துக்களின் தர்க்கரீதியிலான போக்கினை (logical relationship) அறிந்து, அவற்றைவிடப் பெரிய கருத்துக்களின் பொதுப் போக்கினை அறிந்து கொள்ளல் என்பதே இதன் கருத்தாகும். உதாரணமாக - மக்கள் கருத்துக் கணிப்பினை நாம் பரிசீலனை செய்து பார்த்தால், பெரும்பாலானவர்கள் ஊடகங்களால் வழங்கப்படும் கருத்துக்களை மட்டும் வைத்துக்கொண்டு அதுவே உண்மையான பொதுமக்கள் கருத்து என சிந்திப்பதாகும். பெரும்பாலும் உண்மை நிலை அதுவாக இல்லாமல் இருக்கலாம்.

DRAFT

5. **உய்த்தறிதல்** (Deduction)

- பொதுக் கருத்துக்களைப் பயன்படுத்தி விசேடமான ஒன்றைத் தெளிவுபடுத்து வதற்கான முயற்சி என்பதே இதன் கருத்தாகும். இவ்வாறு பொது விடயங்கள் தொடர்பில் பிழையான மனப்பாங்கு எம்மிடம் காணப்படின், மற்றைய விடயங் களையும் அவ்வாறே பிழையான வகையில் விபரிப்பதற்குத் தூண்டப்படுவோம் என்பதாகும்.

6. **தொகுப்பாக்குதல்** (Synthesis)

- எம்மிடம் காணப்படும் சிறு பகுதிகளை (Parts) ஒன்று சேர்த்து, புதிய கட்டமைப்பொன்றை (Structure) உருவாக்கிக் கொள்ளல் என்பதே இதன் கருத்தாகும். மதிநுட்பக் கட்டமைப்புகளைக் கட்டியெழுப்பும்போது அது எமது ஆரம்ப அறிவு அல்லது திறனாக மாறும். ஊடகங்களின் மூலம் புதிய தகவல்கள் கிடைக்கின்றபோது அவற்றை நாம் பகுப்பாய்வு அல்லது சிறு பயன்தரு தகவல் பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அவ்விடயங்களின் பயன்பாடுகள், நம்பகத்தன்மை, தெளிவுத்தன்மை என்பவற்றை நாம் மதிப்பீடு செய்தல் வேண்டும். நாம் சிறப்பானது எனக் கருதும் விடயங்களை எம்மிடம் உள்ள மதிநுட்பக் கட்டமைப்புடன் இணைத்துக்கொள்ள வேண்டும். இதன்மூலம் புதிய மதிநுட்பக் கட்டமைப்பினை உருவாக்குதல் அல்லது புதிய போக்கொன்றை உருவாக்க எம்மால் முடியும். புதிய கருத்துக்களை உருவாக்குதல் என்பது, ஊடகங்கள் மூலம் எமக்குக் கிடைக்கும் புதிய தகவல்களை மீள ஒழுங்கமைத்து, தெரிவு செய்து எம்மிடம் உள்ள மதிநுட்பக் கட்டமைப்பினூடாக புதிதாக்கிக் கொள்ளல் என்பதாகும்.

7. **சாராம்சப்படுத்தல்** (Abstraction)

- தகவல் ஒன்றில் அடங்கியுள்ள மையக் கருத்தைச் சரியாகவும், தெளிவாகவும், சுருக்கமாகவும் சாரம்சப்படுத்தல் என்பதே இதன் கருத்தாகும். உதாரணமாக, ஊடகம் ஒன்றினால் வழங்கப்படும் தகவல் ஒன்றினை மற்றுமொருவருக்கு விளக்கும் போது அல்லது அத்தகவலை நாம் நினைத்துப் பார்க்கும்போது இத் திறன் எம்மால் பயன்படுத்தப்படும். ஊடகங்களால் முன்வைக்கப்படும் தகவல்களில்கூறப்படும் பரந்த விளக்கத்தின் அடிப்படைக் கருத்தினை மிகவும் சுருக்கமாக்கிப்பெறுவதே இத்திறன் ஆகும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஊடகத் திறனாய்வு என்றால் என்ன என்பதைத் தெளிவுபடுத்துக.

2. ‘‘ஊடகத் தகவலை விமர்சனரீதியாக விளங்கிக்கொள்வதானது அன்றாட வாழ்க்கையில் ஒருவர் அதிக நேரம் ஊடகத்தை நுகர்வு செய்வதைக் கட்டுப்படுத்தும்’’ விமர்சனம் செய்க.

3. விமர்சனரீதியான பெறுநர் ஒருவரிடம் காணப்படவேண்டிய பண்புகள் மற்றும்

DRAFT

விமர்சனரீதியாக இருப்பதன் அவசியத்தைத் தெளிவுபடுத்துக.

**தேர்ச்சி மட்டம்** : 6.3 ஊடகத் தகவல் பகுப்பாய்வு தொடர்பான அறிவுடன் விமர்சனரீதியாகச் செயற்படுவார்.

**பாடவேளைகள்** : 22

**கற்றற் பேறுகள்** :
- ஊடகத் தகவலொன்றைப் பகுப்பாய்வு செய்யும் போது பயன்படுத்தும் அடிப்படை அம்சங்களை விபரிப்பார்.
- தெரிவு செய்த ஊடகத் தகவலொன்றைப்பகுப்பாய்வு செய்வார்.

**பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள்:**

கீழ்க்காணும் விடயங்களுக்கூடாகப் பாடத்தைத் தயாரிக்குக.

ஊடகத் தகவல் ஒன்றைப் பகுப்பாய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படை விடயங்கள் சில இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. வெவ்வேறு ஊடகங்களின் இயல்புகளுக்கு ஏற்ப தகவலைப் பகுப்பாய்வு செய்வதற்காக மேலும் இவ்வாறான காரணிகள் பலவற்றை நாம் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

1. அர்த்தம் - **Meaning**
2. பொருத்தப்பாடு - **Appropriateness**
3. தூண்டல் - **Motivation**
4. பக்கச்சார்பு - **Bias**
5. நம்பகத்தன்மை - **Credibility**
6. திரிபுபடுத்தல் - **Distortion**
7. வினைத்திறன் - **Effectiveness**
8. கையாளுதல் - **Manipulation**
9. மாறாத்தன்மை - **Stereotyped**
10. மதிப்பீடு - **Evaluation**

DRAFT

## 1. அர்த்தம் - Meaning

- அர்த்தம் என்பது நேரடியாக வெளிப்படுத்தப்படாத ஏதேனுமொன்று தொடர்பாகத் தெளிவாகத் தொடர்பாடுவதாகும். அதாவது இது வார்த்தை, கூற்று, எண்ணக்கரு அல்லது செயற்பாடு ஒன்று பற்றிக் கூறுவதாகும். இவ்வாறு கருதப்படும், வெளிப்படுத்தப்படும் அல்லது மறைக்கப்பட்டிருக்கும் விடயமே அர்த்தம் என்பதாகும்.
- அர்த்தம் என்பது ஏதேனுமொரு விடயம் தொடர்பான சமகாலத் தன்மையுடன் தொடர்புடைய பெறுமதியாகும். அர்த்தம் என்பது மொழிப் பயன்பாட்டின் மூலம் தொடர்பாடல் செய்யப்படுகின்றது. மறுபுறம், அர்த்தம் என்பது உளவியல் சந்தர்ப்பமொன்றாகும். அர்த்தம் என்பது, மனித இருப்பின் இயல்பு.: தன்மை தொடர்பான எண்ணக்கருவாகும்.
- மொழிரீதியிலான வெளிப்படுத்தலின் போது, சிலவேளைகளில் ஆரம்ப அர்த்தத்திலும் பார்க்க இறுதி அர்த்தம் மாற்றமடைய முடியும். உதாரணமாக "அன்பு" மற்றும் "இறைவன்" போன்ற சொற்களில் பல்வேறு அர்த்தங்கள் காணப்படுகின்றமையை ஆராய முடியும்.
- தொடர்பாடுநர் ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் ஏதேனுமொன்றை வெளிப்படுத்து வதன் மூலம் கூறமுனைவது யாது என்பதில் மறைந்துள்ள அர்த்தம் வெளிக்கொணரப்படும். உதாரணமாக "நான் சென்று வருகின்றேன்" என்பதில் சொல்லப்படுவது செல்வது பற்றியாகும், வருவது பற்றியல்ல. "எனக்குக் குளிர்" என்ற வாக்கியத்தின் அர்த்தம் யன்னலை மூடவும் என்பதாக, அல்லது போர்த்திக் கொள்வதற்குத் துணியொன்றைத் தாருங்கள் என்பதாகவும் இருக்க முடியும். அதனால், ஊடகத் தகவல் பகுப்பாய்வின்போது தகவல்களால் தொடர்பாடப்படும் அர்த்தம் தோற்றம் பெறும் விதத்தினைக் கவனமாக விளங்கிக் கொள்ள வேண்டும் என்பது இங்கு குறிப்பிடப்படுகின்றது.

DRAFT

## 2. பொருத்தப்பாடு – Appropriateness

- தகவலுக்குரிய உள்ளடக்கம், அதற்குரிய எடுத்துரைப்பு, படிமுறை, நடுநிலை, தொடர்பு மற்றும் போதியதன்மை என்பன சரியாகப் பொருந்தியமைதல் என்பதே பொருத்தப்பாடு என்பதன் மூலம் கருதப்படுகின்றது. அதற்குத் தொழினுட்பமும் பொருத்தமானதாக இருக்க வேண்டும்.

- வெகுசன ஊடகப் பயன்பாட்டின் பொருத்தப்பாடானது, தன்மை, தேவைகள் மற்றும் ஊடகப் பண்புகளில் தங்கியுள்ளது. ஏதேனும் விசேட நோக்கத்திற்காக, விசேட சமூக சந்தர்ப்பத்தில், விசேட பெறுநராதலே பொருத்தப்பாடாகும். அத்தோடு பொருத்தப்பாடு என்பது கதை ஒன்றைப் புரிந்து கொள்ளும்

அளவாகும்.

- எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்காகச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான தொழினுட்பத்தைப் பயன்படுத்தவேண்டும். பொருத்தப்பாடு ஒவ்வொருவரினதும் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தீர்மானிக்கப் பட்டாலும் சிறந்த தெளிவுடன் விமர்சனரீதியாகப் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுவது இங்கு முக்கியமானதாகும்.

### 3. தூண்டல் – Motivation

- தூண்டல் என்பது தொடர்ந்து நடைபெறும் தொடர்பாடல் செயன்முறையாகும். தூண்டல் என்பது, ஊடகத்தால் தனிநபர் நம்பிக்கை, மனப்பாங்கு, அபிப்பிராயம் அல்லது நடத்தைகளில் தாக்கம் செலுத்தி ஏற்றுக்கொள்வதற்கு உட்படுத்துவதாகும். ஊடகத் தகவல் தொடர்பான நம்பகத்தன்மையை ஏற்படுத்துவதே தூண்டலாகும். ஊடகங்களில் வெவ்வேறு குறியீடுகள் மூலமாகக் காரணங் களைத் தெரியப்படுத்த முடியும். பொதுவாக வர்த்தகத் தகவல்களுக்கு நாம் அடிமையாவது கண்கவர் குறியீடுகள் காரணமாகவே. அத்தோடு, உணர்வு பூர்வமான மற்றும் கவர்ச்சியான குறியீடுகள் காரணமாகவும் நாம் தூண்டப் படுவோம்.

- தூண்டல் ஊடகம் மூன்று வகைப்படும்,
  மனப்பாங்கினை மாற்றியமைத்தல்.
  நடத்தையினை மாற்றியமைத்தல்.
  காலத்துடன் மாற்றமடைதல்.
- ஊடகத் தூண்டல் மூலம் தனிநபர் தமது மனப்பாங்கு, நடத்தைகளை மாற்றிக் கொள்ளும் விதம் தொடர்பில் அவதானம் செலுத்த முடியும். ஊடகத் தகவல்கள் பலவற்றைப் பகுப்பாய்வு செய்து தனிநபர் தூண்டப்படும் விதத்தினை ஆராய்ந்து பார்க்க முடியும்.

### 4. பக்கச்சார்பு – Bias

- ஏதேனும் ஒருவகையில் ஒரு நபருக்கு அல்லது குழுவுக்கு விசேட கவனிப்பை வழங்குவது பக்கச்சார்பு எனப்படுகிறது. பக்கச்சார்பு என்பது ஒருசார்பாதலாகும். சாதாரண காரணம் அல்லது போதிய தெளிவில்லாமல் முடிவுகளுக்கு வருதல் அல்லது ஏதேனும் கருத்தை அடிப்படையாகக்கொண்ட எண்ணம் ஒன்றைக் கொணடிருப்பதாகும்.

DRAFT

- இச்செய்தி தொடர்பில் கவனம் செலுத்துக,

  1. “ 800 இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வார்ப்பாட்டத்தில் பங்குபற்றினர்.”
  2. “ 1000 இற்கும் குறைவானவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக வருகை தந்திருந்தனர்.”

- செய்தியொன்றைப் பக்கச்சார்பாக வெளியிடுவது எவ்வாறு?

  - ♦ மூலாதாரங்களைத் தெரிவு செய்தல்.
  - ♦ மூலாதாரம் கட்டியெழுப்பப்படும் விதம்.
  - ♦ கலந்துரையாடல்களுக்காக நபர்களைத் தேர்ந்தெடுக்கும் விதம்.
  - ♦ செய்தியாளர் சம்பவத்தைக் குறிப்பிடும் முறை.
  - ♦ பயன்படுத்தப்படும் புகைப்படங்களின் செம்மையாக்கம் போன்றவற்றின் அடிப்படையில் செய்தி தோற்றம் பெறும்.

- சில தகவல்களில் குறிப்பிட்ட சில காரணிகள் அல்லது விபரங்கள் நீக்கப்பட்டு ஏனையவை உள்ளடக்கப்படும். இதன் மூலம் பக்கச்சார்பு ஏற்படும். வாசகர் அல்லது பார்வையாளர்கள் கதையொன்று பற்றிச் சிந்திக்கும் விதத்தை அடிப்படையாகக் கொண்டு பக்கச்சார்பு மாற்றமடையும்.

- சில தகவல்களில் முழுமையான கதையினை.'.விபரத்தை விளங்கிக் கொள்வதற்குப் பல்வேறு விடயங்களை ஆராய்தல் முக்கியமானதாகும். கதையொன்றின் ஊடாக மக்களைத் தாக்கத்திற்குட்படுத்தும் வகையில் செய்தியொன்றை எழுத முடியும். அத்தோடு செய்திகளுக்கான இடஒதுக்கீட்டிற்கு (Placement) ஏற்பவும் பக்கர்சார்பு ஏற்படும்.

- செய்தியொன்றில் பிரசுரிக்கப்படும் புகைப்படத்தின் மூலம் நாம் சிந்திக்கும் விதத்திற்கு எதிரான தாக்கத்தினை ஏற்படுத்த முடியும். பத்திரிகை அல்லது இலத்திரனியல் ஊடகங்கள் செய்தி ஒளி-ஒலிபரப்பின் இறுதியில் புகைப்படங் களைக் காட்சிப்படுத்துவது செய்தியின் முக்கியத்துவத்தைக் குறைக்கும். உதாரணமாக, வன்முறை தொடர்பான செய்தியொன்று பத்திரிகையின் முதற் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டால் அது முதல் அவதானத்திற்குட்படும். மாறாக, பத்திரிகையின் கடைசிப் பக்கத்தில் சிறியதாக அச்செய்தியினைப் பிரசுரித்திருப்பின் அது குறைந்தளவான முக்கியத்துவம் பெறும்.

DRAFT

உதாரணம் 1. தலைப்புச் செய்தி –"போதைமருந்தைக் களவாகக் கொண்டு வந்த ... நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் விமான நிலையத்தில் வைத்துக் கைது."

உதாரணம் 2. புள்ளிவிபரம் - புள்ளித்தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு பெறுநர் சிந்திக்கும் முறை வேறுபட முடியும்.

"பாடசாலைக்காக நிதிதிரட்டும் ஒருவர் 1,100 ரூபாய் தேடிக் கொண்டார்."

"பாடசாலையின் வெற்றிகரமான நிதிதிரட்டுநர் 1000 ரூபாவிற்கும் அதிகமாக நிதி திரட்டினார்."

உதாரணம் 3. வசனத் தெரிவு மற்றும் தொனி - ஊடகவியலாளர்கள் பயன்படுத்தும் வசனங்களும் தொனியும் கதையில் தாக்கம் செலுத்த முடியும். நேர் அல்லது எதிர்மறை வசனங்களைப் பயன்படுத்தித் செய்தி தொடர்பான எமதுவிளக்கத்தை மாற்றியமைக்க முடியும். செய்தி வாசிப்பாளரின் குரல் மூலமாகவும் எம்மிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

உதாரணம் 4. மூலாதாரங்களின் கட்டுப்பாடு - கதை தொடங்குவது எங்கே? கதையின் மூலாதாரம் யார்? நீங்கள் கேட்பது அல்லது வாசிப்பது யாருடைய நிலைநோக்கில்?

- தகவல் ஒன்றில் பக்கச்சார்பு பல்வேறு விதங்களில் ஏற்பட முடியும் என்பதால் அவற்றை விமர்சனரீதியாக ஆராய்வதன் மூலம் சரியான தெளிவுக்கு வரமுடியும். அத்தியாவசியத் தகவல்களை விட்டுவிடுதல், மூலாதாரங்களைத் தெரிவு செய்யும் விதம், கதையினைத் தெரிவு செய்யும் விதம், இடத்தினைத் தெரிவு செய்யும் விதம், அறிமுகப்படுத்தும் விதம்,மற்றும் தகவல் பயணிக்கும் வேகத்திற்கு ஏற்பவும் பக்கச்சார்பு கட்டியெழுப்பப்படும்.

DRAFT

## 5. நம்பகத்தன்மை - **Credibility**

- மூலாதாரங்களின் நம்பகத்தன்மைக்கான அறிவாகக் கல்வியும் அனுபவமும், திறன்களாகப் பௌதிக மற்றும் உளவியல் காரணிகளும் காணப்படும். தூண்டலின் மூலம் பக்கச்சார்பு உள்ளிட்டவை நம்பிக்கைகளாக மாற்றப்படும். ''தொடர்பாடுநரின் நம்பகத்தன்மை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்'' என்பது இதுதொடர்பில் பிரபல்யமான கூற்றாகும். பெறுநரை அடிப்படையாகக் கொண்ட முன்வைப்பாக நம்பகத்தன்மை காணப்படுகின்றது. அதாவது, தொடர்பாடுநர் புதிய நம்பிக்கையைப் பெற்றுக்கொடுத்தாலும் பெறுநர் நம்பிக்கைகொள்ளவில்லையாயின் அது நிராகரிக்கப்படும். அத்தோடு பலவிதங்களில் நம்பகத்தன்மை ஏற்படுத்தப்படும். அதாவது பல்வேறு அளவீடுகளுக்கு ஏற்ப நம்பிக்கை ஏற்படுத்தப்படும் என்பதாகும்.

- நம்பகத்தன்மை என்பது ''கௌரவமான தோற்றம்'' என அறியப்படுகின்றது. அத்தோடு நம்பகத்தன்மை தனிப்பட்டதொன்றாகும். பொறுப்புடைமை உங்களின் நம்பகத் தன்மை பற்றிக் கூறும். மற்றவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைக்கும்போது அவர்கள் உங்களின் தாக்கத்திற்குத் திறந்ததன்மையுடன் இருப்பர்.

- இவ்வாறு நம்பகத்தன்மை என்பது பெறுநரால் தொடர்பாடுநருக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் தாக்கமாகும். நம்பகத்தன்மையைச் சிலவேளைகளில் உறுதிப் படுத்திக்கொள்ள முடியாது. அது பொறுத்தப்பாட்டிற்கு ஏற்பக் காணப்படும். நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கான எளிமையான விதிகள் எதுவுமில்லை.

- நம்பகத்தன்மையை மதிப்பிடுவதற்கு தீர்ப்புகள் தேவையாகும். தீர்ப்பு என்பது அவ்விடயத்துறையோடு தொடர்புடைய அறிவில் தங்கியுள்ளது. இவ்வாறு ஊடகத் தகவல் தொடர்பிலான நம்பகத்தன்மை ஏற்படும் வகை தொடர்பில் நாம் தகவல் விமர்சனத்திற்கு முனைதல் வேண்டும்.

## 6. திரிபுபடுத்தல் - **Distortion**

- தொடர்பாடலில் திரிபு எனப்படுவது தகவல்களைத் திரிபுபடுத்தலாகும். குறியீடுகளைத் தொடர்பாடல் செய்யும் கட்டமைப்பில் - குறியீட்டுத் தொடர் பாடலை நாம் அதிகதிகமாகப் பயன்படுத்தும்போது, குறியீடுகளுக்கு எம்மால் வழங்கப்படும் அர்த்தத்தைச் சரியாகத் தொடர்பாடல் செய்ய முடியாது போகும்.

- ஒரு தரப்பினரால் மற்றுமொரு தரப்பிற்குத் தகவல் கொண்டுசெல்லப்படும்

DRAFT

ஊடகத்தில் வேறுபட்ட தலையீடுகளினால் தகவல் திரிபுபடுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றது. தகவலை விளங்கிக்கொள்ளும் செயன்முறையில் நெருங்கிய அர்த்தம், தொனி அல்லது வார்த்தைகளை முழுமையாகக் கைக்கொள்வதற்கு முடியாமல் போகலாம். திரிபுபடுத்தல் என்பது ஒருவகையில் மாற்றியமைப்பதாகும்.

- பின்னூட்டல்கள் கிடைக்காதபோது ஊடகத் தயாரிப்பாளர்களின் முன்வைப்பு களில் தாக்கம் செலுத்துவதன் மூலம் திரிபுபடுத்தலில் பங்கெடுக்க முடியும். மிகச்சோகமான உணர்வுடன் தூற்றுவதன் மூலம் தகவல் ஒன்றைத் திரிபுபடுத்த முடியும். ஒத்திசைவு (Harmonic), சுற்றிவளைத்துக் கூறல் (Disambiguation), அறிகை (Cognitive), வெளி (Phase), தகவலை நீட்சியாக்கல் (Amplitude), நிலைநோக்கு (Perspective) போன்றன திரிபுபடுத்தலில் பெரும்பாலும் காணப்படும். அதனை நாம் விமர்சனரீதியாக அறிந்து கொள்ள வேண்டும்.

## 7. **வினைத்திறன் - Effectiveness**

- எதிர்பார்த்த பெறுபேறுகளை முன்வைக்கும்போது வெற்றியினை அடைதல் வினைத்திறனாகும். தகவல் ஒன்றின் பண்புத்தரம், தயாரிப்புத்தரம் மற்றும் காரணங்கள் கூறல் மூலம் செய்தியின் வினைத்திறன் ஏற்படுத்தப்படும். பலம் மற்றும் பலவீனங்களை அறிந்து கொள்வதற்காகத் தர்க்கரீதியான வினாக்களை எழுப்புவதன் மூலம் தகவல் ஒன்றின் வினைத்திறனை மதிப்பிடுதல் முக்கியமானதாகும்.

DRAFT

- வழிகாட்டல்கள் இன்றி, எமது தகவலை நாமே மதிப்பீடு செய்வது தனிப்பட்டதொரு பயிற்சியாக அமையலாம். அதனால் அவற்றை அளவிடுவதற்காக ஏதேனும் குறிக்கோள்களுடன் கூடிய தராதரங்களை உருவாக்குவது பயனுடையதாகும்.
- வினைத்திறனான தகவலில் காணப்படும் பிரதான பண்புகள்,
  எளிமைத் தன்மை (Simplicity)
  விசேட தன்மை (Specificity)
  கட்டமைப்பு (Structure)
  இசைவாக்கம் (Stickiness)

**எளிமைத் தன்மை**

- தகவலின் எளிமைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு இரு வினாக்களை வினவுதல் வேண்டும்.

  நோக்கம் தெளிவானதா?

  பிரதான தகவல் தெளிவானதா?

- தகவலொன்றின் நோக்கமாவது, அறிவித்தல், காரணங்காட்டுதல், அல்லது மகிழ்வூட்டுதல் என்பவையாகும். நோக்கங்களை அறிந்து கொள்வதன் மூலம் தகவல் மற்றும் அதன் அமைப்பு தொடர்பில் நாம் விளக்கம் பெறலாம். நாம் பேச்சுத் தகவலில் அதிகம் தங்கியிருப்பதாக உளவியல் தகவல்கள் கூறுகின்றன.

**விசேட தன்மை**

- விசேட தன்மை என்பது மொழியின் தெரிவும் அதன் பயன்பாடுமாகும். மொழி தொடர்பில் நாமே எம்மிடம் வினவிக்கொள்ள முடியும்.

  மொழி விசேடமானதா?

  மொழி தேவையற்ற வகையில் வன்மையானதா?

- தகவலில் காணப்படும் சொற்களுக்குரிய அர்த்தங்கள் மூலம் உருவாக்கப்படும் உணர்வு தொடர்பாடல் நோக்கத்திற்கு எதிராகச் செயற்படுகின்றனவா?

- மொழியின் விசேட தன்மையை விளங்கிக் கொள்ள வேண்டும். சில சொற்கள் மறைந்திருக்கும் உணர்வுகளின் அர்த்தத்தை வெளிக்கொண்டுவரும். பல அர்த்தங்கள் அல்லது விளக்கங்களைக் கொண்ட சொற்களைக் கவனமாக விமர்சனம் செய்ய வேண்டும்.

- மேலதிக அர்த்தமுடைய சொற்களைப் பயன்படுத்துவதன் மூலம் அர்த்தம் ஒன்றை உருவாக்கிடமுடியுமா?

**கட்டமைப்பு**

- தகவலொன்றைக் கட்டமைப்பாக்கல் என்பது ஒழுங்கு முறையாக நடைபெறுவ தொன்றாகும். தகவலை நன்மை, தீமை என்ற அடிப்படையில் கட்டமைக்க முடியும். இதில் பண்பாடு மற்றும் சமூகப் பெறுமதிகள் என்பன தாக்கம் செலுத்தும். தகவல் கட்டமைப்பாக்கம் பெறுநர் சிந்திக்கும் முறைக்கு ஏற்ப நிகழும். நாம் எமது சிந்தனைக்கேற்ப தகவல்களைப் பொருத்தமாக்கிக் கொள்கிறோம்.

DRAFT

- விளம்பரம் கட்டமைப்பு முறையொன்றாகும். வர்த்தக விளம்பரம் என்பது பொருள் அல்லது சேவைக்காக நுகர்வோரின் அறிவு மற்றும் மனநிலையை உருவாக்குதல் வலுப்படுத்தல் அல்லது மாற்றுதல் ஆகும். இதற்காகப் பயனுறுதியுடைய ஊடகக் (கேட்டல், பார்த்தல் எழுத்து) கட்டமைப்புக்களை விளம்பரதாரர்கள் உருவாக்குகின்றனர்.

**இசைவாக்கம்**

- தகவலொன்றிற்கான இசைவாக்கம் மிகவும் சிக்கலான மனநிலை சார்ந்த செயற்பாடுகளால் மேற்கொள்ளப்படுகிறது. இதில் சமூக, பண்பாட்டுப் பெறுமதிகள் போலவே தகவல் கட்டமைக்கப்பட்டுள்ள விதமும் தாக்கம் செலுத்துகிறது. விசேடமாகத் தகவலொன்றில் இசைவாக்கமடைவதற்கு அதன் எளிமைத் தன்மை, வலுவான தன்மை, நம்பகத்தன்மை, உணர்வுகளைத் தூண்டுதல் மற்றும் கதையாக இருத்தல் போன்றன மூலாதாரங்கள் ஆகும்.

## 8. கையாளுதல் - Manipulation

DRAFT

- தகவலொன்றைக் கையாளுதல் என்பது விசேட தேவைகளுக்கு ஏற்பப் புலக்காட்சிகளை அல்லது தர்க்கங்களை உருவாக்கும் செயன்முறையாகும்.
- இவ்வாறான உபாயங்களாகத் தர்க்கரீதியான வழிநடத்தல், மனநிலை மாற்றம், முழுமையாக ஏமாற்றுதல், மற்றும் வெளியீட்டு நுட்பமுறைகள் என்பன காணப்படுகின்றன.
- மனநிலையினை ஒழுங்கமைத்தல், பொதுமக்கள் தொடர்பு, பிரச்சாரம் என்பன விற்பனையில் பயன்படுத்தப்படும். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குறிக்கோள்கள் மாற்றமடைவதோடு பரந்த தொழினுட்பமும் பெரும்பாலாகப் பயன்படுத்தப்படும். பெரும்பாலும் பிரதான நிகழ்வுகள் புகைப் படங்களைப் பயன்படுத்தல் மற்றும் காணொளிகளைப் பயன்படுத்தல் மூலம் மேற்கொள்ளப்படும்.
- தகவல்களைக் கையாள்வதற்குத் தகவலில் மாற்றங்களை மேற்கொள்வதில் செல்வாக்குச் செலுத்தும் அடிப்படைப் பண்புகள் கீழ்வருமாறு,

| | | |
|---|---|---|
| அளவு (Quantity) | - | ஏதேனும் தகவலில் பெற்றுக்கொடுக்கப்படும் சாதாரண தகவல்கள் |
| பண்புத் தரம் (Quality) | - | முன்வைக்கின்ற தகவலில் காணப்படும் உண்மைத் தன்மை |
| தொடர்பு (Relation) | - | தகவல்கள் மூலம் உறுதிப்படுத்தப்படுகின்ற தொடர்பு |
| முறை (Manner) | - | ஏதேனும் ஒன்றை முன்வைத்துள்ள விதம் தொடர் |

பான எதிர்பார்ப்பு

## 9. மாறாத்தன்மை – Stereotyped

- மாறாத்தன்மை என்பது, ''எல்லா அங்கத்தவர்களுக்கும் தொடர்ந்து காணப்படும் நிலையான மனநிலையாகும்.'' உலகம் பற்றிய எமது அறிவு பெரும்பாலும் முழுமையற்றதாகவே உள்ளது. எம்மால் ஏனைய குழுக்களின் முன்னைய கருதுகோள்களுக்கு ஏற்பத் தகவல்களைப் பிரித்தறியும் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது.

- பால் மற்றும் வர்க்க முறைகள் சந்தேகத்துக்கிடமின்றி எமது மாறாத்தன்மையான கருத்தினை விவாதத்திற்குரிய ஒன்றாக மாற்றுகின்றன. ஈடுபாடு காட்டும் பெரும்பாலான நபர்கள் தம்மால் ஒன்றை அனுபவிக்க முடியாத போது, சூழல் தொடர்பான அவர்களது குறைந்த அறிவினை வலுப்படுத்துவதற்காக மற்றவர்களின் சான்றுகளில் தங்கியிருப்பர்.

- தகவல் மற்றும் பொழுதுபோக்கிற்காக ஊடகங்கள் பலம்மிக்க சமூகப் பெறுமதிகளை வழங்குகின்றன. அதனால் ஊடகவியலாளர்கள் மாறாத்தன்மை மற்றும் யதார்த்தத்தில் காணப்படும் வேறுபாடுகளை விளங்கிக் கொள்வதற்கும், உலகில் வேறுபாடுகளை ஏற்படுத்தும் மாறாத்தன்மைக்கு எதிராகச் செயற்படுவதற்கும் ஒழுக்க ரீதியான கடமையுடையவர்கள்.

- மாறாத்தன்மையைப் பயன்படுத்தி அடிப்படை மனிதத் தன்மையை மீறலாம். எனினும் அத்தகைய பண்பாட்டு மாறாத்தன்மை மீது யதார்த்தம் அமைந்துள்ளது. சில மாறாத்தன்மைகள் முற்றிலும் பொய்யானவை.

- மாறாத்தன்மை முன் அனுபவங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் அறிவை அடிப்படையாகக் கொண்டது. புதிய தகவல்களை அறிமுகம் செய்யும்போது அதை மாற்றுவது கடினமாக இருப்பின் அது மாறாத்தன்மையாகும். இது பக்கச்சார்பு எனறும் அழைக்கப்படும்.

- ஊடகங்களில் மாறாத்தன்மையை இவ்வாறு ஆராய முடியும்,
  - ♦ இக் கதாபாத்திரம் அல்லது படம் எமக்கு எதனைச் சொல்கிறது?
  - ♦ இம் மாறாத்தன்மை வடிவங்கள் மற்றும் அதனைப் பயன்படுத்தும் முறை தொடர்பில் என்ன உணரப்படுகிறது?
  - ♦ பெறுநர்களின் மனநிலையில் இம்மாறாத்தன்மைகள் தாக்கம் செலுத்துவது எவ்வாறு?
  - ♦ ஊடகங்கள் மாறாத்தன்மையை ஏன் பயன்படுத்துகின்றன?

- மனிதர்கள் பெரும்பாலானோர் ஒரே வகையில் சிந்தித்தல் பெறுநர்களை வலுவூட்டுகிறது. பெரும்பாலும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் எதிர் பண்புகள் தோற்றம் பெறுகின்றன. மாறாத்தன்மையுடன் பொருந்தும் தகவல்கள்

DRAFT

ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, பொருந்தாத தகவல்கள் நிராகரிக்கப்படும்.

## 10. மதிப்பீடு – Evaluation

- மதிப்பீடு, திறன்கள் மட்டுமல்லாது அனுபவம் பற்றிய மனப்பாங்காகும். இது பொதுவாக நிச்சயமாக ஏதேனுமொன்றை மேற்கொள்வதற்கான இரகசிய ஆய்வாகும். பகுப்பாய்வின் ஊடாகப் பிரச்சனைகளுக்குத் தீர்வுகள் வழங்கப்படும்.

  "தகவல்" என்றால் என்ன?

  உங்களுக்கு மிகவும் பிடித்த தகவல் எது? அதற்கான காரணம்?

  ஊடகத்தால் உங்களுக்குக் கிடைத்த தகவல் உண்மையில் சிறப்பானதா?

  தகவல் ஒன்றைச் சாராம்சப்படுத்துவது எவ்வாறு? உங்களின் தகவல் உங்களின் யதார்த்தம், நம்பிக்கை மற்றும் பெறுமதிகளுடன் இணங்கி உள்ளதா?

  தகவலை உருவாக்கியது யார்? தகவல்களுடன் இடைத்தொடர்பைப் பேணும் நபர்கள் பயன்பெறுவது எவ்வாறு? ஊடகவியலாளர்களின் கற்பனைகள் நம்பிக்கைகள் மற்றும் பெறுதிகள் யாவை?

  தகவலின் நோக்கம் என்ன? அது ஆலோசனை, அறிவித்தல், விற்பனை செய்தல், காரணம் காட்டல், தெளிவூட்டல் தர்க்கித்தல், பொழுதுபோக்கு அல்லது வேறு எது?

  தகவல் தொடர்பாடல் செய்யப்படும் முறை எது? பெறுநருக்குத் தாக்கம் செலுத்துவது எவ்வாறு?

  வெவ்வேறு நபர்கள், இடங்கள், மற்றும் பண்பாடு ஊடகங்களில் வெளிப்படுத்தப்படுவது எவ்வாறு? சமப்படுத்தல் அல்லது மாறாத்தன்மை இருக்கிறதா? மனிதன் அல்லது பண்பாடு இல்லாமல் உள்ளதா? மனிதர்கள் மற்றும் பண்பாட்டில் தாக்கம் செலுத்துவது எவ்வாறு?

- வெகுசன ஊடக விளங்கறிவின் அடிப்படை எண்ணக்கருக்களை விளங்கிக் கொள்வதற்கான அணுகுமுறையாக ஊடக முக்கோணம் ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி ஊடகப் பகுப்பாய்வை மேற்கொள்ளலாம்.
  தகவல் ஒன்றின் மூலம் கூறப்படுவது என்ன?
  தகவல் பெறுநருக்கு எவ்வாறான அர்த்தத்தைத் தருகிறது?
  தயாரிப்புத் தகவலில் எவ்வாறான அர்த்தத்தைக் கொண்டுவருகிறது மற்றும்

DRAFT

அது ஏன்?

- ஊடகத் தகவல்களை இவ்வாறு பகுப்பாய்வு செய்ய முடியும். பதிவுசெய்யப்பட்ட வானொலி ஊடகத் தகவல், பாடல், தொலைக்காட்சி வர்த்தக விளம்பரம், அறிக்கை நிகழ்ச்சிகள், சமூக ஊடகத் தகவல் போன்ற எந்த ஒரு ஊடகத் தகவல்களையும் திறனாய்விற்குட்படுத்ததி திறனாய்வு ஆற்றலை விருத்தி செய்துகொள்ளலாம்.
- பத்திரிகையின் முதற்பக்கம் எளிமையான பகுப்பாய்வுக்குட்பட்டுள்ள முறையே இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான எளிமையான பகுப்பாய்வில் இருந்து உள்ளடக்கம் தொடர்பான ஆழமான பகுப்பாய்வு வரை ஊடகத் தகவல்களை விபரிக்க முடியும். இதனால் ஊடக விளங்கறிவை ஏற்படுத்திக் கொள்வதற்குத் தேவையான அறிவு மற்றும் தெளிவினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. உங்களுக்கு விருப்பமான ஊடகத் தகவல் ஒன்றைத் தெரிவு செய்து மேற்குறிப்பிட்ட விடயங்களைப் பகுப்பாய்வு செய்க.

2. உங்கள் மற்றும் உங்கள் நண்பனின் ஊடகத் தகவல் பகுப்பாய்வுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்து அது தொடர்பில் கலந்துரையாடுக.

DRAFT

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| ஊடக விளங்கறிவு | - | Media Literacy |
| ஊடக விமர்சனம் | - | Media Criticism |

**உசாத்துணை நூல்கள்:**


1. De Fleur and Dennis, Understanding Mass Communication, Boston, USA, Houghton Mifflin Company, 1991.

2. Waston James and Hill Anne , A Dictionary of Communication and Media Studies, India, Universal Book Stall, 1991

3. Potter James W., Media literacy, 5th edition,U.S.A, 2011